# ஓய்வூதியர் களஞ்சியம்

தமிழ்நாடு மின்வாரிய
ஓய்வூதியர் முன்னேற்ற சங்கம்
கடலூர் வட்டம்



# இந்நூல்...

- ஓய்வூதியர்க்கு உரித்து என்பதினும் ஓய்வுறவுள்ள பணியாளர்க்கு உற்றது; உகந்தது.

- அரசு துறைகளைச் சார்ந்த அனைத்துப் பணியாளர்க்கும் ஓய்வூதியர்க்கும் பொதுமையானதே.

- வாரிய ஆணைகள் காட்டப் பெற்று இருப்பினும் அவை யாவும் அரசு ஆணைகளின் அடிப்படையாக அமைந்தவையே.

# ஒய்வூதியர் களஞ்சியம்

**தமிழ்நாடு**

**மின்வாரிய ஒய்வூதியர் முன்னேற்ற சங்கம்**

**கடலூர்**




| | | |
|---|---|---|
| நூல் பெயர் | : | **ஒய்வூதியர் களஞ்சியம்** |
| ஆக்கியோர் | : | நூலாக்கக் குழு - கடலூர் |
| பதிப்பு | : | திருத்திய பதிப்பு 01-08-2011. |
| பதிப்பாளர் | : | **தமிழ்நாடு மின்வாரிய ஒய்வூதியர் முன்னேற்ற சங்கம், கடலூர்.** |
| உரிமை | : | பதிப்பாளர்க்கு |
| பக்கம் | : | VI+202=208 |
| தாள் | : | மேப்-த்தோ |
| எழுத்து | : | தமிழ் 12 புள்ளி |
| விலை | : | **60** உரூபா |
| நூல் பெற | : | **பொறிஞர் சா. வேல்முருகன்,**<br>14, துரைசாமி நகர்,<br>கடலூர் - 607 001.<br>பேசி : 04142-230945, 94443 54945. |
| அச்சுக் கோவை | : | **திரையன் கணினியகம்,**<br>6, ஏ.எல்.சி. வணிக வளாகம்,<br>பாரதி சாலை, கடலூர் - 607 001.<br>பேசி : 94435 77036. |
| அச்சிட்டோர் | : | **சபாநாயகம் அச்சகம்,**<br>73-A, கீழ ரத வீதி,<br>சிதம்பரம் - 608 001.<br>பேசி : 04144-223040. |

# பதிப்புரை

முதற் பதிப்பு வெளியான எட்டாண்டு கழித்துத் திருந்திய இரண்டாம் பதிப்பாய் ஒய்வூதியர் களஞ்சியம் இப்போது வெளியிடப் படுகிறது. ஆறாவது ஊதியக் குழுவின் பரிந்துரையின் மேல் அரசு-மின் கழகம் ஒய்வூதியர்க்கு அளித்த அனைத்துச் சலுகைகளையும் உள்ளடக்கி உருவானது இப்பதிப்பு. அம்மட்டோ? 2003 இறுதி முதல் இந்நாள் வரை அவ்வப்போது மின்கழகத்தால் வெளியிடப்பட்ட ஒய்வூதியர்க்கான ஆணைகள் அனைத்தின் உள்ளீடுகளை உட்கொண்டது.

முதற் பதிப்பு ஒய்வூதியர் நாள் விழா மலராக வெளியிடப்பட்டதால் அளவில் பெரிதாக அமைந்திருந்தது. அதுவே கையடக்கப் பதிப்பாக இருப்பின் நலம் என்று பலரும் எண்ணினர்; சிலர் தம் விருப்பை வெளிப்படையாகவே வெளியிட்டனர். சென்ற ஆண்டே இதற்கான பணிகளை மேற்கொள்ள எண்ணினும் இப்போதே எண்ணங் கைக்கூடியது.

இப்பதிப்பு முதற் பதிப்பின் தொடர்ச்சியாய்த் திருந்திய பதிப்பு என்பதால், முன்னர்க் கொண்ட அளவிற்கு மிக்க முயற்சி தேவைப்படவில்லை. எனினும் இதற்கான உழைப்பு, சிறிதும் எளிதானதில்லை. தொடர்ந்து ஒரு திங்கட்குமேல் ஓயாது உழைத்து இப்பதிப்பு வெளிவர மிகவும் பாடு பட்டவர் **பொறிஞர் சா. வேல்முருகன்**, தலைமைப் பொறியாளர்(ஒய்வு), **பொறிஞர் அர.கிருட்டினமூர்த்தி**, இளமின் பொறியாளர்(ஒய்வு), கடலூர் வட்டச் செயலர் ஆகிய இருவருமே ஆவர். அவ்விருவரும் என்றும் நம் நன்றிக்கு உரியர்.

இந்நூல் வெளியீட்டில் என்றும் போல் தம்மை இணைத்துக் கொண்ட கடலூர்த் திரையன் கணினியக உரிமையாளர் இளம்பரிதி, சிதம்பரம் சபாநாயகம் அச்சக உரிமையாளர் கௌதம சங்கர் ஆகிய இருவர்க்கும் நன்றி.

இந்நூல் விரைவில் வெளிவர பல்லாற்றானும் உதவிய, ஒத்துழைத்த ஒய்வூதிய அன்பர் அனைவர்க்கும் மிக்க நன்றி.

**புலவர்-பொறிஞர் சி. செந்தமிழ்ச்சேய்.**
பதிப்பாசிரியர்.



# நூ - னு ள் ளே


| வ. எண் | பொருள்கள் | பக்க எண் |
|---|---|---|
| 01. | ஓய்வூதியர் உரிமை | 1 |
| 02. | நலம் செய்த நல்லார்க்கு நன்றி | 4 |
| 03. | ஓய்வூதியம்-ஒரு முன்னோட்டம் | 6 |
| 04. | ஓய்வூதியர் பெறு பயன்கள் - பிழிவு | 20 |
| 05. | ஓய்வூதியர் பெறு பயன்கள்-கணக்கீட்டு வாய்ப்பாடுகள் | 22 |
| 06. | மூப்போய்வு | 25 |
| 07. | விருப்பு ஓய்வு | 28 |
| 08. | இயலாமை ஓய்வு | 32 |
| 09. | கட்டாய ஓய்வு | 35 |
| 10. | தகுதி பெறு பணிக்காலம் | 39 |
| 11. | ஓய்வூதியம் | 42 |
| 12. | குடும்ப ஓய்வூதியம் | 47 |
| 13. | கருணை ஓய்வூதியம் | 66 |
| 14. | அகவிலைப்படி | 76 |
| 15. | இடைக்கால ஓய்வூதியமும் இடைக்காலப் பணிக்கொடையும் | 86 |
| 16. | இறப்பு மற்றும் ஓய்வுப் பணிக்கொடை | 89 |
| 17. | ஓய்வூதியத் தொகுப்பளிப்பு | 102 |
| 18. | பொது வைப்பு நிதி | 110 |
| 19. | பணியாளர் சிறப்பு வைப்பு நிதி மற்றும் பணிக்கொடை - 1984. | 113 |

20. பணியாளர் சிறப்பு வைப்பு நிதி மற்றும் பணிக்கொடை - 2000. 118
21. ஈட்டு விடுப்பு- பணமாற்றுகை 125
22. பணியாளர் குடும்ப பாதுகாப்பு நிதித் திட்டம் 127
23. கருணைப்படி 134
24. பணிப்பாராட்டு 135
25. ஓய்வுப் பயணப்படி 137
26. காணாமற் போனோர் குடும்பப் பயன்கள் 139
27. இறந்த பணியாளர் இறுதிப் பயணச் சலுகை 142
28. கருணை அடிப்படையில்வாரிசுகளுக்கு வேலை உதவி 144
29. வாழ்நாள் நிலுவைத் தொகை 155
30. ஓய்வுதியர் குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டம் 157
31. ஓய்வுதியர் மருத்துவ நல நிதி 162
32. ஓய்வுதியர் மருத்துவச் செலவு ஈடுசெய் திட்டம் 169
33. விழா முன்பணம் 181
34. பொங்கற் பரிசு 183
35. மூத்த குடிமக்கட்கான சலுகை 185
36. ஆறாவது ஊதியக்குழுப் பரிந்துரை-ஓய்வுதியம் திருத்தமமைப்பு 187
37. வினாதலும் விடுத்தலும் 190
38. ஓய்வுதியம்-வங்கிக் கிளை மாற்றம் 202



## இப்பதிப்புக் குழுவினர்

புலவர்-பொறிஞர் சி. செந்தமிழ்ச் சேய்

பொறிஞர் சா. வேல்முருகன்

பொறிஞர் அர. கிருட்டின மூர்த்தி

## முதற் பதிப்பின் நூலாக்கக் குழுவினர்

புலவர் பொறிஞர். செந்தமிழ்ச் சேய். சி

பொறிஞர். உலோகநாதன். ந

பொறிஞர். தணிகாச்சலம். ஏ.ஆர்.சி

பொறிஞர். க-யபெருமாள். த

பொறிஞர். கிருட்டிணமூர்த்தி. அர

பொறிஞர். செயபாலன். செ

பொறிஞர். நடராசன். பா

திரு கண்ணன். சி.மா

திரு பிரான்சிசு. லூ

# ஓய்வூதியர் உரிமை

*“ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே*
*ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோம் என்றே”*
*- பாரதியார்*

அன்னை நாட்டில் அன்னியர்க்கு அடிமையாய் வாழ்வதினும் இன்னுயிர் ஈந்து இயற்கை எய்தலே இனியது என்று அரத்தம் சிந்தி அடைந்த உரிமை நாளைச் சுதந்திர நாளாய், வேண்டி விழைந்து விழா எடுத்து நினைவு கூர்தல் வேண்டியதே! ஆனால், ஓய்வூதியர் நாள்! அஃதும் ஒவ்வோர் ஆண்டும்! ஏன்? எதற்காக?

**ஓய்வூதியம் கொடையா? உரிமையா? :-**

‘ஓய்வூதியம் என்பது பணியாளரின் உரிமை இல்லை; அஃது அவர்க்குப் பணி அமர்த்துநரால் அளிக்கப்பெறு பிச்சை! கோரிப் பெறுவதன்று; கொடுப்பார் தம் கைக்கொடையே! ஈவார் முகம் நோக்கி இரந்து பெறலே அன்றிப் போரிட்டுக் கொள்ளற்குப் பொருந்தாது.’

இப்படித்தாம் இன்றும் செப்பி வருகின்றனர் சிலர். அரசு ஊழியர் போராட்டத்தின் போது அப்படித்தாம் நாளிதழ்களில் அடுத்தடுத்துத் தங்கள் அறியாமையை ‘அவாள்’ தம்பட்டம் அடித்துக் கொண்டனர். ஆனால் உண்மை என்ன?

**ஓய்வூதியம் என்றால் என்ன?**

ஓய்வூதியம் என்பது :-

அ. பணி அமர்த்துநரின் விருப்பத்திற்கு ஏற்ப வழங்கப்பெறு அன்பளிப்போ அருட் கொடையோ, மானியமோ அன்று.

ஆ. கருணைத் தொகை அன்று; பணியாளர் முன்னர் ஆற்றிய பணிக்கான கொடுபடா ஊதியம்.

இ. முதுமைக் காலத்தில் தவிக்க விடப்பட மாட்டீர் என்ற உறுதியின் மேல், தங்களைப் பணி அமர்த்துநர்க்கு வாழ்நாளில் ஈட்டுக் காலத்தில் பணியில் இடையறாது பாடுபட்டு உழைத்த பணியாளர்க்கு அளிக்கப்படு குமுகாயப் பொருளியல் நிதி சார்ந்த குமுகாயநல நடவடிக்கை.



இப்படிக் கூறுவோர் யாரென்று குழப்பம் வேண்டா.

உச்ச நீதி மன்றத்தின் ஐந்து நீதிபதிகள் அடங்கிய அரசமைப்புச் சட்டச் சிக்கல் தீர் நடுவர் ஆயம் (Constitution Bench) 17-12-1982 அன்று அளித்த தீர்ப்பில் ஓய்வூதியத்திற்கு அளித்த தீர்ப்பு விளக்கமே இவை.

இத்தீர்ப்பில், மேலும் உறுதிப்படுத்தப் பட்டவை :-

அ. ஓய்வூதியம் என்பது அரசியல் அமைப்புச் சட்டப் பிரிவு 148 இன் பகுதி 5 இன் படியும் சட்டப் பிரிவு 309 இன் படியும் நிலைத்த காப்புரிமை பெற்றது.

ஆ. ஓய்வூதியத் திட்டம் என்பது இருக்கின்ற வள அடிப்படையில் ஓய்வூதியர்,

1. தேவைகளின் நெருக்கம் இன்றி, நன்னிலையில், தன்னுரிமையோடும், தன்மானத்தோடும்;

2. ஓய்வு அடைவதற்கு முன்னர் உற்றிருந்த நிலைக்கு இணையாக வாழ்வதற்கான வகையில் பொருந்துமாறு அமைந் திருத்தல் வேண்டும்.

**உரிமை பெற்றது எப்படி?**

ஓய்வூதியர்தம் இவ்வுரிமைகள் உச்ச நீதி மன்றம் தானே ஓடி வந்து வழங்கியவையா? இல்லை; நடுவண் அரசுக்கு எதிராகப் போராடிப் பெற்றவை! போராடிப் பெற்றுத் தந்தவர் திரு. நகரா, மற்றும் சிலர்.

“ஓய்வூதியர் அனைவரும் ஓர் இனத்தினரே; அவர் இடையே எவ்வித பாகுபாடும் கிடையாது. ஒரே நிலையில் உள்ள எல்லாரும் சட்டத்தின் முன்னர்ச் சம உரிமையும் சம வாய்ப்பும் பெறற்கு உரிமை உடையவர்.”

ஓய்வூதியர்க்கான இந்த உரிமைப் பட்டயத்தை உச்ச நீதி மன்றத்தில் பெற்றுத் தந்தவர் திரு. நகரா ஆவர்.

திரு. நகரா, இவ்வுரிமைப் பட்டயத்தை உச்ச நீதி மன்றத்தில் தீர்ப்பாகப் பெற்றுத் தந்த நாள் 17-12-1982. இந்நாளே ஓய்வூதியர் நாளாக ஒவ்வொரு ஆண்டும் ஓய்வூதியரால் நாடெங்கும் கொண்டாடப் படுகிறது.

வழக்கு ஏன்?

நடுவண் அரசு, ஓய்வூதியம் கணக்கிட இறுதி 36 மாதங்களில் பெற்ற சம்பளத்தின் சராசரியில் 3/8 என்றும் மிகை ஓய்வூதியம் 675 உரூபா என்றும் இருந்ததை மாற்றி, இறுதி 10 மாதங்களில் பெற்ற சம்பளத்தின் சராசரியில் 3/8 என்றும் மிகை ஓய்வூதியம் 1,000 உரூபா என்றும் மாற்றி அமைத்து, இம்மாற்றம் 31-3-1979 இ-ருந்து ஓய்வு பெறுவோர்க்குத் தாம் பொருந்தும் என்று 22-5-1979 இல் ஓராணை வெளியிட்டது.

எல்லா வகையிலும் இணையான ஓய்வுறு பணியாளரை, ஒரு நாளைக் குறிப்பிட்டுத் தனித் தனியே பிரித்து ஓய்வூதியப் பலன்களைப் பேதப்படுத்தி அளிக்கும் இவ்வரசு ஆணை, ஓய்வூதியரை வேறுபடுத்துவது; பிரித்துக் காண்பது; ஒரு சார்பாய் அமைந்தது; சட்டத்திற்குப் புறம்பானது என்று திரு. நகரா மற்றும் சிலர் உச்ச நீதி மன்றத்தை உரிமையை நிலை நாட்ட நாடினர்.

வழக்கின் தன்மையை ஆராய்ந்த ஐவர் குழுவைக் கொண்ட அரசியலமைப்புச் சட்ட நடுவர் ஆயம், ஓய்வூதியர்க்கான உரிமைகளை நிலை நாட்டி, ஓய்வூதியம் பணியாளரின் கொடுபடா ஊதியமே என்று உறுதிப்படுத்தி மேலே விளக்கப்பட்டுள்ள தீர்ப்பை 17-12-1982 இல் அளித்தது.

**அத்தீர்ப்பே ஓய்வூதியரின் உரிமைப் பட்டயம் ஆகும்!**

**அந்நாளே ஓய்வூதியர் நாளாம்!**

**நாளும் நலஞ்சேர்த்த நகராவுக்கு நன்றி பாராட்டுவோம்.**

*அறிவூட்டி மொழிகாட்டி வளர்த்த வர்க்கே*
*அந்திமத்தில் அறிவில்லை என்று சொல்வோம்!*
*நெறிகாட்டி நீணிலத்தில் உயர்த்தி யோரை*
*'நீபோ,போ' உனக்கொன்றும் தெரியா தென்போம்!*
*குறியோடு பொருளீட்டிக் குடும்பங் காத்துக்*
*குலம்விளங்க உழைத்தவரை மதிக்க மாட்டோம்!*
*வறிதான வாழ்க்கையடா! வயது முற்றி*
*வருமானம் குறைந்திட்ட முதியோர்க் கிங்கே!*

**கவிச்சித்தர் க.பொ.இளம்வழுதி.**



# நலம் செய்த நல்லார்க்கு நன்றி

*"பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்*
*நன்மை கட-ற் பெரிது"*
- குறள் : 103.

**நீதியரசர். இரத்தினவேல் பாண்டியன் :-**

ஐந்தாவது ஊதியக் குழு அளித்த பரிந்துரைகளால் ஓய்வூதியர் உற்ற பலன்கள் :-

அ.1-1-1996 வரை பெற்று வந்த அகவிலைப்படி முழுவதையும் ஓய்வூதியத்தோடு இணைத்தது.

ஆ. 1-4-1998 முதல் இறப்பு மற்றும் ஓய்வுப் பணிக்கொடைக் கணக்கீட்டிற்கு அகவிலைப்படி முழுவதையும் சேர்த்துக் கொண்டது.

இ. தொகுப்பளிப்பிற்கான ஓய்வூதியப் பகுதி $33\,^{1}/_{3}$ % என்பதை 40 % ஆக உயர்த்தியது.

ஈ. குறைந்த அளவு ஓய்வூதியத்தை 1275 உரூபா என்று உயர்த்தியது.

அளப்பரிய இவ்வரு பலன்களை ஓய்வூதியர்க்கெனப் பரிந்துரை செய்தவர் **உச்ச நீதிமன்ற நடுவர் - நீதி அரசர். இரத்தினவேல் பாண்டியன்** ஆவார்.

பயன் தூக்காது பரிந்துரை செய்த அப்பண்பாளர்க்கு நன்றி தெரிவித்தல் நம் கடமையாகும். அந்த அன்பு உள்ளத்திற்கு நன்றி.

**முன்னாள் முதல்வர் - கலைஞர் மு. கருணாநிதி :-**

அதிகாரம் வந்துவிட்டால் அகந்தை உடன் அண்டிவிடும். அன்றாடம் அதைத் தான் அரசின் செயல்பாடுகளிலே இன்று நாம் கண்டு இன்னலுற்று வருகிறோம். பரிந்துரையா? படிப்பதற்கு எங்கே நேரம்? என்று அகத்தில் ஒன்றும் புறத்தில் வேறும் எனப்

பகட்டு அரசியல் பண்ணுவார் இடையே, தேர்த-ல் கொடுத்த உறுதிமொழிகளை ஆட்சிக் கட்டி-ல் அமர்தற்கே அன்றி நிறைவேற்றற்கில்லை என்ற நிலையினர் நடுவே, ஐந்தாவது ஊதியக் குழு ஓய்வூதியர்க்குப் பரிந்துரை செய்த பலன்கள் அனைத்தையும் அப்படியே ஏற்று அளித்த அந்நாள் தமிழ் நாட்டரசு **முதல்வர்-கலைஞர்-மு. கருணாநிதி** அவர்க்கு ஓய்வூதியர் ஒவ்வொருவரும் வாழ்நாள் முழுதும் நன்றியைத் தெரிவிக்கக் கடமை பட்டவர்! நாமும் நெஞ்சார அஞ்சுகம் பெற்ற அரும் மைந்தர்க்கு நன்றி பாராட்டுகிறோம்.

**முன்னாள் வாரியத் தலைவர் திரு விசயராகவன் :-**

களப்பணியாளர் 1-7-1986-க்கு முன்னர் ஓய்வூதியம் பெறற்கு உரியர் இல்லை. இந்நிலையைப் போக்கிட, வாரியத்தில் எல்லாப் பணியாளர்க்கும் ஓய்வூதியம் பெறு நலனைப் பெற்றுத் தந்தவர் முன்னாள் வாரியத் தலைவர் திரு **விசயராகவன்** ஆவார். அதற்கு உறுதுணையாக உழைத்தவர் திரு **ஞானஒளிவு**, வாரிய கணக்கியல் உறுப்பினர் ஆவார். பெறற்கரு நலனைப் பணியாளர் அனைவரும் பெற உதவிய இவர்க்கு ஓய்வூதியர் என்றும் நன்றியுடையவர். இவர்க்கு எங்கள் நன்றி

**மின்வாரியத் தணிக்கைப் பிரிவினர்:-**

எல்லாப் பணியாளர்க்கும் 1-7-1986 முதல் ஓய்வூதியம் விரிவாக்கப்பட்டதன் பலனாக, இன்று வாரியத்தில் ஓய்வுற்றோர் எண்ணிக்கை 85,000 **-ஐத்** தாண்டி உயர்ந்துள்ளது. உதவிக்குக் கூடுதலாகப் பணியாளர் கொடுக்கப்படா நிலையிலும், தணிக்கைப் பிரிவைச் சார்ந்த அனைத்து அலுவலரும் கடுமையான வேலைச் சுமை இடையும் எவரின் தலையீடும் இன்றி, ஓய்வூதியர் குறைகளைத் தக்கார் தகவிலார் என்ற பாகுபாடு இன்றி, உடனுக்குடன் சரி செய்து சிறப்பாகச் செயலாற்றி வருகின்றனர். காலத்தினால் செய்யும் அவரின் உதவி ஞாலத்தின் மிகப் பெரிது. பயன் கருதாது பணியாற்றும் அந்நல்லவர் பாராட்டுக்கு உரியர்! அவர் அனைவரையும் பாராட்டுகிறோம்; நன்றி தெரிவிக்கிறோம்.

***எல்லார்க்கும் நன்றாம் பணிதல்***



# ஓய்வூதியம் - ஒரு முன்னோட்டம்

*“இளமையும் நில்லா யாக்கையும் நில்லா*
*வளவிய வான்பொருள் செல்வமும் நில்லா”*

- மணிமேகலை.

அகவை ஏற ஏற அனைவர்க்குமே ஆற்றல் குறைவது இயற்கையே. துள்ளித் திரிந்த பள்ளிப் பருவத்திற்கும் தட்டுத் தடுமாறும் முதுமைக்கும் இடைப்பட்ட முப்பது அல்லது முப்பந்தைந்து ஆண்டுக் காலமே ஆற்றல் மிகு பணிக் காலம். முப்பத்தைந்து ஆண்டுகள் நாட்டின் முன்னேற்றத்துக்குப் பணியாற்றிப் பின்னர் மூப்பின் காரணமாகப் பணி ஓய்வு பெறுவோர், நரை, திரை, மூப்பால் ந-வுற்ற நிலையில் வருவாய் இன்றி வாடி வாழ்க்கைப் போராட்டத்தில் வாழ்விழந்துவிடக் கூடாது என்ற நோக்கிலே வழங்கப் படுபவையே ஓய்வூதியமும் பிற பலன்களும்.

ஓய்வூதியமும் பிற பலன்களும் பணி ஓய்வு பெற்றோர்க்கு அளிக்கப்படும் அன்பளிப்போ, அருட் கொடையோ அல்ல. பணியாளர் ஆண்டாண்டுகளாய் அயராது ஆற்றிய அரும்பணியை அகத்தில் கொண்டு, அவர் ஓய்வு பெற்ற பிறகு தொடர்ந்து அளிக்கப்பட வேண்டிய கொடுபடா ஊதியமே ஓய்வூதியம்.

ஓய்வூதியம் என்பது பணி ஓய்வு பெறுவோர்க்கு உரிய நிலைத்த உரிமையாகும். ஓய்வூதியர் தன்னுரிமையுடனும், தன்மானத்துடனும் தேவை ஏதுமின்றிக் கண்ணியத்துடன், பணிக்காலத்தில் வாழ்ந்து வந்த அதே நிலையில் தொடர்ந்து வாழ்வதற்கு ஏற்ப ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டும். இவ்வுரிமை இந்தியத் தலைமை வழக்கு மன்றத்தால் உறுதி செய்யபட்ட ஒன்றாகும்.

**ஓய்வூதியம் பெறற்கு உரியர் :-**

பணியில் குறைந்தது பத்து ஆண்டுகள் பணியாற்றியவர் ஓய்வூதியம் பெறத் தகுதி பெற்றவர் ஆவார்.

பத்தாண்டுப் பணித் தகுதி இருப்பினும் ஒருவர் பணியினின்று தானே விலகின் அல்லது பணி நீக்கம் செய்யப்படின் அவர் ஓய்வூதியம் பெறற்கு உரியர் ஆகார்.

**ஓய்வூதியர் வகை :-**

பணியாளர் ஓய்வு பெற்றமைக்கான காரணங்களைக் கருத்தில் கொண்டு, ஓய்வு பெற்றோரை நான்கு வகையினராகப் பிரிக்கலாம்.

அ. மூப்போய்வு. (Superannuation Retirement)
ஆ. விருப்போய்வு. (Voluntary Retirement)
இ. கட்டாய ஓய்வு. (Compulsory Retirement)
ஈ. இயலாமை ஓய்வு. (Retirement due to Invalidation)

**அ. மூப்போய்வு :-**

அரசால் அவ்வப்போது வரையறை செய்யப்படும் அகவையைப் பணியாளர் அடையின் அவர் ஓய்வு பெறுகிறார். இன்று நடைமுறையில் பொதுவாக எல்லாப் பணியாளர்க்கும் ஓய்வு பெறு அகவை 58 ஆண்டுகள் ஆகும். ஆனால், அலுவலக உதவியாளர், தலைமை ஏவலர் (Daffadar), காவலாளர், தோட்டப் பணியாளர், திறனில் பணியாளர் (Unskilled workman) ஆகியோர்க்கு மூப்போய்வுக்கான வயது 60 ஆண்டுகள் முடிவு ஆகும்.
(த.நா.மி.வா.பணி ஒழுங்குமுறை விதிகள் *17 A முதல் E வரை)*

**ஆ. விருப்போய்வு :-**

பணியாளர் தன் சொந்த பணியின் பொருட்டு மூன்று மாத முன் அறிவிப்பு அளித்து ஒப்புதல் பெற்று விருப்ப ஓய்வில் செல்லலாம். அப்படி விருப்ப ஓய்வில் செல்ல விழைபவர் குறைந்தது தகுதி பெறு பணிக்காலம் (Qualifying Service) 20 ஆண்டுகளை முடித்தோ அல்லது அகவை 50 முடிந்தோ இருக்க வேண்டும்.

விருப்போய்வில் செல்லும் பணியாளர்க்கு ஐந்து ஆண்டுகட்கு மிகாமல் பணிக்காலச் சிறப்பளிப்பு (Service Weightage) வழங்கப்படும்; ஆனால், இக்கூடுதல் பணிக்காலச் சிறப்பளிப்பைச் சேர்த்து, முழு ஓய்வூதியம் பெறுதற்கான மொத்த



தகுதி பெறு பணிக்கால அளவைத் (இப்போது 30 ஆண்டுகள்) தாண்டக் கூடாது. மேலும், இக்காலம் அவர் பணி மூப்படையும் நாளையும் (இப்போது 58 ஆண்டுகள்) தாண்டி அமையக் கூடாது.

**இ. கட்டாய ஓய்வு :-**

பணியாளருக்குக் கட்டாய ஓய்வு இரு காரணங்களால் அளிக்கப்படலாம்.

1. ஆட்சிமுறை சார்ந்த கட்டாய ஓய்வு.
2. தண்டனை சார்ந்த கட்டாய ஓய்வு.

நிர்வாக நலங்கருதி ஒரு பணியாளரைக் கட்டாய ஓய்வில் அனுப்பும் போது, அப்பணியாளர் தன் பணியில் தகுதி பெறு பணிக்காலமாக 30 ஆண்டுகள் முடித்திருக்க வேண்டும்; அல்லது 50 வயதை அவர் அடைந்திருக்க வேண்டும்.

தண்டனை காரணமாக ஒரு பணியாளரைக் கட்டாய ஓய்வில் அனுப்பும் போது, அவருக்கு எதிரான ஒழுங்கு நடவடிக்கை அனைத்தும் கைவிடப்படும்; மேல் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படாது.

கட்டாய ஓய்வில் செல்லும் பணியாளர்க்குப் பணிக்காலச் சிறப்பளிப்புக் (Service Weightage) கிடையாது.

**ஈ. இயலாமை ஓய்வு :-**

நிலையாக ஊனமுற்றோ, அன்றி உடலளவிலோ மனத்தளவிலோ நலிவுற்றோ, அதனால் ஆற்ற வேண்டிய பணிக்குத் தகுதி அற்றவராக ஒரு பணியாளர் அமையின், அவர்க்கு இயலாமை ஓய்வு அளிக்கப்படும்.

இயலாமை ஓய்வு மருத்துவ அடிப்படையிலேயே அளிக்கப்படும்.

இயலாமை ஓய்வில் செல்பவருக்குப் பணிக்காலச் சிறப்பளிப்புப் (Service Weightage)பொருந்தாது.

இயலாமை ஓய்வில் ஒரு பணியாளர் 53 அகவைக்குள் செல்வாரே ஆகில், அவரின் வாரிசுகளில் ஒருவர்க்குக் கருணை அடிப்படையில் வாரியப் பணி அளிக்கக் கூடும்.

**பணி ஓய்வுறுவோர் பெறு பலன்கள் :-**

பல்லாண்டுகள் பணியாற்றிய பணியாளர்கள் ஓய்வு பெறுங்கால் பெறற்கு உரிய பலன்களாவன :-

1. ஓய்வு ஊதியம். (Pension)
2. அகவிலைப்படி. (Dearness Allowance)
3. மருத்துவப்படி. (Medical Allowance)
4. பணிக் கொடை. (Death cum Retirement Gratuity)
5. ஓய்வூதியத் தொகுப்பளிப்பு. (Commutation)
6. ஈட்டு விடுப்புப் பணமாற்றுகை. (Encashment of Earned Leave)
7. குடும்பப் பாதுகாப்பு நிதி. (Family Security Fund)
8. சிறப்பு வைப்பு நிதி மற்றும் பணிக்கொடை, 1984.(Special Provident Fund cum Gratuity)
9. சிறப்பு வைப்பு நிதி மற்றும் பணிக்கொடை, 2000.(Special Provident Fund cum Gratuity)
10. பொது வைப்பு நிதி. (General Provident Fund)
11. பயணப்படி.

**1. ஓய்வூதியம் :-**

ஓய்வூதியம் அனைத்து வகை ஓய்வூதியர்க்கும் வேறுபாடின்றி அவர் இறுதியாகப் பெற்ற *மாதச் சம்பளம்* ***அல்லது இறுதியாகப் பெற்ற பத்து மாதச் சம்பளத்தின் சாராசரி, இவற்றில் எது மிகையோ அதில்*** 50% ஓய்வூதியமாக அளிக்கப்படுகிறது. ஆனால், அவர் முழு ஓய்வூதியம் பெற 30 ஆண்டுகள் பணியாற்றி இருக்க வேண்டும். 30 ஆண்டுகட்குக் குறைவாகத் தகுதி பெறு பணிக்காலம் இருப்பின், அப்பணிக்கால அளவிற்குத் தக அவர் ஓய்வூதியம் குறைவாய் அமையும்.

ஓய்வூதியம் கணக்கிடச் சம்பளம் என்பது அடிப்படைச் சம்பளம் (Basic Pay), *படிநிலைச் சம்பளம்* (Grade Pay), சிறப்புச் சம்பளம்( Special Pay), தனிச் சம்பளம் (Personal Pay) உள்ளடங்கியவை ஆகும்.



**2. அகவிலைப்படி :-**

பணியில் உள்ள பணியாளர்க்கு அளிப்பது போலவே ஓய்வூதியர்க்கும் அவர் பெறும் ஓய்வூதியத்தில் இத்தனை விழுக்காடு அகவிலைப்படி என்று கணக்கிடப்பட்டு இப்போது அளிக்கப்படுகிறது. அகவிலைப்படி அனைவர்க்கும் ***எந்த வேறுபாடும் இன்றி ஒரே விழுக்காட்டு அளவாகவே*** உள்ளது. கருணை ஓய்வூதியம் பெறுவோர்க்கு ***இது பொருந்தாது.***

1-1-2011 முதல் அகவிலைப்படி ஓய்வூதியத்தில் 51 விழுக்காடு ஆகும்.

**3. மருத்துவப்படி :-**

ஓய்வூதியர்க்கு மருத்துவப் படியாக மாதந் தோறும் 100 *உரூபா* ஓய்வூதியத்தோடு சேர்த்து அளிக்கப் படுகிறது.

**4. பணிக்கொடை :-**

பணியாளரின் தகுதி பெறு பணிக்காலத்தைக் கணக்கில் கொண்டு பணி ஓய்வு பெறும் பணியாளர்க்குக் கணிசமாக ஓர் ஒட்டு மொத்த உதவித் தொகையாகப் பணிக் கொடை வழங்கப்படுகிறது. ஒவ்வொரு அரையாண்டுப் பணிக்காலத்திற்கும் கால் மாத ஊதியம் என்று கணக்கிடப்பட்டு, மிகையான பணிக்காலம் 33 ஆண்டுகள் என்று வரையறை செய்யப்பட்டுப் பதினாறரை (16½) மாதம் ஊதியம் பணிக்கொடையாக வழங்கப்படு*கிறது*. அப்படி அளிக்கப்படும் பணிக்கொடையின் மிகு வரம்பு 10 இலட்சம் உரூபா ஆகும்.

பணிக்கொடை கணக்கிடக் கடைசி மாத ஊதியம் எடுத்துக் கொள்ளப்படும். ஊதியம் என்பது இங்குச் சம்பளம், *படிநிலைச் சம்பளம்,* சிறப்புச் சம்பளம், தனிச் சம்பளம், அகவிலைப்படி ஆகியவை சேர்ந்தது ஆகும்.

*சிறப்புச் சம்பளம், தனிச் சம்பளம் ஆகியவை சம்பளம் எனக் குறிப்பிடப்படினும் அவை அகவிலைப்படி கணக்கீட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படா.*

முழு ஓய்வூதியம் பெற 30 ஆண்டுப் பணிக்காலம் போதும் எனினும், முழு பணிக்கொடை பெற, ஓய்வூதியர் 33 ஆண்டுகள்

பணியாற்றி இருக்க வேண்டும். பணிக்கொடை அவர் ஆற்றிய பணிக்கால அளவிற்கு ஏற்பவே அமையும்.

**5. ஓய்வூதியத் தொகுப்பளிப்பு :-**

ஓய்வு பெறும் பணியாளர் தான் பெறும் ஓய்வூதியத்தின் ஒரு பகுதியைச் சில காலத்திற்கு ஒப்படைத்து, அதற்கு ஈடாக ஓர் ஒட்டு மொத்த தொகையைப் பெறக் கூடும். *1-12-2009 முதல்* ஓய்வூதியத்தில் $33^1/_3$விழுக்காடு அளவில் ஒப்படைத்துக் கணிசமான தொகையைப் பெறலாம். *1-12-2007 முதல் 30-11-2009 **வரையில் ஓய்வு பெற்றவர், அவரவர் விருப்ப அடிப்படையில் அளவில் ஒப்படைத்து அதற்கான** தொகுப்பளிப்புப் பெறலாம்.*

ஓய்வூதியத் தொகுப்பளிப்பு நாளில் ஓய்வூதியரின் வயதிற்கும் அவர் ஒப்படைக்கும் ஓய்வூதியப் பகுதிக்கும் ஏற்ப இவ்வொப்பளிப்புத் தொகை ஆளுக்கு ஆள் வேறுபடும்.

ஓய்வூதியத் தொகுப்பளிப்பு நாளி-ருந்து 15 ஆண்டுகள் முடிந்து ஒப்படைக்கப்பட்ட ஓய்வூதியப் பகுதியைச் சேர்த்து ஓய்வூதியம் முழுமையாக்கப்பட்டு அளிக்கப்படும். ***அதற்காக, ஓய்வூதியர் தனியே விண்ணப்பம் அளிக்க வேண்டியது இல்லை.***

**6. ஈட்டு விடுப்புப் பண மாற்றுகை :-**

பணியாளர் ஓய்வு பெறுங்கால் அவர் கணக்கில் அந்நாள் வரை இருப்பில் உள்ள ஈட்டு விடுப்பை ஒப்படைத்து அதற்கு மாற்றாகப் பணமாக்கிக் கொள்ளலாம். அப்படி ஒப்படைத்துப் பணமாக மாற்றிக் கொள்ளும் ஈட்டு விடுப்பு 240 நாட்களுக்கு மிகக் கூடாது. பணியி-ருக்கும் போது ஒப்படைப்பின் என்ன பலன்களெல்லாம் உண்டோ, அத்தனையும் ஓய்வு பெறுங்கால் ஒப்படைக்கும் போதும் உண்டு.

**7. பணியாளர் குடும்பப் பாதுகாப்பு நிதி :-**

பணிக்காலத்தில் பணியாளர் இறந்து படின், அவர் குடும்பப் பாதுகாப்பு நோக்கில் அமைந்தது இந்நிதி. 1-7-74 முதல் உள்ள இத்திட்டத்தோடு 1-4-85 முதல் தொடங்கப்பட்ட குடும்பப் பாதுகாப்பு நிதித் துணைத் திட்டமும் ஒன்றாக



நடைமுறைப்படுத்தப்படுகிறது. மாதத் தவணையாகச் சிறு தொகை பணியாளர் பணிக்காலத்தில் பிடிக்கப்பட்டு, அவர் இறந்து படின் குடும்பத்திற்கு ஒரு கணிசமான தொகை வழங்கப் படுகிறது. பல்வேறு காலக் கட்டங்களில் தவணைத் தொகையும் அளிப்புத் தொகையும் பல்வகையாக இருந்துள்ளன. இன்று நடைமுறையில் தவணைப் பிடித்தம் 50 உரூபா ஆகவும் குடும்பப் பாதுகாப்பு நிதி அளிப்புத் தொகை 1,50,000 உரூபா (ஒரு ***இலட்சத்து ஐம்பதினாயிரம்*** ) ஆகவும் உள்ளன.

பணியாளர் ஓய்வு பெறும் போது, இந்நிதியில் அவர் செலுத்திய பங்குத் தொகை, அதற்கான வட்டியுடன் திருப்பி அளிக்கப்படும்; வாரியத்தின் பங்களிப்பு ஏதும் இருக்காது.

**8. சிறப்பு வைப்பு நிதி மற்றும் பணிக்கொடை, 1984 :-**

பணியாளர் ஓய்வு பெறுங்கால், மேலும் பயன் பெறும் வகையில் சிறப்பு வைப்பு நிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம் 1984 இல் தொடங்கப்பட்டது. அனைத்துப் பணியாளர்க்கும் 1-4-1984 முதல் அல்லது அவர்கள் முறையாகப் பணியமர்த்தம் செய்யப்பட்ட நாளி-ருந்து இத்திட்டம் தொடங்குகிறது.

இத்திட்டத்தில் சீரான மாதத் தவணையாக 20 உரூபா ஒவ்வொரு மாதமும் ஊதியப் பட்டிய-ல் இருந்து பிடிக்கப்படுகிறது. 8% கூடுதல் வட்டியுடன் இப்பிடிப்புத் தொகை 5000 உரூபா ஆகும் வரை பிடித்தம் தொடரும். 5000 உரூபா ஆனதும் பிடித்தம் நிறுத்தப்படும். பின்னர் இத்தொகைக்குப் பொது வைப்பு நிதிக்குப் பொருந்தும் வட்டியுடன் சேர்த்து கணக்கிடப்படும்.

பணியாளர் ஓய்வுறுபோது வட்டியுடன் சேர்த்துப் பிடித்தம் செய்த தொகையோடு வாரியப் பங்களிப்பாக 5000 உரூபாயும் உடன் சேர்த்து வழங்கப்படும்.

வாரியப் பங்களிப்பான 5000உரூபா 15.9.2000 முதல் 10,000 உரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது.

பணியாளர் பணியில் இறந்துபடின் வாரியப் பங்களிப்பு வழங்கப்பட மாட்டாது. அந்நாள் வரை பிடித்தம் செய்த தொகை மட்டுமே வட்டியுடன் வாரிசுகளுக்கு வழங்கப்படும்.

**9. சிறப்பு வைப்பு நிதி மற்றும் பணிக்கொடை, 2000 :-**

1-6-2002 இல் இருந்து இத்திட்டம் நடைமுறையில் உள்ளது. புதிதாகப் பணியில் சேர்பவர் இத்திட்டத்தில் சேர்வது கட்டாயம்..

1-6-2002 உம் அதற்குப் பின்னரும் பணியில் சேர்ந்தவரிடமிருந்து மாதத் தவணையாக 70 உரூபாவும் முன்னரே சிறப்பு வைப்பு நிதி மற்றும் பணிக்கொடை (1984) திட்டத்தில் பங்கேற்றுள்ள பணியாளரிடமிருந்து 50 உரூபாவும் ஒவ்வொரு மாத ஊதியப் பட்டிய-லும் பிடித்தம் செய்யப்படும். இப்பிடித்தம் பணியாளர் மூப்போய்வில் செல்லும் நாளுக்கு ஒரு மாதம் முன்னர் வரை தொடரும்.

இத்திட்டத்திற்குப் பிடித்தம் செய்யும் தவணைத் தொகைக்குப் பொது வைப்பு நிதிக்கு உரிய வீதத்தில் வட்டி அளிக்கப்படும். இத்தொகையி-ருந்து பணிக்காலத்தில் எந்த முறையிலும் பணம் தரப்பட மாட்டாது.

பணியாளர் ஓய்வு பெறுங்கால், 70 உரூபா தவணைத் தொகையாகக் கட்டி வருபவர்க்கு வட்டியுடன் சேர்ந்த - அவர் செலுத்திய தொகையும் வாரியப் பங்களிப்பாக 10000 உரூபாவும் சேர்த்து அளிக்கப்படும். 50 உரூபா தவணைத் தொகை கட்டி வருபவர்க்கு அவர் அந்நாள் வரை செலுத்திய பிடித்தத் தொகை மட்டுமே வட்டியுடன் அளிக்கப்படும். வாரியப் பங்களிப்பு கிடையாது.

பணியாளர் பணியில் இறந்துபடின் வாரியப் பங்களிப்பு வழங்கப்பட மாட்டாது. அந்நாள் வரை பிடித்தம் செய்த தொகை மட்டுமே வட்டியுடன் வாரிசுக்கு வழங்கப்படும்.

**10. பொது வைப்பு நிதி :-**

பணியாளரின் சம்பளத்தில் குறிப்பிட்ட விழுக்காட்டு அளவு மாதம் மாதம் பிடித்தம் செய்யப்பட்டு, அரசால் ஒவ்வொரு ஆண்டும் வரையறை செய்யப்படும் வீதத்தில் வட்டியுடன் தனிக் கணக்காகச் சேமித்து வைக்கப் படுகிறது. பணியாளர் ஓய்வு பெறுங்கால் இச்சேமிப்புத் தொகை பேருதவியாக அமையும். குறிப்பிட்ட அளவிற்கும் மேலாகப் பணியாளர் விழையின் பிடித்தத் தொகையை மிகையாக்கிக் கொள்ளலாம்.



பணிக் காலத்திலும் இன்றியமையாத் தேவைகள் பொருட்டுத் திரும்பச் செலுத்தும் கடனாகவும் சில வரை முறைகட்கு உட்பட்டுப் பகுதி இறுதிப் பெறுதலாகவும் பெறலாம்.

பணியாளர் மூப்போய்வில் செல்லும் நாளுக்கு முன்னர்க் கடைசி நான்கு மாதப் பணிக்காலத்திற்கு வைப்பு நிதிக்கான சந்தாத் தொகை, திருப்பளிப்புத் தொகை பிடித்தம் செய்ய வேண்டியதில்லை.

பொது வைப்பு நிதிக் கணக்கின் இறுதித் தீர்வைப் பணத்தை ஓய்வு பெறு நாளன்றே ஓய்வு பெறுபவர்க்கு அளிக்க வேண்டும்.

**11. பயணப்படி :-**

பணி ஓய்வு பெறும் பணியாளர் தன் குடும்பத்தினருடன் சொந்த ஊருக்கு இறுதியாகச் சென்று நிலையாகத் தங்கிடப் பயணப்படி அளிக்கப்படும். வீட்டுப் பயன்பாட்டுப் பொருள்களை எடுத்துச் செல்லும் செலவையும் வாரியம் ஏற்கும்.

ஓய்வூதியர் பணியி-ருந்து மாற்றலாகிப் பயணம் செய்ய நேர்ந்திருந்தால், என்ன பயணப்படி பெறற்கு உரியரோ அதே அளவு பயணப்படியை ஓய்வில் சொந்த ஊர் செல்கையிலும் பெறற்கு உரியர்.

## பணியில் இறந்த பணியாளர் குடும்பத்தினர் பெறு பயன்கள் :-

பணிக்காலத்தில் பணியாளர் இறந்துபடின், துணை இழந்த அவர் குடும்பத்தினர் துயரின்றி வாழ்க்கையைத் தொடர்ந்திடக் கீழ்க்கண்ட பயன்களைப் பெறற்கு உரிமை உடையவர். பணியின் போது காணாமற் போன பணியாளரின் குடும்பத்தினருக்கும் இவை பொருந்தும்.

அ. குடும்ப ஓய்வூதியம்.

ஆ. அகவிலைப்படி.

இ. மருத்துவப்படி.

ஈ. இறப்புப் பணிக்கொடை (DCRG).

உ. ஈட்டு விடுப்புப் பணமாற்றுகை.

ஊ. பணியாளர் குடும்பப் பாதுகாப்பு நிதி.

எ. சிறப்பு வைப்பு நிதி மற்றும் பணிக்கொடை, 1984.

ஏ. சிறப்பு வைப்பு நிதி மற்றும் பணிக்கொடை, 2000.

ஐ. பொது வைப்பு நிதி.

ஒ. பயணப்படி.

ஓ. இறந்த பணியாளர் இறுதிப் பயணச் சலுகை.

ஔ. வாரிசுக்கு வேலை உதவி.

**அ. குடும்ப ஓய்வூதியம் :-**

பணியாளர் இறந்த *மறு* நாளி-ருந்து, குடும்ப ஓய்வூதியம் ***அளிக்கப் படும்.*** பணியாளர் 7 ஆண்டுகள் குறையாது பணியாற்றி இருப்பின், அவர் இறுதியாகப் பெற்ற ஊதியத்தில் 50%ஐ முதல் ஏழு ஆண்டுகட்கும் அதற்குப் பின்னர் 30% உம் குடும்ப ஓய்வூதியம் அளிக்கப்படுகிறது. பணிக்காலம் 7 ஆண்டுகட்கு குறைவாக இருப்பின், குடும்ப ஓய்வூதியம் 30% ஆக இருக்கும்.

**ஆ. அகவிலைப்படி :-**

குடும்ப ஓய்வூதியர்க்கு ***ஓய்வூதியர்க்கு*** அளிக்கப்படு விழுக்காட்டு வீதத்தில் அகவிலைப்படி அளிக்கப்படும். 1-1-2011 முதல் அகவிலைப்படி குடும்ப ஓய்வூதியத்தில் 51 விழுக்காடு ஆகும்.

**இ. மருத்துவப் படி :-**

ஓய்வூதியர்க்கு அளிக்கபடுவதற்கு ஒப்பவே குடும்ப ஓய்வூதியர்க்கும் மாதமாதம் 100 உரூபா *மருத்துவப்படி* குடும்ப ஓய்வூதியத்தோடு சேர்த்து அளிக்கப்படுகிறது.

**ஈ. இறப்புப் பணிக்கொடை :-**

இறப்புப் பணிக்கொடை பணியாளரின் தகுதி பெறு பணிக்காலத்திற்கு ஏற்ப அமையும். இருபதாண்டிற்குள் ஆன



பணிக் காலத்திற்குக் காலப்பகுதிகளுக்கு ஏற்ப ஒவ்வொரு வீதத்திலும் இருபதாண்டிற்கும் மிகையான பணிக்காலமாகின், ஒவ்வொரு அரையாண்டுப் பணிக் காலத்திற்கும் அரை மாத ஊதியம் என்றும் கணக்கிட்டு இறப்புப் பணிக்கொடை வழங்கப்படும்.

இப்படி வழங்கப்படு இறப்புப் பணிக்கொடை 33 மாத ஊதியத்தினை அல்லது 10,00,000 *(பத்து இலட்சம்)* உரூபாவைத் தாண்டி அமையக்கூடாது.

**உ. ஈட்டு விடுப்புப் பணமாற்றுகை :-**

பணியாளர் இறக்குங்கால், அவர் கணக்கில் அந்நாள் வரை இருப்பில் உள்ள ஈட்டு விடுப்பைப் பணமாக மாற்றிக் குடும்ப ஓய்வூதியர்க்கு அளிக்கப்படும். இப் பண மாற்றுகை விடுப்பு 240 நாட்கட்கு மிகக் கூடாது.

**ஊ. பணியாளர் குடும்பப் பாதுகாப்பு நிதி :-**

பணியாளர் குடும்பப் பாதுகாப்பு நிதியி-ருந்து உரூபா 1,50,000/- குடும்ப ஓய்வூதியர்க்கு அளிக்கப்படும்.

**எ. சிறப்பு வைப்பு நிதி மற்றும் பணிக்கொடை, 1984 :-**

பணியாளர் இறக்கும் நாள் வரை செலுத்தப்பட்ட தவணைத் தொகையும் அதற்கான வட்டியுமே குடும்ப ஓய்வூதியர்க்கு அளிக்கப்படும். வாரியப் பங்களிப்புக் கிடையாது.

**ஏ. சிறப்பு வைப்பு நிதி மற்றும் பணிக்கொடை, 2000 :-**

பணியாளர் இறக்கும் நாள் வரை செலுத்தப்பட்ட தவணைத் தொகையும் அதற்கான வட்டியுமே குடும்ப ஓய்வூதியர்க்கு அளிக்கப்படும். வாரியப் பங்களிப்புக் கிடையாது.

**ஐ. பொது வைப்பு நிதி :-**

பணியாளர் இறந்த நாள் வரை அவரின் பொது வைப்பு நிதிக் கணக்கில் சேமித்து வைத்துள்ள தொகை, அதுநாள் வரையான வட்டியுடன் குடும்ப ஓய்வூதியர்க்கு அளிக்கப்படும்.

**ஓ. பயணப்படி :-**

இறந்துபட்ட பணியாளர் குடும்பத்தினர்க்கு இறுதியாகச் சொந்த ஊர்க்கு வீட்டுப் பயன்பாட்டுப் பொருள்களை எடுத்துக் கொண்டு பயணஞ் செய்யப் பயணப்படி அளிக்கப்படும்.

**ஓ. இறந்த பணியாளர் இறுதிப் பயணச் சலுகை :-**

இறந்த பணியாளரின் உடலைக் குடும்பத்தினர் விருப்பப்படி, குடியிருக்கும் இடத்திற்கோ அல்லது இறுதிச் சடங்கு நடத்தும் இடத்திற்கோ அல்லது சொந்த ஊர்க்கோ (*தமிழ் நாடு, புதுச்சேரி, ஆந்திரம், கேரளம், கர்நாடகம் ஆகிய தென் மாநிலங்களுக்குள்* மட்டும்) எடுத்துச் செல்லும் செலவை வாரியமே ஏற்கும். வானூர்தி வழியிலும் உடலை எடுத்து வரும் செலவை வாரியமே ஏற்கும்.

## ஓய்வூதியர் இறந்துபடின் குடும்பத்தினர் பெறு பயன்கள் :-

காணாமற்போன ஓய்வூதியர் குடும்பத்தினர் உட்பட, இறந்துபட்ட ஓய்வூதியரின் குடும்பத்தினர் கீழ்க்கண்ட பலன்களைப் பெறற்கு உரியர்.

அ. குடும்ப ஓய்வூதியம்.

ஆ. அகவிலைப் படி.

இ. மருத்துவப் படி.

ஈ. ஓய்வூதியர் குடும்பப் பாதுகாப்பு நிதி.

*( இந்நிதியைக் குடும்பத்தினர் பெற, ஓய்வூதியர் தம் ஓய்வூதியத்தில் குடும்பப் பாதுகாப்பு நிதிக்கான தவணைத் தொகையை 12 மாதங்கள் பிடித்திருக்க வேண்டும்,)*

**அ. குடும்ப ஓய்வூதியம் :-**

ஓய்வூதியர் இறந்த *அடுத்த* நாளி-ருந்து ***ஓய்வூதியர்தம் குடும்பத்தினர்*** குடும்ப ஓய்வூதியம் பெறற்கு உரியர். ஓய்வூதியர் பணியில் இறுதியாகப் பெற்ற ஊதியத்தில் 50% குடும்ப ஓய்வூதியமாக, ***ஓய்வூதியர் ஓய்வு பெற்ற நாள்*** முதல் ஏழு



ஆண்டுக் காலத்திற்கோ அல்லது ஓய்வூதியர் 65 வயதை அடையும் நாள் வரையோ, இவற்றில் எது முன்னரோ, அது வரை வழங்கப் பெறும். அதற்குப் பின்னர் 30% குடும்ப ஓய்வூதியமாக அமையும்.

**ஆ. அகவிலைப் படி :-**

ஓய்வூதியர்க்கு இணையான விழுக்காட்டில் ஓய்வூதிய அளவிற்கு ஏற்ப அகவிலைப்படி அளிக்கப்படும். 1-1-2011 முதல் இது 51% ஆகும்.

**இ. மருத்துவப்படி :-**

ஓய்வூதியர் அனைவர்க்கும் ஒப்ப, மாதமாதம் 100 உரூபா *மருத்துவப் படி* அளிக்கப்படுகிறது.

**ஈ. ஓய்வூதியர் குடும்பப் பாதுகாப்பு நிதி :-**

ஓய்வூதியர் இறந்துபடின் இந்நிதியி-ருந்து ஓய்வூதியரின் குடும்பத்தினருக்கு 25,000 உரூபா வழங்கப்படும். இது குடும்ப ஓய்வூதியம், கருணை ஓய்வூதியம் பெறுபவர்க்குப் பொருந்தாது.

**கருணை ஓய்வூதியம் :-**

1-7-1986 முதற் கொண்டே வாரியத்தில் அனைத்துப் பணியாளர்க்கும் ஓய்வூதியத் திட்டம் நடைமுறைக்கு வந்தது. 1-7-1986க்கு முன்னர் ஓய்வுற்ற களப் பணியாளர்க்குப் பங்களிப்பு வைப்பு நிதித் திட்டத்தின் (CPF) பலனே அளிக்கப்பட்டது.

1-7-1986க்கு முன்னர்ப் பணியில் இறந்த அல்லது 1-7-1986க்கு முன்னர் ஓய்வு பெற்று, 1-7-1986க்கு முன்னரோ, அன்றிப் பின்னரோ இறந்தோரின் குடும்பத்தினரின் நலனைக் கருத்தில் கொண்டு கருணை ஓய்வூதியம் இறந்த அவர்தம் குடும்பத்தினருக்கு அளிக்கப்படுகிறது.

1-11-1997 முதல் *மாதத்திற்கு* 605 உரூபாவாக இருந்த கருணை ஓய்வூதியம் 1-8-2006 ***முதல் அகவலைப்படியில் 50% ஐ அகவிலை ஓய்வூதியமாகக் கொண்டு*** 908 உரூபாவாக ***உள்ளது.*** இக்கருணை ஓய்வூதியத்திற்கு, அகவிலைப்படி அளிக்கப் படுகிறது. 1-7-2009 முதல் அகவிலைப்படி 65% ஆக உள்ளது.

ஓய்வூதியம் பெறற்கு உரிமையில்லா 1-7-1986 க்கு முன்னர் ஓய்வுற்ற, ஆனால் இன்னும் உயிரோடு இருக்கும் ஓய்வுற்ற பணியாளர் நலனைக் கருத்திற் கொண்டு, 1-2-2006 முதற் கொண்டு அவர்க்கும் கருணைத் தொகை வழங்கப் படுகிறது.

இக் கருணை ஓய்வூதியம் மேற்குறிப்பிட்ட அளவிலேயே அமைந்துள்ளது.

**கருணை அடிப்படையில் வேலை வாய்ப்பு :-**

வேலை வாய்ப்புக்கு உரியர் :-

அ. பணியில் இறந்துபட்ட பணியாளரின் வாரிசு.

ஆ.53 வயதிற்குள் இயலாமை ஓய்வில் சென்ற பணியாளரின் வாரிசு.

இ. பணியில் இருந்தபோது காணாமற் போன பணியாளரின் வாரிசு.

ஈ. பணி இடை நீக்க காலத்தில் இறந்த பணியாளரின் வாரிசு.

அறிவதறிந்(து) அடங்கி அஞ்சுவ(து) அஞ்சி
உறுவ(து) உலகுவப்பச் செய்து - பெறுவதனால்
இன்புற்று வாழும் இயல்புடையார் எஞ்ஞான்றும்
துன்புற்று வாழ்தல் அரிது.

நாலடியார்- 74.

*"கொட்டாவி விடும் போது மூன்று தரம் சிட்டிகை போடுவதும் - போகும் போது எதிரே பூனை குறுக்கே வந்தால் சகுணம் சரியில்லை என்று திரும்பி விடுவதும் - பல்-ச் சொல்லுக்குத் தரையைத் தட்டுவதும் அதற்குப் பலன் பார்த்துப் பதைப்பதும் மக்களிடம் எப்படியோ ஏற்பட்டுவிட்ட பழக்கத்தினாலும் அறியாமையாலும் தாம்; பொருத்மான காரணம் எதையுமே கூறிட முடியாது."*

அறிஞர் அண்ணா



## ஓய்வூதியர் பெறு பயன்கள் - பிரிவு.

| வ. எண் | பயன்கள் | மூப்பு ஓய்வூதியர் | விருப்ப ஓய்வூதியர் | இயலாமை ஓய்வூதியர் | கட்டாய ஓய்வூதியர் | பணியில் இறந்தவரின் குடும்ப ஓய்வூதியர் | பணியில் காணாமற்போனவரின் குடும்ப ஓய்வூதியர் | இறந்த/காணாமற்போன ஓய்வூதியரின் குடும்ப ஓய்வூதியர் | 1.7.86க்கு முன் பணியில் இறந்த அல்லது 1.7.86க்கு முன் ஓய்வு பெற்றுப் பின்னர் இறந்தவரின் குடும்ப ஓய்வூதியர் | 1-7-1986 க்கு முன் பணியில் இருந்து ஓய்வு பெற்று உயிரோடு இருப்பவர்க்குக் கருணை ஓய்வூதியம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | ஓய்வூதியம் | உண்டு | உண்டு | உண்டு | உண்டு | உண்டு | உண்டு | உண்டு | உண்டு | உண்டு |
| 2. | அகவிலைப்படி | உண்டு | உண்டு | உண்டு | உண்டு | உண்டு | உண்டு | உண்டு | உண்டு | உண்டு |
| 3. | மருத்துவப்படி | உண்டு | உண்டு | உண்டு | உண்டு | உண்டு | உண்டு | உண்டு | இல்லை | இல்லை |
| 4. | பணிக் கொடை | உண்டு | உண்டு | உண்டு | உண்டு | உண்டு | உண்டு | இல்லை | இல்லை | இல்லை |
| 5. | பொது வைப்பு நிதி | உண்டு | உண்டு | உண்டு | உண்டு | உண்டு | உண்டு | இல்லை | இல்லை | இல்லை |
| 6. | ஈட்டு விடுப்பு - பணமாற்றுகை | உண்டு | உண்டு | உண்டு | உண்டு | உண்டு | உண்டு | இல்லை | இல்லை | இல்லை |
| 7 | சிறப்பு வைப்பு நிதி - பணிக்கொடை | உண்டு | உண்டு | உண்டு | உண்டு | உண்டு | உண்டு | இல்லை | இல்லை | இல்லை |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | குடும்பப் பாதுகாப்பு நிதி | உண்டு | உண்டு | உண்டு | உண்டு | இல்லை | உண்டு | இல்லை | இல்லை | இல்லை |
| 9 | ஓய்வூதியர் மருத்துவ நல நிதி | உண்டு | உண்டு | உண்டு | உண்டு | உண்டு | இல்லை | இல்லை | இல்லை | இல்லை |
| 10 | பொங்கற் பரிசு | உண்டு | உண்டு | உண்டு | உண்டு | உண்டு | உண்டு | உண்டு | உண்டு** | உண்டு** |
| 11 | ஓய்வூதிய ஒப்படைப்பு | உண்டு | உண்டு | உண்டு | உண்டு | இல்லை | இல்லை | இல்லை | இல்லை | இல்லை |
| 12 | ஓய்வுற்றவர் குடும்பப் பாதுகாப்பு நிதி | உண்டு | உண்டு | உண்டு | உண்டு | இல்லை | இல்லை | இல்லை | இல்லை | இல்லை |
| 13 | சொந்த ஊர் செல்லப் பயணப்படி | உண்டு | உண்டு | உண்டு | உண்டு | உண்டு | இல்லை | இல்லை | இல்லை | இல்லை |
| 14 | வாரிசுக்கு வேலை | இல்லை | இல்லை | உண்டு* | இல்லை | உண்டு | உண்டு | இல்லை | இல்லை | இல்லை |
| 15 | ஈமச்சடங்கு நிதி | இல்லை | இல்லை | இல்லை | இல்லை | உண்டு | இல்லை | இல்லை | இல்லை | இல்லை |
| 16 | இறந்த பணியாளர் உடலைச் சொந்த ஊருக்கு எடுத்துச் செல்ல | இல்லை | இல்லை | இல்லை | இல்லை | உண்டு | இல்லை | இல்லை | இல்லை | இல்லை |
| 17 | வாழ்நாள் நிலுவைத் தொகை | இல்லை | இல்லை | இல்லை | இல்லை | இல்லை | உண்டு | உண்டு | உண்டு | உண்டு |
| 18 | பணிச்சிறப்பளிப்பு | இல்லை | உண்டு | இல்லை | இல்லை | இல்லை | இல்லை | இல்லை | இல்லை | இல்லை |

* 53 வயதிற்குள் இயலாமை ஓய்வு பெற்றிருந்தால் மட்டுமே உண்டு. ** 2008 ஆம் ஆண்டு முதல் உண்டு.



## ஓய்வூதியர் பெறு பயன்கள்
### கணக்கீட்டு வாய்ப்பாடுகள்

**அ. ஓய்வூதியம் (Pension)**

$$\text{இறுதி மாதச் சம்பளம்* X 50 X பணிக்காலம்**} \over {100 \quad\quad 60}$$

** - இறுதியாக வாங்கிய சம்பளம், இறுதி 10 மாதச் சம்பளத்தின் சராசரி, இவற்றில் எது மிகுதியோ அது.*

** - அரை ஆண்டுகளில்-60க்கு மிகாமல்

குறிப்பு :-

இறுதி மாதச் சம்பளம் / இறுதிப் பத்து மாதச் சம்பளச் சராசரி என்பது இங்கு அடிப்படைச் சம்பளம்(Basic Pay), *படிநிலைச் சம்பளம்*(Grade Pay), சிறப்புச் சம்பளம், தனிச் சம்பளம் ஆகியவை மட்டுமே அடங்கியவை.

**ஆ. குடும்ப ஓய்வூதியம் (Family Pension) :-**

**1. பணியாளர் பணியில் இறப்பின் :-**

*i. ஏழு ஆண்டுகட்கு குறைந்து பணியாற்றி இருப்பின் :-*

குடும்ப ஓய்வூதியம் = இறுதியாகப் பெற்ற சம்பளத்தில் 30%

*ii. ஏழு ஆண்டுகட்குக் குறையாது பணியாற்றி இருப்பின் :-*

முதல் 7 ஆண்டுகட்கு அல்லது பணியாளர் வயது 65 ஆகும் வரை, இவற்றில் எது முன்னதோ அதுவரை :-

குடும்ப ஓய்வூதியம் = இறுதியாகப் பெற்ற சம்பளத்தில் 50%

அதற்குப் பிறகு :-

குடும்ப ஓய்வூதியம் = இறுதியாகப் பெற்ற சம்பளத்தில் 30%

**2. ஓய்வூதியர் இறப்பின் :-**

*i.* **ஓய்வு பெற்ற நாளிலிருந்து** *முதல் ஏழு ஆண்டுகட்கு அல்லது ஓய்வூதியரின் வயது 65 முடியும் வரை, இவற்றில் எது முன்னரோ, அது வரை :-*

குடும்ப ஓய்வூதியம் = இறுதியாகப் பெற்ற சம்பளத்தில் 50%

*ii.* **ஓய்வு பெற்ற நாளிலிருந்து** *7 ஆண்டுகட்குப் பின்னர் அல்லது ஓய்வூதியரின் வயது 65க்கு அப்பால், இதில் எது முன்னரோ அதி-ருந்து :-*

குடும்ப ஓய்வூதியம் = இறுதியாகப் பெற்ற சம்பளத்தில் 30%

*குடும்ப ஓய்வூதியம் கணக்கிடலில், தகுதி பெறு காலத்தைக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டியது இல்லை.*

**இ. பணிக்கொடை (DCRG) :-**

**1. ஓய்வுப் பணிக் கொடை :-**

= இறுதியாக வாங்கிய மாத ஊதியம் X ¼ X பணிக்காலம்*

* - அரை ஆண்டுகளில்-66க்கு மிகாமல்.

இப்பணிக்கொடைக்கான மிகை வரம்பு = 10,00,000 உரூபா.

**2. இறப்புப் பணிக்கொடை :-**

பணிக்காலம்

*i. ஓராண்டிற்குக் குறைவாக இருப்பின் :*

= இறுதி மாத ஊதியம் X 2

*ii. ஓராண்டும் அதற்கு மேலும், ஆனால் ஐந்தாண்டுகட்கு குறைவாக இருப்பின் :*

= இறுதி மாத ஊதியம் X 6

*iii. ஐந்தாண்டும் அதற்கு மேலும், ஆனால் இருபது ஆண்டுகட்குக் குறைவாக இருப்பின் :*

= இறுதி மாத ஊதியம் X 12

*iv. இருபதாண்டும் அதற்கு மேலும் :*

= இறுதி மாத ஊதியம் X ½ X பணிக்காலம்
(அரைஆண்டுகளில்-66க்கு மிகாமல்)



இவ்விறப்புப் பணிக்கொடைக்கான மிகை வரம்பு = 10,00,000 ( *பத்து இலட்சம்)* உரூபா

**குறிப்பு :-**

பணிக்கொடை கணக்கீட்டிற்கு இறுதி மாத ஊதியம் என்பது அடிப்படைச் சம்பளம், *படிநிலைச் சம்பளம்,* தனிச் சம்பளம், சிறப்புச் சம்பளம் ஆகியவற்றோடு அகவிலைப் படியையும் உட்கொண்டது. *சிறப்புச் சம்பளம், தனிச்சம்பளம் இரண்டும் அகவிலைப்படிக் கணக்கீட்டிற்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது.*

**ஈ. தொகுப்பளிப்பு (Commutation) :-**

$$= \text{ஓய்வூதியம்} \times \frac{33\,^1/_3}{100} \times \text{தொகுப்பீட்டு மதிப்பு*} \times 12.$$

* -அட்டவணைப்படியான அளவு

தொகுப்பீட்டு மதிப்பென்பது அடுத்த பிறந்த நாள் அகவையில் அட்டவணைப் பட்டியல்படி குறிப்பிட்டுள்ள தொகுப்பளிப்பு மதிப்பீட்டு அளவு.

**மனையாள் மாண்பு.**

*தாயோ(டு) அறுசுவைபோம் தந்தையோடு கல்விபோம்*
*சேயோடு தான்பெற்ற செல்வம்போம்- ஆயவாழ்வு*
*உற்றார் உடன்போம்; உடன்பிறப்பால் தோள்வ-போம்;*
*பொற்றா- யோடவையும் போம்.*

*-ஔவையார்.*

*"சமத்துவம், சம உரிமை என்கிறபோது, உங்கள் மனைவியை நினைத்துக் கொண்டு சிந்திக்காதீர்; மாறாக, உங்களின் செல்லப் பெண் குழந்தைகளையும் உடன் பிறந்த பெண்களையும் உள்ளத்தில் கொண்டு சிந்தியுங்கள்."*

*தந்தை பெரியார்.*

# மூப்போய்வு

## (Superannuation)

அரசால் அவ்வப்போது அரசு பணிக்கு வரைறை செய்து ஆணையிடப்படும் வயதைப் பணியாளர் அடையும் போது, அப்பணியாளர் பணியி-ருந்து ஓய்வில் விடுவிக்கப்படுகிறார்.

**அ. மூப்போய்வு - வரையறைகள் :-**

1. அனைத்துப் பணியாளரும் 58 வயது முடியும் போது பணியி-ருந்து ஓய்வு பெறுகின்றனர். ஆனால், அலுவலக உதவியாளர், தலைமை ஏவலர் (Daffadar), காவலர், தோட்டப் பணியாளர், துப்புரவுப் பணியாளர், திறனில் பணியாளர் ஆகியோர்க்குப் பணி மூப்போய்வு வயது 60 ஆகும்.

2. பணியாளர் 58 வயது முடியும் நாள் ஒரு மாதத்தின் முதல் நாளாக இல்லாது, வேறு எந்த நாளாக இருப்பினும், அப்பணியாளர் அந்த மாதத்தின் இறுதி நாளன்று ஓய்வு பெறுவார். அதுவே மாதத்தின் முதல் நாளாக அமையின், அவர் முந்தைய மாதத்தின் இறுதி நாளன்று ஓய்வு பெறுவார்.

தநா.மிவா. பணி ஒழுங்கு முறை விதிகள் : 17(a) முதல் 17 (e) வரை.

**ஆ. ஓய்வூதியம் பெறத் தகுதிகள் :-**

1. பணியாளர் தகுதி பெறு பணிக்காலம் 10 ஆண்டுகள் முடித்திருந்தால் ஓய்வூதியம் பெறத்தகுதி பெறுகிறார். தகுதி பெறு பணிக்காலக் கணக்கீட்டில், மூன்று மாதங்களும் அதற்கு மேலான பணிக்காலமும் அரை ஆண்டாகக் கணக்கில் கொள்ளப்படும்.

பணியாளர் தகுதி பெறு பணிக்காலம் 30 ஆண்டுகள் முடித்திருந்தால் முழு ஓய்வூதியம் பெறத் தகுதி பெறுகிறார். இறுதி 10 மாதப் பணியில் பெற்ற சராசரி சம்பளம் அல்லது இறுதியாகப் பெற்ற சம்பளம், ***இவற்றில் எது மிகையானதோ*** அதில் 50% ஓய்வூதியமாகக் கணக்கிடப்படும்.



தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978, விதி 43 (2), (3).

வா.ஆ.எண் : 263 நாள் 20.6.1986. வா.இ.தொ : 5/1986. பக் 514.

வா.ஆ.எண் : 62 நாள் 15-12-2006. வா.இ.தொ : 25/2006. பக் 8.

2. பணியாளர் தகுதி பெறு பணிக்காலம் 10 ஆண்டுகட்குக் குறைவாக இருப்பின், ஓய்வூதியத்திற்கு மாறாகச் சேவைப் பணிக்கொடை (Service Gratuity) அளிக்கப்படும்.

இச்சேவைப் பணிக்கொடை பணி முடித்த ஒவ்வொரு அரையாண்டுக்கும் ஒரே அளவான அரை மாத ஊதியம் என்று கணக்கிடப்படும். இது 14-12-1987 இ-ருந்து நடைமுறையில் உள்ளது.

வா.ஆ.எண் : 28 நாள் 8.2.1988. வா.இ.தொ : 7/1988. பக் 94.

**இ. பணி இடையீடு :-**

1. பணியாளர் பணி இடையில் தடை பட்டதால் (Interruption of Service) உண்டான பணித்தடைக்கு முன்னான பணிக்காலம் (Past Service) இழப்பீட்டுக்கு உள்ளாகாது. ஆனால், அவர் பணி விலக்கல் செய்யப்பட்டு மீண்டும் பணி அமர்த்தப்பட்டிருந்தால், இழப்பீட்டுக்கு உள்ளாகும்.

2. நிலையற்ற அல்லது நிலையான துறையில் அல்லது தற்சார்பான அலுவலகத்தில் ஆற்றிய பணிக்காலம், இடையீடு இருப்பினும் ஓய்வூதியத்திற்குக் கணக்கெடுத்துக் கொள்ளப்படும்.

தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978, விதி 24.

அரசு.ஆ.எண் : 349 நாள் 5-5-1995.

**ஈ. மூப்போய்வு - மறுப்பு :-**

1. நிலுவையிலுள்ள ஒழுங்கு நடவடிக்கை முடிவுக்கு வராத நிலையில், இடைக்காலப் பணி நீக்கத்தில் உள்ள பணியாளர், மூப்போய்வு அடையும் நாளில் ஓய்வில் செல்லல் இல்லை. ஒழுங்கு நடவடிக்கை அல்லது வழக்கு மன்ற நடவடிக்கை முடிந்து, இறுதி ஆணை அளிக்கப்படும் வரை, பணியாளர் பணி மூப்போய்வு நாளுக்கு அப்பால் பணி நீட்டிப்பில் இருப்பார். அப்பணி நீட்டிப்பின் போது, அவர் பணி மூப்பு நாள் வரை அடைந்த பணி

உரிமை, அதே அளவில் நிறுத்தி வைக்கப்படும். அக் காலத்திற்கான பிழைப்பூதியப் படி (Subsistance Allowance) அந்நாளுக்கு உரிய இடைக் கால ஓய்வூதியத்திற்கு மிகையாக இருக்கக் கூடாது.

த.நா.மி.வா.பணி ஒழுங்கு முறை விதிகள் - விதி 17, பிரிவு **f.**

வா.ஆ.எண் : 64 நாள் 16-8-1997. வா.இ.தொ : 16/1997-8, பக் 30.

2.i. பணி நீக்கம் அல்லது பணி விலக்கம் அளிக்கத் தக்கதாகக் கருதப்படு கடுமையான குற்றச்சாட்டுக்கு உள்ளான பணியாளரை மூப்போய்வு பெறு நாளன்று பணி இடைநீக்கத்தில் வைக்க வேண்டும்.

ii. காவற்றுறையால் குற்றச் செயல் ஆய்விற்காகவோ, அல்லது வழக்கு மன்ற நடவடிக்கை நிலுவையில் இருப்பதாலோ, முன்னரே இடைநீக்கத்தில் உள்ள பணியாளரை, அவர் செய்த குற்றத்தின் இயல்பையும், கடுமையையும் கருத்தில் கொண்டு மூப்போய்வு பெறு நாளுக்கும் அப்பால், இடைநீக்கத்தில் தொடர்ந்து வைத்திடல் வேண்டும்.

iii. வாரியத்திற்கு இழப்பீடு ஏற்படுவது போன்ற சிறியனவாகிய தவறான நடவடிக்கை எனின் ஒழுங்கு நடவடிக்கைக்குக் குந்தகமின்றி மூப்போய்வு பெறு நாளில் ஓய்வில் செல்லப் பணியாளர் அனுமதிக்கப்படுவார்.

iv. வாரியத்திற்கு இழப்பீடு இல்லா நிலையில், சிறியனவாகிய தவறான நடவடிக்கைக் குற்றச் சாட்டிற்குள்ளான பணியாளர், பணி மூப்பு நாளில் ஓய்வில் செல்ல அனுமதிக்கப் படுவார். அத்துடன் அவர் மேல் நிலுவையில் உள்ள ஒழுங்கு நடவடிக்கை கைவிடப்படும்.

கு.ஆ.எண் 209514/35/**DP1**/**S**1/77-74 நாள் 3.4.84:

வா.இ.தொ: 3/84, பக்கம் 214.

> ***துன்பத்தில் துவளாதும் இன்பத்தில் மகிழாதும் விருப்பு வெறுப்பை எவன் சமமாக மதிக்கிறானோ, அவனே உண்மை ஞானி ஆவான்.***



# விருப்ப ஓய்வு

## (VOLUNTARY RETIREMENT)

**அ. ஒரு பணியாளர் விருப்ப ஓய்வில் செல்ல :-**

1) ஐம்பது வயது அடைந்தவராக அல்லது 20 ஆண்டுகள் தகுதி பெறு பணிக்காலம் முடித்தவராக இருக்க வேண்டும். பணி அமர்த்து அதிகாரிக்கு நேரடியாக மூன்று மாதங்கட்குக் குறையாத அறிவிப்பை எழுத்து மூலம் அளித்துப் பணியாளர் ஓய்வு பெறலாம்.

2) மூன்று மாத அறிவிப்புக் காலம், பணி அமர்த்து அதிகாரி அவ்வறிவிப்பைப் பெற்ற நாளி-ருந்து கணக்கிடப்படும்.

3) பணியாளர் தகுதி பெறு பணிக்காலம் அல்லது தகுதி பெறு வயதை அடையும் முன்னர் விருப்போய்வில் செல் அறிவிப்பை அளிக்கலாம்; ஆனால், ஓய்வுறுதல், தகுதி பெறு பணிக்காலம் முடிந்தோ அல்லது தகுதி பெறு வயதை அடைந்தோ இருக்க வேண்டும்.

**ஆ. விருப்போய்வு அறிவிப்பு ஏற்றுக் கொள்ளப்பட :-**

1) பணியாளர் மீது பெரு தண்டனைக்குரிய ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவுள்ள நிலையிலோ அல்லது ஒழுங்கு நடவடிக்கை நிலுவையிலோ இருக்கக் கூடாது.

2) பணியாளர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கு நிலையிலோ அல்லது சட்ட நடவடிக்கை நிலுவையிலோ இருக்கக் கூடாது.

3) i. மின்வாரிய விழிப்புப் பணிப் பிரிவி-ருந்து இசைவு பெறுதலோடு, தமிழ் நாட்டு விழிப்புப் பணி மற்றும் கையூட்டு ஒழிப்புத் துறையினரிடம் இருந்தும் பணியாளர் மீது விசாரணை எடுக்கு நிலையிலோ அல்லது விசாரணை நிலையிலோ எந்த ஒரு குற்றச்சாட்டும் இல்லை என்று அறிக்கை பெற வேண்டும்.

கு.ஆ.எண் : 99294/**D**2/97-15 நாள் 12-3-99,

வா.இ.தொ : 18/ 1999-3, பக். 8.

ii. CID *சிறப்புப் பிரிவிலிருந்து தடையில்லாச் சான்று பெறல் தேவை இல்லை.*

*கு.ஆ.எண்: 7854/அ.18/அ.181/2003-1 (செகி) நாள் 15-3-2003.*

4) பணிக் கொடையில் ஈடு செய்து கொள்ள இயலாத அளவிற்குப் பண நிலுவை இருக்கக் கூடாது.

5) விருப்போய்வு வேண்டு நாளில், பணி செய் காலம் பற்றிய ஒப்பந்தப் பிணைப்பு இருக்கக் கூடாது.

6) பணி அமர்த்து அதிகாரி, விருப்போய்வு வேண்டிப் பணியாளர் அளித்த அறிவிப்புக் காலம் முடியும் நாட்கு முன்னர் விருப்போய்வு வேண்டுகோள் ஏற்றுக் கொள்ளப்பட்டதா, இல்லையா என்பதைத் தெரிவித்து ஆணை இட வேண்டும். அப்படி ஆணை அளிக்கப்படாவிடில், பணியாளர் அறிவிப்புக் கால முடிவில் விருப்போய்வு அடைந்ததாகக் கொள்ளப்படும். ஆனால், ஒரு பணியாளர், பணி இடைநீக்கத்தில் இருப்பின் அல்லது அவர் மேல் ஒழுங்கு நடவடிக்கையோ, குற்றஞ் சார்ந்த நடவடிக்கையோ நிலுவையில் இருப்பின் விருப்போய்வு வேண்டின், அப்படிப்பட்ட விருப்போய்வின் மேல் பணி அமர்த்து அதிகாரியின் திட்டவட்டமான ஆணை தேவை.

மேலே (1) முதல் (5) வரையிலான வரையறைகள் நிறைவுறா நிலையில், பணி அமர்த்து அதிகாரி ஒப்புதலை நிறுத்தி வைக்கலாம்.

7) பணியாளர் விருப்போய்விற்கான மூன்று மாத அறிவிப்பை அல்லது ஒப்புதல் பெற்ற விருப்போய்வைப் பின்னர், அறிவிப்புக் கால முடிவிற்கு முன்னர்ப் பணி அமர்த்து அதிகாரி ஒப்புதலோடு திரும்பப் பெறலாம்.

வா.ஆ.எண் : 6 நாள் 25-1-1993. வா.இ.தொ : 12/1993. பக் 10-12.

8) விருப்ப ஓய்விற்கு அறிவிப்புக் கொடுத்த நாளன்று, பணியாளர் மீது ஒழுங்கு நடவடிக்கை இல்லாது இருப்பின்,



மற்றும் அவர் பணி இடை நீக்கத்தில் இல்லாது இருப்பின், அறிவிப்புக் கொடுத்த நாளி-ருந்து மூன்று மாதங்கள் கழிந்தவுடன் பணியாளர் தன் விருப்ப ஓய்வில் செல்ல உரியர் ஆவார்.

கு.ஆ.எண் : 69274/**P**-1/84-1 நாள் 19-1-1985: வா.இ.தொ : 4/1985, பக் 23.

9. திறள் விளைவான அல்லது திறள் விளைவற்ற ஊதிய உயர்வு நிறுத்தம் தண்டனையாகப் பெற்ற பணியாளர், அளிக்கப்பட்ட தண்டணைக்கு ஒப்பான பண ஈட்டைச் (Monetary Equivalent) செலுத்த முன் வருவாராகில், விருப்போய்வில் செல்லும் அவர் விண்ணபத்தைக் கருத்தில் கொண்டு, மற்ற வரையறைகள் நிறைவாக இருப்பின், அவர் விருப்போய்வில் செல்ல ஒப்புதல் அளிக்கப்படும்.

கு.ஆ.எண் : 029140/16/**E**3(**A**2)/87-1 நாள் 4-3-1987:

வா.இ.தொ :6/1987, பக்கம் 177.

**இ. பணிக்காலச் சிறப்பளிப்பு (Service Weightage) :-**

1. தகுதி பெறு பணிக்காலம் 20 ஆண்டுகள் முடிந்து விருப்போய்வில் செல்லும் பணியாளர்க்கு உயரளவாக 5 ஆண்டுகள் கூடுதலாக, அவர் அடைந்த தகுதி பெறு பணிக் காலத்துடன் சேர்த்து வழங்கப்படும்.

2. கூடுதலாகப் பெற்ற பணிக்காலச் சிறப்பளிப்புடன், மொத்த தகுதி பெறு பணிக்காலம் 30 ஆண்டுகளைத் தாண்டக் கூடாது.

3. அப்படிக் கூட்டப் பெற்ற மொத்த தகுதி பெறு பணிக்காலம், அவர் இயல்பாய்ப் பெறும் மூப்போய்வு நாட்குப் *பிறகு* இருக்கக் கூடாது.

4. இப்படிக் கொடுக்கப்படும் பணிக்காலச் சிறப்பளிப்பு, ஓய்வூதியத்தைக் கணக்கிடத் தகுதி பெறு பணிக்கால அளவைக் கூட்டுவதற்காக மட்டுமே; ஊதியம் அல்லது ஊதியத் திரளில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தாது. ஓய்வு பெறும் காலத்தில் பெறக்கூடிய ஓய்வு ஊதியம் அல்லது ஓய்வூதியத் திரளில் மாற்றம் ஏற்படும்.

வா.ஆ.எண் : 51 நாள் 22-6-1988. வா.இ.தொ : 7/1998. பக் 363..

## விருப்ப ஓய்வுக்காகப் பணிக்காலச் சிறப்பளிப்பு :-
## (Service Weightage) அட்டவணை.

| தகுதி பெறு பணிக்காலத்திற்கான பணிக்காலச் சிறப்பளிப்பு | | வயது சார்ந்த பணிக்காலச் சிறப்பளிப்பு | |
|---|---|---|---|
| தகுதி பெறு பணிக்காலம் | பணிக்காலச் சிறப்பளிப்பு | வயது | பணிக்காலச் சிறப்பளிப்பு |
| அனைத்துப் பணியாளர்க்கும் | | 58 வயதில் ஓய்வு பெறு அனைத்துப் பணியாளர்க்கும் | |
| 25 ஆண்டும் அதற்குக் கீழும் | 5 ஆண்டுகள் | 53 ஆண்டும் அதற்குக் கீழும் | 5 ஆண்டுகள் |
| 26 ஆண்டுகள் | 4 ஆண்டுகள் | 54 ஆண்டுகள் | 4 ஆண்டுகள் |
| 27 ஆண்டுகள் | 3 ஆண்டுகள் | 55 ஆண்டுகள் | 3 ஆண்டுகள் |
| 28 ஆண்டுகள் | 2 ஆண்டுகள் | 56 ஆண்டுகள் | 2 ஆண்டுகள் |
| 29 ஆண்டுகள் | 1 ஆண்டு | 57 ஆண்டுகள் | 1 ஆண்டு |
| குறிப்பு : மொத்த கூடுதல் தகுதி பெறு பணிக்காலம் 30 ஆண்டுகளைக் கடக்கக் கூடாது. மேலும் பணியாளர் மூப்போய்வில் செல் வயதையும் கடக்கக் கூடாது. | | 60 வயதில் ஓய்வு பெறும் பணியாளர்க்கு | |
| | | 55 ஆண்டும் அதற்குக் கீழும் | 5 ஆண்டுகள் |
| | | 56 ஆண்டுகள் | 4 ஆண்டுகள் |
| | | 57 ஆண்டுகள் | 3 ஆண்டுகள் |
| | | 58 ஆண்டுகள் | 2 ஆண்டுகள் |
| | | 59 ஆண்டுகள் | 1 ஆண்டு |

தகுதி பெறு பணிக்காலத்தோடு கூட்டப் பெறும் பணிக்காலச் சிறப்பளிப்பு, ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடை கணக்கிடுவதற்காக மட்டுமே. ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடை கணக்கிடக் கருத்தியலான (Notional) ஊதியப் பொருத்தத்திற்கு ஏற்புடையது அல்ல.

த.நா.மி.வா.பணி ஒழுங்கு முறை விதிகள், 17 (**gg**).

வா.ஆ.எண் : 16 நாள் 6-3-2002. வா.இ.தொ : 21/2002-3. பக் 12-13.



# இயலாமை ஓய்வு

## (Retirement due to Invalidation)

பணியாளர் ஒருவர், தன் உட-ன் இயலாமையாலோ அன்றி மன நலம் ந-வுற்ற காரணத்தாலோ தன் பணிகளைத் தொடர்ந்து செய்ய முடியாத நிலை ஏற்படலாம். அந்நிலையில் அவர் தன் இயலாமையைத் தலைமை அலுவலகத்திற்கு எழுத்து மூலம் அறிவித்து இயலாமை ஓய்வு வேண்டி விண்ணப்பிக்கலாம்.

பணியாளர்தான் இயலாமை ஓய்வு கேட்டு விண்ணப்பிக்க வேண்டும் என்பதில்லை. பணியாளர் உடல்/மன நலக் குறைவால் பணியாற்றத் தகுதியற்றவர் என்று நிர்வாகம் கருதும் நிலையில், பணியாளரை மருத்துவ ஆய்வுக்கு உட்படுத்திச் சான்றிதழ் பெற்று அவரை இயலாமை ஓய்வில் அனுப்பலாம்.

தகுதியுடைய மருத்துவ அதிகாரியால் அப்பணியாளர் நிலையாகத் தொடர்ந்து பணியாற்றும் திறமையற்றவர் என்று சான்றளிக்கப்படின் அவர்க்கு இயலாமை ஓய்வு வழங்கப்படும்.

**பணி இயலாமைக்கான மருத்துவச் சான்றிதழ் :**

அ) பணி இயலாமை மருத்துவச் சான்றிதழ் பணி நிலை I, II ஐச் சேர்ந்த பணியாளர்க்கு மருத்துவக் குழுவால் அளிக்கப்பட வேண்டும். மற்ற நிலைப் பணியாளர்க்குக் குடிமை அறுவை மருத்துவர் (Civil Surgeon), அல்லது மாவட்ட மருத்துவ அலுவலர், அல்லது அவர் நிலைக்கு இணையான மருத்துவரால் அளிக்கப்பட வேண்டும்.

ஆ) பணி இயலாமை மருத்துவச் சான்றிதழோடு பணியாளர் இயலாமை ஓய்விற்கு விண்ணப்பிக்கலாம். அப்படி அளிப்பின், அவர் மருத்துவ ஆய்வு பொருட்டு உரிய மருத்துவக் குழு அல்லது மருத்துவ அலுவலர் முன்னர் அனுப்பப்படுவர்.

இ) மருத்துவ ஆய்வுக்குத் தன்னை உட்படுத்திக் கொள்ளும் நோக்கத்தைத் தன் அலுவலகத் தலைவர்

அறிந்துள்ளார் என்பதைக் காட்டும் கடிதத்தைப் பணியாளர் அளித்தால் மட்டுமே, பணி இயலாமை மருத்துவச் சான்றிதழ் வழங்கப்படும். அப்போது அலுவலகத் தலைமையால் பணியாளரின் வயது குறித்து ஆவணங்களி-ருந்து எடுத்த அறிக்கை மருத்துவ அலுவலர்க்கு அளிக்கப்பட வேண்டும்.

**குறிப்பு :**

அ) பணியாளரைத் துன்புறுத்தும் நோய், அறுவைச் சிகிச்சையால் தீர்க்கக் கூடியதாயிருந்து, அவர் சிகிச்சைக்கு உட்பட மறுத்து, அதனால் பணிக்கு இயலாதவர் என்று அனுப்பப் படின், அவர்க்கு ஒய்வூதியமோ, பணிக்கொடையோ ஏற்புடையதில்லை.

ஆ) பணியாளரின் விரற்குறிப் பதிவுகள் மருத்துவ அலுவலரால் மருத்துவச் சான்றிதழில் பதியப்படும்.

இ) ஒழுங்கற்ற, அளவுக்கு மீறிய பழக்க வழக்கங்களால் பணிக்கு இயலாதவர் எனச் சான்றளிக்கப்படின், மருத்துவப் பணி இயக்குநரின் கருத்துருவோடு மேல் ஆணைக்காக வழி முறைப்படி வாரியத்திற்கு அனுப்ப வேண்டும்.

ஈ) பணியாளர் விடுப்பில், தான் பணியாற்றும் மாவட்டத்தில் இல்லாது வேறு மாவட்டத்தில் இருந்து, அங்குள்ள மருத்துவ அலுவலரிடமிருந்து பணி இயலாமை மருத்துவச் சான்றிதழ் பெறப்பட்டிருந்தால், அச்சான்றிதழில் மருத்துவப் பணி இயக்குநரின் மேலொப்பம் பெறப்பட வேண்டும்.

உ) 1. பணி இயலாமைக்கான மருத்துவச் சான்றிதழ் பணியாளரிடமிருந்து பெறப்படின், உடன் நடவடிக்கை எடுத்துப், பணியாளர் பணியில் இருப்பின் பணியி-ருந்து இயலாமை ஓய்வில் அவரை விடுவிக்க வேண்டும். ஆயினும், மருத்துவச் சான்றிதழ் பெற்றபின், சிறப்பு விடுப்பு (Extra ordinary leave) நீங்கலாக வேறு விடுப்பு அளிக்கப்பட்டிருப்பின், மருத்துவச் சான்றிதழின் தேதிக்குப் பிறகு ஏதேனும் பணிக்காலம் இருப்பின் விடுப்போடு சேர்த்து 6 மாதங்களுக்குள் அடக்கி, விடுப்பின் முடிவில் இயலாமை ஓய்வில் அனுப்பப்படுவார்.



2. இயலாமை மருத்துவச் சான்றிதழ் அளிக்கும் நாளில் பணியாளர் சிறப்பு விடுப்பு அல்லாத விடுப்பில் முன்னரே இருந்துவரின், ஒப்புதல் அளிக்கப்பட்ட விடுப்பின் அல்லது விடுப்பு நீட்டிப்பின் முடிவில் இயலாமை ஓய்வில் விடுவிக்கப்படுவார்.

3. பணியாளர் சிறப்பு விடுப்பில் இருப்பரே ஆயின், மருத்துவச் சான்றிதழ் தேதியி-ருந்து இயலாமை ஓய்வில் விடுவிக்கப்படுவார்.

ஊ) பணியாளர் தான் முன்பு செய்த பணியினும் எளிதான பணியினைச் செய்யத் தகுந்தவர் என்று மருத்துவ அதிகாரி சான்றளித்திருப்பின், அப்பணியாளரை இயலுமேல் குறைந்த ஊதியமுள்ள பணியில் அமர்த்தலாம். அப்படிக் குறைந்தஊதியப் பணியிலும் அமர்த்த வழியில்லாத போது, ஓய்வு அனுமதிக்கப்படும்.

தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978, விதி - 36.

**இயலாமை ஓய்வில் செல்வோர் பெறு பலன்கள் :**

அ) பணி இயலாமை ஓய்வில் செல்லும் பணியாளர், இயல்பாய் ஓய்வுறும் பணியாளர் பெறும் எல்லாப் பயன்களையும் பெறுவர்.

ஆ) பணி இயலாமை ஓய்வில் செல்லும் பணியாளர்க்கு இயலாமை ஓய்வில் செல்லும் நாளில் வயது 53 முடியா நிலையில், ***அவரின்*** வாரிசுகளில் ஒருவர்க்குக் கருணை அடிப்படையில் வேலை வழங்கப்படும்.

தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978, விதி 36.
வா.ஆ.எண் : 25 நாள் 9-10-2001.
வா.இ.தொ : 20/2001 -10, பக்கம் 3.

இ) இயலாமை ஓய்வு பெறுபவர்க்குப் பணிக்காலச் சிறப்பளிப்பு Service Weightage) வழங்கப்பட மாட்டாது .

தநாமிவாபணி ஒழுங்கு முறை விதிகள் - விதி 80 முதல் 86 வரை.

உணவே மருந்து; மருந்தே உணவு என்பது சித்த மருத்துவம்.

# கட்டாய ஓய்வு

## (Compulsory Retirement)

1. நிர்வாக நலத்தைக் கருத்தில் கொண்டு, ஒரு பணியாளரை மூன்று மாதத்திற்குக் குறையாத முன் அறிவிப்பு அளித்தோ, அன்றி அறிவிப்புக்கு மாறாக மூன்று மாதச் சம்பளம் படிகளோடு கொடுத்தோ, அவர் 50 வயது எய்திய அல்லது தகுதி பெறு பணிக்காலமாக 30 ஆண்டுகள் முடித்த பிறகு எந்தக் காலத்திலும் கட்டாய ஓய்வில் அனுப்ப உரிய அதிகாரிக்கு உரிமை உண்டு. ஆனால் தொழில் தகறாறு சட்டம், 1947-இற்கு உட்பட்ட பணியாளர்க்கு இது பொருந்தாது.

த.நா.மி.வா. பணி ஒழுங்கு முறை விதிகள், 17 (**g**).

2. பணியாளர் ஒருவர்க்கு அடிப்படை சட்டம் 56 (d) இன் படி கட்டாய ஓய்வளிக்கும் போது அவர் மீது எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை கைவிடப்படுவதுடன், மேல் நடவடிக்கையும் தொடரத் தேவையில்லை.

வா.ஆ.எண். : 10 நாள் 18-1-1983. வா.இ.தொ : 1/1983, பக் 207.

3. கட்டாய ஓய்வு அளிக்கப்பட்ட ஒவ்வொரு பணியாளரும், கட்டாய ஓய்வு ஆணை அவர்க்குத் தெரிவிக்கப்பட்ட நாளி-ருந்து ஒரு மாதத்திற்குள், அளிக்கப்பட்ட ஆணையை மீளாய்வு செய்யக் கோரி வாரியத்திற்கு விண்ணப்பம் கொடுக்க உரிமை உண்டு.

த.நா.மி.வா. பணி ஒழுங்கு முறை விதிகள், 17 பிரிவு (**g**) இல் (**e**).

வா.ஆ.எண் : 175 நாள் 28-12-1983 ; வா.இ.தொ : 2/1984, பக் 477.

4. தண்டனை காரணமாகக் கட்டாய ஓய்வு அளிக்கப்பட்ட பணியாளர்க்குக் கட்டாய ஓய்வளிக்கப்பட்ட நாளில் அவர் கணக்கில் இருக்கும் ஈட்டிய விடுப்பில் 240 நாட்களுக்கு மிகாமல் ஒப்படைத்துப் பணமாக்கிக் கொள்ள இசைவளிக்கப்படுகிறது.

வா.ஆ.எண் : 83 நாள் 3-10-1986 ; வா.இ.தொ : 5/1986, பக் 798.

வா.ஆ.எண் : 75 நாள் 6-11-1996 ; வா.இ.தொ : 15/1996, பக் 5.



5. தண்டனை காரணமாகக் கட்டாய ஓய்வளிக்கப்பட்ட பணியாளர் மட்டுமே, கட்டாய ஓய்வளிக்கப்பட்ட நாளி-ருந்து ஓராண்டிற்குள் ஓய்வூதியத் தொகுப்புப் (Commutation of Pension) பெறுதற்காக விண்ணப்பித்தாலும் கூட மருத்துவ ஆய்வுக்குத் தம்மை ஆட்படுத்திக் கொண்டு, விண்ணப்பிக்க வேண்டும்.

மற்ற வகையான கட்டாய ஓய்வளிக்கப்பட்ட பணியாளர்கள், ஓய்வூதியத் தொகுப்புப் பெறுதற்கு, அவர் ஓய்வூதிய அளிப்பாணை அளிக்கப்பட்ட நாளி-ருந்து ஓராண்டிற்குள் விண்ணப்பித்தால் தம்மை மருத்துவ ஆய்விற்கு உட்படுத்திக் கொள்ள வேண்டா.

வா.ஆ.எண் : 275 நாள் 19-7-1984 ; வா.இ.தொ : 3/1984, பக் 494.

க.எண் : 57792/N1/87-1 நாள் 8-1-1988 ; வா.இ.தொ : 7/1988, பக் 6.

6. பணி நீக்கம் செய்யப்பட்டு அல்லது பணி அகற்றம் செய்யப்பட்டுப் பின்னர் அத்தண்டனை கட்டாய ஓய்வாக மாற்றப் பெற்ற பணியாளரின் பணி இடை நீக்கக் காலம் மற்றும் ஒறுத்தல் காரணமாகக் கட்டாய ஓய்வளிக்கப்பட்ட பணியாளரின் பணி இடை நீக்கக் காலம் த.நா.மி.வா. பணி ஒழுங்கு முறை விதிகள் 57-B (I) இன் படி முறைப்படுத்தப்படும்.

வா.ஆ.எண் : 322 நாள் 28-11-1989. வா.இ.தொ : 8/1989, பக் 921, 922.

7. பணி நீக்கம் செய்யப்பட்டு அல்லது பணி அகற்றம் செய்யப்பட்டுப் பின்னர் அத்தண்டனை கட்டாய ஓய்வாக மாற்றப் பெற்ற பணியாளரின் இடைநீக்கக் காலம் மற்றும் ஒறுத்தல் காரணமாகக் கட்டாய ஓய்வளிக்கப்பட்ட பணியாளரின் பணி இடை நீக்கக் காலம் முறைப்படுத்தல் குறித்துக் கட்டாய ஓய்வில் அனுப்பு ஆணை அளித்தற்கு உரிய அதிகாரியால்,

i. கட்டாய ஓய்வளிப்பு நாள் வரையிலான இடைநீக்கக் காலத்திற்கான சம்பளம், படிகள் அளிப்பது குறித்தும்

ii. அவ்விடை நீக்கக் காலம் பணிக்காலமாகக் கொள்ளப்படுமா, இல்லையா என்பது குறித்தும் குறிப்பிட்டு ஆணை அளிக்கப்பட வேண்டும்.

த.நா.மி.வா.பணி ஒழுங்குமுறை விதிகள், 57 - B (1).

8. கட்டாய ஓய்வு அளிக்கப்பட்ட பணியாளர்க்குப் பணிக் காலச் சிறப்பளிப்பு (Service Weightage) அளிக்கப்பட மாட்டாது.

வா.ஆ.எண். : 51 நாள் 22-6-1988. வா.இ.தொ : 7/1988, பக் 263-264.

9. பணி இடை நீக்கத்திலுள்ள பணியாளர்க்குக் கட்டாய ஓய்வு அளிக்கும் போது, கட்டாய ஓய்வு ஆணை வெளியிடு நாளி-ருந்தே நடைமுறைப்படுத்த வேண்டும்; இடை நீக்க நாளி-ருந்து கட்டாய ஓய்வு அளித்து ஆணை இடக் கூடாது.

வா.ஆ.எண்: 108 நாள் 10-3-1987. வா. இ.தொ : 6/1987, பக் 180-185.

10. குற்றம் புரிந்ததாகக் குற்றச்சாட்டு ஆய்வில் அல்லது வழக்கு மன்ற உசாவ-ல் இருப்பதன் காரணமாகப் பணி இடை நீக்கம் செய்யப்பட்ட அல்லது குற்றச்சாட்டின் மேல் குற்றவாளி என அளிக்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் கட்டாய ஓய்வு அளிக்கப்பட்ட பணியாளார், தகுதியாலோ, அவருக்கு எதிரான குற்றச்சாட்டு மெய்ப்பிக்கப்படா அடிப்படையிலோ, ஐயத்தின் பலனை அவர்க்கு அளித்தோ, அன்றி மற்ற சட்ட நுட்ப அடிப்படையிலோ வழக்கு மன்றத்தால் விடுவிக்கப்பட்டுப் பின்னர், அதனால் அவர் மீண்டும் பணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டால், அவர் பணி நிறைவேற்றுவதைத் தடுக்கப் பட்டதாகவே ஏற்றுப், பணி இடை நீக்கக் காலத்தையும் உட்கொண்ட அவர் பணியி-ல்லாத காலம் எல்லா வகையிலும் பணியில் இருந்ததாகவே எடுத்துக் கொள்ளப்படும். பணி இடை நீக்கம் செய்யப்படாதும் கட்டாய ஓய்வு அளிக்கப்படாதும் இருந்திருந்தால் அவர்க்கு என்ன உரியதோ, அந்த முழுச் சம்பளமும் படிகளும் அவர்க்கு அளிக்கப்படும்.

த.நா.மி.வா. பணி ஒழுங்கு முறை விதிகள் 57, 57 **A**, 57 **B**.
வா.ஆ.எண். : 363 நாள் 21.9.1987. வா.இ.தொ : 6/1987, பக் 716.

11. பணியாளர் ஒருவர் கட்டாய ஓய்வில் அனுப்பப்பட்டுப் பின்னர் மீண்டும் பணியில் சேர்க்கப்பட்ட போது, முன்னர் வழங்கப்பட்ட ஓய்வூதியப் பலன்கள் அனைத்தும் கீழ்க்கண்ட வாறு முறைப்படுத்தப்படும்.



அ) ஈட்டிய விடுப்பு ஒப்பளிப்புப் பணம் திரும்பப் பிடித்தம் செய்ய வேண்டுமென்பது தேவை இல்லை. பணியாளரை ஒப்பளிப்புப் பணத்தைத் திரும்ப அளிக்கும்படி கேட்க வேண்டியதில்லை. எளிய வழியில் இயல்பான முறையில் பணியாளர் ஓய்வுறும் நாளில் கணக்கில் உள்ள ஈட்டிய விடுப்பில் முன்னர் எடுத்த ஈட்டிய விடுப்பு ஒப்பளிப்பு நாட்களைக் கழித்து விட்டு, மீதமுள்ள தகுதியான நாட்கட்கு ஒப்பளிப்பு அளித்தால் போதும்.

ஆ) கழித்த கட்டாய ஓய்வுக் காலம் பணிக்காலமாகக் கருதப்படினும், கட்டாய ஓய்வில் சென்ற நாளில் வேற்றுத்துறைப் பணியோ அல்லது கூடுதல் பணியோ கொண்டிருப்பின் வேற்றுத்துறைப் பணிப்படி மற்றும் கூடுதல் பணிப்படி கொடுக்கப் படவேண்டா.

இ)கழித்த கட்டாய ஓய்வுக் காலம் பணியாகக் கருதப்படுவதால், ஆண்டு ஊதிய உயர்வு, ஓய்வூதியம், பயிற்சி, தகுதிகாண் ஆய்வுக்கான தகுநிலை காலம் கணக்கிடக் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்.

ஈ)அளிக்கப்பட்ட பணிக்கொடை இயன்ற வரை ஊதியத்திலும் மற்ற பலன்களிலும் பிடித்தம் செய்து சரி செய்து கொள்ளப்பட வேண்டும். சேமிப்பு நிதிக்கு வழங்கும் குறைந்த வட்டி வீதத்தில் பிடித்தம் செய்ய வேண்டும். மேலும் ஏதேனும் பணிக்கொடைப் பிடித்தம் மீறுமேல், அதனைப் பணியாளர் ஓய்வு பெறுகையில் வழங்கப் பெறும் பணிக் கொடையில் சரி செய்து கொள்ளப்படும்.

வா.ஆ.எண். : 204 நாள் 1-6-1984. வா.இ.தொ : 3/1984, பக் 414-415.

*எந்தக் காலத்துப் பழக்கமானாலும் சரி; அஃது இந்தக் காலத்துக்குப் பொருந்துகிறதா? வாழ்க்கைக்குத் தேவையானது தானா? அறிவுக்கு ஏற்றதா? என்றுதாம் நாம் பார்த்துப் பின்பற்ற வேண்டுமே தவிர, அந்தக் காலத்துப் பழக்கம் என்பதற்காகக் கண்ணை மூடிக் கொண்டு எதையும் அர்த்தமற்றும் பொருத்தம் இல்லாமலும் பின்பற்றக் கூடாது.*

-அறிஞர் அண்ணா.

# தகுதிபெறு பணிக்காலம்

## (QUALIFYING SERVICE)

பணியாளர் ஓய்வு பெறுகையில், அவர் தன் குடும்பத்தினருடன் எந்த விதப் பண இடையூறுமின்றித் தான் முன்னர்ப் பணிக்காலத்தில் வாழ்ந்த பழைய நிலையிலேயே வாழ்வதற்கு ஏற்ப ஓய்வூதியப் பயன்களான ஓய்வூதியம், பணிக்கொடை பெறற்கு உரியர். இவ்வோய்வூதியமும் பணிக்கொடையும் பணியாளரின் தகுதி பெறு பணிக்காலத்திற்கு ஏற்ப அமையும்.

**தகுதி பெறு பணிக்காலம் - விளக்கம்**

அ. நெருக்கடி ஏற்பாடான (Under Emergency Provision) இடைக்காலப் பணி உள்ளிட்ட நிலைத்த அல்லது நிலை பேறில்லாப் (Officiating) பணிகளுக்கான, ஓய்வூதியம் பெறுதற்கு உரிய பதவிகளில் பணியாளர் ஆற்றிய பணிக்காலம் தகுதி பெறு பணிக்காலம் ஆகும்.

ஆ. பணியாளர் முதன் முதலாக நிலைபேறுடைய அல்லது நிலைபேறில்லா அல்லது இடைக்கால (Temporary) நிலையான பதவியில் பணியமர்த்தப்பட்டு ஓய்வூதியம் பெறுதற்கு உரிய பதவிகளில் சேரும் நாள் முதல் தகுதி பெறு பணிக்காலம் தொடங்கும்.

இ. மருத்துவச் சான்றிதழ் மேல் அளிக்கப்படு சிறப்பு விடுப்பு (Extraordinary leave) உட்பட ஊதியம் பெறற்குரிய எல்லா வகை விடுப்புக் காலமும் தகுதி பெறு பணிக்காலமாகக் கணக்கிடப்படும்.

தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978 - விதிகள் : 3 (o); 11; 18.

ஈ. வாரியத்தைச் சார்ந்த பணிசார் செலவினப் பணியாளர் தொகுதி (Work charged Establishment)க்கான பணிக்காலம் ஓய்வூதியப் பலன்கள் பொருட்டுத் தகுதி பெறு பணிக்காலமாகக் கொள்ளப்படும்.

வா.ஆ.எண் : 2 (தணிக்கை) நாள் 20-8-1979.

கு.ஆ.எண் 39515/505/P1/U1 நாள் 13-9-91: வா.இ.தொ : 10/ 1991, பக்கம் 511.



உ. பணிக் காலத்தில் ஏற்படும் பணி இடைவெளிகள் (Interruptions) பணியாளர் பணி விலக்கப் பட்டாலோ அல்லது பணியில் மீட்டமர்த்தப் பட்டாலோ அன்றிப் பழைய பணிக் காலத்திற்கு இழப்பை உண்டாக்காது. ஆனால், ஏற்பட்ட பணி இடைவெளிக் காலம் ஓய்வூதியத்திற்குக் கணக்கில் கொள்ளப்பட மாட்டாது.

ஊ. பணி இடைவெளிகள் இருப்பினும், இடைக்கால அல்லது நிலையான அல்லது நிலைபேறில்லா அலுவல்களில் ஆற்றிய பணிக்காலம் ஓய்வூதியம் கணக்கிட எடுத்துக் கொள்ளப் படும்.

தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978 - விதி 24 (1), (2).

எ. தகுதி பெறு பணிக்காலக் கணக்கீட்டில், எஞ்சிய மூன்று மாதங்களும் அதற்கு மேலான பணிக்காலமும் அரை ஆண்டாகக் கணக்கில் கொள்ளப்படும்.

தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978, விதி 43 (3).

***ஏ. பயிற்சியாளராக முதன்முதல் தொகுப்பூதியத்தில் அமர்த்துமை பெற்ற பணியாளரின் பயிற்சி காலம், தகுதி பெறு பணிக்காலமாக ஓய்வூதியம் கணக்கிடற்கு எடுத்துக் கொள்ளப்படும்.***

வா.ஆ.எண்: 47 நாள் 16-11-2007. வா. இ.தொ : 26/2007-11 பக் 16-17.

**தகுதி பெறு பணிக்காலத்துள் அடங்காதவை :-**

அ. பணியாளரின் பணி பழகுநர் (apprentice) பயிற்சிக்காலம்.

ஆ. முறைப்படுத்தப் படாத பணி இடைநீக்கக் காலம்.

ஆனால், ஒழுங்கு நடவடிக்கை முடிவில், பணியாளர் குற்றச் சாட்டுகளினின்று *முழுமை*யாக விடுவிக்கப்படினும், இடைநீக்கம் நேர்மையற்றது என்று முடிவு செய்யப்படினும், இடைநீக்கக் காலம் தகுதி பெறு பணிக்காலமாகவே கொள்ளப்படும்.

***எனினும்***, இடைநீக்கக் காலத்தில், விசாரணை முடிவிற்கு முன்னர் இறந்துபடின், ***அ***க்காலம் பணியாகவே கருதப்படும்.

இ. பணியில் இருந்து பணி நீக்கம் (Dismissal) அல்லது பணி விலக்கம் (Removal) பெறு பணியாளர் தகுதி பெறு பணிக்காலத்தை இழந்து விடுகிறார். மேல் முறையீட்டில் அவர் மீண்டும் பணி

அமர்த்தப் பெறுவாரேல், இழந்த தகுதி பெறு பணிக்காலம் திரும்பப் பெறுதற்கு உரியர்.

தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978, விதிகள் : 13, 20, 21, 22.

**படைப்பணி - தகுதி பெறு பணிக்காலத்தில் சேர்ப்பு :-**

படைப்பணி ஓய்வூதியர், வாரியத்தில் மீண்டும் பணியமர்த்தம் பெறின், படைப் பணி முடிவுக்கும், வாரியப் பணித் தொடக்கத்திற்கும் இடைப்பட்ட காலம் எவ்வளவு ஆனாலும் பணியாளரின் படைப்பணி வாரியத்தின் தகுதி பெறு பணிக்காலத்தோடு கணக்கில் கொள்ளப்படும். ஆனால், இடைப்பட்ட காலம் ஓய்வூதிய அளிப்பிற்குக் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படாது.

படைப் பணியைத் தகுதி பெறு பணிக்காலமாகக் கொள்ளப் பணியாளர் முன்னரே படைத் துறையிடமிருந்து பெற்றிருந்த ஓய்வூதியம், பணிக்கொடை ஆகியவற்றை வாரியத்திற்கு 6% வட்டியுடன் திரும்ப அளிக்க வேண்டும்.

படைப் பணியி-ருந்து வாரியப் பணிக்கு வரும் பணியாளர் படைப் பணியைத் தகுதி பெறு பணிக்காலமாகக் கொள்வதற்குத் தன் விருப்பத்தைத் தெரிவிக்க வேண்டும். அப்படித் தெரிவிக்காவிடில், படைப் பணிக்காலம் தகுதி பெறு பணிக்காலமாகக் கொள்ளப்படாது.

தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள்,1978 - விதி-16 (1);17-குறிப்பு 7இல்V.
வா.ஆ.எண் : 101 நாள் 13-5-1991. வா.இ.தொ : 10/1991. பக் 216.
வா.ஆ.எண் : 68 நாள் 28-3-1995. வா.இ.தொ : 14/1995. பக் 100.

**பணி இடை முறிவு - பொறுத்தேற்பு (Condonation) :-**

1. பணியாளரின் தொடர்பணியின் இடையில் ஏற்படு இடைமுறிவுக் காலம், குறிப்பிட்டுப் பணி முறிவாகப் பணிப் பதிவேட்டில் பதிவு செய்திருந்தால் ஒழிய, தானாகவே பொறுத்தேற்பு (Condonation) அளிக்கப்படுவதாகக் கொள்ளப்படும். இப்பணி இடை முறிவுக் காலத்திற்கு முற்பட்ட பணிக்காலம் தகுதி பெறு பணிக்காலமாகவே ஏற்கப்படும்.

2. பணித்துறப்பு அல்லது பணி விலக்கம் அல்லது வேலை நிறுத்தத்தில் பங்கேற்பு ஆகிய*வற்றிற்*கு இது பொருந்தாது.

இப்பணி இடை முறிவுக் காலம் தகுதி பெறு பணிக்காலமாகக் கணக்கிடக் கூடாது.

தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978, விதி 25.



# ஓய்வூதியம்

## (Pension)

பணியாளர் பணியாற்றிய காலத்திற்கு ஏற்ப, அவர் ஓய்வு பெற்ற பின்னர் அவரும் அவர் குடும்பத்தினரும் பணியில் இருந்த போது வாழ்ந்த அதே நிலையில் ஓய்வுற்ற காலத்திலும் தன்மானத்துடன் தனித்து வாழ்வதற்கு, அவர் பணிக்காலத்தில் அவருடைய ஊதியத்தில் கொடு படா தொகையை ஓய்வூதியமாக வழங்கப்படுகிறது.

ஓய்வூதியம் பெற ஒரு பணியாளர் குறைந்தது பத்து ஆண்டுகள் பணியாற்றி இருக்க வேண்டும். தகுதி பெறு பணிக் காலம் பத்தாண்டுகட்குக் குறைவாக இருப்பின், அவரின் பணிக்காலத்திற்கு ஏற்பச் சேவைப் பணிக் கொடை (Service Gratuity) மட்டுமே அளிக்கப்படும்.

பத்து ஆண்டுகளும் அதற்கு மேலும் தகுதி பெறு பணிக்காலம் பணியாற்றிய எல்லா வகை ஓய்வூதியர்க்கும் அவரின் தகுதி பெறு பணிக்கால அளவிற்கும் அவர் இறுதியாகப் பெற்ற சம்பள அளவிற்கும் ஏற்ப ஓய்வூதியம் அமையும். எந்த வகையில் ஓய்வுற்று இருப்பினும் ஓய்வூதியம் அவரின் தகுதி பெறு பணிக்காலத்திற்கும் அவர் இறுதியாகப் பெற்ற சம்பள அளவிற்கும் ஏற்ப வேறுபடுமே ஒழிய, பிற காரணங்களால் வேறுபடாது.

பணியாளரின் தகுதி பெறு பணிக்காலம் கணக்கிடுகையில், அரை ஆண்டிற்குக் குறைவான பகுதிப் பணிக்காலம் மூன்று மாதங்களும் அதற்கு மேலும் ஓர் அரையாண்டாகக் கொள்ளப்படும்.

இறுதியாக முடிவு செய்யும் ஓய்வூதியம் முழுமை உருபாவாய் இருக்கும். உருபாவின் கூறாக இருப்பின் முழு உருபாவாகக் கணக்கிடப்படும்.

**சேவைப் பணிக்கொடை (Service Gratuvity) :-**

பணியாளரின் தகுதி பெறு பணிக்காலம் 10 ஆண்டுகட்குக் குறைவாக இருப்பின், அப்பணியாளர் சேவைப் பணிக்கொடை *மட்டுமே* பெறுதற்கு உரியர்.

பணியாளர் 10 ஆண்டுகட்குக் குறைதல் இல்லாத தகுதி பெறு பணிக்காலம் முடித்திருந்தால் *மட்டுமே*, அக்காலத்திற்கு ஏற்ப ஓய்வூதியம் பெறற்கு உரியர்.

தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978, விதி 43 (1), (2).

சேவைப் பணிகொடை அளவு, பணியாளர் பணி முடித்த ஒவ்வொரு அரை ஆண்டிற்கும் ஒரே வீதமாக அரை மாத ஊதியம் என்று கணக்கிடப்படும். இது 14-12-1987 முதற் கொண்டு நடைமுறையில் உள்ளது.

வா.ஆ.எண் : 28 நாள் 8-2-1988. வா.இ.தொ : 7/1988. பக் 94.

**ஓய்வூதியக் கணக்கிற்கான காரணிகள் :-**

பணியாளர் ஒருவர் எவ்வகையில் ஓய்வுறினும், அவரின் ஓய்வூதிய அளவு மூன்று காரணிகளைச் சார்ந்தே அமையும். அவையாவன :

அ. தகுதி பெறு பணிக்காலம்.

ஆ. இறுதியாகப் பெற்ற அடிப்படைச் சம்பளம் அல்லது இறுதியாகப் பத்து மாதங்களில் பெற்ற சம்பளத்தின் நிரல் அளவு (Average) - ***இவற்றில் எது மிகையோ, அது.***

இ. இறுதிச் சம்பளத்தில் கணக்கில் கொள்ள வேண்டிய விழுக்காட்டு அளவு.

**அ. தகுதி பெறு பணிக்காலம் :-**

முழு ஓய்வூதியம் பெற ஒரு பணியாளர் இத்தனை ஆண்டுகள் பணியாற்றி இருக்க வேண்டுமென்று அரசால் முடிவு செய்து அறிவிக்கப்பட்டிருக்கும். முழு ஓய்வு பெற 33 ஆண்டுகள் என்று முன்னர் இருந்ததை 1-7-96 முதல் 30 ஆண்டுகள் என்று மாற்றப்பட்டு நடைமுறையில் இருந்து *வருகிறது*



பணியாளர் முழு ஓய்வூதியம் பெறுவதற்கான வரையறை செய்யப்பட்ட 30 ஆண்டுக் காலத் தகுதி பெறு பணிக்காலத்தை முடிக்கும் முன்னர், ஆனால் 10 ஆண்டுகளை முடித்திருப்பின், பணியாளரின் ஓய்வூதியம் அவர் ஆற்றிய தகுதி பெறு பணிக்கால அளவிற்கு ஏற்பக் கணக்கிடப்படும்.

தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978; விதி: 43 (2**A**).

வா.ஆ.எண் : 253 நாள் 23-9-1996. வா.இ.தொ : 15/1996-9. பக் 11-12.

இருபதாண்டுப் பணிக்குப் பிறகு பணியாளர் ஒருவர் விருப்ப ஓய்வில் செல்ல விழைந்திடின், அவருடைய தகுதி பெறு பணிக்காலத்தோடு ஐந்து ஆண்டுகளைப் பணிக்காலச் சிறப்பளிப்பாகக் (Service Weightage) கூட்டி அவரின் ஓய்வூதியம் கணக்கிடப்படும். ஆனால், அப்படிக் கூட்டிக் கணக்கிடும் போது, அக்கூட்டாண்டுகள் முழு ஓய்வூதியம் பெறற்கென்று வரையறை செய்துள்ள தகுதி பெறு பணிக்கால அளவையோ (இப்போது 30 ஆண்டுகள்) அல்லது அவர் மூப்போய்வு பெறுவதற்கான வரையறை வயதையோ (இப்போது 58 ஆண்டுகள்) மிஞ்சக் கூடாது.

முழு ஓய்வூதியம் பெற ஒரு பணியாளர் 30 ஆண்டுகள் தகுதி பெறு பணிக்காலம் பணியாற்றி இருக்க வேண்டும். எனவே, தகுதி பெறு பணிக்காலத்திற்கு ஏற்பப் பணியாளரின் ஓய்வூதியம் மாறுபடும்.

த.நா.மி.வா. பணி ஒழுங்கு முறை விதிகள் -17 (**gg**).

வா.ஆ.எண் : 16 நாள் 6-3-2002. வா.இ.தொ : 21/2002-3. பக் 12-13.

வா.ஆ.எண் : 51 நாள் 22-6-1988. வா.இ.தொ : 7/1998 பக் 363.

**ஆ. *ஓய்வூதிய கணக்கீட்டிற்கான சம்பளம் :***

*ஓய்வூதியக் கணக்கீட்டிற்குச் சம்பளம் என்பது 1. அடிப்படைச் சம்பளம் (Basic Pay), 2. படிநிலைச் சம்பளம் (Grade Pay), 3. சிறப்புச் சம்பளம் (Special Pay), 4. தனிச் சம்பளம் (Personal Pay) ஆகியவற்றின் கூட்டுத் தொகையாகும்.*

பணியாளர் ஓய்வு பெறுங்கால் பெறும் சம்பளத்திற்கு ஏற்ப ஓய்வூதியம் அமையும்.

1-7-96 முதல் ஓய்வூதியம் கணக்கிடப் பணியாளர் ஓய்வு பெறுங்கால் இறுதியாகப் பெற்ற சம்பளமோ அல்லது இறுதிப் பத்து மாதங்களில் பெற்ற சம்பளத்தின் நிரலோ, இவற்றில் எது மிகையோ அத்தொகை கணக்கில் கொள்ளப்படும். *ஓய்வூதிய விழுக்காட்டளவு இத்தொகையில் 50% ஆகும்.*

**ஓய்வூதியக் கணக்கீடு :-**

$$\text{ஓய்வூதியம்} = \text{இறுதிச் சம்பளம்}^{*} \times \frac{50}{100} \times \frac{\text{பணிக்காலம்}^{**}}{60}$$

* - *இறுதியாக வாங்கிய சம்பளம், இறுதி 10 மாதச் சம்பளத்தின் சராசரி, இவற்றில் எது மிகுதியோ அது.*

** - அரையாண்டுகளில் 60க்கு மிகாமல்.

**பல காலக் கட்டங்களில் ஓய்வூதிய அளவு :-**

| நடைமுறையில் | முழுஓய்வூதியம் பெறத் தகுதி பெறு பணிக்காலம் | ஓய்வூதியம் கணக்கிடச் சராசரிக்கான மாதங்கள் | சம்பளத்தில் ஓய்வூதிய **வீதம்** | வாரிய **ஆணைகள்** |
|---|---|---|---|---|
| 1.7.60 முன்னர் | 30 ஆண்டுகள் | 36 மாதங்கள் | 50% | |
| 1.7.60 முதல் | 30 ஆண்டுகள் | 36 மாதங்கள் | 30/80 | |
| 26.2.70 முதல் | 25 ஆண்டுகள் | 12 மாதங்கள் | 30/80 | |
| 1.1.74 முதல் | 30 ஆண்டுகள் | 10 மாதங்கள் | 33/80 | |
| 31.10.79 முதல் | 33 ஆண்டுகள் | 10 மாதங்கள் | 1000 வரை 50%<br>அடுத்த 500க்கு-45%<br>மீதிக்கு- 40% | |
| 14.12.87 முதல் | 33 ஆண்டுகள் | 10 மாதங்கள் | 50% | |
| 1.7.96 முதல் | 30 ஆண்டுகள் | 10 மாதங்கள் | 50% | 253-23.9.96 |



**ஓய்வூதியம் - அளவு வரையறை :-**

அ) குறைந்த அளவு :-

பல கால கட்டங்களில் மாறுபட்டு வந்துள்ள ஓய்வூதியக் குறைந்த அளவுத் தொகை 1-1-1996 முதல் 1275 உரூபாவாக உயர்த்தப்பட்டது. *1-1-2006 முதல்* 3050 உரூபாவாக *உயர்த்தப் பட்டுள்ளது.*

*வா.ஆ.எண்: 208 நாள் 18-8-1998, வா.இ.தொ: 17/1998-8, பக் 6.*

*வா.ஆ.எண்: 235 நாள் 1-12-2009, வா.இ.தொ: 29/2009-12, பக் 10.*

ஆ) மிகை அளவு :-

1-10-1984 முதல் ஓய்வூதிய மிகை அளவு முற்றிலும் நீக்கப்பட்டு விட்டது.

வா.ஆ.எண்:392நாள்20-11-1985.வா.இ.தொ:4/1985.பக் 1223.

*"உடம்பார் அழியில் உயிரார் அழிவர்*
*திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவு மாட்டார்*
*உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே*
*உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே."*

*-திருமூலர்*

*நட்ட கல்லைத் தெய்வமென்று*
*நாலு புட்பம் சாற்றியே,*
*சுற்றி வந்து முணமுணென்று*
*சொல்லு மந்திரம் ஏதடா?*
*நட்ட கல்லும் பேசுமோ*
*நாதன் உள்ளி ருக்கையில்!*
*சுட்ட சட்டி சட்டுவம்*
*கறிச்சு வைய றியுமோ?*

*- சிவவாக்கியர்.*

# குடும்ப ஓய்வூதியம்

## (Family Pension)

பணியாளர் பணிக்காலத்திலோ, ஓய்வு பெற்ற பிறகோ இறந்துபடின், அவருடைய குடும்பத்தினர் தன்னுரிமையுடனும் தன்மானத்துடனும் தேவைகளின் நெருக்கம் இன்றிக் கண்ணியத்துடன் பணியாளர் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்து வந்த அதே நிலையில் தொடர்ந்து வாழ்வதற்கு ஏற்பக் குடும்பத்தினர்க்குக் குடும்ப ஓய்வூதியம் அளிக்கப்படுகிறது. களப்பணியாளர் நீங்கலான ஒரு சார் பணியாளர்க்கு வாரியத்தில் இக்குடும்ப ஓய்வூதியம் 1-4-1964 முதல் நடைமுறையில் இருந்து வருகிறது.

களப்பணியாளரின் குடும்பத்தினர்க்கு 1-3-1971 முதல் குடும்ப ஓய்வூதியம், "குடும்ப ஓய்வூதியத் திட்டம், 1971", மூலம் நீட்டிக்கப்பட்டது. இது மற்றவர் பயனடைந்த அளவிற்கு முழுமையானது அன்று; ஆனால், 1-7-1986 முதல் ஓய்வூதியத் திட்டம் களப்பணியாளர்க்கும் நீட்டித்தபோது, குடும்ப ஓய்வூதி*யப் பயன் 1-7-1986 முதல் ஓய்வூதியர் குடும்பத்தினர் அனைவர்க்கும்* கிட்டியது.

வா.ஆ.எண். : 5 நாள் 26-6-1986. வா.இ.தொ : 5/1986. பக் 551.

**குடும்ப ஓய்வூதியம் பெறுவதற்கான தகுதிகள் :-**

1) பணியாளர் பணிக்காலத்தில் இறக்கின்ற போது, தொடர்ந்து ஓராண்டிற்குக் குறையாது பணியாற்றி இருக்க வேண்டும்.

தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978, விதி 49 (2) (**a**).

2) ஓராண்டுத் தொடர் பணி முடிவதற்கு முன்னர் இறந்துபடின், அப்பணியாளர் பணியில் சேர்வதற்கு முன்னர்த் தகுந்த மருத்துவ அதிகாரியால் ஆய்வு செய்யப்பட்டுப் பணியில் சேரத் தகுதியானவர் என்று சான்றிதழ் அளிக்கப்பட்டிருந்தால், அவர் குடும்பத்தினர்க்குக் குடும்ப ஓய்வூதியம் உண்டு.

தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978, விதி 49 - (2) (**b**).



3.அ) தற்கொலை செய்து கொண்ட பணியாளர் குடும்பத்தினர்க்கும் ஓய்வூதியம் உண்டு.

ஆ) இழப்பீடு மற்றும் ஏதேனும் ஓர் ஓய்வூதியம் பெற்று வந்த ஓய்வூதியர் இறந்துபடின், அவர் குடும்பத்தினர்க்கும் ஓய்வூதியம் உண்டு.

இ) இறந்துபட்ட பணியாளர் மீது ஒழுங்கு நடவடிக்கை இருப்பினும் அவர் குடும்பத்தினர்க்கு ஓய்வூதியம் உண்டு.

தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978, விதி 49 (2) (**b**).
குறிப்புக்கள் : **i, ii, iii, iv**.

**குடும்ப ஓய்வூதியம்/ *ஓய்வூதியத் திறள்* பெறற்கு உரிய குடும்ப உறுப்பினர் :-**

தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978, விதி 45 (5) இன்படி :

i) மனைவி / மனைவிகள் (சட்டப்படி மணமுறிவு பெற்றவர் உட்பட).

ii) கணவன் (சட்டப்படி மணமுறிவு பெற்றவர் உட்பட.)

iii) மகன்கள் (மாற்றாந் தாய் / தந்தை மகன்கள், தத்து மகன்கள், சட்டப்படி இல்லா மனைவி வழி மகன்கள் உட்பட).

iv) மணமாகா மகள்கள் (மாற்றாந்தாய்/தந்தை மகள்கள், தத்து மகள்கள், சட்டப்படி இல்லா மனைவி வழி மகள்கள் உட்பட).

v) விதவை மகள்கள்/*மணமுறிவு பெற்ற மகட்கள் உளப்பட* (மாற்றாந்தாய்/தந்தை மகள்கள், தத்து மகள்கள், சட்டப்படி இல்லா மனைவி வழி மகள்கள் உட்பட).

vi) தந்தை (தத்துப் பெற்றோர் உட்பட).

vii) தாய் (மாற்றாந்தாய், தத்துப் பெற்றோர் உட்பட).

viii) உடன் பிறந்தோர் ஆண்கள் (18 வயதுக்கு குறைவானவர்/ மாற்றாந்தாய்/தந்தை வழி உடன் பிறந்தோர் உட்பட).

ix) திருமணமாகா மற்றும் விதவை*யான* உடன் பிறந்த பெண்கள் (மாற்றாந்தாய்/தந்தை வழி உடன் பிறந்தோர் உட்பட).

x) திருமணமான மகள்கள்.

xi) முன் இறந்த மகனின் குழந்தைகள்.

**குடும்ப ஓய்வூதியர்க்கான கட்டுப்பாடுகள் :-**

அ. குடும்ப ஓய்வூதியம் கீழ்க்கண்டவர்க்குக் கீழ்க்கண்ட வரையறைகளில் வழங்கப்படும்.

i) குடும்ப ஓய்வூதியம் பெறும் மனைவி / கணவன் ஆகியோர்க்கு இறக்கும் நாள் வரை அல்லது மறுமணம் செய்து கொள் நாள்வரை.

ii) விதவை மகள்கள்/மண முறிவு பெற்ற மகள்கள் உள்ளிட்ட மகள்கள்/மகன்கட்குக் குடும்ப ஓய்வூதியம் கீழ்க்கண்ட தகுதிகளின் மேல் வழங்கப்படும்.

25 வயது முடியும் வரை - மணம்/மறு மணம் செய்து கொள்ளும் வரை இவற்றில் எந்நாள் முன்னதாக வருகிறதோ அந்நாள் வரை.

தகுதியுடைய இவரின் மாத வருமானம் 2550 உருபா*யா*க அமையின், குடும்ப ஓய்வூதியம் பெறத் தகுதியில்லை என்று நிறுத்தப்படும்.

குறிப்பு :-

பணியாளர் ஓய்வு பெறுதற்கு முன்னரோ அன்றிப் பின்னரோ திருமணம் செய்து கொண்டிருந்து, ஓய்வு பெற்ற பிறகு பிறந்த மகன்/மகள் உட்பட்ட பணியாளரின் மகன்/மகள், மகன் 18 வயதையும் மகள் 25 வயதையும் அடைந்தும் கூட, வாழ்க்கை நடத்தப் பொருளீட்ட முடியா அளவிற்கு - பணியாளரின் ஓய்வு/பணியில் இறப்புக்கு முன்னரோ அன்றிப் பின்னரோ மனத்தளவில் சீர்குலைவாலோ, இயலாமையாலோ அல்லது உடலால் ஊனமுற்றோ, ஆற்றலற்றோ துன்பம் அடைந்துவரின், குடும்ப ஓய்வூதியம் கீழ்க்கண்ட வரையறைகளுக்கு உட்பட்டு அவர்க்கு வாழ்நாள் வரை வழங்கப்படும்.

1) அவர் பணியாளரின் ஒன்றுக்கும் மேற்பட்ட குழந்தைகளில் ஒருவராய் இருந்தால், வயது முதிராக் குழந்தைகளில் மூத்தவர்க்கு முத-ல் என்ற வரிசையில், முன்னவர் 25 வயதை அடைந்த பிறகு அவருடைய வாய்ப்பு வரும்போது, அவர்க்குக் குடும்ப ஓய்வூதியம் வாழ்நாள் வரை வழங்கப்படும்.



2) அப்படி உடல்/உள்ளம் ஊனமுற்றவர்/இயலாதவர் ஒருவர்க்கும் மேலாக இருப்பின், வாழ்நாள் குடும்ப ஓய்வூதியம் கீழ்க்கண்டவாறு அமையும்.

ஆண், பெண் பாகுபாடு இன்றி முன்னர்ப் பிறந்தவர் என்ற முன்னுரிமை அடிப்படையில் மூத்தவர்க்கு முத-ல் வழங்கப்படும். தனக்கு மூத்தவர் குடும்ப ஓய்வூதியம் பெறத் தகுதியை இழக்கும் போதே பின்னவர் குடும்ப ஓய்வூதியம் பெறற்கு உரியர். இரட்டைப் பிறவிகளெனின் சமமாகப் பிரித்தளிக்கபடும்.

3) குடும்ப ஓய்வூதியம், பெறற்கு உரிய மகன்/மகள் வயது முதிராதவராக (Minor) இருப்பின், காப்பாளர் மூலம் வழங்கப்படும்.

4) வருவாய் ஈட்ட இயலா அளவிற்கு ஊனத் தன்மை உள்ளதென்பதைக் குடிமை அறுவை மருத்துவர் (Civil Surgeon) தகுதிக்குக் குறைத-ல்லாத மருத்துவ அலுவலர் குழந்தையின் உண்மையான மன/உடல் நிலை குறித்து உறுதிப்படுத்திச் சான்றிதழ் அளித்திருத்தல் வேண்டும்.

5) குழந்தை ஊனத்தால் தொடர்ந்து துன்பத்திற்கு உள்ளாகி வருகிறார் என்று குடிமை அறுவை மருத்துவரால் உறுதிப்படுத்துச் சான்றிதழைக் காப்பாளர் மூன்றாண்டுகட்கு ஒரு முறை அளிக்க வேண்டும்.

6) அப்படிப்பட்ட ஊனமான/இயலாப் பெண் திருமணம் செய்து கொண்டா***லும்*** குடும்ப ஓய்வூதியம் ***உண்டு***.

***வா.ஆ.எண்: 39 நாள் 14-10-2009.***

7) அப்படிப்பட்ட மகன்/மகள் தன் வாழ்க்கைக்கான வருவாயை ஈட்டத் தொடங்கினால் அவரின் குடும்ப ஓய்வூதியம் நிறுத்தப்படும்.

8) அப்படிப்பட்ட மகன்/மகள் வருவாய் ஈட்டம் எதுவும் பெறத் தொடங்கவில்லை என்றும் மகளெனில் மணம் இன்னும் கொள்ளவில்லை என்றும் அவரின் காப்பாளர் மாதமாதம் சான்றளிக்க வேண்டும்.

தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978, விதி 49 (6).

9) 25 வயது தாண்டிய ஊனமான - இயலாத மணமுறிவுற்ற / விதவை*யான* மகள் குடும்ப ஓய்வூதியம் பெறத் தகுதி உடையவர். ஓய்வூதியம் வாழ்நாள் முழுவதும் மணமுறிவு பெற்ற/ விதவையான நாளி-ருந்து கீழ்க்கண்ட வரையறைகளுக்கு உட்பட்டு வழங்கப்படும்.

i) மணமுறிவு, சட்டப்படி செல்லத் தக்கதாக இருக்க வேண்டும்.

ii) மணமுறிவுற்ற மகள் பெற்றோர் வீட்டிற்குத் திரும்பி வந்திருக்க வேண்டும்.

iii) சட்டப்படி ஏற்புடைய அதிகாரியால் ஊனம்/இயலாமை சான்றளிக்கப்பட்டிருக்க வேண்டும்.

iv) குடும்ப ஓய்வூதியம் பெறத் தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 49 (6) இல் குறிப்பிடப்பட்ட வரையறைகள் நடைமுறையில் இருக்கும். ஊனமான - இயலாத விதவை*யான* மகளும் ஏற்புடை மேல் வரையறைகளுக்கு உட்பட்டு, கணவன் இறந்த நாளி-ருந்து வாழ்நாளுக்குக் குடும்ப ஓய்வூதியம் பெறத் தகுதி உடையவராவார்.

க.எண் : 41634/**A**19/**A**192/2003-1 நாள் 9-5-2003.

ஆ.1) குடும்ப ஓய்வூதியம், ஒருவர்க்கு மேற்பட்ட விதவைகட்கு அளிக்க வேண்டிவரின் சமமான பகுதிகளாகப் பிரித்து அவர்க்கு அளிக்கப்படும்.

i) விதவை ஒருவர் இறந்துபடின், அவருடைய குடும்ப ஓய்வூதியப் பகுதி அவருடைய தகுதியுடைய குழந்தைக்கு அளிக்கப்படும்.

ii) இறந்துபட்ட அவ்விதவைக்குக் குழந்தைகள் இல்லை எனில், அவருடைய குடும்ப ஓய்வூதியப் பகுதி மற்ற விதவைகட்குச் சமமாகப் பிரித்து அளிக்கப்படும். அப்படிப் பட்ட விதவை ஒருவரே உளர் எனில், முழுமையாக அவர்க்கு அளிக்கப்படும்

2) இறந்துபட்ட பணியாளர்/ஓய்வூதியர்க்கு உயிரோடு இருக்கும் ஒரு விதவையே இருந்து, ஆனால், முன்னரே இறந்துபட்ட மற்றொரு மனைவிவழித் தகுதியுடைய குழந்தைகள்



இருப்பின், பணியாளர்/ஓய்வூதியர் இறக்கும் போது அத்தகுதியுடைய குழந்தைகளின் தாயார் உயிரோடு ***இருந்து*** இருப்பின் அவர் பெறுதற்கு உரிமை உடைய குடும்ப ஓய்வூதியப் பகுதியை அவரின் தகுதியுடைய குழந்தைகள் பெறற்கு உரிமை உடையவர் ஆவர்.

3) குழந்தை / குழந்தைகள் அல்லது விதவை / விதவைகள் ஆகியோர்க்கு அளிக்கப்படும் குடும்ப ஓய்வூதியப் பகுதி / பகுதிகள் நிறுத்தப்படும் நிலையில், அப்பகுதி / பகுதிகள் முடிந்து விடா; மற்ற விதவை / விதவைகள் அல்லது குழந்தை / குழந்தைகள் தகுதியுள்ள நிலையி-ருப்பின், சமமான பகுதிகளில் பிரித்தளிக்கப்படும். அப்படிப்பட்டவர் ஒரு விதவை அல்லது ஒரு குழந்தைதான் எனில் முழுதும் அப்படிப்பட்ட விதவை / அல்லது குழந்தைக்கு அளிக்கப்படும்.

4) இறந்து பட்ட பணியாளர் / ஓய்வூதியர்க்கு ஒரு விதவை மனைவி இருந்து, ஆனால் மணமுறிவு பெற்ற மனைவி / மனைவிகள் வழித் தகுதியுடைய குழந்தை /குழந்தைகள் இருப்பின், அவர்கள் பணியாளர் / ஓய்வூதியர் இறந்த பொழுது தகுதி யுடைய அக்குழந்தை / குழந்தைகளின் தாயார் மணமுறிவு பெற்றிரா நிலையில் பெறத் தகுதியான குடும்ப ஓய்வூதியப் பகுதியினைப் பெற உரிமையுடையவர் ஆவார். அப்படி அளிக்கப்பட்ட ஓய்வூதியப் பகுதி / பகுதிகள் நிறுத்தப் பெறும் நிலையில், அவை முடிந்து விடா; மற்ற விதவை / விதவைகட்கும் அல்லது குழந்தை / குழந்தைகட்கும் தகுதியிருக்கும் நிலையில் சமப் பகுதிகளாகப் பிரித்தளிக்கப்படும்.

தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978, விதி 49 (7).

வா.ஆ.எண் : 3 நாள் 17-1-1994. வா.இ.தொ : 13/1994, பக் 8.

5) பணியாளர்க்கு ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிகள் இருந்து இரண்டாம், மூன்றாம் மனைவிகள் சட்டப்படி ஏற்புமை பெறுவது கீழ்க்கண்ட இரு நிலைகளிலேயே அமையும்.

i) இரண்டாம், மூன்றாம் திருமணங்கள் இந்துத் திருமணச் சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் அவ்வவ் வகுப்பினரின் மரபுவழிச் சட்டத்தின்படி (Customary Law), நிறைவேற்றப் பட்டிருப்பின்.

ii) இரண்டாம், மூன்றாம் திருமணங்கள், பன்மனைவியர் கொள்ள ஒப்புதல் அளிக்கும் முகம்மதியச் சட்டத்திற்கு ஏற்பச் சட்டப்படி நிறைவேற்றப்பட்டிருப்பின்.

சு.அ.எண் : 84241-N1/90-13 நாள் 3-9-1992: வா.இ.தொ : 11/1992, பக் 497-498.

6) குடும்ப ஓய்வூதியம் இறந்த பணியாளரின் சட்டப் படியாகத் திருமணம் செய்து கொண்ட மனைவிகட்கே தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978, விதி 49 (7) (a) (1) இன்படி சம பங்குகளாக அளிக்கப்படும். முதல் திருமணம் நடைமுறையில் இருக்கும் போது, பணியாளர் இன்னொரு மணம் செய்து கொண்டால், சட்டத்தின் பார்வையில், மனைவி என்ற தகுதியை இரண்டாம் மனைவி பெற முடியாது. சட்டத்தின் நிலைப்படி, ஒரு திருமணம் நடைமுறையில் உள்ளபோது, யாரும் இன்னொரு மணத்தைச் சட்டப்படி செய்து கொள்ள முடியாது; இரண்டாம் திருமணத்தைப் பதிவு முறைப்படியோ மற்றபடியோ செய்து கொண்டாலும், திருமணம் செல்லா நிலையது. எனவே, இரண்டாம் மனைவிக்குக் குடும்ப ஓய்வூதியம் கேட்டிட உரிமை கிடையாது.

திருமணம் செய்து கொண்ட, சட்டப்படியிலாத மனைவி வழிப் பிறந்த குழந்தைகள் சட்டப்படி பிறந்த குழந்தைகளாகவே கொள்ளப்படும்.

க.எண் : 53935/N1/90-1 நாள் 10-9-1990: வா.இ.தொ : 9/1990, பக் 574.

இ)1) தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978, விதி 49 (7) இல் காட்டப்பட்டவை மேலே ‘ஆ’ தவிர்த்துக் குடும்ப ஓய்வூதியம் குடும்ப உறுப்பினரில் ஒரு நேரத்தில் ஒருவர்க்கு மேல் வழங்கப்பட மாட்டாது.

ஆனால், இவ்விதியின்படி, ஒரு மகப்பேற்றில் பிறந்த இரட்டைக் குழந்தைகள் ஒரே அகவையினராகக் கருதப்பட்டுக் குடும்ப ஓய்வூதியத்தின் சமமான பங்குகளைப் பெறத் தகுதியுடையரெனக் கொள்ளப்படுவர்.

2) இறந்துபட்ட பணியாளர்/ஓய்வூதியர்க்குப் பின்னால் விதவையோ/மனைவியை இழந்தோரோ இருப்பின், அவர்க்குக்



குடும்ப ஓய்வூதியம் அளிக்கப்படும். அப்படி இல்லை எனில் தகுதியுடைய குழந்தைக்குத் தரப்படும்.

3) i) மகன்களும், மணமாகா மகள்களும் உயிரோடு இருப்பின், ஆண், பெண் பாகுபாடு இன்றித், தகுதி உடையவர் ஆணெனினும் பெண்ணெனினும் முன்னால் பிறந்தவர் குடும்ப ஓய்வூதியம் பெறற்கு உரியவர் ஆவார். அவர்க்கு அடுத்துப் பிறந்தவர், தனக்கு முன் பிறந்தவர் குடும்ப ஓய்வூதியம் பெறு தகுதி நிலையை இழந்திடும் நிலையிலேயே, குடும்ப ஓய்வூதியம் பெறு தகுதி நிலையை அடைவார்.

ii) இரட்டைக் குழந்தைகட்குச் சம பங்குகளாகக் குடும்ப ஓய்வூதியம் அளிக்கப்படும் நிலையில், ஒரு குழந்தை குடும்ப ஓய்வூதியம் பெறும் தகுதியை இழக்கவரின், அவருடைய குடும்ப ஓய்வூதியப் பகுதி, மற்ற குழந்தைக்கு அளிக்கப்படும். இரட்டையரான இவ்விருவருமே தகுதியினை இழக்க நேரும் போது, அடுத்த தகுதி உடைய குழந்தைக்கு அல்லது இரட்டைக் குழந்தைகட்கு அளிக்கப்படும்.

தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978, விதி 49 (8).

ஈ) இறந்த பெண் பணியாளரின் கணவர்க்கு உயிரோடிருக்கும் மற்றொரு மனைவி இருப்பின், அது மறுமணமாகவே கொண்டு, குடும்ப ஓய்வூதியம் வழங்கப்பட மாட்டாது.

வயது முதிராக் குழந்தைகள் உயிரோடு இருப்பின் அவர்க்கு இறந்து பட்ட பணியாளரின் தந்தை (இயல் காப்பாளர்) வழிக் குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படும். அவரின் சட்டப்படியான காப்பாளர் உரிமை நடுவர் மன்றத்தால் ஏற்கப்பட வேண்டும்.

க.எண் : 9548 - Q2/85-2. நாள் 18-4-1985. வா.இ.தொ. 4/1985, பக் 409.

உ) இறந்து பட்ட பெண் பணியாளரின் கணவர் மறுமணம் செய்து கொண்டிருந்து, அதனால் குடும்ப ஓய்வூதியம் பெறத் தகுதி பெற்ற வயது முதிராக் குழந்தைகட்கு இயல்காப்பாளராக இருக்க இறந்த பெண் பணியாளரின் தந்தை இல்லாத நிலையில், அல்லது காப்பாளராகச் சில காலம் இருந்து பின்னர் இறந்த நிலையில்

அல்லது குழந்தைகள் தாத்தாவின் பாதுகாப்பில் வாழாமல் தந்தையோடு வாழ்ந்து வரு நிலையில், குடும்ப ஓய்வூதியம் நடுவர் மன்றத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எந்த ஒரு சட்டப் படியான காப்பாளர் உரிமை பெற்றவர் மூலமாகவும் வயது முதிராக் குழந்தைகட்கு வழங்கப்படும்.

க.எண் : 12367/N1/86-7. நாள் 23.6.1987. வா.இ.தொ : 6/1987, பக் 483.

ஊ) குடும்ப ஓய்வூதியம் இறந்து பட்ட பணியாளரின் பெற்றோர்க்குக் கீழ்க்கண்ட தகுதிகளின் மேல் வழங்கப்படும்.

i) பணியாளர் உயிருடன் இருந்த போது பெற்றோர் அவரையே முழுமையாகச் சார்ந்து இருக்க வேண்டும்.

ii) இறந்த பணியாளர்க்கு மனைவி / கணவன், தகுதியுடைய மகன் / மகள், அல்லது விதவை மகள் / மணமுறிவு பெற்ற மகள் என்ற வரிசையில் முன்னுரிமையுடையோர் குடும்ப ஓய்வூதியம் பெறுதற்கு இல்லாதிருக்க வேண்டும்.

iii) இவரின் மாத வருமானம் 2550 உரூபா**வு**க்குள் இருக்க வேண்டும். மாத வருமானம் 2550 உரூபா**வு**க்கு மே-ல்லை என்று ஒவ்வொரு ஆண்டும் சான்று அளிக்க வேண்டும்.

iv) ***1-1-2006 முதல்*** குடும்ப ஓய்வூதியம் இறந்து பட்ட பணியாளர் இறுதியாகப் பெற்ற சம்பளத்தில் 50% அல்லது குறைந்தது 3050 உரூபா ஆகும்.

க.எண் 98834/**A**19/**A**192/2001-1 நாள் 30-11-2001.
வா.இ.தொ : 20/2001-11, பக் 2-3.
வா.ஆ.எண் : 235 நாள் 1-12-2009.

எ) விதவை மகள்கள்/மண முறிவு பெற்ற மகள்கள் உள்ளிட்ட மகள்கள்/மகன்கட்குக் குடும்ப ஓய்வூதியம் கீழ்க்கண்ட தகுதிகளின் மேல் வழங்கப்படும்.

i) 25 வயது முடியும் வரை - மணம்/மறு மணம் செய்து கொள்ளும் வரை இவற்றில் எந்நாள் முன்னதாக வருகிறதோ அந்நாள் வரை.

ii) தகுதியுடைய இவரின் மாத வருமானம் 2550



உரூபாவாக அமையின், குடும்ப ஓய்வூதியம் பெறத் தகுதியில்லை என்று நிறுத்தப்படும்.

க.எண் 98834/**A**19/**A**192/2001-1 நாள் 30-11-2001.
வா.இ.தொ : 20/2001-11, பக் 2-3.

ஏ) மணமாகாப் பணியாளர் இறந்துபடின், குடும்ப ஓய்வூதியம் தந்தை, தாய், மாற்றாந் தாய் ஆகியோர்க்குக் கீழ்க்கண்ட நிலையில் வழங்கப்படும்.

i) பெற்றோர், மணமாகா மகனை வாழ்வில் சார்ந்தவராக இருக்க வேண்டும்.

ii) சார்ந்திருத்தல் முழுமையாக இருக்க வேண்டும் என்பது தேவையில்லை.

iii) பெற்றோர், தந்தை/தாய் என்ற தகுதியில் ஓய்வூதியம்/குடும்ப ஓய்வூதியம் முன்னரே பெற்றுவரினும், குடும்ப ஓய்வூதியம் வழங்க முடியும்.

கு.ஆ.எண் : 100298/**A**19/192/97-10 நாள் 25-8-99.
வா.இ.தொ : 18/1999-8, பக் 10.
தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978, விதி 49 (13) **(b) (iii)**.

ஐ) மணமாகாத பணியாளரால் தத்து எடுக்கப்பட்ட மகன்/மகள் ஆகியோர் பணியாளரின் மகன்/மகளாகவே ஏற்றுக் குடும்ப ஓய்வூதியப் பலன்கள் யாவும் வழங்கப்படும்.

கு.ஆ.எண் : 40112/**Q**2/97-4 நாள் 26-9-97.வா.இ.தொ : 16/1997-9, பக் 8.

ஒ)i) காணாமற் போன பணியாளர்/ஓய்வூதியரின் குடும்பத்தினர்க்குக் காணாமற் போனவர் குறித்துக் காவல் துறையில் முதல் செய்தி அறிக்கை (FIR) பதிவு செய்யப்பட்ட நாளி-ருந்து இரண்டாண்டுகள் கழித்துக் குடும்ப ஓய்வூதியம் வழங்கலாம்.

வா.ஆ.எண் : 233 நாள் 2-9-1991. வா.இ.தொ : 10/1991, பக் 507.
கு.ஆ.எண் : 47202 - **N**1/91-1 நாள் 5-3-1993. வா.இ.தொ : 12/1993, பக் 80.

ii) காணாமற் போன பணியாளர்/ஓய்வூதியரின் குடும்பத்தினர்க்கு உயர்த்தப்பட்ட ஓய்வூதியம், காணாமற் போன பணியாளர்/ஓய்வூதியர் இறந்தமை ஐயமற நிலை நாட்டப் பெற்ற பிறகோ, காணாமற் போன 7 ஆண்டுகளுக்குப் பிறகோதான் அளிக்கப்படும்.

க.எண் : 4928-N1/93-1 நாள் 9-12-1994. வா.இ.தொ : 13/1994, பக் 583.

ஓ) ஓய்வூதியர் ஓய்வு பெற்றதன் பின்னர் மணம் செய்து கொண்டிருந்து, அவர் இறந்த பிறகு, அப்படி மணம் செய்து கொண்ட மனைவி/கணவன் ஆகியோர்க்குக் குடும்ப ஓய்வூதியம், ஓய்வூதியர் எந்த நாளில் ஓய்வு பெற்றிருப்பினும் அவர் இறந்த அடுத்த நாளி-ருந்து உண்டு. இது 1-4-1979க்குப் பிறகு இறந்த ஓய்வூதியர் குடும்பத்தினர்க்கும் பொருந்தும்.

ஆனால், ஓய்வூதியர்க்கு இறந்த மனைவி வழிப் பிறந்த, குடும்ப ஓய்வூதியம் பெறற்குத் தகுதியுடைய குழந்தை / குழந்தைகள் இருப்பின், அவரின் தாய்/தந்தை உயிரோடு இருந்திருப்பின் பெறற்கு உரிய குடும்ப ஓய்வூதியத்தின் சம பகுதியை அவர் பெறற்கு உரியர் ஆவர். மற்ற சம பகுதியையே, ஓய்வு பெற்ற பின் ஓய்வூதியர் மணந்து கொண்ட மனைவி/கணவன் பெறுவர்.

வா.ஆ.எண் : 261 நாள் 4-12-1993. வா.இ.தொ : 12/1993, பக் 670.

வா.ஆ.எண் : 203 நாள் 11-11-1992. வா.இ.தொ : 11/1992, பக் 666.

ஔ) இறந்து பட்ட ஓய்வூதியரின் பணிப் பதிவேடுகள் இல்லாத நிலையில், குடும்ப ஓய்வூதியம் அளிக்க, இறந்த பணியாளரின் பணி பற்றிய உடனொத்த துணைச் சான்றுகள் (Collateral Evidence) அல்லது ஓய்வூதியம் அளிப்பு ஆணை எண் விண்ணபத்தில் அளிப்பின் போதுமானது. ஓய்வூதிய அளிப்பு ஆணை எண் கொடுக்கப்பட்டிருந்தால், பணி பற்றிய செய்திகளைச் சரி பார்க்க வேண்டிய தேவை எழாது.

க.எண்: 1114/N1/88-1 நாள் 23-1-1988. வா.இ.தொ: 7/1988, பக் 31.

ஃ) கணவன்/மனைவி இருவருமே பணியாளராக இருந்து, அவரில் ஒருவர் பணியின் போதோ, அன்றி ஓய்வுற்ற பிறகோ



இறக்க நேரின், குடும்ப ஓய்வூதியம் இறந்த பணியாளரின் உயிரோடு இருக்கும் துணைக்கு (மனைவி/கணவன்) அளிக்கப்படும். ***அகவிலைப்படியும் இந்தக் குடும்ப ஓய்வூதியர்க்கு 25-8-2008 முதல் மற்ற ஓய்வூதியர்க்கு உள்ள அதே அளவில் வழங்கப் படுகிறது.***

வா.ஆ.எண் : 71 நாள் 25-4-2008.

பணியி-ருந்த பெற்றோர் இருவருமே இறந்துபடின், உயிரோடு இருக்கும் அவரின் குழந்தை/குழந்தைகட்கு, இறந்த பெற்றோர்க்கான இரண்டு குடும்ப ஓய்வூதியங்கள் வழங்கப்படும்.

தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978, விதி 49 (11-A).

அஅ) பணியின் போதோ, அன்றி ஓய்வுற்ற போதோ பணியாளர் இறக்க நேரின், குடும்ப ஓய்வூதியம் பெறற்கு உரியர், அப்பணியாளரைக் கொன்றமையாகவோ அல்லது அக்கொலைக்கு உடந்தையாகவோ இருந்தார் என்று குற்றஞ் சுமத்தப்பட்டு இருப்பின், குடும்ப ஓய்வூதியம் குற்றஞ் சுமத்தப்பட்ட அவர்க்கோ, குடும்ப ஓய்வூதியம் பெறத் தகுதி உடைய மற்ற குடும்ப உறுப்பினர்க்கோ கொடுக்கப்பட மாட்டாது; அவர் மேலான குற்றச்சாட்டு முடிவுக்கு வரும் வரை நிறுத்தி வைக்கப்படும்.

குற்ற வழக்கின் முடிவில்,

i) குடும்ப ஓய்வூதியம் பெறற்கு உரியர் பணியாளரைக் கொலை செய்ததாகவோ, அல்லது கொலைக்கு உடந்தையாக இருந்ததாகவோ தண்டிக்கப் படுவாரே ஆகில், அவர் குடும்ப ஓய்வூதியம் பெறுவதினின்று விலக்கி வைக்கப் (Debarred) படுவார். மற்ற தகுதியுடைய குடும்ப உறுப்பினர்க்குப் பணியாளர் இறந்த நாளி-ருந்து குடும்ப ஓய்வூதியம் அளிக்கப்படும்.

ii) கொலைக் குற்றச் சாட்டுகளினின்று விடுவிக்கப் படுவாரேல், அக்குடும்ப ஓய்வூதியம் பெறற்கு உரிய அவர்க்குப் பணியாளர் இறந்த நாளில் இருந்து அளிக்கப்படும்.

தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978, விதி 49 (11-C).

## குடும்ப ஓய்வூதிய அளவு :-

அ) பணியாளர் பணிக்காலத்தில் இறந்துபடின் :-

1) தொடர் பணிக்காலம் 7 ஆண்டுகட்குக் குறைவாக இருப்பின் :-

பணியாளர் இறுதியாகப் பெற்ற சம்பளத்தில் 30% அல்லது 3050 உரூபா - ***இவற்றில் எது மிகையோ, அஃது*** ஆகும்.

2) தொடர் பணிக்காலம் 7 ஆண்டுகட்குக் குறையாது இருப்பின் :-

i) இறந்த நாளி-ருந்து 7 ஆண்டுகள் அல்லது பணியாளர் உயிரோடு இருந்திருப்பின் 65 வயது அடையும் வரை, இதில் எந்நாள் முன்னரோ, அந்நாள் வரை -

= இறுதியாகப் பெற்ற சம்பளத்தில் 50 %.

ii) மேல் (i) -இன் கால எல்லைக்குப் பின்னர் -

= இறுதியாகப் பெற்ற சம்பளத்தில் 30% அல்லது 3050 உரூபா - ***இவற்றில் எது மிகையோ, அஃது*** ஆகும்.

குறிப்பு :-

இங்குச் சம்பளம் என்பது, சம்பளம், *படிநிலைச் சம்பளம்,* தனிச் சம்பளம், சிறப்புச் சம்பளம் உள்ளிட்டவை.

தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978, விதி 49 (3) (**a**).

ஆ) ஓய்வூதியர் இறந்துபடின் :-

குடும்ப ஓய்வூதியம் :-

i) முதல் 7 ஆண்டுகட்கோ அல்லது இறந்த ஓய்வூதியரின் வயது 65 ஆகும் வரையோ, இவற்றில் எது முன்னரோ, அதுவரை
= இறுதியாகப் பெற்ற சம்பளத்தில் 50 %.

ii) மேல் (i) இன் கால முடிவுக்குப் பின்னர் -

= இறுதியாகப் பெற்ற சம்பளத்தில் .30 %

மேலே அ) வில் குறிப்பிடப்பட்டுள்ள குறிப்புக்கள் இங்கும் பொருந்தும்.

தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978, விதி 49 (3) (**c**).



## குடும்ப ஓய்வூதியம் - அளவு வரையறை :-

குறைந்த அளவு :- 3050 உரூபா.

மிகை அளவு :-

மிக உயர்ந்த சம்பளப் படி முறையில் (Highest Pay Scale) - 50 %
(38,250 உரூபா )

வா.ஆ.எண் : 235 நாள் 1-12-2009; வா.இ.தொ : 28/2009-12,பக் 10.

## குடும்ப ஓய்வூதியம் பெற - நடைமுறைகள் :-

ஓய்வூதியர் இறந்துபடின், தகுதியுடைய குடும்ப உறுப்பினர் நேரடியாக உள்முகத் தணிக்கை அலுவலர் (ஓய்வூதியம்), தமிழ்நாடு மின்சார வாரியம், சென்னை அவர்க்கு விண்ணப்பிக்க வேண்டும். ஏற்ற விண்ணப்பப் படிவத்தில் (இணைக்கப் பட்டுள்ளது) குறிப்பிடப்பட்டுள்ள இறப்புச் சான்று உட்பட்ட பிற ஆவணங்கள், சான்றுகள் உடன் சேர்த்து அனுப்ப வேண்டும்.

மருத்துவப் படிக்குத் தனி விண்ணப்பம் அனுப்ப வேண்டும்.

பணியாளர் இறந்துபடின், அதற்கான குடும்ப ஓய்வூதியக் கேட்புப் புத்தகத்தைப்பெற்று, நிறைவு செய்து பணியாற்றிய வட்டத்தின் மேற்பார்வைப் பொறியாளர்க்கு அனுப்பல் வேண்டும்.

குறிப்பு :-

மூப்போய்வில் சென்ற ஓய்வூதியர்களைப் பொருத்த வரையில், ஓய்வூதிய அளிப்பு ஆணை அளிக்கு நிலையிலேயே குடும்ப ஓய்வூதியமும் ஒருங்கொத்து அதில் இணைத்து ஆணை இடப்படுவதால் வாரிசுச் சான்றிதழ் வேண்டுமென வற்புறுத்தாது இறப்புச் சான்றிதழும், விண்ணப்பமும் பெற்றுக் குடும்ப ஓய்வூதியம் அளிக்கப்பட வேண்டும். மற்ற வகையான ஓய்வூதியர் குடும்பத்தினர்க்கு குடும்ப ஓய்வூதியம் ஒப்புதல் அளிக்க வருவாய்த் துறையினரின் வாரிசுச் சான்றிதழ் பெற்றிட வேண்டும்.

கு.ஆ.எண் : 48416-M1/82-1 நாள் 12-10-1982.

தமிழ்நாடு மின்**உற்பத்தி** *மற்றும் பகிர்மானக் கழகத்தில்*
குடும்ப ஓய்வூதியம் பெற விண்ணப்பம்

நாள் :.........................

விடுநர்
திருமதி --------------------------------
க/பெ (மறைந்த) --------------------
-------------------------------------------

பெறுநர்
**உண்**முகத் தணிக்கை அலுவலர் (ஓய்வூதியம்),
தமிழ்நாடு மின்**உற்பத்தி** *மற்றும் பகிர்மானக் கழகம்*,
முதல் மாடி, N.P.K.R.R. மாளிகை,
மின் வளாகம்,
144, அண்ணா சாலை, சென்னை - 600 002.

ஐயா,

பொருள் : ........................... மின் பகிர்மான வட்டம் குடும்ப ஓய்வூதியம் - வழங்கக் கோருதல் தொடர்பாக.

* * * *

என் கணவர் திரு. ........................................ தமிழ்நாடு மின்**உற்பத்தி** *மற்றும் பகிர்மானக் கழகத்தில்*------------------- மின்பகிர்மான வட்டத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றுக் கடந்த -------- அன்று இயற்கை எய்திவிட்டார். அவருடைய ஓய்வூதிய அளிப்பு ஆணை எண் (Pension Payment order No) -------- சேமிப்புக் கணக்கு எண் ............... I.O.B. ....................... கிளை. ஆகவே எனக்கு மாதாந்திர குடும்ப ஓய்வூதியம் என் கணவர் இறந்த *மறு நாளி*-ருந்து வழங்கக் கோருகிறேன்.



**இத்துடன் கீழ்க்கண்டவை இணைத்துள்ளேன்**

1. விண்ணப்பப் படிவங்கள் மூன்று படிகள் - கீழ்க்கண்ட விவரங்களோடு.

i. சமீபத்தில் எடுக்கப்பட்ட கடவுச் சீட்டு அளவு நிழற்படங்கள் (Passport Size)-மூன்று.

ii. மாதிரி கையொப்பம் மூன்று - சான்றளிக்கப்பட்டது.

iii. பிறந்த தேதி, உயரம், அங்க அடையாளங்கள் மூன்று - சான்றளிக்கப்பட்டது.

2. இறப்புச் சான்றிதழ் - மூலம்.

3. வங்கிக் கணக்குப் புத்தக நகல் - படிகள் மூன்று - சான்றளிக்கப்பட்டது.

4. மறுமணம் ஆகாச் சான்றிதழ்.

5. பணியில் இலாச் சான்றிதழ்- *(தேவை எனில்)*

6. வாரிசு சான்றிதழ் (வருவாய்த் துறையினரால் வழங்கப்பட்டது-*தேவை எனில்)*

இப்படிக்கு,

இணைப்பு : மேல் உள்ளவை.

*"தம்மின் மெ-யாரை நோக்கித் தமதுடைமை*
*அம்மா பெரிதென்(று) அகமகிழ்க- தம்மினும்*
*கற்றாரை நோக்கிக் கருத்தழிக; கற்றதெல்லாம்*
*எற்றே இவர்க்குநாம் என்று."*
**-குமரகுருபரர்.**

தமிழ்நாடு மின்னுற்பத்தி *மற்றும் பகிர்மானக் கழகத்தில்* மாதாந்திர குடும்ப ஓய்வூதியம் பெற விண்ணப்பம்

| |
|---|
| *கடவுச் சீட்டளவு நிழற்படம்* |

விடுநர்

திருமதி -------------------------------

க/பெ (மறைந்த) --------------------

-------------------------------------------

பெறுநர்

**உண்**முகத் தணிக்கை அலுவலர் (ஓய்வூதியம்),

தமிழ்நாடு மின்னுற்பத்தி *மற்றும் பகிர்மானக் கழகம்,*

முதல் மாடி, N.P.K.R.R. மாளிகை,

மின் வளாகம்,

144, அண்ணா சாலை, சென்னை - 600 002.

ஐயா,

பொருள் :.............................. மின் பகிர்மான வட்டம் மாதாந்திர குடும்ப ஓய்வூதியம் -வழங்கக் கோருதல் தொர்பாக.

* * * *

நான் என் மாதாந்திர குடும்ப ஓய்வூதியத்தை ................................ இந்தியன் வெளியக வங்கியில் (IOB) பெற்றுக் கொள்ள விரும்புகிறேன். அதற்குத் தேவையான விவரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன.

**1. என் கணவரின் ஓய்வூதிய விவரங்கள் :-**

அ. என் கணவர் பெயர் :

ஆ. அவர் இறந்த நாள் :

இ. அவர் கடைசியாகப் பணிபுரிந்த மின்பகிர்மான வட்டம் :

ஈ. அவரின் ஓய்வூதிய ஆணை எண் (P.P.O.) :

உ. அவரின் வங்கிக் கணக்கு எண் :

**2. நான் என் மாதாந்திர குடும்ப ஓய்வூதியம் பெற அளிக்கும் விவரங்கள் :-**



அ. பெயர் :

ஆ. என் வங்கிச் சேமிப்புக் கணக்கு எண் :

இ. என் முகவரி :

**3. என் மாதிரி கையொப்பம் :-**

1.

2.

3.

*சான்றொப்பம் இடப்பட்டது.*

**4. என் அங்க அடையாளங்கள் :-**

1.

2.

3. *உயரம் :*

4. *அகவை/பிறந்த நாள் :*

*சான்றொப்பம் இடப்பட்டது.*

5. *உறுதி மொழிகள்:*

*1. நான் எங்கும் இப்போது பணியில் இல்லை.*

*2. நான் மறுமணம் செய்து கொள்ளவில்லை.*

6. *மருத்துவ நலநிதியில் இணைதற்கு விருப்பம் தெரிவிக்கிறேன்.*

7. *மருத்துவப்படி மாதந்தோறும் வழங்க வேண்டுகிறேன்.*

இப்படிக்கு,

இடம் :

நாள் :

இணைப்பு மேலுள்ளவாறு.

தமிழ்நாடு மின்னுற்பத்தி *மற்றும் பகிர்மானக் கழகத்தில்* மாதாந்திர மருத்துவப்படி கேட்பு விண்ணப்பம்.

விடுநர்
திருமதி --------------------------------
க/பெ (மறைந்த) --------------------
------------------------------------------

பெறுநர்
உண்முகத் தணிக்கை அலுவலர் (ஓய்வூதியம்),
தமிழ்நாடு மின்னுற்பத்தி *மற்றும் பகிர்மானக் கழகம்*,
முதல் மாடி, N.P.K.R.R. மாளிகை,
மின் வளாகம்,
144, அண்ணா சாலை, சென்னை - 600 002.

ஐயா,

பொருள் : ஓய்வூதியம் - மாதந்திர மருத்துவப்படி வழங்கக் கோருதல் - சம்பந்தமாக.

* * * * *

என் கணவர் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணியாற்றி இறந்து விட்டார். நான் இப்பொழுது குடும்ப ஓய்வூதியம் பெற்று வருகின்றேன். என்னுடைய

ஓய்வூதிய அளிப்பு ஆணை எண் (P.P.O.) :
: இந்தியன் வெளியக வங்கி (I.O.B.) கணக்கு எண் :
இந்தியன் வெளியக வங்கி (I.O.B.) - கிளை :

அருட்கூர்ந்து எனக்கு இனிவரும் மாதங்களில் மாத குடும்ப ஓய்வூதியத்துடன் சேர்த்து மாதாந்திர மருத்துவப்படியும், நிலுவைத் தொகையும் வழங்க கோருகிறேன்.

இப்படிக்கு,

இடம்:
நாள் :



# கருணை ஓய்வூதியம்

## (EX-GRATIA PENSION)

1-7-1986க்கு முன்னர் மின்வாரியத்தில் ஒருசார் பணியாளர்க்கே ஓய்வூதியம் வழங்கப்பட்டு வந்தது. மற்ற அனைத்துப் பணியாளர்க்கும் 1-7-1986 முதல் இவ்வோய்வூதியம் வா.ஆ.எண் : 5 நாள் 26-6-1986 வழி விரிவாக்கப்பட்டது. இதன்படி, 1.7.1986 இல் அல்லது அதற்குப் பின்னர் ஓய்வு பெறும்/ இறக்கும் பணியாளர் அனைவரும் ஓய்வூதியத் திட்டத்தில் வருவர்.

**கருணை ஓய்வூதியம்:**

1-7-1986 க்கு முன்னர்ப் பணியில் இறந்தவர் அல்லது ஓய்வு பெற்றுப் பின்னர் இறந்தவர் குடும்ப வாரிசுகட்கு வேறு எந்தக் குடும்ப ஓய்வூதியப் பலன்களும் இல்லாத நிலையில், அவரின் வாழ்நிலையைக் கருத்தில் கொண்டு, கருணை ஓய்வூதியம் 31-12-1990 அல்லது 1-7-1986-க்கு முன்னர் ஓய்வுற்றவரின் இறந்த நாள், இவற்றில் எது பின்னதோ, அந்நாளி-ருந்து வழங்கப்படுகிறது.

***ஓய்வூதியம் பெறற்கு உரிமையில்லா 1-7-1986 க்கு முன்னர் ஓய்வுற்ற, ஆனால் இன்னும் உயிரோடு இருக்கும் ஓய்வுற்ற பணியாளர் நலனைக் கருத்திற் கொண்டு, 1-2-2006 முதற் கொண்டு அவர்க்கும் கருணைத் தொகை வழங்கப் படுகிறது.***

கருணை ஓய்வூதிய அளவிற்கு ஏற்ப அகவிலைப்படியும் வழங்கப்படுகிறது.

வா.ஆ.எண் : 151 நாள் 3-7-1993. வா.இ.தொ : 15/1993.பக் 343-347.

வா.ஆ.எண் : 15 நாள் 18-2-2006. வா.இ.தொ : 25/2006-2.பக் 68.

**கருணை ஓய்வூதியம் பெறத் தகுதிகள் :-**

அ) இறந்த பணியாளர் பங்களிப்பு வைப்பு நிதியில் (C.P.F.) 1-7-1957க்குப் பிறகு உறுப்பினராக இருந்திருக்க வேண்டும்.

ஆ) பணியாளர் 1-7-1986 க்கு முன்னர் ஓய்வுற்றிருக்க வேண்டும் அல்லது இறந்திருக்க வேண்டும்.

இ) பணியாளர் 1-7-1986 க்கு முன்னர் ஓய்வுற்றுப் பின்னர் இறந்திருக்க வேண்டும்.

*ஈ) பணியாளர் 1-7-1986 க்கு முன்னர் ஓய்வுற்று உயிரோடு இருப்பவர்.*

உ) குடும்ப வாரிசுகள் குடும்ப ஓய்வூதியத் திட்டம் 1971 இன் வழியோ அன்றி வேறு எந்த ஒரு குடும்ப ஓய்வூதியத் திட்டத்தின் வழியோ பயன் பெறாதவராக இருக்க வேண்டும்.

ஊ) 1-3-1971 இல் அல்லது அதற்குப் பிறகு பணியில் சேர்ந்து, அந்த நாளுக்குப் பிறகு ஓய்வு பெற்ற /இறந்த பணியாளர்க்காக ஊழியர் வைப்பு நிதி அமைப்பில் குடும்ப ஓய்வூதியத் திட்டம் 1971 இன் கீழ்ப் பயன் பெற்றிருக்க கூடாது.

**கருணை ஓய்வூதியம் பெற உரியவர் - வரையறைகள் :-**

அ) மனைவி/கணவன்- பணியாளர் ஓய்வு பெறுதற்கு முன்னர் மணம் முடித்தவராக இருக்க வேண்டும்.

ஆ) மனைவி/கணவனுக்கு அவர் வாழ்நாள் முழுவதும் அல்லது மறுமணம் செய்து கொள்ளும் வரை, இவற்றில் எது முன்னரோ அது வரை.

இ) மனைவி/கணவன், பணி/மறுபணியில் சேர்வது கருணை ஓய்வூதியம் பெறத் தடையாகாது. ஆனால், அகவிலைப்படி மட்டும் தரப்பட மாட்டாது.

ஈ) மகன்கள் 25 வயது வரை அல்லது வேலையில் சேரும் வரை, இவற்றில் எது முன்னதோ, அது வரை.

உ) மணமாகா மகள்கள் 25 வயது வரை அல்லது வேலையில் சேரும் வரை அல்லது மணமாகும் வரை, இவற்றில் எது முன்னதோ, அது வரை.

ஊ) ஒரு நேரத்தில் கருணை ஓய்வூதியம் குடும்பத்தில் ஓர் உறுப்பினர்க்கு மட்டுமே அளிக்கப்படும். மனைவி/கணவனுக்கு



முதல் அளிக்கப்படும்; அவர் இல்லையேல், தகுதியுடைய குழந்தைக்கு அளிக்கப்படும்.

எ) வயது வாராக் குழந்தை எனில், கருணை ஓய்வூதியம் குழந்தைக்காகக் காப்பாளரிடம் அளிக்கப்படும்.

ஏ) கருணை ஓய்வூதியர் மறு பணியில் சேர்ந்து பங்களிப்பு வைப்பு நிதிக்குப் பணம் செலுத்துவாரே ஆகில், கருணை ஓய்வூதியம் அளிக்கப்படமாட்டாது.

ஐ) தமிழ்நாடு ஓய்வூதியச் சட்டம், 1978 இல் ஓய்வூதியம் பெற வரையறுக்கப்பட்ட- இங்கே குறிப்பிட்டுக் கூறப்படாது விடுபட்ட தகுதி நிலைகள் அனைத்தும் இக்கருணை ஓய்வூதிய அளிப்பை முறைப்படுத்த உரித்தாகும்.

ஒ) சிறப்பு ஓய்வூதிய விதிகளின் (Extra Ordinary Pension Rules) கீழ்க் குடும்ப உறுப்பினர் குடும்ப ஓய்வூதியம் பெறுவாரே ஆயின், கருணை ஓய்வூதியம் பெறற்கு உரியர் இல்லை.

வா.ஆ.எண் : 151 நாள் 3-7-1993. வா.இ.தொ : 15/1993, பக் 343-347.

சு.க.எண் : 33214/684/கோ11/93 நாள் 23-12-1993.

வா.இ.தொ : 15/1999, பக் 662.

**கருணை ஓய்வூதியம் - சில விதி விலக்குக்கள் :-**

1.3.1971 க்குப் பிறகு பணியில் அமர்த்தப்பட்டு, 1-7-1986 க்கு முன்னர் இறந்து பட்ட ஓய்வூதியப் பயனுக்கு உட்படாத, பங்களிப்பு வைப்பு நிதித் திட்ட உறுப்பினரான பணியாளரின் குடும்ப வாரிசுக்குப் பல்வகைப்பட்ட காரணங்களால் குடும்ப ஓய்வூதியத் திட்டம், 1971 இன் கீழ் ஓய்வூதியம் அல்லது வா.ஆ.எண்: 151 நாள் 3-7-1993 இன்படி கருணை ஓய்வூதியம் பெறா நிலையில், குடும்ப ஓய்வூதியத் திட்டம், 1971 இன் கீழ்க் குடும்ப ஓய்வூதியம் போன்ற எந்தப் பயனாவது பின் நாளில் அளிக்கப்பட்டால், பெறப்பட்ட அகவிலைப்படி உட்பட்ட கருணை ஓய்வூதியத்தின் மொத்த தொகையையும் வாரியத்திற்குத் திருப்பித் தரப்படும் என்ற உறுதி மொழியைப் பெற்றுக் கொண்டு கீழ்க்கண்ட சூழ்நிலையில், கருணை ஓய்வூதியம் வழங்கப்படும்.

அ) குடும்ப ஓய்வூதியத்திற்கான சந்தாத் தொகை (Subscription) இறந்து பட்ட பணியாளரிடமிருந்து பிடித்தம் செய்யப்படாத போது.

ஆ) சந்தாத் தொகை பிடித்தம் செய்யப்பட்டு, ஆனால் வட்டார வைப்பு நிதி ஆணையரிடம் செலுத்தப்படாத போது.

இ) சந்தாத் தொகை பிடித்தம் செய்யப்பட்டு, வாரியப் பங்கோடு வட்டார வைப்பு நிதி ஆணையரிடம் செலுத்தப்பட்டு, ஆனால் செலுத்துமைக்கான விவரங்கள் இல்லாமையால் குடும்ப ஓய்வூதியம் தீர்வு செய்யப்படாத போது.

ஈ) 1-7-1986 க்கு முன்னர் இறந்து பட்ட பணியாளர், 1-3-1971 க்கு முன்னர்ப் பணியில் அமர்த்தப்பட்டுத் தொடர்ந்து பணியி-ருந்தும், குடும்ப ஓய்வூதியத் திட்டம், 1971 இல் சேர விருப்பம் தெரிவித்தில்லாத போது.

உ) 1-3-1971 க்கு முன்னர் நிலை இலாப் பணியாளர் (TCL)/ பெயரளவில் பட்டியல் பணியாளர் (NMR) ஆகப் பணியி-ருந்து, 1-3-71 க்குப் பின்னர்ப் பணியில் முறைப்படுத்தப்பட்டு 1.7.86 க்கு முன்னர் இறந்த பணியாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டம் 1971 க்கு விருப்பம் தெரிவிக்காத போது.

ஊ) வா.ஆ.எண்: 151 நாள் 3-7-1993 மற்றும் சு.அ.க.எண். 33214 நாள் 23-12-1993 இல் சொல்லப்பட்ட மற்ற வரையறைகள் முறையாக இருக்கும் போது.

கு.ஆ.எண் 45877/304/**F**/**U**1/95-1 நாள் 5-1-1996. வா.இ.தொ : 15/ 1996-1, பக் 6, 7.

**கருணை ஓய்வூதியம் - அளவு :-**

அ) ஓய்வூதியம்

i. 31-12-1990 முதல் மாதம் 150 உரூபாவும் அதற்கான அகவிலைப்படியும்.

வா.ஆ.எண். 151 நாள் 3-7-1993. வா.இ.தொ : 12/1993, பக் 343.



ii. 1-11-1997 முதல் மாதம் 605 உரூபாவும் அதற்கான அகவிலைப்படியும்.

வா.ஆ.எண் : 238 நாள் 22-9-1998. வா.இ.தொ : 17/1998-9, பக் 10.

iii. 1-8-2006 *முதல் மாதம் 605* உரூபாவுடன் *50% அகவிலைப்படியை அகவிலைக் கருணை ஓய்வூதியமாக மாற்றி இணைத்து 908* உரூபா *மொத்தமாகக் கருணை ஓய்வூதியம் வழங்கப் படுகிறது.*

ஆ) அகவிலைப்படி

i. 1-11-1997க்கு முன்னர் வரை 1750 உரூபாவுக்குக் குறைவாக ஓய்வூதியம் உள்ள ஓய்வூதியர்க்கு வழங்கப்பட்ட அதே விழுக்காடு அளவு கருணை ஓய்வூதியமாகிய 150 உரூபா பெற்றவர்க்கும் வழங்கப்பட்டது.

ii. 1-11-1997க்குப் பின்னர் ஓய்வூதியர்க்கு அவ்வப்போது வழங்கப்பட்டுவரும் அகவிலைப்படிக்கு 8 விழுக்காடு குறைவாகக் கருணை ஓய்வூதியமாகிய 605 உரூபாவுக்குக் கணக்கிட்டு வழங்கப்பட்டது.

வா.ஆ.எண் : 278 நாள் 7-11-1998. வா.இ.தொ : 17/1998-11, பக் 4.

காட்டு:

1-7-2003 இல் இருந்து ஓய்வூதியர்/குடும்ப ஓய்வூதியர்களுக்கு அகவிலைப்படி ஓய்வூதியத்தில் 52%. ஆனால், கருணை ஓய்வூதியம் பெறுபவர்க்கு, ஓய்வூதியர் பெறுவதை விட 8% குறைவாக, அஃதாவது கருணை ஓய்வூதியம் 605 உரூபாவில் 44% அகவிலைப்படி அளிக்கப்படுகிறது.

iii. *1-7-2009 இல் இருந்து அகவிலைப்படி 65% ஆக இருந்து வருகிறது. மற்ற ஓய்வூதியர்க்கு அவ்வப்போது அகவிலைப்படி உயர்த்தி வழங்கிய போதும் கருணை ஓய்வூதியர்க்கு வழங்கப் படவில்லை.*

**கருணை ஓய்வூதியம் விண்ணப்பிக்கும் முறை:-**

கருணை ஓய்வூதியம் பெறத் தகுதியுள்ளவர் அதற்கான விண்ணப்பப் படிவத்தை முழுமை செய்து, தேவையான ஆவணச் சான்றுகளுடன் கீழ்க்கண்டவாறு இறந்துபட்ட பணியாளர்/ஓய்வூதியர் இறுதியாகப் பணிசெய்த வட்ட அலுவலகத்தில் விண்ணப்பிக்க வேண்டும்.

1) முழுமை செய்யப்பட்ட விண்ணப்பம் - 4 படிகள்.

2) சான்றொப்பம் இடப்பட்ட விண்ணப்பிப்பவரின் கடவுச் சீட்டு அளவு (Passport Size) புகைப்படங்கள் - 2.

3) பணியாளரின் இறப்புச் சான்றிதழ்.

4) சான்றொப்பமிடப் பெற்ற விண்ணப்பிப்பவரின் இரு கையொப்பங்கள் - 2 படி.

5) சான்றொப்பமிடப் பெற்ற விண்ணப்பிப்பவரின் இடது கட்டை விரல்/விரல்களின் பதிவுகள் - 2 படி..

(விண்ணப்பிப்பவர் கையெழுத்திட அறியாத போது.)

6) சான்றொப்பமிடப் பெற்ற விண்ணப்பிப்பவரின் அங்க, அடையாள, அளவுகள் (உயரம், அங்க அடையாளக் குறிகள் இரண்டு.)

7) சான்றொப்பமிடப் பெற்ற குழந்தைகளின் பிறந்த நாள் குறிக்கப் பெற்ற சான்றிதழ்கள்.

8) சான்றொப்பமிடப் பெற்ற பணி ஓய்வு ஆணையின் படிகள். (இருப்பின்)

9) காப்பாளர் சான்றிதழ். (தேவைப்படின்)

10) இறந்த பணியாளரின் மனைவி/கணவன் மறுமணம் செய்து கொள்ளவில்லை என்ற சான்றிதழ்.

11) வேலையில் இன்மைச் சான்றிதழ். (குழந்தைகட்கு மட்டும்)



12) இறந்த பணியாளர் ஓய்வு பெறுதற்கு முன்னரே அவரை விண்ணப்பிப்பவர் (மனைவி/கணவன்) மணந்து கொண்டதற்கான உறுதிமொழி ஆவணம்.

13) விண்ணப்பிப்பவர் உண்மையானவர் என்பதற்கான வேறு ஆவணங்கள்.

14) வாரிசு சான்றிதழ்.

**குறிப்பு :**

இறந்து பட்ட பணியாளரின் மனைவி/கணவன் அல்லது தகுதியுடைய குழந்தை, தான்தான் என்பதையும் கருணை ஓய்வூதியம் பெறத் தானே உரியவர் என்பதையும் அலுவலகத் தலைமை நிறைவடையும்படி *உறுதி படுத்த* வேண்டியது விண்ணப்பிப்பவரின் பொறுப்பாகும். தன் அடையாளத்தை நிலை நாட்டத் தன்னிடத்திலுள்ள பங்களிப்பு வைப்பு நிதிக் கணக்குச் சீட்டு அல்லது பங்களிப்பு வைப்பு நிதிக் கணக்குத் தீர்வு குறித்த கடிதம், அல்லது ஓய்வளி ஆணை, அது போன்ற ஆவணங்கள் இருப்பின் அளிக்கலாம். அப்படிப்பட்ட ஆவணங்கள் இல்லா நிலையில் தங்களின் உண்மைக் கோரிக்கையை நிலை நாட்டக் கீழ்க்கண்ட ஆவணங்களில் ஒன்றை அளிக்கலாம்.

1) வழக்கு மன்றத்தால் அளிக்கப்பட்ட மரபுரிமை சான்றிதழ்.

2) குற்றவியல் நடுவர் முன் அளித்த உறுதிமொழி ஆவணம்.

3) கருணை ஓய்வூதியம் வழங்கு அதிகாரிக்கு ஏற்புடைய இரு ஆவணங்கள் துணை கொண்டு விண்ணப்பிப்பவரால் வெள்ளைத் தாளில் தரப்படும் உறுதிமொழி ஆவணம்.

**கருணை ஓய்வூதியக் கொடுப்பு :-**

கருணை ஓய்வூதியத் தொகையை ஓய்வூதியர்க்கு வாரியச் செலவில் காசோலையாகவோ, பண விடையாகவோ அனுப்பி வைக்கப்படும்.

(To be furnished in quadruplicate)

## FORM OF APPLICATION

To

(Head of office in which the deceased Contributory Provident Fund/ Non-Pensionable Establishment Beneficiary last served before his retirement/death while in service.)

Sir,

Sub : Application for the grant of ex-gratia payment to the family of the Board employee governed by Contributory Provident Fund Scheme/ Non-Pensionable Establishment who retired/died while in service prior to 1-7-1986.

Affix photograph.

I hereby apply for grant of ex-gratia payment to me in terms of (Permenent) B.P. (Ch) No. 151 (SB) dated 3-7-1993.

Requisite particulars given below :-

1. Name of the applicant :
2. If the applicant is submitting the application as a guardian onbehalf of a minor, the name of the minor child. :
3. Full Address of the applicant :
4. Particulars of surviving widow/widowers and children of the deceased Board employee eligible for ex-gratia payment. :

| Sl.No. | Name | Relationship with the deceased person | Date of birth Christian era. |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |
| 6. | | | |

5. Name of the deceased Board employee :
6. Date of death of the Board employee (Documentary evidance to be attached) :



7. Office in which the deceased Board employee served last and the post held by him. :
8. Contributory Provident Fund Account Number of the deceased Board employee. (if known) :
9. Name of the Officer viz. the authority who authorised payment of the balance amount in Contributory Provident Fund Account (If known). :
10. If the applicant is guardian his date of birth and relationship with the (i) deceased Board employee and (ii) Minor. :
11. Is the claimant in receipt of any family pension under the extra-ordinary Pension Rules? or Under any Rules or from any Department. :
12. List of documents/evidence attached. :
   - i) Two specimen signatures of the Applicant, duly attested (to be furnished in two separate sheets)
   - ii) Two copies of passport size photograph of the applicant duly attested.
   - iii) Two slips each bearing left hand thump and finger impresions of the applicant, duly attested. (Applicable where the applicant is not able to sign.)
   - iv) Descriptive Roll of the applicant duly attested, indicating (a) height and (b) personal marks, if any, on the head, face etc. (specify a few conspicuous marks, not less than two, if possible.)
   - v) Certificate(s) of age duly attested showing the dates of birth of the children. The certificate should be from the Municipal Authorities or from the Local Panchayat or from the head of a recognised school, if the child is studying in such school.
   - vi) Attested copies of retirement order, if available.
   - vii) Death Certificate of Board employee.
   - viii) Gurdianship certificate (where applicable)

ix) The Certificate to the effect that the widow/ wodower has not re-married.

x) Non-employment certificate (in the case of children only.)

xi) Affidavit to the effect that the applicant (for widow/widowers only) was married to the deceased Board employee before retirement.

xii) Any other document indicating that the applicant is genuine claiment. (to be specified)

Signature

Name and complete Postal Address

**ATTESTATION**

(Attestation should be done by two Officers of Tamil Nadu Electricity Board or two persons of respectability in the town or village in which the applicant resides.)

Certified that I have known Tmt/Thiru .................................................................. Widow/Widower/Son/Daughter of Late Thiru/Tmt ......................................................................... and resident of ..................................................................... I am satisfied that she/he is the bonafide claiment of ex-gratia payment applied for.

1) Signature and Seal of the Attesting Authority.

2) Signature and Seal of the Attesting Authority.



# அகவிலைப்படி

## (Dearness Allowance)

அன்றாடம் நாம் பயன்படுத்திவரும் வாழ்க்கைக்கு தேவையான பொருள்களின் சந்தை விலை நிலையானது இல்லை. காலத்திற்குக் காலம் மாறிக் கொண்டே (உயர்ந்து கொண்டே) வருவது. விலை மாற்றத்திற்குக் காரணங்கள் பல. அரசின் கொள்கைகள், ஆட்சி மாற்றங்கள், பருவ மழை பெய்யாமை, வறட்சி, மக்கள் தொகைப் பெருக்கம், தேவை மிகுதி இப்படி எத்தனையோ எண்ணற்ற காரணங்கள் நாட்டின் பொருளமைப்பில் பெரும் ஏற்றத் தாழ்வுகளைத் தோற்றுவிக்கின்றன.

விலை மாற்றம் என்பதினும் விலை ஏற்றம் என்று சொல்வதே ஏற்புடைத்தாம். பொருள்களின் விலை என்றுமே ஏறுமுகமாகவே இருந்து வருகின்றன.

ஏறி வரும் விலை விளைவால் இன்னலுறும் பணியாளரின் வாழ்க்கைச் சுமையை ஓரளவேனும் இறக்கி வைக்க வேண்டும்; மிகுபடு செலவை ஈடு செய்ய வேண்டும் என்ற அரசின் இனிய கொள்கையின் அடிப்படையில் அகவிலைப்படி அளிக்கப்படுகிறது. அரையாண்டுக்கு ஒரு முறை எனக் கால இடை வெளியில் பொருள்களின் விலைகளைக் கணக்கிட்டு, ஏற்படும் மாற்றங்களைப் புள்ளிகளாகக் கணக்கிட்டு விலைக் குறியீட்டுப் புள்ளிகளின் ஏற்றத்திற்கு ஏற்ப அகவிலைப்படி அளிக்கப்படுகிறது.

**அகவிலைப்படி அளவு :-**

பணியாளர்க்குப் பன்னெடுங்காலமாக அகவிலைப்படி வழங்கப்பட்டு வரினும் ஓய்வூதியர்க்கு 1-4-1972 முதலே இச்சலுகை நீட்டிக்கப்பட்டுத் தொடர்ந்து வருகிறது.

1-12-1996 க்கு முன்னர் வரை ஓய்வூதியத் தொகை அளவிற்கேற்பப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுப் பிரிவுகளுக்குத் தக அகவிலைப் படி அளிக்கப்பட்டு வந்தது. 1-12-1996 முதல் ஓய்வூதியம் மாற்றி அமைக்கப் பட்டதி-ருந்து, பணியிலுள்ள பணியாளர்க்கு ஈடாக, பெறும் ஓய்வூதியப் பாகுபாடின்றி, ஓய்வூதியத்தின் குறிப்பிடு விழுக்காட்டு அளவாக அகவிலைப்படி வழங்கப்பட்டு வருகிறது.

அகவிலைப்படியைப் பருவக் கால அடிப்படையில் ஆண்டின் சனவரித் திங்கள் மற்றும் சூலைத் திங்கள் முதல் விலைக் குறியீட்டு மாற்ற உயர்வைக் கணக்கிட்டு, அதற்கேற்ப நடுவண் அரசு தொடர்ந்து உயர்த்தி வருகிறது. நடுவணரசை வழிகாட்டியாகக் கொண்டு *தமிழக அரசும் தமிழக அரசைப் பின்பற்றித் தமிழ்நாடு* மின்னுற்பத்தி *மற்றும் பகிர்மானக் கழகமும்* அகவிலைப்படியைத் தன் பணியாளர்க்கும் ஓய்வூதியர்க்கும் அளித்து வருகிறது.

ஓய்வூதியத்தின் விழுக்காட்டு அளவாக அகவிலைப்படி கணக்கிடுகையில் வரும் பின்னப் பகுதி முழு உரூபாயாகக் கொண்டு 1-7-1987 முதல் *வழங்கப்பட்டு வந்தது. அதுவே, 1-1-2010 முதல், 50 காசிற்குக் குறைவாக இருப்பின் தள்ளப்படும் 50 காசும் அதற்கு மேலும் இருப்பின் உரூபாவாகக் கொண்டு கணக்கிடப்படும்.*

வா.ஆ.எண் : 29 நாள் 8-2-1988. வா.இ.தொ : 7/1988-2.
பிற்சேர்க்கை - 1.

*வா.ஆ.எண்: 62 நாள் 19-4-2010.*

*இசையும் எனினும் இசையா தெனினும்*
*வசைதீர எண்ணுவர் சான்றோர் - விசையின்*
*நரிமா உளங்கிழித்த அம்பினின் தீதோ*
*அரிமாப் பிழைப்பெய்த கோல்?*

***நாலடியார் - 152.***



## அகவிலைப்படி அளிப்பளவு :-

**பல்வேறுபட்ட காலக் கட்டங்களில் ஓய்வூதியர்க்குக் கீழ்க்கண்ட அட்டவணைப்படி அகவிலைப்படி அளிக்கப்பட்டுள்ளது.**

| வ. எண் | காலம் முதல் | ஓய்வூதிய அளவு முதல் உரூபா | ஓய்வூதிய அளவு வரை உரூபா | அகவிலைப்படி சம்பளத்தில் விழுக்காடு % | அகவிலைப்படி குறைந்த அளவு உரூபா | வாரிய ஆணை எண் | வாரிய இதழ்த் தொகுப்பு எண் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | 1-10-84 | - | 549 | 4.5 | 12 | | |
| | | 550 உம் மேலும் | | 3.6 | 25 | | |
| 2. | 1-12-84 | - | 549 | 6.0 | 16 | | |
| | | 550 உம் மேலும் | | 4.8 | 33 | **479 நாள் 30-12-1985** | **4/85, பக் 1362.** |
| 3. | 1-3-85 | - | 549 | 7.5 | 20 | | |
| | | 550 உம் மேலும் | | 6.0 | 41 | | |
| 4. | 1-5-85 | - | 549 | 9.0 | 24 | | |
| | | 550 உம் மேலும் | | 7.2 | 50 | | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 5. | 1-9-85 | - | 549 | 10.5 | 28 | 480 நாள் 30-12-1985 | 4/86, பக் 1359. |
| | | 550 உம் மேலும் | | 8.4 | 58 | | |
| 6. | 1-12-85 | - | 549 | 12.0 | 32 | 132 நாள் 1-4.-986 | 5/86, பக் 328. |
| | | 550 உம் மேலும் | | 9.6 | 66 | | |
| 7. | 1-3-86 | - | 549 | 13.5 | 36 | | |
| | | 550 உம் மேலும் | | 10.8 | 74 | | |
| 8. | 1-5-86 | - | 549 | 15.0 | 40 | 224 நாள் 27-5-1986 | 5/86, பக் 528. |
| | | 550 உம் மேலும் | | 12.0 | 83 | | |
| 9. | 1-7-86 | - | 1750 | 4.0 | | 29 நாள் 8-2-1988 | 7/88, பக் 168. |
| | | 1750 க்கு மேல் | | 3.0 | 70 | | |
| 10. | 1-1-87 | - | 1750 | 8.0 | | | |
| | | 1750 க்கு மேல் | | 6.0 | 140 | | |



| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 11. | 1-7-87 | - | 1750 | 13 | | 29 நாள் 8-2-1988 | 7/88, பக் 168. |
| | | 1750 க்கு மேல் | | 9 | 228 | | |
| 12. | 1-1-88 | - | 1750 | 18 | | 193 நாள்28-6-1988 | 7/88, பக் 400. |
| | | 1750 க்கு மேல் | | 13 | 315 | | |
| 13. | 1-6-88 | - | 1750 | 18 | | 258 நாள்20-9-1989 | 8/89, பக் 837. |
| | | 1751 | 3000 | 13 | 315 | | |
| | | 3000 க்கு மேல் | | 11 | 390 | | |
| 14. | 1-7-88 | - | 1750 | 23 | | | |
| | | 1751 | 3000 | 17 | 403 | | |
| | | 3000 க்கு மேல் | | 15 | 510 | | |
| 15. | 1-1-89 | - | 1750 | 29 | | | |
| | | 1751 | 3000 | 22 | 508 | | |
| | | 3000 க்கு மேல் | | 19 | 660 | | |
| 16. | 1-7-89 | - | 1750 | 34 | | 316 நாள்21-11-1989 | 8/89, பக் 949. |
| | | 1751 | | 25 | 595 | | |
| | | 3000 க்கு மேல் | | 22 | 750 | | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 17. | 1-1-90 | - | 1750 | 38 | | 117 நாள் 5-6-1990 | 9/90, பக் 440. |
| | | 1751 | 3000 | 28 | 665 | | |
| | | 3000 க்கு மேல் | | 25 | 840 | | |
| 18. | 1-7-90 | - | 1750 | 43 | | 234 நாள்1-11-1990 | 9/90, பக் 672. |
| | | 1751 | 3000 | 32 | 753 | | |
| | | 3000 க்கு மேல் | | 28 | 960 | | |
| 19. | 1-1-91 | - | 1750 | 51 | | 87 நாள்2-5-1991 | 10/91, பக் 235. |
| | | 1751 | 3000 | 38 | 893 | | |
| | | 3000 க்கு மேல் | | 33 | 1140 | | |
| 20 | 1-7-91 | - | 1750 | 60 | | 310 நாள்13-12-1991 | 10/91, பக் 707. |
| | | 1751 | 3000 | 45 | 1050 | | |
| | | 3000 க்கு மேல் | | 39 | 1350 | | |
| 21 | 1-1-92 | - | 1750 | 71 | | 87 நாள் 9-6-1992 | 11/92, பக் 362. |
| | | 1751 | 3000 | 53 | 1243 | | |
| | | 3000 க்கு மேல் | | 46 | 1590 | | |
| 22. | 1-7-92 | - | 1750 | 83 | | 219 நாள் 1-12-1992 | 12/92, பக் 186. |
| | | 1751 | 3000 | 62 | 1453 | | |
| | | 3000 க்கு மேல் | | 54 | 1860 | | |



| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 23. | 1-1-93 | - | 1750 | 92 | | 141 நாள் 26-6-1993 | 12/93, பக் 277. |
| | | 1751 | 3000 | 69 | 1610 | | |
| | | 3000 க்கு மேல் | | 59 | 2070 | | |
| 24. | 1-7-93 | - | 1750 | 97 | | 231 நாள் 6-11-1993 | 12/93, பக் 583. |
| | | 1751 | 3000 | 73 | 1698 | | |
| | | 3000 க்கு மேல் | | 63 | 2190 | | |
| 25. | 1-1-94 | - | 1750 | 104 | | 133 நாள் 21-5-1994 | 13/94, பக் 254. |
| | | 1751 | 3000 | 78 | 1820 | | |
| | | 3000 க்கு மேல் | | 67 | 2340 | | |
| 26. | 1-7-94 | - | 1750 | 114 | | 285 நாள் 29-10-1994 | 13/94, பக் 504. |
| | | 1751 | 3000 | 85 | 1195 | | |
| | | 3000 க்கு மேல் | | 74 | 2550 | | |
| 27. | 1-1-95 | - | 1750 | 125 | | 124 நாள் 24-5-1995 | 14/95, பக் 243. |
| | | 1751 | 3000 | 94 | 2188 | | |
| | | 3000 க்கு மேல் | | 81 | 2820 | | |
| 28. | 1-7-95 | - | 1750 | 136 | | 263 நாள் 4-11-1995 | 14/95, பக் 562. |
| | | 1751 | 3000 | 102 | 2380 | | |
| | | 3000 க்கு மேல் | | 88 | 3060 | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 29 | 1-1-96 | - | 1750 | 148 | | 148 நாள் 27-5-1996<br>15/96-5, பக் 12. |
| | | 1751 | 3000 | 111 | 2590 | |
| | | 3000 க்கு மேல் | | 96 | 3330 | |

1-7-96 க்கு முன்னர் வரை ஓய்வூதியப் படிமுறைகளுக்கு (Slab) ஏற்ப வெவ்வேறு அளவான அகவிலைப்படி அளித்து வந்த நிலையை மாற்றி, 1-7-96 முதல் எவ்வித வேறுபாடும் இன்றி எல்லா ஓய்வூதியர்க்கும் அவர் பெறு அடிப்படை ஓய்வூதியத்தில் ஒரே விழுக்காட்டு அளவாகக் கீழ்க் கண்டவாறு அளிக்கப்பட்டு வருகிறது.

| **எண்** | காலம் முதல் | அகவிலைப்படி: ஓய்வூதியத்தின் விழுக்காடு - % | வாரிய ஆணை எண் நாள் | வாரிய இதழ்த் தொகுப்பு எண் மாதம், பக்கம் |
|---|---|---|---|---|
| 1. | 1-7-1996 | 4 | | |
| 2. | 1-1-1997 | 8 | 208/18-8-98 | 17/98-8, பக். 4 |
| 3. | 1-7-1997 | 13 | | |
| 4. | 1-1-1998 | 16 | | |
| 5. | 1-7-1998 | 22 | 278/7-11-98 | 17/98-11, பக். 4 |
| 6. | 1-1-1999 | 32 | 33/7-7-99 | 18/99-7, பக். 41 |
| 7. | 1-7-1999 | 37 | 280/26-10-99 | 18/99-10, பக். 42 |
| 8. | 1-1-2000 | 38 | 166/26-7-2000 | 19/00-7, பக். 15 |
| 9. | 1-7-2000 | 41 | 302/5-12-2000 | 19/00-12, பக். 49 |
| 10. | 1-1-2001 | 43 | 177/2-7-2001 | 20/01-7, பக். 17 |
| 11. | 1-7-2001 | 45 | 9/17-1-2002 | 21/02-1, பக். 23 |
| 12. | 1-10-2002 | 49 | 221/5-11-2002 | 21/02-11, பக். 41 |
| 13. | 1-7-2003 | 52 | 156/11-7-2003 | 22/03-7, பக். 37 |



| எண் | காலம் | அகவிலைப்படி புதிது | பழையது | ஆணை எண் | இதழ் எண் 118 |
|---|---|---|---|---|---|
| 14. | 1-2-2004 | | 55 | 26/24-2-2004 | 23/04-2, பக். 25 |
| 15. | 1-7-2004 | | 59 | 186/29-10-2004 | 23/04-10, பக். 33 |
| 16. | 1-1-2005 | | 61 | 31/31-1-2005 | 24/05-1, பக். 1 |
| 17. | 1-4-2005 | | 64 | 75/18-4-2005 | 24/05-4, பக். 82 |
| 18. | 1-7-2005 | | 67 | 167/6-8-2005 | 24/05-8, பக். 30 |
| 19. | 1-1-2006 | 0 | 74 | 76/6-5-2006 | 25/06-5, பக். 47 |
| 20. | 1-7-2006 | 2 | 79 | 187/26-9-2006 | 27/06-9, பக். 61 |
| 21. | 1-8-2006* | 2 | 29 | 187/26-9-2006 | |
| 22. | 1-1-2007 | 6 | 35 | 92/12-4-2007 | 26/07-4, பக். 37 |
| 23. | 1-7-2007 | 9 | 41 | 249/22-10-2007 | 26/07-10, பக். 22 |
| 24. | 1-1-2008 | 12 | 47 | 59/11-4-2008 | 27/08-4, பக். 16 |
| 25. | 1-7-2008 | 16 | 54 | 213/20-11-2008 | 27/08-11, பக். 19 |
| 26. | 1-1-2009 | 22 | 64 | 75/27-4-2009 | 28/09-4, பக். 70 |
| 27 | 1-7-2009 | 27 | 73 | 201/14-10-2009 | |
| 28 | 1-1-2010 | 35 | | 62/18-4-2010 | |
| 29 | 1-7-2010 | 45 | | 223/7-10-2010 | |
| 30 | | 51 | | 70/19-4-2011 | |

*குறிப்பு:*

*1) 1-8-2006 முதல் வா.ஆ.எண்: 41 நாள் 31-8-2006 மற்றும் 187 நாள் 26-9-2006 இன் படி, 1-8-2006 முதல் அப்போது அளிக்கப்பட்டு வந்த அகவிலைப்படி 79% இல் 50% ஐ அகவிலை ஓய்வூதியம் (Dearness Pension) ஆகக் கணக்கில் கொண்டு, எஞ்சிய 29% அகவிலைப்படியாக அளிக்கப் பட்டது,*

*2.) ஆறாவது ஊதியக் குழுவின் பரிந்துரைக்கு ஏற்ப, வா.ஆ.எண்: 235 நாள் 1-12-2009 இன்படி, ஓய்வூதியம் திருத்தி அமைக்கையில், 1-1-2006 இல் அளிக்கப்பட்டு வந்த 74% அகவிலைப்படியில் 50% உம் எஞ்சிய 24% உம் அப்போது* பெற்று வந்த அடிப்படை ஓய்வூதியத்தோடு சேர்த்து 1-1-2006 *முதலான திருந்திய அடிப்படை ஓய்வூதியம் கணக்கிட்டுப் பொருத்தப்பட்டது.;* எனவே, *அந்நாளில் அகவிலைப்படி 0%. 1-1-2006 முதல் கணக்கிட்டு ஓய்வூதியம் திருத்தி அமைக்கப்பட்டாலும், அதனால் விளையும் பணப்பயன் 1-1-2007 முதற் கொண்டே அளிக்கப் பட்டது.*

**அகவிலைப்படி - கருணை ஓய்வூதியத்திற்கு :-**

கருணை ஓய்வூதியம் 31-12-90 முதல் மாதத்திற்கு 150 உருபா என்று, 1-7-86க்கு முன்னர் இறந்த அல்லது ஓய்வுற்று 1-7-86க்கு முன்னரோ, அன்றிப் பின்னரோ இறந்த பணியாளரின் குடும்ப வாரிசுக்கு அளிக்கப்பட்டு வருகிறது. இக்கருணை ஓய்வூதியத்திற்கு 1-11-97க்கு முன்னர் வரை, 1750 உருபாவுக்குக் குறைவாக ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியர்க்கு வழங்கப்பட்ட அதே விழுக்காட்டு அளவு அகவிலைப்படி வழங்கப்பட்டது.

1-11-97 முதல் கருணை ஓய்வூதியம் 605 உருபாவாக உயர்த்தப்பட்டு, அதற்கான அகவிலைப்படி, மற்ற ஓய்வூதியர்க்கு வழங்கப்பட்டு வரு அகவிலைப்படி விழுக்காட்டு வீதத்தில் 8 விழுக்காடு குறைந்த அளவில் 1-1-98 முதல் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

வா.ஆ.எண்: 278 நாள் 7-1-1998. வா.இ.தொ : 17/1998-11. பக் 4.

*'பாய்' என்பது பொந்து எனப் பொருள்படும்; அ*
*வளமை ஒரு பொருள் போல் தோன்றி உள்ளே ெ*
*புரையாய் இருப்பது. இங்ஙனமே ஒருவர் நினைவுகள் சொலவுஞ்*
*செயலும் ஆராய்ந்து காண்பார்க்கு உள்ளீடு இல்லாதனவாய்ப்*
*புலப்படுமாயின், அவை பொய்யென்று சொல்லப்படும்.*

*புரை, பொய், புழை, பொந்து என்பன*
*தொளையினை உணர்த்தும் ஒரு பொருட் பெயர்க*

**மறைமலை அடி**



# இடைக்கால ஓய்வூதியமும் இடைக்காலப் பணிக்கொடையும்

## (Provisional Pension and Provisional Gratuity)

ஓய்வு பெறும் பணியாளர் ஒவ்வொருவரும் ஓய்வுறு நாளில் ஓய்வூதியப் பலன்களைப் பெறற்கு உரியர். ஆனால், ஒரு சில காரணங்களால் உரிய ஓய்வூதியப் பலன்களை விதிகளின்படி ஓய்வுறு நாளில் அளிக்க இயலாமல் போகலாம். அந்நிலையில், உரிய முழுமையான ஓய்வூதியப் பலன்கள் அளிக்கப்படும் வரையில் ஓய்வூதியர் தன் வாழ்க்கையை இயல்பாய்த் தொடர ஓர் அளவிற்கான ஓய்வூதியமும், பணிக்கொடையும் அளிக்கப்படுகின்றன. இவையே இடைக்கால ஓய்வூதியமும், இடைக்காலப் பணிக்கொடையும் ஆவன.

**அ. இடைக்கால ஓய்வூதியப் பலன்களுக்கான சூழ்நிலை :-**

1. பணியாளர் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டு, அவ்வொழுங்கு நடவடிக்கைக்குக் குந்தகம் இன்றிப் பணி ஓய்வில் செல்ல ஒப்புதல் அளிக்கும் போது.

தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள் 1978; விதி 9 (4).

2. ஓய்வூதியப் பலன் அளிப்பை உடனடியாக முடிவு செய்ய முடியாது காலத் தாழ்த்தம் ஏற்படும் போது.

க.எண்: 29655/N1/87 நாள் 12-6-1987: வா.இ.தொ: 6/1987, பக் 475.

**ஆ. இடைக்கால ஓய்வூதியப் பலன்களுக்கான அளவும் காலமும்**

1. உரிய ஓய்வூதிய அளவை விட மிகக்கூடாது.

2. பணியாளர் ஓய்வுற்ற நாளி-ருந்து இறுதி ஓய்வூதியப் பலன்கள் முடிவு செய்யும் வரை அளிக்கப்பட வேண்டும்.

3. அனைத்து வகைப் பணியாளர்க்கும் இடைக்கால ஓய்வூதியம் 100% வரை வழங்கப்படும்.

4. இடைக்காலப் பணிக்கொடையாக அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர்க்கு 80% வரையும் மற்ற பணியாளர்க்கு 100% வரையும் வழங்கப்படும்.

க.எண் 37359/N1/87-1 நாள் 2-9-1987: வா.இ.தொ : 6/1987, பக் 696-697.

5. தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978, விதி (9), துணை விதி (2) இன்படி துறைசார் ஒழுங்கு நடவடிக்கை தொடரப்படு ஓய்வூதியர்க்கு விதிகள் 60 அல்லது 69 வழி அளிக்கப்படும். இடைக்கால ஓய்வூதியத்திற்கு அகவிலைப்படி 7-7-94 முதல் அளிக்கப்படுகிறது.

வா.ஆ.எண் : 277 நாள் 27-10-1994. வா.இ.தொ : 13/1994. பக் 518.

6. இடைக்கால ஓய்வூதியம் பெறுவோர்க்கு ஏற்புடைய மருத்துவப்படி 1-4-1995 முதல் வழங்கப்படுகிறது.

முறையான ஓய்வூதியம் முடிவு செய்தற்கு முன்னர், இடைக்கால ஓய்வூதியம் பெறு குடும்ப ஓய்வூதியர்க்கு ஏற்புடைய அகவிலைப்படியும், மருத்துவப்படியும் பணியாளர்/ஓய்வூதியர் இறந்த நாள் எது எனினும் 5-2-1996 முதல் அளிக்கப்படுகிறது.

வா.ஆ.எண் : 6 நாள் 31-1-1997. வா.இ.தொ : 16/1997-1, பக் 97.

7. வாரிசு சான்றிதழ் கோரி வற்புறுத்தாது, பணியாளர் இறந்த நாளி-ருந்து 12 மாதங்களுக்கு மிகாமல் இடைக்கால ஓய்வூதியத்தை வழங்க வேண்டும்.

வா.ஆ.எண் : 86 நாள் 20-11-2000. வா.இ.தொ : 19/2000-11, பக் 32.

8. இறுதிக் குடும்ப ஓய்வூதியம் அளிப்பு அதிகாரம் வழங்கப்படும் வரையில், இடைக்கால ஓய்வூதியம் தொடர்ந்து அளிக்கப்படும். ஆனால், சட்டப்படியான வாரிசுகள் என்பதற்குத் தெளிவான, உரிய சான்று இருக்க வேண்டும்.

தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978, விதி 74, துணை விதி 9.



**இ. விதி விலக்குக்கள் :-**

1. பணியின் போது கடும் தீய நடத்தை அல்லது கடும் பணிப் புறக்கணிப்புக்கான குற்றச்சாட்டின் மீது துறை சார்ந்த அல்லது வழக்கு மன்ற நடவடிக்கையில் குற்றமுள்ளவராக முடிவு செய்யப்பட்ட பணியாளர்க்கு இடைக்காலப் பலன்கள் அளிக்கப்பட மாட்டாது.

தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978, விதி 9 (1) (a).

2. பணிக்காலத்தில் தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை பணியாளரின் ஓய்வு நாளுக்குப் பின்னரும் தொடரும் நிலையில், அவரின் தகுதி பெறு பணிக்காலத்திற்கு ஏற்ப வழங்கற்குரிய உயர் ஓய்வூதியத்திற்கு மிகாமல் இடைக்கால ஓய்வூதியம் வழங்கப்படும்.

தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978, விதி 60 இல் **(i) (a)**; 69இல் **(i) (a)**.

3. பணியாளர் மீதான நடவடிக்கை முடிவுக்கு வந்து, அதன் மேல் இறுதி ஆணை வெளியிடப்படும் வரை, பணிக்கொடை வழங்கப்பட மாட்டாது. ஆனால்,

i) தொடரப்பட்ட நடவடிக்கை, எந்தப் பொருள் இழப்பீட்டிற்காகவும் இல்லாமல், நிர்வாகத் தவறுகட்காக எடுக்கப்பட்டு, அந்நடவடிக்கைக்குக் குந்தகமின்றிப் பணி ஓய்வில் விடுவிக்கப்பட்ட பணியாளர்க்குப் பணிக்கொடை நிறுத்தப்படாது; வழங்கப்படும்.

ii) தொடரப்பட்ட நடவடிக்கை, பொருள் இழப்பீடு காரணமாக இருந்து, அந்நடவடிக்கைக்கு நெருக்கடியின்றிப் பணி ஓய்வில் அப்பணியாளர் விடுவிக்கப் பட்டிருப்பின், கணிக்கப்படு உயர் இழப்பீட்டுத் தொகையோடு வட்டியையும் கழித்துக் கொண்டு பணிக் கொடையின் ஒரு பகுதியை வழங்கலாம்.

தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978, விதி 60 இல் **(i)** (c);
69 இல் **(i)** (6) **(b)**.

# இறப்பு மற்றும் ஓய்வுப் பணிக்கொடை
## (Death cum Retirement Gratuity)

**இறப்பு மற்றும் ஓய்வுப் பணிக்கொடை**

இஃது ஓர் ஒட்டுமொத்த பணமளிப்பாகும். பணியாளர் ஒருவர் ஐந்து ஆண்டுகள் பணி முடித்திருந்து, சேவைப் பணிக்கொடை (Service Gratuity) அல்லது ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர் எனின் அவர் ஓய்வு பெறுகையில், இறப்பு மற்றும் ஓய்வுப் பணிக்கொடை பெற உரியவர்.

தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978, விதி 45 (**a**).

**இறப்பு மற்றும் ஓய்வுப் பணிக்கொடை (DCRG) :-**

பணியாளரின் தகுதி பெறு பணிக்காலம் 5 ஆண்டுகளும் அதற்கும் மேலாக அமையின், அப்பணியாளர் இறப்பு மற்றும் ஓய்வுப் பணிக்கொடை பெறற்கு உரியர்.

பணியாளர் ஆற்றிய ஒவ்வொரு ஆறு மாதத் தகுதி பெறு பணிக்காலத்திற்கும் ஊதியத்தில் நான்கில் ஒரு பங்கென்று சீராகப் பணிக்கொடை கணக்கிடப்படுகிறது. இஃது இறுதியாகப் பணியாளர் பெற்ற ஊதியத்தின் $16\,^1/_2$ மடங்கை விட மிகையாகவோ, மிகு வரம்பான 10,00,000 உருபாவை மீறியோ இருக்கக் கூடாது.

ஒரு பணியாளர் 33 ஆண்டுகள் தகுதி பெறு பணிக்காலம் பணியாற்றி இருப்பின், அவர் பெறும் ஓய்வூதியப் பணிக்கொடையாவது :

= இறுதியாக வாங்கிய ஊதியம் x $^1/_4$ x 66 அரை ஆண்டுகள்

= இறுதியாக வாங்கிய ஊதியம் x $16\,^1/_2$

இங்கு ஊதியம் என்பது அடிப்படைச் சம்பளம், *படிநிலைச் சம்பளம்,* சிறப்புச் சம்பளம், தனிச் சம்பளம், அகவிலைப்படி ஆகிய சேர்ந்தனவாகும். *அடிப்படைச் சம்பளம், படிநிலைச் சம்பளம் ஆகிய இரண்டிற்கு மட்டுமே அகவிலைப்படி அளிக்கப்படும்.*



33 ஆண்டுகட்கும் மிகையாக ஒரு பணியாளர்க்குத் தகுதி பெறு பணிக்காலம் அமையினும், பணிக்காலம் 33 ஆண்டுகள் ஆகவே கணக்கில் கொண்டு பணிக்கொடை கணக்கிடப்படும். 33 ஆண்டுகட்குக் குறைவாக அமையின், அக்கால அளவிற்குத் தகவே பணிக்கொடை கணக்கிடப்படும்.

முழு ஓய்வூதியம் பெறுதற்கான தகுதி பெறு பணிக்காலம் எப்படி அமையினும், பணிக்கொடை கணக்கிட 33 ஆண்டுகளுக்கு மிகாத உண்மைப் பணிக்காலமே கணக்கில் கொள்ளப்படும்.

குறிப்பு:-

அ) முழு ஓய்வூதியம் பெறத் தகுதி பெறு பணிக்காலம் 30 ஆண்டுகள். அதே போல் முழுப் பணிக்கொடை பெறத் தகுதி பெறு பணிக்காலம் 33 ஆண்டுகள் ஆகும்.

பணிக்கொடைக் கணக்கீட்டு விதிமுறையில் எவ்வித மாற்றமும் இல்லாததால், பணியாளரின் தகுதி பெறு பணிக்கால அளவிற்குத் தகுந்தவாறே பணிக்கொடை கணக்கிடப்படும்.

கு.ஆ.எண்: 28575-**Q**2/97-6 நாள் 10-7-1998: வா.இ.தொ : 17/1998-7, பக் 15.

ஆ) பணிக்கொடை அளிப்புச் சட்டம், 1972 இன்படி, பணிக்கொடை கணக்கிட-ல் அரை மாத ஊதியத்தை முடிவு செய்யப், பணியாளர் ஓய்வுற்ற/இறந்த ஆங்கில மாதம் எதுவெனினும் பணியாளரின் மாத ஊதியத்தைப் 15/26 ஆல் பெருக்கப்பட வேண்டும். இச்சட்டத்தின் வரையறைக்குள் 1000 உருபா*விற்*கு மிகாது ஊதியம் பெறுபவர்களே அடங்குபவர். ஆனால், 1-7-1986 முதல் வாரிய ஓய்வூதியம் களப் பணியாளர்கட்கு விரிவு படுத்தப்பட்ட போது, பணிக்கொடை அளிப்புச் சட்டம், 1972 இ-ருந்து வாரியத்திற்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது. எனவே, அரை மாத ஊதியம் என்பது இறுதியாகப் பெற்ற ஊதியத்தின் 15/30 அளவாக இப்போது பணிக்கொடை கணக்கீட்டில் கொள்ளப்படுகிறது.

வா.ஆ.எண் : 166 நாள் 13-4-1982. வா.இ.தொ : 1/1983. பக் 163.
வா.ஆ.எண் : 5 நாள் 26-6-1986. வா.இ.தொ : 5/1986. பக் 551.
வா.ஆ.எண்:235 நாள் 1-12-2009. வா.இ.தொ 28/2009-12. பக் 10.

## இறப்புப் பணிக்கொடை (Death Gratuity) :-

பணியாளர் பணிக்காலத்தில் இறந்துபடின், பணிக்கால அளவு எவ்வளவு எனினும் அவர் குடும்பத்தினருக்குப் பணிக்கால அளவிற்கு ஏற்ப இறப்புப் பணிக்கொடை கீழ்க்கண்ட அட்டவணைப்படி வழங்கப்படும்.

| எண் | பணிக்காலம் | பணிக்கொடை அளவு |
|---|---|---|
| 1. | ஓராண்டிற்குக் குறைவாக. | இறுதியாகப் பெற்ற மாத ஊதியத்தின் இரு மடங்கு. |
| 2. | ஓராண்டும் அதற்கு மேலும், ஆனால் ஐந்தாண்டுக்குக் குறைவாக. | இறுதியாகப் பெற்ற மாத ஊதியத்தின் ஆறு மடங்கு. |
| 3. | ஐந்தாண்டும் அதற்கு மேலும், ஆனால் இருபதாண்டுக்குக் குறைவாக. | இறுதியாகப் பெற்ற மாத ஊதியத்தின் பன்னிரண்டு மடங்கு. |
| 4. | இருபதாண்டும் அதற்கு மேலும். | பணி முடித்த ஒவ்வொரு ஆறு மாதத் தகுதி பெறு பணிக்காலத்திற்கும் அரை மாத ஊதியம் என்று 33 மாத ஊதியத்திற்கு மிகாமல், |

ஊதியம் என்பது அடிப்படைச் சம்பளம், *படிநிலைச் சம்பளம்,* சிறப்புச் சம்பளம், தனிச் சம்பளம், அகவிலைப்படி ஆகிய சேர்ந்தனவாகும். *அடிப்படைச் சம்பளம், படிநிலைச் சம்பளம் ஆகிய இரண்டிற்கு மட்டுமே அகவிலைப்படி அளிக்கப்படும்.*

வா.ஆ.எண் : 28 நாள் 8-2-1988. வா.இ.தொ : 7/1988. பக் 94.
வா.ஆ.எண்:235 நாள் 1-12-2009. வா.இ.தொ 28/2009-12. பக் 10.



## பணிக்கொடை - மிகுவரம்பு :-

| எண் | நடைமுறை ஆண்டு | மிகுவரம்பு உருபா | வாரிய ஆணை/வாரிய இதழ் |
|---|---|---|---|
| 1. | 1-10-79 முதல் 30-5-82 வரை. | 30,000 | 263 / 29-4-80. |
| 2. | 31-5-82 முதல் 30-9-84 வரை. | 36,000 | 376 / 26-7-82. தொ 1/82-83, பக் 179. |
| 3. | 1-10-84 முதல் 13-12-87 வரை. | 50,000 | 392 / 20-11-85. தொ 4/85, பக் 1223. |
| 4. | 14-12-87 முதல் 31-3-95 வரை. | 1,00,000 | 158 / 8-6-88. தொ 7/88, பக் 348. |
| 5. | 1-4-95 முதல் 31-12-95 வரை. | 2,50,000 | 98 / 20-12-96. தொ 19/96, பக் 40. |
| 6. | 1-1-96 முதல் 31-12-05 வரை | 3,50,000 | 208 / 18-8-98. தொ 17/98, பக் 6. |
| 7. | 1-1-2006 முதல் | 10,00,000 | 235 / 1-12-09. தொ 28/09, பக் 10. |

## பணியாளரின் குடும்பம் :-

தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978, விதி 45 (5) இன்படி :

i) மனைவி / மனைவிகள் (சட்டப்படி மணமுறிவு பெற்றவர் உட்பட).

ii) கணவன் (சட்டப்படி மணமுறிவு பெற்றவர் உட்பட.)

iii) மகன்கள் (மாற்றாந் தாய் / தந்தை மகன்கள், தத்து மகன்கள், சட்டப்படி இல்லா மனைவி வழி மகன்கள் உட்பட).

iv) மணமாகா மகள்கள் (மாற்றாந்தாய்/தந்தை மகள்கள், தத்து மகள்கள், சட்டப்படி இல்லா மனைவி வழி மகள்கள் உட்பட).

v) விதவை மகள்கள்/*மணமுறிவு பெற்ற மகட்கள் உட்பட* (மாற்றாந்தாய்/தந்தை மகள்கள், தத்து மகள்கள், சட்டப்படி இல்லா மனைவி வழி மகள்கள் உட்பட).

vi) தந்தை (தத்துப் பெற்றோர் உட்பட).

vii) தாய் (மாற்றாந்தாய், தத்துப் பெற்றோர் உட்பட).

viii) உடன் பிறந்தோர் ஆண்கள் (18 வயதுக்கு குறைவானவர்/மாற்றாந்தாய்/தந்தை வழி உடன் பிறந்தோர் உட்பட).

ix) திருமணமாகா மற்றும் விதவை*யான* உடன் பிறந்த பெண்கள் (மாற்றாந்தாய்/தந்தை வழி உடன் பிறந்தோர் உட்பட).

x) திருமணமான மகள்கள்.

xi) முன் இறந்த மகனின் குழந்தைகள்.

**இறப்புப் பணிக்கொடை - அமர்த்துமை (Nomination) :-**

பணியாளர், தான் இறக்க நேரின் தனக்குரிய பணிக்கொடையைப் பெறற்கு உரியர் என்று ஒருவரையோ அன்றிப் பலரையோ அமர்த்துமை செய்யலாம். ஆனால், அப்படி அமர்த்துமை செய்யும்போது,

i) பணியாளர்க்குக் குடும்பம் இருக்குமேல், அமர்த்துமை பெறுபவர் குடும்ப உறுப்பினரே அன்றி வேற்றுவராக இருக்கக் கூடாது.

ii) பணியாளர்க்குக் குடும்பம் இல்லா நிலையில், அமர்த்துமை பெறுபவர் ஒருவரோ, பலரோ, குழுவினரோ இருக்கலாம்.

iii) பணியாளர் ஒருவர்க்கும் மேலாகப் பலரை அமர்த்துமை செய்தால், பணிக்கொடை முழுதையும் உட்கொள்ளுமாறு, ஒவ்வொருவருக்கும் எவ்வளவு பங்கு என்று குறிப்பிட்டு இருக்க வேண்டும்.

iv) குறிப்பிட்டு அமர்த்துமை பெற்றவர் பணியாளர்க்கு முன்னர் இறந்துபடினோ, அல்லது பணியாளர் இறப்பிற்குப் பின்னர், ஆனால் இறப்புப் பணிக்கொடையைப் பெறற்கு முன்னர் இறப்பினோ, பணிக்கொடையை அடுத்துப் பெறற்கு உரியவர் என்று பணியாளரால் குறிப்பிட்டு அமர்த்துமை பெற்றவர் பணிக்கொடையைப் பெறற்கு உரியர். ஆனால், பணியாளர் குடும்ப உறுப்பினர் ஒருவர்க்கு மேல் இருப்பின், அடுத்துப் பெறற்கு உரியர் என்று அமர்த்துமை பெறுவர் குடும்ப உறுப்பினர் அல்லாது பிறர் இருக்கக் கூடாது.

v) மேல் (ii) மற்றும் (iv) இன்படி குடும்பமில்லா நிலையில் பணியாளரால் பிறரைக் குறிப்பிட்டு அமர்த்துமை செய்தமை (Nomination), பின்னர் அப்பணியாளர் ஒரு குடும்பத்தைப் பெறுவாரேல் செல்லத் தகாததாக மாறும்.



vi) பணியாளர், தான் செய்த அமர்த்துமையை எந்தக் காலத்திலும் எழுத்து மூலம் அறிவிப்பு அளித்து நீக்கம் செய்யலாம். அப்படி நீக்கம் செய்து அறிவிக்கும் போது, உடன் புதிய அமர்த்துமையைச் செய்ய வேண்டும்.

தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978, விதி 48.

**இறப்புப் பணிக்கொடை பெறற்குரியர் :-**

இறந்த பணியாளரால் தமிழ் நாடு ஓய்வூதியச் சட்டம், 1978-விதி 48ன்படி பணிக்கொடை பெற உரியவரென்று பெயர் குறிப்பிடப்பட்டு அமர்த்தப்பட்டவர்க்கே (Nominees) விதி 46 (i) (a) இன்படி அளிக்கப்படும். மரபுரிமைச் சான்றிதழில் குறிக்கப் பெற்ற மற்றவர் பணிக்கொடை பெறத் தக்கவர் இல்லை என்பதால் அவர்க்குப் பணிக்கொடை அளிக்கப்படமாட்டாது.

தமிழ் நாடு ஓய்வூதியச் சட்டம், 1978-விதி 45 (5)இல் வரையறுக்கப்பட்டுள்ள குடும்ப உறுப்பினரே இறப்புப் பணிக்கொடை பெறத் தகுதியுடையவர். பணியாளர்க்குக் குடும்பம் இருக்கும் நிலையில், குடும்ப உறுப்பினர் அல்லாதவர்க்குப் பணிக்கொடை அளிக்கப்பட மாட்டாது.

மணமுறிவு பெற்ற, குழந்தைகள் இல்லாப் பணியாளர் திருமணமாகாதவராகக் கொள்ளப்பட மாட்டார். அவர் இறந்துபடில், சேர வேண்டிய இறப்புப் பணிக்கொடை தமிழ் நாடு ஓய்வூதியச் சட்டம், 1978-விதி 46 (1) (b) இன்படி சம பங்குகளாக விதி 45 (5) இல் வரையறுக்கப்பட்டுள்ள மற்ற குடும்ப உறுப்பினர்க்குப் பகிர்ந்தளிக்கப்படும்.

கு.ஆ.எண். 69163-**N**1/87-1 நாள் 18-12-1987. வா.இ.தொ : 6/1987, பக் 970.

1.அ) தமிழ் நாடு ஓய்வூதியச் சட்டம், 1978-விதி 48இன்படி உரியரென்று பணியாளரால் பெயர் குறிப்பிடப்பட்டு அமர்த்தப்பட்டவர்க்கு, விதி 45 (1) இன்படி அளிக்க வேண்டிய பணிக்கொடை அளிக்கப்படும். விதி 46 (1) (a).

ஆ) பணிக்கொடை பெறற்கு உரியரென்று குறிப்பிடப்பட்டு அமர்த்தப்படா நிலையில், இறப்புப் பணிக்கொடை, கீழ்க்கண்டவாறு அளிக்கப்படும். விதி 46 (1) (b).

i) விதி 45 (5) இல் பிரிவு (i) (ii) (iii) (iv) இல்

வரையறுக்கப்பட்டுள்ள பணியாளார் குடும்ப உறுப்பினரில் உயிரோடு இருப்பவர்க்குச் சமமாகப் பகிர்ந்தளிக்கப்படும்.

ii) மேற்குறித்த அப்படிப்பட்ட குடும்ப உறுப்பினர் உயிரோடு இல்லா நிலையில், விதி 45 (5) இல் பிரிவு (v), (vi), (vii), (viii), (ix), (x), (xi) இல் வரையறுக்கப்பட்டுள்ள குடும்ப உறுப்பினரில் உயிரோடு இருப்பவர்க்குச் சமமாகப் பகிர்ந்தளிக்கப்படும்.

2. ஓய்வு பெற்ற பணியாளர், விதி 45 (1) இன்படி பெற வேண்டிய பணிக்கொடையைப் பெறுதற்கு முன்னர் இறந்து படின், பணிக்கொடை அவரின் குடும்பத்தினர்க்கு மேலே 1-ஆ-வில் குறிப்பிடப்பட்டபடி அளிக்கப்படும். விதி 46 (2).

3. பணியின் போதோ, அன்றி ஓய்வு பெற்ற பிறகோ இறக்கும் பணியாளரின் பெண் குடும்ப உறுப்பினர் அல்லது உடன் பிறந்தோர், பணிக்கொடையில் பெறற்கு உரிமையுடைய பங்கு, பணியாளர் இறந்ததன் பின்னர் மற்றும் தனக்குரிய பணிக்கொடைப் பங்கைப் பெறுதற்கும் முன்னர் அப்பெண் உறுப்பினர் மணம்/மறுமணம் செய்து கொண்டாலும் அல்லது உடன் பிறந்தோர் 18 வயதை அடைந்திருப்பினும் எந்த விதத்திலும் பாதிப்படையாது. விதி 46 (3).

4. இறப்புப் பணிக்கொடை, விதி 45 இன்படி வயது முதிராக் குடும்ப உறுப்பினர்க்கு அளிப்பின், அஃது அவர்க்காகக் காப்பாளரிடம் அளிக்கப்படும். விதி 46 (4).

குறிப்பு :- (வயது முதிராக் குடும்ப உறுப்பினர் குறித்து)

(i) இறப்புப் பணிக்கொடை பெறற்குரியவர் என்று பணியாளரால் பெயர் குறிப்பிடப்பட்டு அமர்த்தப்பட்டமை செல்லாதது ஆகியபோது :

அ) இறப்புப் பணிக்கொடையின் ஒரு பங்கு வயது முதிரா மகனுக்கோ அல்லது வயது முதிரா மணமாகா மகட்கோ அளிக்கப்படவரின், அப்பங்கு உயிரோடிருக்கும் பெற்றோரிடத்து வழங்கப்படும். ஆனால், அவ்வுயிரோடிருக்கும் பெற்றோர் முகம்மதியப் பெண்ணாக இருக்கக் கூடாது. உயிரோடிருக்கும் பெற்றோர் இல்லாமலோ, அன்றி உயிரோடு இருக்கும் பெற்றோர் முகமதியப் பெண்ணாகவோ இருப்பின், காப்பாளர் சான்றிதழ் அளிப்பவர்க்கு அப்பங்கு அளிக்கப்படும்.



ஆ) விதவையான வயது முதிரா மகட்கு அளிக்க வேண்டிவரின், காப்பாளர் சான்றிதழ் அளிப்பது தேவையாகிறது.

இ) அரிதாக, மனைவியே வயது முதிராதவராக அமையின், அவர்க்கு உரிய இறப்புப் பணிக்கொடை காப்பாளர் சான்றிதழ் அளிப்பவர்க்கு அளிக்கப்படும்.

ஈ) விதி 45 (5) இல் பிரிவு (i), (ii), (iii), (iv) இல் வரையறுக்கப்பட்ட குடும்ப உறுப்பினர் யாரும் உயிரோடு இல்லாதபோது, இறப்புப் பணிக்கொடை வயது முதிரா உடன் பிறந்த ஆண் அல்லது வயது முதிரா மணமாகா உடன் பிறந்த பெண்ணுக்கு அளிக்க வேண்டி வரும். அப்படி அளிக்கும் போது அது தந்தைக்கு அளிக்கப்படும்; தந்தை இல்லாத நிலையில், முகமதியாராக இல்லையெனில் தாயிடம் அளிக்கப்படும். இங்கும், உயிரோடு பெற்றோர் இல்லாதோ, அன்றி இருப்பவரும் முகம்மதியப் பெண்ணாகவோ அமையின், காப்பாளர் சான்றிதழ் அளிப்பவர்க்குப் பணிக்கொடை அளிக்கப்படும். விதவையான வயது முதிரா உடன் பிறந்த பெண்ணுக்கு ஒரு பங்கு அளிக்க வேண்டிவரின், காப்பாளர் சான்றிதழ் அளிப்பது தேவையாகிறது.

(ii) இறப்புப் பணிக்கொடை பெறற்கு உரியர் என்று பணியாளரால் பெயர் குறிப்பிடப்பட்டு அமர்த்தப்பட்டமை முறையானதாய்ச் செல்லத் தக்கதான போது :

அ) ஒருவர் அல்லது அதற்கு மேற்பட்ட குடும்ப உறுப்பினர், பணிக்கொடை பெற அமர்த்தப்படின், மேலே 1-அ-வின்படி நடைமுறைப்படுத்தப்படும்.

ஆ) குடும்பம் இல்லாதபோது, பணிக்கொடை பெறற்கு அமர்த்தப்பட்டவர் சட்டப்படி இல்லா மனைவி வழிப் பிறந்த குழந்தை, மணமான மகள் அல்லது மணமான உடன் பிறந்த பெண் என்றாலும் அமர்த்துமை ஏற்றுக் கொள்ளத்தக்கதே; செல்லும். அந்த நிலையில் கீழ்க்கண்ட நடைமுறை கொள்ளப்படும்.

1. மணமான வயது முதிராப் பெண்ணுக்குப் பங்கு அளிக்க அமையின், அவருடைய கணவற்கு அளிக்கப்படும்.

2. வயது முதிரார்க்குச் சேர வேண்டிய இறப்புப் பணிக்கொடையின் பங்கில் முதல் 10,000 உரூபாவை, அவர் இயல் காப்பாளர்க்குக் காப்பாளுமைச் சான்றிதழ் அளிக்கா நிலையில் ஈட்டுறுதிப் பிணைமுறி (Indemnity bond) பெற்றுக் கொண்டு தேவையான பிணையத்தோடு அளிக்கலாம். 10,000 ***விற்***கும் மேற்பட்டுப் பணிக்கொடையின் பங்கு மிச்சம் இருப்பின் காப்பாளுமைச் சான்றிதழ் கொடுக்கும் போதே கொடுக்கப்படும்.

வா.ஆ.எண் : 170 நாள் 3-8-1990. வா.இ.தொ : 9/1990, பக் 503.
தமிழ் நாடு ஓய்வூதிய விதிகள் : 1978 விதி 46 (1) (2) (3) (4).

**பணியாளர் காணாமற் போயின் பணிக்கொடை அளிப்பு :-**

அ. பணியாளர் காணாமற் போன நாளி-ருந்து இரண்டாண்டுகள் கழித்துப் பணியாளர் முன்னர்ச் செய்துள்ள அமர்த்துமையைக் (Nomination) கருத்தில் கொண்டு, அவரின் குடும்பத்திற்கு இறப்பு மற்றும் பணிக்கொடை அளிக்கப்படும்.

வா.ஆ.எண் : 233 நாள் 2-9-1991. வா.இ.தொ : 10/1991. பக் 507.

ஆ. காணாமற் போன பணியாளர் குடும்பத்தினர்க்கு வழங்கப்படு இறப்புப் பணிக்கொடை, பணியாளர் ஓய்வுறின் பெறு பணிக்கொடையின் மிகையாக இருக்கக் கூடாது. இறப்புப் பணிக்கொடைக்கும் ஓய்வுப் பணிக்கொடைக்கும் இடையேயான பணிக்கொடை மிகுதொகை, பணியாளர் இறந்ததை ஐயமின்றி உறுதி செய்யப்பட்டமைக்குப் பின்னர் அல்லது காணாமற் போன நாளி-ருந்து ஏழு ஆண்டுகள் கழித்து அளிக்கப்படும்.

கு.ஆ.எண் 47202-N1/91-1 நாள் 5-3-1993: வா.இ.தொ : 12/1993, பக் 80.

**காலக் கணக்கீடு :-**

ஓர் ஆண்டின் பகுதியான மூன்று மாதங்களும் அதற்கும் மேலுமான காலம், ஓய்வூதியப் பலன்களை அளிப்பதற்கு, முடிக்கப்பட்ட அரையாண்டாக எடுத்துக் கொள்ளப்படும்.

வா.ஆ.எண் : 302 நாள் 7-11-1989. வா.இ.தொ : 8/1989, பக் 905.



**காலங் கடந்து அளிக்கப்படு பணிக்கொடைக்கான வட்டி :-**

மூன்று மாதங்கட்கு மேல் கடந்து பணிக்கொடை அளிப்பின் ஓய்வூதியர்க்குப் பணிக்கொடை மீது அளிக்கப்பட வேண்டிய வட்டி வீதமாவது :

1. மூன்று மாதங்கள் வரை - வட்டி கிடையாது.
2. மூன்று மாதங்கட்கு மேல், ஓராண்டு வரை - 7% ஆண்டுக்கு.
3. ஓராண்டிற்கு மேல் : - முதலாண்டு வரை 7% ; அதற்குப் பிறகு 10% ஆண்டுக்கு.

அ) மாதத்தின் பகுதிகள் விடப்பட்டு முழு மாதங்கட்கே வட்டி அளிக்கப்படும்.

ஆ) பணியாளர்க்கு எதிராக வாரிய அல்லது வழக்கு மன்ற நடவடிக்கைக் காரணமாகப் பணிக்கொடை அளிப்பதில் காலத் தாழ்வு அமையின், ஒழுங்கு நடவடிக்கை அதிகாரியால் பணியாளர் சாட்டப் பெற்ற குற்றச்சாட்டிற்கு உரியவரில்லை என்று குறிப்பிட்டு முடிவு செய்திருந்தால் ஒழிய வட்டி அளிக்கப்பட மாட்டாது.

இ) பணியாளர் காரணமாகப் பணிக்கொடை அளிப்பதில் காலத்தாழ்வு ஏற்படா நிலையில் வட்டி அளிக்கப்படும்.

வா.ஆ.எண். 11 நாள் 22-1-1990. வா.இ.தொ : 9/1990, பக் 35.

ஈ) பணிக்கொடை வழங்குவதில் காலத்தாழ்த்தம் ஏற்படின், கூட்டு வட்டி முறையில்12% என்று 4.4.1995 முதல் வட்டி அளிக்கப்படுகிறது.

வா.ஆ.எண். 81 நாள் 4-4-1995. வா.இ.தொ : 14/1995, பக் 150.

உ. ஒழுங்கு நடவடிக்கைக்கு உள்ளான பணியாளர்க்கு :-

1. சாட்டப் பெற்ற எல்லாக் குற்றச் சாட்டுகளினின்றும் விடுவிக்கப்பட்டு, ஒழுங்கு நடவடிக்கைகள் முடிவுக்கு வந்த பின்னர்ப் பணியாளர் ஓய்வு பெற்ற நாளி-ருந்து மூன்று மாதங்களுக்கு அப்பால் பணிக்கொடை தரப்பட்டிருப்பின், வட்டி அளிக்கப்படும்.

2. பணியாளர் இறந்து பட்டதால் ஒழுங்கு முறை நடவடிக்கை கைவிடப்பட்டு, இறப்புப் பணிக்கொடை வழங்குவதில் காலத்தாழ்த்தம் நிகழின், மூன்று மாத காலத்திற்கு மேலான காலத்திற்கு வட்டி அளிக்கப்படும்.

3. ஒழுங்கு நடவடிக்கையின் முடிவில் பணியாளர் முழுமையாகக் குற்றச் சாட்டுகளினின்று விடுவிக்கப்படாத போதும் பணிக்கொடை வழங்க, உரிய அதிகாரி முடிவு மேற்கொண்ட நிலையில், பணிக்கொடையளிப்பது காலந் தாழ்த்தப்படுமேல், பணிக்கொடை வழங்க உரிய அதிகாரியால் இடப்பட்ட ஆணை நாளி-ருந்து மூன்று மாதங்களுக்கு அப்பாற்பட்ட காலத் தாழ்வுக்கு வட்டி அளிக்கப்படும்.

ஊ. மூப்போய்வு நீங்கலான மற்றவகை ஓய்வுகளில் சென்றவர்க்கு :-

பணியாளர் ஓய்வு பெற்ற நாளி-ருந்து ஆறு மாதங்கட்கு அப்பாற்பட்ட காலத் தாழ்வுக்கு வட்டி அளிக்கப் படும்.

எ. பணியின்போது இறந்த பணியாளர் குடும்பத்தினர்க்கு :-

பணியாளர் இறந்த நாளி-ருந்து ஆறு மாதங்களுக்குள் இறப்புப் பணிக்கொடை வழங்கப்படாது காலத் தாழ்த்தம் ஏற்படின், ஆறு மாதங்களுக்கு அப்பாற்பட்ட காலத்திற்கு வட்டி அளிக்கப்படும். இறப்புப் பணிக்கொடைக்கு உரிமை கோருவோர் ஒருவர்க்கு மேல் இருந்து அதனால் காலத் தாழ்த்தம் உண்டாயின், அக்காலம் வட்டிக்குத் தகுதி உடையது அன்று.

ஏ. முன்னரே பணிக்கொடை அளிக்கப்பட்டு, ஊதிய மாற்றத்தால் பணிக்கொடை உயர்த்தப்பட்டபோது :-

பணிக்கொடை நிலுவைத் தொகை அளிப்பதில் காலத்தாழ்த்தம் ஏற்படின், ஊதியத் திருத்தத்திற்கான ஆணை வெளியீட்டு நாளி-ருந்து மூன்று மாதங்களுக்கு அப்பாற்பட்ட காலத்திற்கு வட்டி வழங்கப்படும்.

கு.ஆ.எண் : 35892-**N**1/91-2 நாள் 14.9.1993. வா.இ.தொ : 12/1993, பக் 483.



**பணிக்கொடை - சட்டக் காப்பு :-**

உரிமையியல் நடைமுறை விதித் தொகுப்பு (Code of Civil Procedure) 1908-பிரிவு 60, துணைப் பிரிவு (1) இன் காப்புக் கூறு (g) இன்படி பணிக்கொடையை நடுவர் மன்றங்களால் பற்றுகை (Attachment) செய்ய முடியாது.

தமிழ்நாடு ஓய்வூதியச் சட்டம், 1978, விதி 70, குறிப்பு 2.

சூ.அ.எண்: 79956-**N**1/94-1 நாள் 30-11-1994. வா.இ.தொ:13/1994, பக் 555.

**பணிக்கொடை - ஒப்புதலளிப்பும் கொடுப்பும் :-**

அ) 1. இறுதி ஊதியச் சான்றிதழ் (LPC) பெறா நிலையில், 1000 *உருபாவை* நிறுத்தி வைத்துக் கொண்டு பணிக்கொடையை விடுவிக்கலாம்.

2. நிலுவை இன்மைச் சான்றிதழ் (No due Certificate) மற்றும் இறுதி ஊதியச் சான்றிதழ் பெறா நிலையில் பணிக்கொடையில் 10% நிறுத்தி வைத்துக் கொண்டு மீதியை விடுவிக்கலாம்.

3. இறுதி ஊதியச் சான்றிதழ் அல்லது நிலுவை இன்மைச் சான்றிதழ் அல்லது இவ்விரண்டு சான்றிதழ்களுமே ஓய்வூதியம் அளிப்பு ஆணை அளித்த நாளி-ருந்து ஓராண்டிற்குள் பெறப்படாவிடில் பணிக்கொடையில் நிறுத்தி வைக்கப்பட்ட 1000 *உருபாவை* அல்லது பணிக்கொடையில் 10% இவற்றில் எது நிறுத்தி வைக்கப்பட்டதோ, அதை ஓய்வுதியம் ஒப்புதலளிப்பு அதிகாரி விடுவிக்கலாம்.

கு.ஆ.எண்:28833-**N**1/91-2 நாள்24-4-1992. வா.இ.தொ:11/1992, பக் 265.

ஆ) நிர்வாகக் காரணத்திற்காக எடுக்கப்பட்ட ஒழுங்குமுறை நடவடிக்கைக்குக் குந்தகம் இல்லாது பணியாளர் ஓய்வு பெற அனுமதியளித்தபோது, வாரியத்திற்குப் பண இழப்பு ஏதும் இல்லாததால், பணியாளர்க்கான இறப்புப் பணிக்கொடையை முழுமையாக விடுவித்து அளிக்கலாம்.

வா.ஆ.எண். 308 நாள் 6-10-1988. வா.இ.தொ : 7/1988, பக் 688.

இ) நிலுவையிலுள்ள ஒழுங்கு நடவடிக்கைக்குக் குந்தகம் ஏற்படாது என்ற கட்டுப்பாட்டின் மேல் ஓய்வு பெற அனுமதிக்கப்பட்ட பணியாளர்க்கு, வாரியத்திற்கு ஏற்படும் நிதியிழப்பைக் கணக்கிட்டு, அதன் மிகைத் தொகையை நிறுத்தம் செய்து கொண்டு பகுதிப் பணிக்கொடையை விடுவிக்கலாம்.

வா.ஆ.எண் : 194 நாள் 30-10-1992.

கு.ஆ.எண் : 19011/N1/92-1 நாள் 21-11-1992:

வா.இ.தொ : 11/1992, பக்கம் 646.

"பேசவேண்டும் என்ற ஓர் உந்தலினால் பேசலாகாது. எதையும் யோசிக்காமல் பேசக்கூடாது. பேச்சு எப்போதும் நம் கட்டுப் பாட்டில் இருக்க வேண்டும். தேவையான வற்றையும் பயனுள்ளவற்றையும் மட்டுமே பேசவேண்டும்.

வாக்குவாதம், சர்ச்சை, சூடான சொற்போர் ஆகியவற்றைத் தவிர்க்க வேண்டும். நாம் சொல்வதே சரி, மற்றவர் சொல்வது தவறு என்று வற்புறுத்தக் கூடாது. எடுத்துக் கொண்ட பொருளில், உண்மையை அறிய உதவும் விவரம் என்ற முறையில் நாம் சொல்ல வேண்டியதைச் சொல்லி அத்துடன் நிறுத்திக் கொள்ள வேண்டும்.

குரலும் பேசு முறையும் அமைதியாக, வற்புறுத்தல் ஏதுமின்றி இருக்க வேண்டும். பேச்சு சுமுகமாகப் போவதற்கு உதவியாக இருக்குக் கூடியவற்றை மட்டுமே பேசவேண்டும். எவரையும் புண்படுத்தும் அனைத்தையும் தவிர்க்க வேண்டும்."

"அரவிந்தரின் தத்துவப் பேருரைகள்"



## ஓய்வூதியத் தொகுப்பளிப்பு
## (Commutation)

பணியாளர் ஓய்வு பெறுங்கால், தான் பெறற்கு உரிய ஓய்வூதியத்தின் ஒரு பகுதியைக் குறிப்பிட்ட கால எல்லைக்குத் தானாக விரும்பி ஒப்புவித்து, அதற்கு ஈடாக ஒரு பெருந்தொகையைப் பெறுவது இதன் பயனாகும். பெறுகின்ற தொகை, பணியாளர் ஓய்வு பெறுநாள் வயதைப் பொருத்து வேறுபடும்; ஆனால், ஓய்வூதியப் பகுதி ஒப்பளிப்புக் காலம் எல்லாப் பணியாளர்களுக்கும் ஒன்றே. அஃதாவது, இப்போது 15 ஆண்டுகள். பதினைந்து ஆண்டுகள் நிறைவடைந்ததும் பணியாளர் முழு ஓய்வூதியம் பெறற்கு உரியர் ஆவார்.

**தொகுப்பளிப்புப் பெறத் தகுதியானவர் :**

1. மூப்போய்வில் செல்பவர்.
2. விருப்போய்வில் செல்பவர்.
3. இயலாமை ஓய்வில் செல்பவர்.
4. கட்டாய ஓய்வில் செல்பவர்.

**தொகுப்பளிப்புப் பெற ஓய்வூதியர் செய்ய வேண்டியவை :**

அ) ஓய்வூதிய விண்ணப்பத்துடன் தொகுப்பளிப்புக் கேட்டு விண்ணப்பிக்கலாம்.

ஆ) தொகுப்பளிப்புப் பெறல் கட்டாயம் இல்லை; ஓய்வு பெறு பணியாளர் விருப்பைப் பொருத்ததே.

இ) I. 1. தொகுப்பளிப்பு வேண்டி ஓய்வூதியர் எந்தக் காலத்தில் வேண்டுமென்றாலும் விண்ணப்பிக்கலாம். ஆனால், ஓய்வு பெற்ற ஓராண்டிற்குள் விண்ணப்பித்தால், தன்னை மருத்துவ ஆய்விற்கு உட்படுத்திக் கொள்ள வேண்டா.

வா.ஆ.எண் : 610 நாள் 22-4-1978.

2.ஓய்வு பெற்றும் வாரிய அல்லது வழக்கு மன்ற

நடவடிக்கை தொடரப் பெற்ற ஓய்வூதியர்க்கு வழக்கு முடிவின் இறுதி ஆணை வெளியிட்ட நாளி-ருந்து ஓராண்டிற்குள் விண்ணப்பின், அவர் தன்னை மருத்துவ ஆய்விற்கு உட்படுத்திக் கொள்ள வேண்டா.

வா.ஆ.எண் : 102 நாள் 11-3-1982.

3. ஓய்வூதியம் அளிப்பாணை வழங்க-ல் காலத் தாழ்த்தம் ஏற்படின், மருத்துவ ஆய்வின்றித் தொகுப்பளிப்பு வழங்குவதற்கான ஓராண்டு காலம் ஓய்வூதிய ஆணை வழங்கப்பட்ட நாளி-ருந்து கணக்கிடப்படும்.

வா.ஆ.எண் : 93 நாள் 21-3-1983. வா.இ.தொ : 1/1983. பக் 226.

II. தண்டனை காரணமாகக் கட்டாய ஓய்வில் சென்றவர் மட்டுமே, தொகுப்பளிப்புப் பெற ஓய்வூதிய அளிப்பு ஆணை வெளியிட்ட நாளி-ருந்து ஓராண்டிற்குள் விண்ணப்பிப்பினும் தன்னை மருத்துவ ஆய்வுக்கு உட்படுத்திக் கொள்ள வேண்டும். மற்ற கட்டாய ஓய்வில் சென்றவர் ஓராண்டிற்குள் விண்ணப்பித்தால், மருத்துவ ஆய்வு தேவையில்லை.

க.எண் 57792/N1/87-1 நாள் 8-1-1988: வா.இ.தொ : 7/1988, பக் 6.

III. ஓய்வூதிய உயர்வின் காரணமாக, ஓய்வூதியத் தொகுப்பளிப்பு மாற்றம் பெறின், ஓய்வூதியர் மருத்துவ ஆய்வு மேற்கொள்ள வேண்டா.

கு.ஆ.எண் 79409/N1/90-5 நாள் 12.3.1990:
வா.இ.தொ : 9/1990, பக்கம் 170.

ஈ) ஓய்வுறு பணியாளரின் விண்ணப்ப நாள் அல்லது அவர் ஓய்வுற்ற நாளின் அடுத்த நாள், இவற்றில் எந்நாள் பின்னரோ, அந்நாளில் ஓய்வூதியத் தொகுப்பளிப்பு முழுமை உறுகிறது.

தமிழ்நாடு பொது ஓய்வூதிய (தொகுப்பளிப்பு) விதிகள், 1944 - விதி 9 (2) (ii).

கு.ஆ.எண்: 115203/A19/A192/2000-2 நாள் 22-7-2003:
வா.இ.தொ : 22/2003-2, பக்கம் 10.

உ) ஓய்வூதியத் தொகுப்பளிப்புக் கோருபவர், தொகுப்பளிப்பு முழுமையுற்ற நிலையில் பெறற்கு முன்னர் இறந்துபடின்,



அத்தொகையைப் பெறற்கு உரியர் அவரின் வாரிசுகள் ஆவர்.

வா.ஆ.எண் : 360 நாள் 14-7-1982. வா.இ.தொ : 1/1983, பக் 177.
தமிழ்நாடு பொது ஓய்வூதிய (தொகுப்பளிப்பு) விதிகள், 1944, விதி 12.

ஊ) ஓய்வூதியத் தொகுப்பளிப்பு ஒப்புதல் அளிக்கப் பட்டதன் பின்னர்த் திரும்பப் பெறல் இயலாது. அஃதாவது, பயன்படுத்திக் கொண்ட தொகுப்பளிப்புத் தொகையைத் திருப்பித் தந்து, ஒப்படைத்த ஓய்வூதியப் பகுதியை மீட்டுப் பெறல் முடியாது.

தமிழ்நாடு பொது ஓய்வூதிய (தொகுப்பளிப்பு) விதிகள், 1944, விதி 11.

எ) ஒப்பளிப்பு அதிகாரியால் ஓய்வூதிய ஒப்பளிப்போடு ஓய்வூதியத் தொகுப்பளிப்புக்கான ஒப்புதலும் சேர்த்து அளிக்கப்பட வேண்டும். ஓய்வூதியத் தொகுப்பளிப்புக்கான ஒப்புதல், ஒப்பளிப்பு ஆணை நாளி-ருந்து செயற்பாட்டிற்கு வரும்.

கு.ஆ.எண்: 115203/A19/A192/2000-2 நாள் 22-7-2003:
வா.இ.தொ : 22/2003-2, பக்கம் 10.

**ஓய்வூதியத் தொகுப்பளிப்புப் பெறற்கு உரியவர் :**

அ) ஓய்வுற்ற பணியாளர்.

ஆ) ஓய்வூதியர் தொகுப்பளிப்புப் பெறற்கு முன்னர் இறந்துபடின் :

1. தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978, விதி 48 இன்படி ஓய்வூதியரால் அமர்த்துமை பெற்றவர் (Nominee).

2. அமர்த்துமை பெற்றவர் இல்லையென்றால் அல்லது அமர்த்துமை (Nomination) செல்லத்தக்கதாக இல்லாது இருந்தால் தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978 இன் விதி 46, துணைவிதி (1) (b) இல் காட்டியுள்ளபடி பணியாளர் குடும்பத்தினர்.

அஃதாவது :

i. 46 (1) (b) (i) விதி

விதி 45, துணை விதி (5) இல் குடும்ப உறுப்பினர் என்று

பிரிவுகள் (i), (ii), (iii) மற்றும் (iv) இல் குறிப்பிடப் பட்டுள்ளவரில் ஒருவரோ அன்றிப் பலரோ உயிரோடு இருப்பின், அவர் அனைவர்க்கும் சமமாகப் பிரித்து அளிக்கப்படும்.. அப்படி யாரும் மேலே (i) இல் குறிப்பிடப்பட்ட குடும்ப உறுப்பினர் உயிரோடு இல்லா நிலையில், விதி 45, துணை விதி (5) இல் பிரிவுகள் (v), (vi), (vii), (viii), (ix), (x) மற்றும் (xi) இல் காட்டியுள்ள உறுப்பினரில் ஒருவரோ அல்லது பலரோ உயிரோடு இருப்பின், அவர்க்குச் சமமான பங்குகளில் அளிக்கப்படும்.

**குறிப்பு:-**

விதி 45, துணை விதி (5) இன் படி குடும்பம் என்பது : பார்க்க - பக்கம் 48.

விதி 48, இன்படி அமர்த்துமை (Nomination) என்பது : பார்க்க - பக்கம் 93-94.

iii. மேலே காட்டியுள்ளபடி தொகுப்பளிப்பு வழங்க முடியா நிலையில், அப்பணம் வாரிசுகட்கு அளிக்கப்படும்.

வா.ஆ.எண் : 257 நாள் 19-9-1989.
வா.இ.தொ : 8/1989. பக்கம் 788.
அ.ஆ.எண் : 285 நாள் 7-4-1995.

**தொகுப்பளிப்புப் பெறத் தகுதியற்றவர் :**

1) வாரிய ஒழுங்கு நடவடிக்கையோ, வழக்கு மன்ற நடவடிக்கையோ பணியாளர் மீது நிலுவையில் இருக்கும்போது அவர்க்கு ஓய்வூதியத் தொகுப்பளிப்புப் பெறத் தகுதி இல்லை.

தமிழ்நாடு பொது ஓய்வூதிய (தொகுப்பளிப்பு) விதிகள், 1944, விதி 9, குறிப்பு 3.
வா.ஆ.எண் : 227 நாள் 8-12-1992.
வா.இ.தொ : 11/1992. பக்கம் 717.

2) இடைக்கால (Provisional) ஓய்வூதியத்திற்குத் தொகுப்பளிப்பு வழங்கல் இல்லை.

3) முடக்கி வைக்கப்பட்ட ஓய்வூதியத்தின் மேல் தொகுப்பளிப்பு வழங்கல் இல்லை.



**ஓய்வூதிய ஒப்பளிப்பு அளவு :**

| வ. எண் | ஓய்வூதியத்தில் ஒப்பளிப்பு அளவு | எந்நாளி-ருந்து | வாரிய ஆணை எண். |
|---|---|---|---|
| 1. | $33^1/_3$ % | 1-4-1998 முன் | - |
| 2. | 40 % | 1-4-1998 முதல் | 208 நாள் 18-8-1998. |
| 3. | $33^1/_3$ % | 1-12-2009 முதல் | 235 நாள் 1-12-2009. |

1-12-2009 முதல் ஓய்வூதிய ஒப்பளிப்பு அளவு 40% இ-ருந்து $33^1/_3$% ஆகவும் தொகுப்பளிப்பு மதிப்பு அட்டவணை, குறைப்பு வீதம் 4% ஐ அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளதை, 8% ஐ அடிப்படையாகக் கொண்டு மாற்றியும் வழங்கியுள்ளது.

*குறிப்பு:*

*ஆறாவது ஊதியக்குழு பரிந்துரைக்கு ஏற்ப, 1-1-2006 முதல் ஓய்வூதியம் திருத்தி அமைக்கப்பட்டு, அதற்கான பணப்பயன் 1-1-2007முதல் நடைமுறைக்கு வரும் என்று வா.ஆ.எண். 235 நாள் 1-12-2009 மூலம் நடைமுறைப்படுத்தப் பட்டது. அவ் ஆணையில் ஓய்வூதியத் தொகுப்பளிப்பு 1-12-2007 முதல் $33^1/_3$ஆக இருக்கும் என்றிருப்பினும் 1-12-2007 முதல் 30-11-2009 வரையான காலத்தில் ஓய்வு பெற்றோர்க்கு ஒப்பளிப்பு 40% ஆகக் கணக்கிட்டு தொகுப்பளிப்பு வழங்கப் பட்டிருந்தமையால் அவ்வோய்வூதியர் விருப்பம் தெரிவிப்பின் திருத்தியமைக்கபட்ட ஓய்வூதியத்தில் $33^1/_3$ என்று கணக்கிட்டு வரும் ஓய்வூதிய ஒப்பளிப்புத் தொகைக்கும் முன்னர்க் கணக்கிட்டு வழங்கப்பட்ட ஒப்பளிப்புத் தொகைக்கும் இடையுள்ள மிகுதி தொகைக்குப் புதிய அட்டவணைப்படி கணக்கிட்டுத் தொகுப்பளிப்புத் தொகை வழங்கப் படும்.*

*கு.ஆ.எண்: 89673/**A19**/**A**192/2009-1 நாள் 7-1-2010.*

**ஓய்வூதியத் தொகுப்பளிப்பு - கணக்கீடு :**

1) தொகுப்பளிப்பு = A x B x 12

A என்பது ஓய்வுக்குப் பின்னரான அடுத்த பிறந்த நாள் அகவைக்கான தொகுப்பளிப்பு மதிப்பு:

i) 1-12-2007 *வுக்கு முன்னர் ஓய்வுற்றவர்க்குப் பழைய* அட்டவணைப்படி.

ii) 1-12-2007 *முதல் 30-11-2009 வரை ஓய்வுற்றவர்க்கு விருப்பம் தெரிவிப்பின், ஊதிய மாற்றத்திற்குப் பின்னர்க் கணக்கிடப்படும் ஓய்வூதிய ஒப்பளிப்பிற்கும் முன்னர்ப் பெற்ற பழைய ஓய்வூதிய ஒப்பளிப்பிற்கும் இடையுள்ள வேறுபாட்டிற்குப் புதிய* அட்டவணைப்படி.

iii) 1-12-2009 *முதல் புதிய* அட்டவணைப்படி.

B என்பது தொகுப்பளிப்புக்காக ஒப்படைக்கும் ஓய்வூதியத்தின் பகுதி அளவு:

i) 1-12-2007 *உக்கும முன்னர் ஓய்வுற்றவர்க்கு, ஓய்வூதியத்தில் 40%*

ii) 1-12-2007 *முதல்* 30-11-2009 *வரையில் ஓய்வுற்றவர்க்கு விருப்பம் தெரிவிப்பின்,, ஊதிய மாற்றத்திற்குப் பின்னர்ப் பெறப்படும் ஓய்வூதியத்தில் ஒப்பளிப்பு* $33\frac{1}{3}$%.

iii) 1-12-2009 *முதல்* ஓய்வூதியத்தில் $33\frac{1}{3}$%..

2) ஒப்படைக்கும் ஓய்வூதியத்தின் பகுதி கணக்கிடுகையில் வரும் உரூபாயின் பகுதியைக் (Fraction) கணக்கில் கொள்ள வேண்டா. *கணக்கிடு ஓய்வூதிய ஒப்பளிப்புத் தொகை 3112.80 உரூபா என்று வரின், அதை 3112 உரூபாவாக எடுத்துக் கொள்ள வேண்டும்.*

3) கணக்கிடப்பட்ட தொகுப்பளிப்பு அடுத்த முழு உரூபாய்க்குக் கணக்கில் கொள்ள வேண்டும்.

காட்டு :-

கணக்கிடப்பட்ட தொகுப்பளிப்பு 12,207.01 உரூபா என்று வரின் அதை 12,208 உரூபா என்று முழுமையாக்கிக் கொள்ள வேண்டும்.

க.எண் **OAB/Pension/PR**11/740/85 நாள் 2-12-85:
இ.தொ : 4/1985, பக்கம் 1353.



**ஓய்வூதியம் - முழுமை பெறல் (Restoration of commuted portion of Pension) :-**

ஓய்வூதியத் தொகுப்பளிப்பு அளிக்கப்பட்ட நாளி-ருந்து 15 ஆண்டுகள் நிறைவின் முடிவில், தொகுப்பளிப்பிற்காகக் குறைக்கப்பட்ட ஓய்வூதியத்தின் பகுதி திரும்ப ஓய்வூதியத்தோடு சேர்த்து முழுமையாக அளிக்கப்படும்.

வா.ஆ.எண் : 260 நாள் 3-10-1991. இ.தொ : 10/1991. பக். 575.

ஓய்வூதியம் 15 ஆண்டுகட்குப் பிறகு முழுமையாகப் பெற விண்ணப்பம் ஏதும் அளிக்கத் தேவையில்லை.

க.எண்: 15883-N1/96-1 நாள் 27-3-1996: இ.தொ : 15/1996, பக் 29-30.

## தொகுப்பளிப்பு - பழைய அட்டவணை.

| அடுத்த பிறந்த நாளில் வயது | தொகுப்பளிப்பு மதிப்பிடு | அடுத்த பிறந்த நாளில் வயது | தொகுப்பளிப்பு மதிப்பிடு | அடுத்த பிறந்த நாளில் வயது | தொகுப்பளிப்பு மதிப்பிடு |
|---|---|---|---|---|---|
| 40 | 15.87 | 52 | 12.66 | 64 | 8.82 |
| 41 | 15.64 | 53 | 12.35 | 65 | 8.50 |
| 42 | 15.40 | 54 | 12.05 | 66 | 8.17 |
| 43 | 15.15 | 55 | 11.73 | 67 | 7.85 |
| 44 | 14.90 | 56 | 11.42 | 68 | 7.53 |
| 45 | 14.64 | 57 | 11.10 | 69 | 7.22 |
| 46 | 14.37 | 58 | 10.78 | 70 | 6.91 |
| 47 | 14.10 | 59 | 10.46 | 71 | 6.60 |
| 48 | 13.82 | 60 | 10.13 | 72 | 6.30 |
| 49 | 13.54 | 61 | 9.81 | 73 | 6.01 |
| 50 | 13.25 | 62 | 9.48 | 74 | 5.72 |
| 51 | 12.95 | 63 | 9.15 | 75 | 5.44 |

## தொகுப்பளிப்பு - புதிய அட்டவணை.

| அடுத்த பிறந்த நாளில் வயது | தொகுப்பளிப்பு மதிப்பிடு | அடுத்த பிறந்த நாளில் வயது | தொகுப்பளிப்பு | அடுத்த பிறந்த நாளில் வயது | தொகுப்பளிப்பு மதிப்பிடு |
|---|---|---|---|---|---|
| 20 | 9.18: | 41 | 9.075 | 62 | 8.093 |
| 21 | 9.187 | 42 | 9.059 | 63 | 7.982 |
| 22 | 9.186 | 43 | 9.040 | 64 | 7.862 |
| 23 | 9.185 | 44 | 9.019 | 65 | 7.731 |
| 24 | 9.184 | 45 | 8.996 | 66 | 7.591 |
| 25 | 9.183 | 46 | 8.971 | 67 | 7.431 |
| 26 | 9.182 | 47 | 8.943 | 68 | 7.262 |
| 27 | 9.180 | 48 | 8.913 | 69 | 7.083 |
| 28 | 9.178 | 49 | 8.881 | 70 | 6.897 |
| 29 | 9.176 | 50 | 8.846 | 71 | 6.703 |
| 30 | 9.173 | 51 | 8.808 | 72 | 6.502 |
| 31 | 9.169 | 52 | 8.768 | 73 | 6.296 |
| 32 | 9.164 | 53 | 8.724 | 74 | 6.085 |
| 33 | 9.159 | 54 | 8.678 | 75 | 5.872 |
| 34 | 9.152 | 55 | 8.627 | 76 | 5.657 |
| 35 | 9.145 | 56 | 8.572 | 77 | 5.443 |
| 36 | 9.136 | 57 | 8.512 | 78 | 5.229 |
| 37 | 9.126 | 58 | 8.446 | 79 | 5.018 |
| 38 | 9.116 | 59 | 8.371 | 80 | 4.812 |
| 39 | 9.103 | 60 | 8.287 | 81 | 4.611 |
| 40 | 9.090 | 61 | 8.194 | | |



## பொது வைப்பு நிதி

1-7-1986 இல் பணியாளர் அனைவர்க்கும் ஓய்வூதியத் திட்டம் நடைமுறையில் வருவதற்கு முன்னர்ப் பணியாளரில் ஓய்வூதியம் பெறற்குரிய பகுதியினரே பொது வைப்பு நிதித் திட்டத்தில் பங்கேற்று இருந்தனர். களப் பணியாளர் உள்ளிட்ட ஒரு சாரார் பங்களிப்பு வைப்பு நிதித் திட்டத்தில் உறுப்பினராய் இருந்து ஓய்வூதியத் திட்டத்திற்குள் வராதிருந்தனர். ஓய்வூதியத் திட்டம் பணியாளர் அனைவர்க்கும் நீட்டித்தபோது, பொதுவைப்பு நிதித் திட்டமும் எல்லார்க்கும் நீட்டிக்கப்பட்டது; பங்களிப்பு வைப்பு நிதித் திட்டம் கைவிடப்பட்டது.

**பொது வைப்பு நிதி - அமர்த்துமை :-**

பணியாளர் பொது வைப்பு நிதியில் உறுப்பினராகச் சேரும் போதே, ஒருவரையோ, பலரையோ தான் இறக்க நேரின் பொது வைப்பு நிதியைப் பெறற்கு உரியர் என்று அமர்த்துமை செய்தல் வேண்டும்.

i) பணியாளர் குடும்பம் உடையவரேல், குடும்ப உறுப்பினர்களையே அமர்த்தல் வேண்டும்.

ii) ஒருவர்க்கு மேலாகப் பலரை அமர்த்தினால், ஒவ்வொருவருக்குமான பங்கின் அளவு எவ்வளவு என்று முழுத்தொகைக்கும் குறிப்பிட்டு இருத்தல் வேண்டும்.

iii) பணியாளர் அமர்த்துமையை எப்போது வேண்டுமானாலும் நீக்கலாம்; ஆனால், அதனுடன் புதிதான அமர்த்துமையையும் அனுப்பல் வேண்டும்.

iv) குறிப்பிட்டு அமர்த்துமை செய்யப்பட்டவர், பணியாளர்க்கு முன்னர் இறந்துபடின், முன்னரே அமர்த்துமை பெற்ற அடுத்தவர்க்கு உரிமை மாறும்; ஆனால், அவர், மற்ற குடும்ப உறுப்பினர் உள்ள நிலையில் குடும்ப உறுப்பினராகவே இருக்க வேண்டும்.

v) குடும்பம் இல்லா நிலையில் செய்யப்பட்ட அமர்த்துமை, பின்னர்ப் பணியாளர் ஒரு குடும்பத்தைப் பெறுவாரேல் செல்லத் தகாததாக மாறும்.

தமிழ்நாடு மின்வாரியப் பொது வைப்பு நிதி ஒழுங்கு முறை விதிகள் - விதி 9.

**குடும்ப உறுப்பினர் தகுதியுடையவர் :**

1. பொது வைப்பு நிதி உறுப்பினர் ஆண் பணியாளராக இருப்பின் :

குடும்பம் என்பது :-

மனைவி/மனைவிகள், பெற்றோர், குழந்தைகள், வயது முதிராத் தம்பிகள், மணமாகாத உடன் பிறந்த பெண்கள், இறந்து பட்ட மகனின் விதவை மற்றும் குழந்தைகள், பெற்றோர் உயிரோடில்லா நிலையில் தந்தை வழிப் பாட்டன், பாட்டி.

சட்டப்படி தன்னிடமிருந்து மணமுறிவு பெற்றவர் அல்லது வாழ்க்கைப் படி பெறற்குரியர், அவர் சார்ந்த குமுகாய மரபு விதிப்படி மனைவியாக நீடிக்கவில்லை என்று பணியாளர் மெய்ப்பித்தால், அதற்குப் பிறகு மனைவி குடும்ப உறுப்பினர் ஆக மாட்டார். பணியாளர் பின்னொருகால் தன் மனைவி குடும்ப உறுப்பினர் என்று தெரிவிப்பின், அவர் குடும்ப உறுப்பினராகத் தொடர்வார்.

2. பொது வைப்பு நிதி உறுப்பினர் பெண் பணியாளராக இருப்பின் :

குடும்பம் என்பது :-

கணவர், பெற்றோர், குழந்தைகள், வயது முதிராத் தம்பிகள், மணமாகாத் தங்கைகள், இறந்துபட்ட மகனின் விதவை மற்றும் குழந்தைகள், பெற்றோர் உயிரோடில்லா நிலையில் தந்தை வழிப் பாட்டன், பாட்டி.

பணியாளர் எழுத்து மூலம் தன் கணவரைத் தன் குடும்ப உறுப்பினர் பட்டிய-ல் இருந்து விலக்கும் தன் விருப்பை



அறிவிப்பின், அதற்குப் பிறகு அவர் கணவர் இந்த விதிகளைச் சார்ந்த பொருள்கள் குறித்துக் குடும்ப உறுப்பினராக நீடிக்க மாட்டார். பின்னொருகால் அப்படி அளித்த அறிவிப்பை எழுத்து மூலம் நீக்கம் செய்தால், அவர் கணவர் மீண்டும் குடும்ப உறுப்பினர் ஆவார்.

குறிப்பு :

1. குழந்தைகள் என்பவர் சட்டப்படி பிறந்தவர்.

2. தத்தெடுக்கப்பட்ட குழந்தை, சட்டப்படி ஏற்பளிக்கப் பட்டிருப்பின் தன் குழந்தையாகக் கருதப்படும்.

3. ஒருவரால் சட்ட ஏற்புப்படி மற்றொருவர்க்குத் தத்தளிக்கப்பட்ட குழந்தை, முன்னவர் குழந்தையெனக் கொள்ளப்படாது.

தமிழ்நாடு மின்வாரியப் பொது வைப்பு நிதி ஒழுங்கு முறை விதிகள் - விதி 2, துணை விதி **(i)** இன் பிரிவு **(d)** இல் துணைப் பிரிவுகள் **(i) (ii)**.

வா.ஆ.எண் : 7 நாள் 10-8-1990: வா.இ.தொ : 9/1990, பக் 509.

**பொது வைப்பு நிதி - இறுதித் தீர்வு :-**

*மூப்போய்வில் செல்லும் பணியாளரின் சம்பளத்திலிருந்து இறுதி நான்கு மாதப் பணிக்காலத்திற்கு வைப்புநிதித் தவணைத்தொகை பிடித்தம் செய்ய வேண்டியதில்லை.*

பொது வைப்பு நிதிக் கணக்கின் இறுதித் தீர்வைப் பணம் ஓய்வூதியர்க்கு ஓய்வு பெறும் நாளன்றே அளிக்கப்பட வேண்டும்

கு.ஆ.எண்: 39575/407/கோ24/கோ242/2002 நாள் 26.9.2002

வா.இ.தொ : 21/2002-9. பக்கம் 5.

*பிறப்பும் இறப்பும் தவிர மற்ற அனைத்தும் மறு ஆய்வுக்கு உரியவையே! உலகத்தில் நிலையான ஒரே பொருள் - மாற்றமே!*

# பணியாளர் சிறப்பு வைப்பு நிதி மற்றும் பணிக்கொடை, 1984.

## (Employees' Special Provident Fund cum Gratuity Scheme, 1984)

பணியாளர்க்கு ஓய்வு பெறுங்கால் பெறு பலன்களாக இறப்பு மற்றும் ஓய்வுப் பணிக் கொடையும் பொது வைப்பு நிதியும் உள்ளன. இவற்றோடு, பணியாளர் ஓய்வு பெறுங்கால் மேலும் பயனடையும் வகையாகப் பணியாளர் சிறப்பு வைப்பு நிதி மற்றும் பணிக் கொடை, 1984 திட்டம் உருவாக்கப்பட்டது.

**திட்ட விளக்கம் :**

அ) இத்திட்டம் 1-4-1984 முதல் நடைமுறையில் உள்ளது.

ஆ) 1-4-1984 முதல் அல்லது அதற்குப் பிறகு அமர்த்தம் பெற்ற மாத ஊதியம் பெறும், ஓய்வூதியத் திட்டத்திற்கு உட்பட்ட அனைத்துப் பணியாளர்க்கும் 1-4-1984 முதல் அல்லது அவர் முறையாகப் பணியமர்த்தம் செய்யப்பட்ட நாளி-ருந்து இத்திட்டம் பொருந்தும்.

இ) ஓய்வூதிய திட்டத்திற்கு உட்பட்ட, 1-4-1984க்குப் பிறகு ஓய்வு பெறும் பணியாளரும் இத்திட்டத்தின் கீழ்ப் பயனடைவர்.

ஈ) 1-4-1984 இல் மாத ஊதியம் பெறும் ஓய்வூதிய திட்டத்திற்கு உட்பட்ட அனைத்துப் பணியாளரும் விருப்ப அடிப்படையில் இத்திட்டத்தில் இசைவு தெரிவித்துத் தங்களை இணைத்துக் கொள்ளலாம். விருப்பம் இல்லாதவர் தங்கள் விருப்பம் இன்மையை எழுத்தில் தெரிவிக்க வேண்டும்; தெரிவிக்காவிடில்,திட்டத்தில் வருவதற்கு விருப்பம் உள்ளதாகக் கொண்டு, திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

உ) சீரான மாதத் தவணைத் தொகையாக 20 உரூபா சம்பளப் பட்டிய-ல் இருந்து பணியாளர் மூப்போய்வு பெறும் வரையிலோ, தவணைத் தொகை கூடுதல் வட்டியுடன் சேர்ந்து 5000 உரூபாவா.கும் வரையிலோ, இவற்றில் எது முன்னரோ, அது



வரை பிடித்தம் செய்யப்படும்.

ஊ) தவணைப் பிடித்தம் ஒரே சீராக இருப்பதால், ஒவ்வொரு பணியாளர்க்கும் என்று தனி கணக்கு வைக்கப் படமாட்டாது.

எ) வட்டியுடன் சேர்த்து 5000 உரூபாவாகும் வரை தவணைத் தொகைக்கு 8% கூடுதல் வட்டி அளிக்கப்படும். அதற்குப் பிறகு, இத்தொகைக்குப் பொது வைப்பு நிதிக்கு நேரான வட்டி பொருந்தும்.

ஏ) குறுங்கால முன்பணமோ, திரும்பப் பெறலோ இதி-ருந்து கிடைக்காது.

ஐ) பணியாளர் ஒருவர் மூப்போய்வில் செல்லும்போது, அவரிடமிருந்து பிடித்தம் செய்யப்பட்ட தவணைத் தொகையோடு அதற்கான வட்டியும் சேர்த்து அளிக்கப்படும். அத்துடன் வாரியப் பங்களிப்பும் உடன் அளிக்கப் படும்.

5000 உரூபாவாக **இருந்த** வாரியப் பங்களிப்பு, 10,000 உரூபாவாக 15-9-2000 முதல் உயர்த்தப்பட்டுள்ளது.)

ஒ) பணியில் இறப்பினும் மூப்போய்வு நீங்கலாக மற்ற எவ்வகையில் ஓய்வுறினும் அதுவரை பணியாளரால் செலுத்தப் பட்ட தவணைத் தொகையும் அதற்கான வட்டியும் மட்டுமே அவர்க்கு அளிக்கப்படும்.

**வாரியப் பங்களிப்பு - நீட்டிப்பு :**

அ) தமிழ்நாடு ஓய்வூதியச் சட்டம், 1978; விதி 9 இன் கீழ் வாரிய நடவடிக்கைக்குக் குந்தகம் இல்லா வகையில் ஓய்வு பெற ஏற்பளிக்கப்பட்ட பணியாளருக்கு இத்திட்டத்தின் கீழான வாரியப் பங்களிப்பான 5000 உரூபா உள்ளிட்ட மொத்த தொகை அளிக்கப்படும்.

வா.ஆ.எண் 83 நாள் 30-12-1988: வா.இ.தொ : 7/1988, பக் 918.

ஆ) 30-8-1993 முதற் கொண்டு மூப்போய்வில் அல்லது விருப்போய்வில் செல்லும் பணியாளர்க்கும் 30-4-1994 முதற்

கொண்டு இயலாமை ஓய்வில் செல்லும் பணியாளர்க்கும் அவரிடமிருந்து பிடித்தம் செய்த தவணைத் தொகையும் அதற்கான வட்டியும் சேர்த்து அளிக்கப்படும். அத்துடன், வாரியப் பங்களிப்பான 5000 உரூபாவும் அளிக்கப்படும்.

பணியில் இறந்து பட்டார் உட்பட மற்ற வகையினர்க்கு, அவர் அதுவரை செலுத்திய தவணைத் தொகை *மட்டுமே*, அதற்குண்டான வட்டியுடன் அளிக்கப்படும். இறந்து பட்ட பணியாளர் குறிப்பிட்டுப் பெயர் குறித்தவர்க்கு அல்லது வாரிசுக்கு அத்தொகை அளிக்கப்படும்.

வா.ஆ.எண் 55 நாள் 28.7.1994: வா.இ.தொ : 13/1994, பக் 362.

**வாரியப் பங்களிப்பு - உயர்வு :**

பணியாளர் சிறப்பு வைப்பு நிதி மற்றும் பணிக் கொடை - 1984 க்கான வாரியப் பங்களிப்பான 5000 உரூபா என்பது 10000 உரூபாவாக உயர்த்தி மூப்போய்வு, விருப்போய்வு மற்றும் இயலாமை ஓய்வில் செல்லும் பணியாளர்க்கு 15-9-2000 முதல் அளிக்கப்படுகிறது.

வா.ஆ.எண் : 40 நாள் 6-7-2001: வா.இ.தொ : 20/2001-7, பக் 5, 6.

**வட்டிக் கணக்கீடு :**

இத்திட்டத்தில் 1-4-1984 முதல் மாதத் தவணைத் தொகை 20 உரூபா வீதம் 148 தவணைகள் பிடித்தம் செய்து முடிக்கும் நாளான 31-7-1996 வரை 8% கூட்டு வட்டியுடன் சேர்த்து மொத்தம் 5021 உரூபா ஆகிறது. இத்தொகைக்கு 1-8-1996 முதல் பொது வைப்பு நிதிக்கு நேரான கூட்டு வட்டி அளிக்கப்படுகிறது.

1-8-1996 முதலான வட்டி வீதங்கள் :

| | | |
|---|---|---|
| 1-8-1996 முதல் 31-7-2000 வரை | - | 12% |
| 1-8-2000 முதல் 31-7-2001 வரை | - | 11% |
| 1-8-2001 முதல் 31-7-2002 வரை | - | 9.5% |
| 1-8-2002 முதல் இப்போது நடப்பில் | - | 9% |



**கணக்கீடு - காட்டு :-**

31-7-2003 இல் வயது முதிர்வில் பணியாளர் பணி ஓய்வு பெறுகிறார்.

மாதம் 20 உரூபா வீதம் 148 தவணைகளில்
செலுத்திய சந்தா = 2960
31-7-96 வரை 8% வட்டி = 2061
கூடுதல் = 5021

1-8-96 இ-ருந்து வட்டி கணக்கிட அசல் = 5021

1-8-96 இ-ருந்து 31-7-97 வரை 5021 ***உரூபாவிற்கு*** வட்டி
= 5021 x 12/100 = 602.52

அடுத்த முழு உரூபாவிற்குத் திருத்தம் = 603
31-7-97 முடிவில் அசல் = 5021 + 603 = 5624

1-8-97 இ-ருந்து 31-7-98 வரை 5624 ***உரூபாவிற்கு*** வட்டி
= 5624 x 12/100 = 674.88

அடுத்த முழு உரூபாவிற்கு திருத்தம் = 675
31-7-98 முடிவில் அசல் = 5624 + 675 = 6299

1-8-98 இ-ருந்து 31-7-99 வரை 6299 ***உரூபாவிற்கு*** வட்டி
= 6299 x 12/100 = 755.88

அடுத்த முழு உரூபாவிற்குத் திருத்தம் = 756
31-7-99 முடிவில் அசல் = 6299 + 756 = 7055

1-8-99 இ-ருந்து 31-7-2000 வரை 7055 ***உரூபாவிற்கு*** வட்டி
= 7055 x 12/100 = 846.88

அடுத்த முழு உரூபாவிற்குத் திருத்தம் = 847

31-7-2000 முடிவில் அசல் = 7055 + 847 = 7902

1-8-2000 இ-ருந்து 31-7-2001 வரை 7902 ***உரூபாவிற்கு*** வட்டி
= 7902 x 11/100 = 869.22

| | | |
|---|---|---|
| முழு உருபாவிற்குத் திருத்தம் | = | 869 |
| 31-7-2001 முடிவில் அசல் = 7902 + 869 | = | 8771 |

1-8-2001 இ-ருந்து 31-7-2002 வரை 8771 *உருபாவிற்கு* வட்டி

= 8771 x 9.5/100 = 833.25

| | | |
|---|---|---|
| முழு உருபாவிற்குத் திருத்தம் | = | 833 |
| 31-7-2002 முடிவில் அசல் = 8771 + 833 | = | 9604 |

1-8-2002 இ-ருந்து 31-7-2003 வரை 9604 *உருபாவிற்கு* வட்டி

= 9604 x 9/100 = 864.36

| | | |
|---|---|---|
| முழு உருபாவிற்குத் திருத்தம் | = | 864 |
| 31-7-2003 முடிவில் மொத்த தொகை = 9604 + 864 | = | 10468 |
| அளித்த மொத்த வட்டி (10468-2960) | = | 7508 |

ஓய்வு பெறும் பணியாளர் பெறும் மொத்த தொகை:

| | |
|---|---|
| அசல் | = 2960 உருபா |
| வட்டி | = 7508 உருபா |
| வாரிய பங்களிப்பு | = 10000 உருபா |
| கூடுதல் | = 20468 உருபா . |

வா.ஆ.எண் : 57 நாள் 25-10-2002: வா.இ.தொ : 21/2002-10, பக் 18-20.

"பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு." (குறள்)

பேனாவில் மை நிறைந்திருக்கும் போது எழுதினால் குறைவாக வருவதும், மை குறைந்திருக்கும் போது எழுதினால் அதிகமாகக் கொட்டுவதும் அதன் இயல்பு.அதுபோல, நிறைந்த செல்வமுளதாயவழி யாவர் மாட்டும் பணிவும், செல்வம் சுருங்கிய வழி பணியாமையும் வேண்டும் என்பது கருத்து.

நிறை குடம் ததும்பாது என்பதும் அதுவே.



# பணியாளர் சிறப்பு வைப்பு நிதி மற்றும் பணிக்கொடை, 2000.

## (Employees' Special Provident Fund cum Gratuity Scheme, 2000)

**திட்ட விளக்கம் :**

அ) இத்திட்டம் 1-6-2002 இ-ருந்து நடைமுறைக்கு வருகிறது. ஓய்வூதியத் திட்டத்திற்கு உட்பட்ட, எல்லா முறைப் படுத்தப்பட்ட வாரியப் பணியாளரும் இத்திட்டத்தில் இணையத் தகுதி பெற்றவர்.

ஆ) புதிதாகப் பணியில் சேர்பவர் இத்திட்டத்தில் சேர்வது கட்டாயம். இடைக்காலப் பணி (Under Emergency Provisions) அமைப்பில் பணி அமர்த்துமை பெற்றவர் இத்திட்டத்திற்கு உரியவர் இல்லை.

இ) நடைமுறையில் உள்ள சிறப்பு வைப்பு நிதி மற்றும் பணிக் கொடைத் திட்டம், 1984 இல் 148 மாதங்கள் தவணைத் தொகை முன்னரே கட்டியுள்ள மற்றும் கட்டி வருகிற பணியிலுள்ள பணியாளர் இப்புது திட்டத்தில் சேர்வது அவரவர் விருப்பினைப் பொருத்தது.

ஈ) இத்திட்டத்தில் சேர விரும்பும் பணியிலுள்ளவரின் மாதத் தவணைத் தொகையாக 50 உருபா மாத மாதம் ஜூன், 2002 இ-ருந்து தொடர்ந்து பிடித்தம் செய்யப் படும். இப்பிடித்தம் பணியாளர் மூப்போய்வில் செல்லும் நாளுக்கு ஒரு மாதம் முன்னர் வரை பிடித்தம் செய்யப்படும்.

உ) 1-6-2002 உம் அதற்குப் பிறகும் புதிதாகப் பணி அமர்த்தம் பெறுபவரிடம் தவணைத்தொகையாக மாதம் 70 உருபா அவரின் பணி முறைப்படுத்தப்பட்ட நாளைத் தொடர்ந்து வரு மாதத்தினின்று பிடித்தம் தொடங்கப் பெறும்; அவர் பணி

மூப்போய்வில் செல்லும் நாட்கு ஒரு மாதம் முன்னர் வரை பிடித்தம் தொடரும்.

ஊ) தவணைத் தொகைப் பிடித்தம் சம்பளப் பட்டிய-ல் மேற்கொள்ளப்படும்.

எ) இப்பிடித்தத் தொகைக்குப் பொது வைப்பு நிதிக்கு நேரான வட்டி வீதத்தில் வட்டி அளிக்கப்படும். வட்டி வீதத்தை வாரியம் அறிவிப்பின்றி மாற்றி அமைக்கலாம்.

ஏ) இத்திட்டத்தினின்று குறுங்கால முன்பணமோ, பெறலோ கிடைக்காது.

**திட்ட முடிவில் அளிப்பு :**

அ) 1-6-2002 க்குப் பிறகு புதிதாகப் பணியில் சேர்ந்தவர்க்கு :-

1. மூப்போய்வு அல்லது விருப்போய்வு அல்லது இயலாமை ஓய்வு பெறுகின்ற பணியாளர்க்குத் திருப்பளிப்பு அட்டவணை (2) இன்படி அவர் கட்டிய தொகையோடு வாரியத்தின் பங்களிப்பான 10,000 உரூபாவும் சேர்த்து அளிக்கப்படும்.

2. பணியில் இறந்து பட்டமை உட்பட்ட மற்ற வகையினர்க்கு, அவர் அந்நாள் வரை கட்டிய தவணைத் தொகை, அதற்கான வட்டி ஆகியவை மட்டுமே அளிக்கப்படும்.

ஆ) நடைமுறையில் உள்ள சிறப்பு வைப்பு நிதி மற்றும் பணிக் கொடைத் திட்டம், 1984 இல் 148 மாதங்கட்குத் தவணைத் தொகை முன்னரே கட்டியுள்ள - கட்டி வருகிற பணியாளர்க்கு :-

1. பணியில் இறந்து பட்டமை உட்பட, மூப்போய்வு போன்ற இன்ன பிற வழி ஓய்வு பெற்றவர்க்கு, இத்திட்டத்தில் பிடித்தம் செய்யப்பட்ட தவணைத் தொகை, அதற்குண்டான வட்டி ஆகியவை திரும்ப அளித்ததற்கான திருப்பளிப்பு அட்டவணை ( 1 ) இன்படி அளிக்கப்படும்.

2. வாரியத்தின் பங்களிப்புக்கு இவர் தகுதி பெறமாட்டார்.

**பணியில் இறப்பு - பணிக்கொடைக்கு உரியவர் :-**



பணியாளர் பணியில் இறந்துபடின், இத்திட்டத்தின் இறுதிப் பயனைப் பெறற்குரியர் என்று தமிழ்நாடு ஓய்வூதிய விதிகளின்படி, பணியாளர் தன் குடும்ப உறுப்பினரைப் பெயர் குறிப்பிட்டு அமர்த்த வேண்டும்; அப்படி அமர்த்தப் பட்டவரே பணிக்கொடை பெறற்குரியர்.

வா.ஆ.எண் 37 நாள் 22-5-2002: வா.இ.தொ : 21/2002-5, பக் 13.

குறிப்பு :-

திருப்பளிப்பு அட்டவணைகள் 1, 2, இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட 1-6-2002 இல் பொது வைப்பு நிதிக்கான வட்டி வீதம் 9.5% இருந்ததைக் கருத்தில் கொண்டு கணக்கிடப் பட்டுள்ளன. ஆனால், பொது வைப்பு நிதிக்கான வட்டி வீதம் 1-8-2002 இல் 9% என்று உள்ளதால், அதற்கேற்ப 1-8-2002 முதல் அட்டவணைகள் மாற்றமுறும். இம்மாற்றம் வட்டி வீதம் மாறும்போதெல்லாம் ஏற்படும்.

**மது ஒரு கொடு நஞ்சு.**

*மதுவை உட்கொள்வதால் எவ்வித இழப்பையும் கொஞ்சமும் சரிகட்டிக் கொள்ள முடியாது. மது உணவே அன்று. உடலுக்கு உரனளிக்கும் சத்துப் பொருளும் அன்று. உண்ட உணவைச் செரிக்க வைக்கும் இயல்பும் அதற்கு இல்லை. அஃது ஒரு கொடு நஞ்சு. உயிரை மெல்ல மெல்ல உறிஞ்சிக் கொன்றுவிடுந் தன்மை வாய்ந்தது. மது ஏமாற்றுக்காரன் போன்றது; கள்வன் போன்றது; உறிஞ்சுவதில் வட்டிக் கடைக்காரன் போன்றது; பொய்யன் போன்றது; நேர்மைக்கு அடங்காத தறுதலை போன்றது; கொலைஞன் போன்றது. அதனால் விளையும் தீமைகள் வெறுஞ் சொற்களால் சொல்லலே முடியாது. ஏனென்றால் அதன் கொடுமைகளின் எல்லையைப் பற்றிக் கூறுவதற்குச் சொற்களே கிடையாது.*

-இராபர்ட்டு சேம்பர்சு.

அட்டவணை - 1

## பணியாளர் சிறப்பு வைப்புநிதி மற்றும் பணிக்கொடை - 2000.

மாதப் பிடித்தம் : உரூபா. 50/- வட்டி வீதம்: 9.5%

வட்டிக் கணக்கீடு : மாத அடிப்படையில்.

| மாதம் | ஆண்டு | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 0 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1 | 50 | 682 | 1376 | 2138 | 2977 | 3900 | 4914 | 6028 |
| 2 | 100 | 737 | 1437 | 2205 | 3051 | 3981 | 5003 | 6126 |
| 3 | 151 | 793 | 1498 | 2272 | 3125 | 4063 | 5093 | 6224 |
| 4 | 202 | 849 | 1560 | 2340 | 3200 | 4145 | 5183 | 6323 |
| 5 | 254 | 906 | 1622 | 2409 | 3275 | 4228 | 5274 | 6423 |
| 6 | 306 | 963 | 1685 | 2478 | 3351 | 4311 | 5366 | 6524 |
| 7 | 358 | 1021 | 1748 | 2548 | 3428 | 4395 | 5458 | 6626 |
| 8 | 411 | 1079 | 1812 | 2618 | 3505 | 4480 | 5551 | 6728 |
| 9 | 464 | 1138 | 1876 | 2689 | 3583 | 4565 | 5645 | 6831 |
| 10 | 518 | 1197 | 1941 | 2750 | 3661 | 4651 | 5740 | 6935 |
| 11 | 572 | 1256 | 2006 | 2832 | 3740 | 4738 | 5835 | 7040 |
| 12 | 627 | 1316 | 2072 | 2904 | 3820 | 4826 | 5931 | 7146 |
| | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 1 | 7253 | 8599 | 10081 | 11708 | 13497 | 15463 | 17625 | 20002 |
| 2 | 7360 | 8717 | 10211 | 11851 | 13654 | 15635 | 17815 | 20210 |
| 3 | 7468 | 8836 | 10342 | 11995 | 13812 | 15809 | 18006 | 20420 |
| 4 | 7577 | 8956 | 10474 | 12140 | 13971 | 15984 | 18199 | 20632 |
| 5 | 7687 | 9077 | 10607 | 12286 | 14132 | 16161 | 18393 | 20845 |
| 6 | 7798 | 9199 | 10741 | 12433 | 14294 | 16339 | 18589 | 21060 |
| 7 | 7910 | 9322 | 10876 | 12581 | 14457 | 16518 | 18786 | 21277 |
| 8 | 8023 | 9446 | 11012 | 12731 | 14621 | 16699 | 18985 | 21495 |
| 9 | 8137 | 9571 | 11149 | 12882 | 14787 | 16881 | 19185 | 21715 |
| 10 | 8251 | 9697 | 11287 | 13034 | 14954 | 17065 | 19387 | 21937 |
| 11 | 8366 | 9824 | 11426 | 13187 | 15122 | 17250 | 19590 | 22161 |
| 12 | 8482 | 9952 | 11566 | 13341 | 15292 | 17437 | 19795 | 22396 |



| | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 22613 | 25485 | 28642 | 32111 | 35924 | 40116 | 44723 | 49788 |
| 2 | 22842 | 25737 | 28919 | 32415 | 36258 | 40484 | 45127 | 50232 |
| 3 | 23073 | 25991 | 29198 | 32722 | 36595 | 40854 | 45534 | 50680 |
| 4 | 23306 | 26247 | 29479 | 33031 | 36935 | 41227 | 45944 | 51131 |
| 5 | 23541 | 26505 | 29762 | 33342 | 37277 | 41603 | 46358 | 51586 |
| 6 | 23777 | 26765 | 30048 | 33656 | 37622 | 41982 | 46775 | 52044 |
| 7 | 24015 | 27027 | 30336 | 33972 | 37970 | 42364 | 47195 | 52506 |
| 8 | 24255 | 27291 | 30626 | 34291 | 38321 | 42749 | 47619 | 52972 |
| 9 | 24497 | 27557 | 30918 | 34612 | 39674 | 43137 | 48046 | 53441 |
| 10 | 24741 | 27825 | 31213 | 34936 | 39030 | 43529 | 48476 | 53914 |
| 11 | 24987 | 28095 | 31510 | 35263 | 39389 | 43924 | 48910 | 34391 |
| 12 | 25235 | 28367 | 31809 | 35592 | 39751 | 44322 | 49347 | 54872 |

| | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 55356 | 61476 | 68205 | 75600 | 83731 | 92667 | 102492 |
| 2 | 55844 | 62013 | 68795 | 76249 | 84444 | 93451 | 103353 |
| 3 | 56336 | 62554 | 69390 | 76903 | 85163 | 94241 | 104221 |
| 4 | 56832 | 63099 | 69989 | 77562 | 85887 | 95037 | 105096 |
| 5 | 57332 | 63649 | 70593 | 78226 | 86617 | 95839 | 105978 |
| 6 | 57836 | 64203 | 71202 | 78895 | 87353 | 96648 | 106867 |
| 7 | 58344 | 64761 | 71816 | 79570 | 88095 | 97463 | 107763 |
| 8 | 58856 | 65324 | 72435 | 80250 | 88842 | 98285 | 108666 |
| 9 | 59372 | 65891 | 73058 | 80935 | 89595 | 99113 | 109576 |
| 10 | 59892 | 66463 | 73686 | 81626 | 90354 | 99948 | 110493 |
| 11 | 60416 | 67039 | 74319 | 82322 | 91119 | 100789 | 111418 |
| 12 | 60944 | 67620 | 74957 | 83024 | 91890 | 101637 | 112350 |

**க.எண்** : 99328/**A**19/**A**192/2000-8 நாள் 22-7-2002:
வா.இ.தொ : 21/2002-7, பக்கம் 45.

அட்டவணை - 2

## பணியாளர் சிறப்பு வைப்புநிதி மற்றும் பணிக்கொடை - 2000.

மாதப் பிடித்தம் : உரூபா. 70/- வட்டி வீதம்: 9.5%

வட்டிக் கணக்கீடு : மாத அடிப்படையில்.

**மாதம்** **ஆண்டு**

| | 0 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 70 | 955 | 1928 | 2997 | 4171 | 5462 | 6884 | 8444 |
| 2 | 141 | 1033 | 2013 | 3091 | 4274 | 5575 | 7008 | 8581 |
| 3 | 212 | 1111 | 2099 | 3185 | 4378 | 5689 | 7133 | 8719 |
| 4 | 284 | 1190 | 2186 | 3280 | 4483 | 5804 | 7259 | 8858 |
| 5 | 356 | 1269 | 2273 | 3376 | 4588 | 5920 | 7386 | 8998 |
| 6 | 429 | 1349 | 2361 | 3473 | 4694 | 6037 | 7514 | 9139 |
| 7 | 502 | 1430 | 2450 | 3570 | 4801 | 6155 | 7643 | 9281 |
| 8 | 576 | 1511 | 2539 | 3668 | 4909 | 6274 | 7774 | 9424 |
| 9 | 651 | 1593 | 2629 | 3767 | 5018 | 6394 | 7906 | 9569 |
| 10 | 726 | 1676 | 2720 | 3867 | 5128 | 6515 | 8039 | 9715 |
| 11 | 802 | 1759 | 2812 | 3968 | 5239 | 6637 | 8173 | 9862 |
| 12 | 878 | 1843 | 2904 | 4069 | 5350 | 6760 | 8308 | 10010 |

| | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 10159 | 12044 | 14117 | 16397 | 18902 | 21856 | 24680 | 28006 |
| 2 | 10309 | 12209 | 14299 | 16597 | 19122 | 21897 | 24945 | 28298 |
| 3 | 10461 | 12376 | 14482 | 16798 | 19343 | 22140 | 25212 | 28592 |
| 4 | 10614 | 12544 | 14667 | 17001 | 19566 | 22385 | 25482 | 28888 |
| 5 | 10768 | 12713 | 14853 | 17206 | 19791 | 22362 | 25754 | 29187 |
| 6 | 10923 | 12884 | 15041 | 17412 | 20018 | 22881 | 26028 | 29488 |
| 7 | 11079 | 13056 | 15230 | 17620 | 20246 | 23132 | 26304 | 29791 |
| 8 | 11237 | 13229 | 15421 | 17829 | 20476 | 23385 | 26582 | 30097 |
| 9 | 11396 | 13404 | 15613 | 18040 | 20708 | 23640 | 26862 | 30405 |
| 10 | 11556 | 13580 | 15807 | 18253 | 20942 | 23897 | 27145 | 30716 |
| 11 | 11717 | 13758 | 16002 | 18468 | 21178 | 24156 | 27430 | 31029 |
| 12 | 11880 | 13937 | 16199 | 18684 | 21416 | 24417 | 27717 | 31345 |



| | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 31663 | 35684 | 40102 | 44960 | 50301 | 56172 | 62625 | 69718 |
| 2 | 31984 | 36036 | 40489 | 45386 | 50769 | 56687 | 63191 | 70340 |
| 3 | 32307 | 36391 | 40880 | 45815 | 51241 | 57206 | 63761 | 70967 |
| 4 | 32633 | 36749 | 41274 | 46248 | 51717 | 57729 | 64336 | 71599 |
| 5 | 32961 | 37110 | 41671 | 46684 | 52196 | 58256 | 64915 | 72236 |
| 6 | 33292 | 37474 | 42071 | 47124 | 52679 | 58787 | 65499 | 72878 |
| 7 | 33626 | 37841 | 42474 | 47567 | 53166 | 59322 | 66088 | 73525 |
| 8 | 33962 | 38211 | 42880 | 48014 | 53857 | 59862 | 66681 | 74177 |
| 9 | 34301 | 38584 | 43289 | 48464 | 54152 | 60406 | 67279 | 74834 |
| 10 | 34643 | 38959 | 43702 | 48918 | 54851 | 60954 | 67882 | 75496 |
| 11 | 34987 | 39337 | 44118 | 49375 | 55154 | 61507 | 68489 | 76164 |
| 12 | 35334 | 39718 | 44537 | 49836 | 55661 | 62064 | 69101 | 76837 |

| | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 77515 | 86087 | 95509 | 105866 | 117251 | 129765 | 143521 |
| 2 | 78199 | 86839 | 96335 | 106774 | 118249 | 130862 | 144727 |
| 3 | 78888 | 87596 | 97168 | 107689 | 119255 | 131968 | 145943 |
| 4 | 79583 | 88359 | 98007 | 108612 | 120269 | 133083 | 147168 |
| 5 | 80283 | 89129 | 98853 | 109542 | 121291 | 134207 | 148403 |
| 6 | 80989 | 89905 | 99706 | 110479 | 122321 | 135339 | 149648 |
| 7 | 81700 | 90687 | 100565 | 111424 | 123359 | 136480 | 150903 |
| 8 | 82417 | 91475 | 101431 | 112376 | 124406 | 137630 | 152168 |
| 9 | 83139 | 92269 | 102304 | 113336 | 125461 | 138790 | 153443 |
| 10 | 83867 | 93069 | 103184 | 114303 | 126524 | 139959 | 154728 |
| 11 | 84601 | 93876 | 104071 | 115278 | 127596 | 141137 | 156023 |
| 12 | 85341 | 94689 | 104965 | 116261 | 128676 | 142324 | 157328 |

க.எண் : 99328/A19/A192/2000-8 நாள் 22-7-2002:

வா.இ.தொ : 21/2002-7, பக்கம் 45.

# ஈட்டு விடுப்பு - பண மாற்றுகை
## (Encashment of Earned Leave)

**ஈட்டு விடுப்பு**

பணியாளர் மூப்போய்வு பெறும் பொழுது, அவர் கணக்கில் உள்ள ஈட்டிய விடுப்பைப் பணமாக மாற்றிக் கொள்ளலாம். ஈட்டு விடுப்புப் பணம் மாற்றுகை 240 நாட்கட்கு மிகாது. இயல்பாய்ப் பணியில் ஈட்டு விடுப்பில் சென்றால் பெறக்கூடிய அகவிலைப்படி, மற்ற இதர படிகளுடன் சேர்ந்த முழு ஊதியம் இதற்கும் உண்டு. இப்பணமாற்றுகைப் பலன் கீழ்க்கண்ட வகை பணியாளர்க்கும் பொருந்தும்.

அ. இயலாமை ஓய்வில் செல்பவர்,

ஆ. விருப்ப ஓய்வில் செல்பவர்,

இ. கட்டாய ஓய்வில் செல்பவர்,

ஈ. பணியில் இறந்து பட்டவர்,

உ. நிலுவையில் உள்ள ஒழுங்கு முறை நடவடிக்கைக்குக் கேடுறா வகையில் பணியி-ருந்து ஓய்வில் செல்ல ஒப்புதல் பெற்றவர்,

ஊ. பணியி-ருந்து ஆட்குறைப்புச் செய்யப்பட்டவர்.

வா.ஆ.எண் : 75 நாள் 6-11-1996. வா.இ.தொ : 15/1996-11 , பக் 5.

**தன்னலுவல் சார்ந்த ஈட்டா விடுப்பு (Unearned Leave on private affairs)**

பணியாளர் பணியி-ருந்து ஓய்வு பெறும்போது அவரின் கணக்கில் மீதம் உள்ள தன்னலுவல் சார்ந்த ஈட்டா விடுப்பில் 50% விடுப்பைப் பணமாக்கிக் கொள்ளலாம். இப்பணமாக்கிக் கொள்ளும் விடுப்பு 90 நாட்கட்கு மிகக் கூடாது. இவ்விடுப்பிற்கு முழு ஊதியம் உண்டு.வா.ஆ.எண். 75 நாள் 6-11-1996. வா.இ.தொ : 15/1996-11, பக் 5.



***ஆனால்,*** பணியாளர் ஓய்வு பெறும்போது தன்னலுவல் சார்ந்த ஈட்டா விடுப்பைப் பணமாக மாற்றிக் கொள்ள அறிவிக்கப்பட்ட ஆணை எண் : 75 நாள் 6-11-1996 ஆனது 11-9-1997 முதல் உடனடியாக நிறுத்தி வைக்கப்பட்டது.

வா.ஆ.எண் : 76 நாள் 11-9-1997. வா.இ,தொ : 16/1997-9, பக் 2.

***இதன் தொடர்ச்சியாகப்,*** பணியாளர் ஓய்வு பெறும்போது தன்னலுவல் சார்ந்த ஈட்டா விடுப்பைப் பணமாக மாற்றிக் கொள்ள அளிக்கப்பட்ட ஆணை எண் : 75 நாள் 6-11-1996 ஆனது 11-9-1997 முதல் திரும்பப் பெறப்பட்டது.

வா.ஆ.எண் : 43 நாள் 24-5-2000. வா.இ.தொ : 19/2000-5, பக் 18-19.

**குறிப்பு :**

11-9-1997 முன்னர் வரை வாரியத்தால் அளித்துவந்த தன்னலுவல் சார்ந்த ஈட்டா விடுப்பைப் பணமாற்றிக்கொள் பலனை நிறுத்திய வாரியத்தை எதிர்த்து நடுவர் மன்றத்தில் தொழிற் சங்கங்களால் தொடரப்பட்ட வழக்கு நடந்து கொண்டிருக்கிறது. பணியாளர்க்கு ஏற்ற நல்ல தீர்ப்பு கிடைக்கும் என்று நம்பப்படுகிறது.

*"எம்மொழியில் ஆயினும் ஒரு பொருட்கு அல்லது கருத்திற்குச் சொல்-ருக்கும்போது, அதை நெகிழ விட்டு அதற்கு ஈடாக அயற் சொல்லை மேற்கொள்வது அறிவுடைமை ஆகாது. தமிழுக்கோ இவ்வரம்பு மிகக் கண்டிப்பானது."*

**ஞா. தேவநேயப் பாவாணர்.**

*மா என்னுஞ் சொல், உலகத்தின்கண் பரந்து விளங்கும் எல்லா மொழிகளிலும் தாயை உணர்த்தக் காண்கிறோம். இது சிறு குழந்தைகள் வாயில் இயற்கையாய்ப் பிறக்குங்கால் 'அம்மா!' என்று ஒ-க்கும்.*

*மறைமலை அடிகள்.*

# பணியாளர் குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டம்
## (Employees' Family Security Fund Scheme)

பணியாளர் பணிக்காலத்தில் இறக்க நேரிடின், அவருடைய குடும்பத்தினர் எல்லையில்லா இன்னலுக்கும் இழப்பீட்டுக்கும் உள்ளாவர். அக்குடும்பத்தினரின் அல்லல்களை ஓரளவு அகற்றும் நல்ல நோக்கில் குடும்ப நல நிதித் திட்டம் சூலைத் திங்கள் 1974 முதல் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின்படி பணியாளர் ஊதியத்தி-ருந்து மாதம் ஒரு சிறு தொகை தொடர்ந்து பிடிக்கப்படும். பணியாளர் பணிக்காலத்தில் இறக்க நேரின் அவரின் குடும்பத்தினர்க்குக் குடும்ப நல நிதியாக ஒரு கணிசமான தொகை அளிக்கப்படுகிறது.

இக்குடும்ப நல நிதித் தொகை, 1974 இல் பணியாளர் ஊதியத்தில் மாதம் 10 உரூபா வீதம் பிடித்தத்திற்கு 10,000 உரூபாவாக இருந்தது.

1-7-89 முதல் மாதப் பிடித்தம் 20 உரூபாவாக மாற்றப்பட்டுக் குடும்ப நல நிதித் தொகை 30,000 உரூபாவாக உயர்த்தப்பட்டது.

1-7-91 முதல் மாதப் பிடித்தம் 30 உரூபாவாக உயர்த்தப்பட்டுக் குடும்பப் பாதுகாப்பு நிதித் தொகை 50,000 உரூபாவாக உயர்த்தப்பட்டது.

1-7-96 முதல் மாதப் பிடித்தம் 50 உரூபாவாக மாற்றப்பட்டுக் குடும்ப நல நிதித் தொகை 90,000 உரூபாவாக உயர்த்தப்பட்டது.

1-2-2006 முதல் மாதப் பிடித்தம் 75 உரூபாவாக மாற்றப்பட்டுக் குடும்ப நல நிதித் தொகை 1,40,000 உரூபாவாக உயர்த்தப்பட்டது.



மேலும் இறந்த பணியாளர் குடும்பத்திற்கு உதவும் நோக்கோடு பணியாளர் குடும்ப நலத் துணைத் திட்டத்தை 1-4-85 முதல் வாரியம் நடைமுறைக்குக் கொண்டு வந்தது. இத்துணைத் திட்டத்தில் பணியாளர் பங்களிப்பு எதுவும் இல்லை. பணியாளர் பணிக்காலத்தில் இறந்து படின் 10,000 உரூபா அளிக்கப்படும்.

இவ்விரு திட்டங்களையும் சிறு மாற்றங்களோடு 1-7-1991 முதல் பணியாளர் குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டம் மற்றும் குடும்பப் பாதுகாப்புத் துணை நிதித் திட்டம் எனப் பெயரிட்டு இவ்விரு திட்டங்களையும் ஒருங்கே வாரியம் நிறைவேற்றி வருகிறது.

**திட்ட விளக்கமும் அளிப்பும் :**

அ) பணியாளர் இறப்பின் :-

பணியாளிடமிருந்து பிடித்தம் செய்தொகை, இறப்பின் அளிக்கப்படும் நிதி கீழ்க்கண்டவாறு அமையும்.

| வாரிய ஆணை எண் | குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டம் | | | குடும்பப் பாதுகாப்புத்துணை நிதித் திட்டம் | | இரண்டு நிதி வழி மொத்த தொகை உரூபா |
|---|---|---|---|---|---|---|
| | மாதப் பிடித்தம் உரூபா | செயல் படு நாள் | இறப்பின் வழங்கு நிதி உரூபா | செயல் படு நாள் | இறப்பின் வழங்கு நிதி உரூபா | |
| 1074 /3-7-74 | 10/- | 1-7-1974 | 10,000/- | - | - | 10,000/- |
| 41 / 12-5-86 | ,, | ,, | ,, | 1-4-85 | 10,000/- | 20,000/- |
| 33 / 20-8-90 | 20/- | 1-7-1989 | 30,000/- | ,, | 10,000/- | 40,000/- |
| 21 / 2-2-93 | 30/- | 1-7-1991 | 50,000/- | ,, | 10,000/- | 60,000/- |
| 59 / 30-7-97 | 50/- | 1-7-1996 | 90,000/- | ,, | 10,000/- | 1,00,000/- |
| 49 / 11-10-06 | 75/- | 1-2-2006 | 1,40,000/- | ,, | 10,000/- | 1,50,000/- |

ஆ) பணியாளர் ஓய்வு பெறும் பொழுது :

பணியாளர் பணி ஓய்வு பெறுங்கால், இந்நிதியில் அவர் செலுத்திய பங்குத் தொகை அதற்கான வட்டியுடன் திருப்பி

அளிக்கப்படும்; வாரியத்தின் பங்களிப்பு ஏதும் கிடையாது. 1-1-90 முதல் 3.3% வீதமும் 1-7-96 முதல் 6.6% வீதமும் வட்டி அளிக்கப்படும்.

***இதற்கான அட்டவணையும் கணக்கீட்டுக் காட்டும்*** கு.ஆ.எண்: 76409/A19/A192/2008-1 நாள் 18-11-2008 ***இல் கொடுக்கப்பட்டுள்ளன. அவ்வட்டவணை இறுதியில் (பக்கம்132) தரப்பட்டுள்ளது.***

வா.ஆ.எண் : 59 நாள் 30-7-97. வா.இ.தொ : 16/1997-7. பக் 41-42.

வா.ஆ.எண் : 33 நாள் 20-8-1990. வா.இ.தொ : 9/1990. பக் 513.

**அமர்த்துமை (Nomination) யும் - தொகை பெறுதலும் :**

பணியாளர் தனக்கு இறப்பு நேரின் இத்திட்டத் தொகையைப் பெறுதற்குத் தன் குடும்ப உறுப்பினரை அமர்த்துமை செய்ய வேண்டும். அமர்த்துமை கீழ்க்கண்ட வரிசையில் இருக்க வேண்டும்.

அ) ஆண் பணியாளராயின் :

மனைவி/மனைவிகள்; குழந்தைகள்; இறந்துபட்ட மகனின் விதவை/விதவைகள் மற்றும் குழந்தைகள்.

ஆ) பெண் பணியாளராயின் :

கணவன்; குழந்தைகள்; இறந்துபட்ட மகனின் விதவை/விதவைகள் மற்றும் குழந்தைகள்.

**விளக்கம் :**

1. குழந்தைகள் என்பவர் சட்டப்படியான / நேரிய குழந்தைகள் மற்றும் மாற்றாம் குழந்தைகள் (Step Children).

2. தத்துக் குழந்தை.

3. தத்துக் கொடுக்கப்பட்ட குழந்தை தத்துக் கொடுத்தவரின் குழந்தையாகக் கொள்ளப்படமாட்டாது.

இ) மணமாகாப் பணியாளராயின் :

கீழ்க்கண்ட குடும்ப உறுப்பினரில் யார் ஒருவரையும் அமர்த்தம் செய்யலாம்.



1) தாய்/மாற்றாந்தாய், 2) தந்தை, 3) 18 வயதிற்குட்பட்ட தம்பி, மாற்றாந் தம்பி உட்பட, 4) மணமாகா மற்றும் விதவை உடன் பிறந்த பெண்கள் (Sisters )- மாற்றாம் உடன் பிறந்த பெண்கள் உட்பட.

**குறிப்பு :**

1. ஒருவர்க்கு மேல் அமர்த்தம் செய்யின், ஒவ்வொருவரின் பாகத் தொகையையும் குறிப்பிடப்பட வேண்டும்.

2. பணியாளர் மணம் செய்து கொண்டதும், முன் செய்த அமர்த்தம் உடனடியாக நீக்கம் பெற்றதாகிறது. புதிதாகக் கணவன்/மனைவியை மட்டுமே அமர்த்தம் செய்ய வேண்டும்.

3. அப்படிப் புதிதாக அமர்த்தம் செய்வதற்கு முன்னர்ப் பணியாளர் இறந்து படின் இப்பாதுகாப்புத் தொகையை மனைவி/கணவனே பெறற்கு உரியர்; முன்னர் அமர்த்தம் செய்யப் பட்டவர்க்கு அளிக்கப்படாது.

வா.ஆ.எண் : 41 நாள் 12-5-1986. வா. இ.தொ : 5/1986. பக் 441-444.

ஈ) மாற்றந் தாய் குடும்ப உறுப்பினராக இத்திட்டத்தில் கருதப்படுவார்.

வா.ஆ.எண் : 234 நாள் 18-6-1984. வா. இ.தொ : 3/1984. பக் 399.

உ) பணியாளரைச் சார்ந்த வயது முதிர்ந்த மகன்கள் மற்றும் மணமாகா வயது முதிர்ந்த மகள்கள் அமர்த்துமை பெறுதற்குத் தகுதி உடையவர்கள்.

கு.ஆ..எண் 24923/N1/90-1 நாள் 20-4-1990:

வா.இ.தொ : 9/1990, பக்கம் 248.

ஊ)1. இத்திட்டத்தில் பயன் பெற யாரையும் பணியாளர் அமர்த்துமை செய்யவில்லை எனினும் அமர்த்துமை செல்லத் தக்கது இல்லை எனினும், திட்டத் தொகை சட்டப்படியான வாரிசுகட்குக் குடும்பம் என்ற வரையறைக்குள் வராதிருப்பினும் சமமாகப் பகிர்ந்தளிக்கப்படும்.

2. அமர்த்தம் பெற்றவர் பணியாளர்க்குப் பின்னர் இத்தொகையைப் பெறுதற்கு முன்னர் இறக்க நேரின், அமர்த்தம் பெற்றவரின் சட்டப்படியான வாரிசுகட்கு அளிக்கப் படும்; இறந்த பணியாளரின் வாரிசுகட்கு அளிக்கப்பட மாட்டாது.

கு.ஆ..எண் 22168/N1/90-1 நாள் 7-5-1990:
வா.இ.தொ : 9/1990, பக்கம் 302.

எ) பணியாளர் இறந்து படின் குடும்பப் பாதுகாப்பு நிதி பணியாளரால் அமர்த்துமை பெற்றவர்க்கு அளிக்கப்படும். அமர்த்துமை பெறுபவர் மனைவி/கணவன், வயது முதிராக் குழந்தை/ குழந்தைகள், தாய்/தந்தை என்ற வரிசையில் அமையும். அமர்த்துமை இல்லா நிலையில், இறந்து பட்ட பணியாளரின் சட்டப்படியான வாரிசுகட்கு அளிக்கப்படும்.

முதல் மனைவி இறந்ததனால் சட்டப்படியான இரண்டாம் மனைவியைப் பணியாளர் இந்நிதியைப் பெற அமர்த்தம் செய்திருப்பின், அமர்த்தம் எப்படி அமைந்து இருப்பினும், குடும்ப பாதுகாப்பு நிதி சமமான பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு முதல் மனைவி மூலம் பிறந்த குழந்தைகட்கும் சட்டப்படியான இரண்டாம் மனைவிக்கும், இரண்டாம் மனைவி மூலம் பிறந்த குழந்தைகட்கும் வழங்கப்படும்.

வா.ஆ.எண் 1074 நாள் 3-7-74 இன் 9 (i), (ii).
வா.ஆ.எண் : 424 நாள் 14-12-1987. வா.இ.தொ : 6/1987. பக் 969.

**அமர்த்துமை - தகுதி இல்லாதவர் :**

1) பணியாளரைச் சாராத வயது முதிர்ந்த மகன்கள்.

2) மணமான மகள்கள்.

3) மற்ற உறவினர்கள். (கு.ஆ.எண்: 39643/BP/1977-1 நாள் 6.9.1977 இல் குறிப்பிடப்படாதவர்கள்.)

வா.ஆ.எண் : 385 நாள் 18-11-1985. வா.இ.தொ : 4/1985. பக் 1203.
கு.ஆ..எண் 22168/N1/90-1 நாள் 7-5-1990:
வா.இ.தொ : 9/1990, பக் 302



**நிதி பெறும் முறை :**

1) உடனடி முன்னளிப்பு :

இறந்து பட்ட பணியாளர் குடும்பத்தினரின் உடனடித் தேவைக்கு உதவியாக உருபா 5000/- இக்குடும்பப் பாதுகாப்பு நிதியி-ருந்து முன்பணமாக வழங்கப்படும். பணியாளரால் இந்நிதிக்கு அமர்த்துமை பெற்றவர் அல்லது குடும்ப ஓய்வூதியத்திற்கு உரியவரால் அளிக்கப்படு விண்ணபத்தின் மேல் வழங்கப்படும். இம் முன் பணம் பின்னர்க் குடும்பப் பாதுகாப்பு நிதியில் சரி செய்யப்படும்.

வா.ஆ.எண் : 86 நாள் 20-11-2000. வா.இ.தொ : 19/2000-11. பக் 32.

2) பணியாளர் இறந்துபடின் இறப்புச் சான்றிதழுடன் விண்ணப்பிக்க வேண்டும். இறப்பின் காரணம் இயற்கையே அல்லாது தற்கொலை, கொலை போன்று இருப்பினும் இறப்புச் சான்றிதழ் போதுமானது. இல்லையெனில் பணியாளரின் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்ட அல்லது பணியாளர் இறப்பைப் பற்றித் தன்னறிவுடைய உதவி செயற் பொறியாளர் தகுதிக்குக் குறைத-ல்லாப் பொறுப்பான வாரிய அலுவலர் ஒருவரால் எழுத்து மூலம் அளித்த செய்தியை அடிப்படையாகக் கொண்டும் குடும்பப் பாதுகாப்பு நிதியைப் பெறற்குரியவர்க்கு அளிக்கலாம்.

வா.ஆ.எண் : 248 நாள் 1-9-1989. வா.இ.தொ : 8/1989. பக் 767.

**அட்டவணை**

**(இத்திட்டத்தில் பணியாளர் ஓய்வுறுகையில் பெறு பணப்பலன்)**

| ஓய்வூதியரின் முழுமையுற்ற பணி ஆண்டுகள் | பணியாளரின் பங்களிப்பு உருபா | வாரிய பங்களிப்பு உருபா | பெறு தொகை உருபா |
|---|---|---|---|
| 1 | 120 | 4 | 124 |
| 2 | 240 | 16 | 256 |
| 3 | 360 | 36 | 396 |
| 4 | 480 | 64 | 544 |
| 5 | 600 | 100 | 700 |

| ஓய்வூதியரின் முழுமையுற்ற பணி ஆண்டுகள் | பணியாளரின் பங்களிப்பு உரூபா | வாரிய பங்களிப்பு உரூபா | பெறு தொகை உரூபா |
|---|---|---|---|
| 6 | 720 | 144 | 864 |
| 7 | 840 | 196 | 1036 |
| 8 | 960 | 256 | 1216 |
| 9 | 1080 | 324 | 1404 |
| 10 | 1200 | 400 | 1600 |
| 11 | 1320 | 484 | 1804 |
| 12 | 1440 | 576 | 2016 |
| 13 | 1560 | 676 | 2236 |
| 14 | 1680 | 794 | 2264 |
| 15 | 1800 | 900 | 2700 |
| 16 | 1920 | 1024 | 2944 |
| 17 | 2040 | 1156 | 3196 |
| 18 | 2160 | 1296 | 3456 |
| 19 | 2280 | 1444 | 3724 |
| 20 | 2400 | 1600 | 4000 |
| 21 | 2520 | 1764 | 4284 |
| 22 | 2640 | 1936 | 4576 |
| 23 | 2760 | 2116 | 4876 |
| 24 | 2980 | 2304 | 5134 |
| 25 | 3000 | 2500 | 5500 |
| 26 | 3120 | 2704 | 5824 |
| 27 | 3240 | 2916 | 6156 |
| 28 | 3360 | 3136 | 6416 |
| 29 | 3480 | 3364 | 6844 |
| 30 | 3600 | 3600 | 7200 |



# கருணைப்படி

## (Compassionate Allowance)

பணியி-ருந்து நீக்கப்படுகிற அல்லது விலக்கப்படுகிற பணியாளர், ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடை பெறக் கூடிய தகுதி நிலையை இழந்து விடுகிறார்.

எனினும், பணியி-ருந்து அப்பணியாளரை நீக்கவோ அல்லது விலக்கவோ உரிமை உடைய அதிகாரி, தகுதியின் மேல் சிறப்புச் சலுகையாக அப்பணியாளர்க்குக் கருணைப் படி அளிக்க ஒப்புதல் அளிக்கலாம்.

i) அப்படி அளிக்கப்படு கருணைப்படி, அப்பணியாளர் மருத்துவ அடிப்படையில் ஓய்வு பெற்றிருப்பின், ***அவர்*** பெறற்கு உரிய ஓய்வூதியம் அல்லது பணிக்கொடை அல்லது இரண்டும் ***ஆகியவற்றில்*** மூன்றில் இரண்டு பங்கிற்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.

ii) அழிவுச் செயல், ஒற்றாடல் போன்ற வெளிப்படையான நாட்டுக்கெதிரான செயல்கட்காகப் பணி நீக்கம் அல்லது விலக்கம் பெற்ற பணியாளர்க்குக் கருணைப்படி அளிக்கப்பட மாட்டாது.

iii) கருணைப் படி மேற்கண்ட நிலையில் அளிக்கப்படும் போது, அக்கருணைப் படி ஓய்வூதியர்க்கான குறைந்த அளவு என்ற வரையறைக்குக் குறைந்ததாக இருக்கக் கூடாது.

தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978, விதி 40.

*"ஓர் எழுத்தைக் கற்றுத் தருவது, ஒரு புரட்சிக்கு வித்திடுவது ஆகும். ஒரு கல்விக் கூடத்தைக் கட்டுவது என்பது எதிரியைத் தாக்க ஒரு கோட்டை கட்டப்படுகிறது என்பது பொருள்."*

**இங்கர்சால்.**

# பணிப் பாராட்டு

பல்லாண்டுகள் வாரியத்தில் பணியாற்றி ஓய்வுறும் பணியாளரின் பணியைப் பாராட்டி ஓய்வுறு இறுதி நாளில் ஒருங்கு கூடி விழா நடத்தி விடையளித்தல் போற்றற்கு உரியது.

**பாராட்டு முறை :-**

1. பணிப் பாராட்டு விழா, பணியாளர் இறுதியாகப் பணியாற்றிய அலுவலகத்தில் நடைபெறும்.

2. விழா - வாரியம் சார்ந்ததாக இருக்கும்.

3. ஓய்வுறு பணியாளரை அலுவலகத் தலைமை அலுவலர் பொன்னாடை போர்த்திப் பெருமைப்படுத்திக் காசோலை வழங்குவார்.

4. பணியாளரைப் பாராட்டிப் பணிப் பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்படும். பணிப் பாராட்டுச் சான்றிதழ் கோட்ட / வட்ட / மண்டலத் தலைமையால் அளிக்கப்படும்.

கு.ஆ.எண் 58749/**O&M cell**/89-1 நாள் 16-8-1989:
வா.இ.தொ : 8/1989, பக்கம் 701.
கு.ஆ.எண் 80008/**O&M cell**(4)/90-1 நாள் 21.12.1990:
வா.இ.தொ : 9/1990, பக்கம் 733.

5. பணி பாராட்டி ஓய்வுறு பணியாளர்க்குப் போர்த்தப் பெறு பொன்னாடை (கைத்தறி அல்லது கதர்த் துண்டு) உரூபா 125/- மதிப்பில் வாங்கப்பட வேண்டும்.

கு.ஆ.எண் 67788/**O&M cell**-1(4)/92-1 நாள் 2-12-92:
வா.இ.தொ : 11/92, பக்கம் 713.



6. பணிப் பாராட்டுச் சான்றிதழ் தமிழிலேயே வழங்கப்பட வேண்டும்.

வா.ஆ.எண் : 233 நாள் 4-9-2001. வா.இ.தொ : 20/2001-9, பக் 1.

7. ***பணியைப் பாராட்டிப் பொன்னாடை, சான்றிதழ் அளிப்பதோடு, 130 உரூபாவிற்கு மிகாது நினைவுப் பரிசும் (Crest) அளிக்கப்பட வேண்டும்.***

கு.ஆ.எண் 79859/**A**23/**A**232/2005-1 நாள் 23.9.2005:

**விதி விலக்குக்கள் :-**

1. ஓய்வு பெறு பணியாளர் மேல் ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் இருந்தாலோ, ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள இருந்தாலோ பணிப் பாராட்டுச் சான்றிதழ் வழங்கத் தேவை இல்லை. ஆனால், பணிப் பாராட்டு விழாவில் பொன்னாடை போர்த்தப் பெற்றுச் சிறப்பிக்கப் படுவர்.

கு.ஆ.எண் 80008/**O&M cell**(4)/90-3 நாள் 23.3.91:
வா.இ.தொ : 10/91, பக்கம் 102.
கு.ஆ.எண் 25709/**O&M cell**-1(4)/92-18 நாள் 20.12.94:
வா.இ.தொ : 13/94, பக்கம் 599.

2. பணிப் பாராட்டுச் சான்றிதழ் விருப்போய்வில் செல் பணியாளர்க்கும் வழங்கப்படும்; ஆனால், கட்டாய ஓய்வளிக்கப் பட்டவர்க்கும், இயலாமை ஓய்வு அளிக்கப்பட்டவர்க்கும் வழங்கப்பட மாட்டாது.

கு.ஆ.எண் 25709/**O&M cell**(4)/92-17 நாள் 25.1.94:
வா.இ.தொ : 13/94, பக்கம் 13.

"நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்
அல்லது செய்தல் ஓம்புமின் அதுதான்
எல்லாரும் உவப்பது; அன்றியும்
நல்லாற்றுப் படூஉம் நெறியுமார் அதுவே."
-புறநானூறு.

## ஓய்வுப் பயணப்படி

ஓய்வுறும் பணியாளர்க்கும் அவர் தம் குடும்பத்தினர்க்கும் அவர் இறுதியாகப் பணியாற்றிய ஊரினின்று அவரின் சொந்த ஊர்க்குச் செல்லப் பயணப் படி உரித்தாகும். வீட்டுப் பயன்பாட்டுப் பொருட்களை எடுத்துச் செல்லும் செலவைப் பெறவும் உரியர். அப்பணியாளர், மாற்றத்தில் சென்றால் எத்தகைய பயணப் படி பெற அவர்க்குத் தகுதி உண்டோ, அதே அளவில் ஓய்வுக்குப் பிறகு சொந்த ஊர் செல்கையில் பெறத் தகுதி உடையவர் ஆவார்.

**பணியாளர் ஓய்வு பெற்றுச் செல்லும் போது:**

அ) ஒரு பணியாளர் ஓய்வுற்ற போது சொந்த ஊரில் குடும்பத்தோடு குடியேறாது, வேறொரு ஊரில் குடியுற விழையின், இப்பயணப் படிச் சலுகை அவர் விழையும் ஊர்க்குச் செல்வதற்கும் அளிக்கப்படும். ஆனால், சொந்த ஊர்க்குச் செல்வதால் தர வேண்டி வரு பயணப்படித் தொகை அல்லது விழையும் ஊர்க்குச் செல்வதால் தர வேண்டி வரு பயணப்படித் தொகை - இவற்றில் எது குறைவோ, அது வழங்கப்படும்.

ஆ)ஓய்வுற்ற பணியாளர் இறுதிப் பயணப்படிச் சலுகையைப் பணி ஓய்வுற்ற ஆறு மாதங்கட்குள் பெற்றுக் கொள்ளலாம்.

இ) இப்பயணப்படிச் சலுகை அனைத்து வகை ஓய்வூதியர்க்கும் உண்டு. இச்சலுகை பணி விலகுபவர்க்கோ, பணி நீக்கம், பணி விலக்கம் பெறுபவர்க்கோ அளிக்கப்பட மாட்டாது.

ஈ) பயணப்படி வீதம் பணியாளர் பணி இறுதியில் பெற்ற சம்பளத்திற்கு ஏற்ப, அவர் மாறுத-ல் சென்றால் பெறக்கூடிய வீதத்தில் இருக்கும்.

உ) பயணப்படிக்கான முன்பணம் வழங்கப்பட மாட்டாது.

ஊ) ஓய்வுற்ற பணியாளர் தன் குடும்பத்தினருடன் வீட்டுப் பயன்பாட்டுப் பொருட்களை எடுத்துக் கொண்டு சொந்த ஊர்க்குப் பயணம் மேற்கொள்வது ஓய்வுற்ற நாளி-ருந்து ஆறு மாதக் கால எல்லைக்குள் அமைய வேண்டும்.



எ) பயணப்படிப் பட்டி, பயணம் மேற்கொண்ட நாளி-ருந்து மூன்று மாதக் கால எல்லைக்குள் அனுப்பப்பட வேண்டும்.

த.நா.மி.வா. பயணப்படிகள் ஒழுங்கு முறை விதிகள் -80 - A.

**பணியாளர் பணிக் காலத்தில் இறந்துபடின் குடும்பத்தினர்க்கு:**

அ)பணிக்காலத்தில் இறந்து பட்ட பணியாளர் குடும்பத்தினர்க்குச் சொந்த ஊர்க்குப் பயணம் செய்யப் பயணப்படி அளிக்கப்படும்.

ஆ) சொந்த ஊர் அன்றி வேறோர் ஊரில் குடியுற விழையினும் அந்த ஊர்க்கான பயணப்படி வழங்கப்படும். ஆனால், இப்பயணப்படி சொந்த ஊர்க்கான பயணப் படியை விட மிஞ்சி இருக்கக் கூடாது.

இ) இப்பயணப்படி பணியாளர் கடைசியாகப் பணிபுரிந்த அவரின் தலைமை இடத்தி-ருந்தோ அல்லது அவர் இறந்த இடத்தி-ருந்தோ அளிக்கப்படும்.

ஈ) விடுப்பில் இருக்கும் பணியாளரின் தலைமை இடம் என்பது அவர் கடைசியாகப் பணி புரிந்த இடமாகும்.

உ) பயணப்படியின் வீதம், பணியாளர் உயிரோடிருந்து பணி மாற்றத்தில் குடும்பத்தினரோடு பயணம் செய்யின் என்ன உரித்தோ, அதன்படி குடும்பத்தினர்க்கும் இருக்கும்.

ஊ) குடும்பத்தினர்க்கான பயணப்படியை முன்னதாகவே பெறலாம். ஆனால், பயணத்தைப் பணியாளர் இறந்த மூன்று மாதங்கட்குள் முடித்திட வேண்டும். மேலும், பயணப்படி வழங்கல் அதிகாரி அந்தக் குடும்பத்தினர் மூன்று மாதங்கட்குள் பயணத்தை முடிப்பர் என்ற மனநிறைவைப் பெற்றவராய் இருத்தல் வேண்டும்.

எ) இச்சலுகை, பணி ஓய்வு பெற்ற பின்னர்ச் சொந்த ஊர்க்குத் திரும்பும் பயணத்தை மேற்கொள்வதற்கு முன்னர் இறந்து பட்ட பணியாளர் தம் குடும்பத்தினர்க்கும் பொருந்துவது ஆகும்.

த.நா.மி.வா. பயணப்படிகள் ஒழுங்கு முறை விதிகள் - விதி 85.

# காணாமற் போனோர் - குடும்பப் பயன்கள்

ஒரு பணியாளர் அல்லது ஓய்வூதியர் திடீரென்று காணாமல் போய்விடுகிறார். அவர் எங்கிருக்கிறார் என்பது தெரியவில்லை. இந்நிலையில் உரிமை உடைய குடும்ப உறுப்பினர்க்கு இறுதி நிலைப் பணப் பலன்களை (Terminal Benefits) இயல்பாய் அளிப்பதற்கு இயல்வதில்லை. ஏனென்றால், காணாமற் போன நாளி-ருந்து 7 ஆண்டுக் காலம் கழிந்திருந்தால் ஒழிய, அவர் இறந்து பட்டார் என்ற முடிவுக்கு வர முடியாது; ஆகவே, அதற்கு முன்னர் இறுதி நிலைப் பணப் பலன்கள் அளிக்க முடியாது.

இறுதி நிலைப் பணப் பலன்களைப் பெற முடியாததால் காணாமற் போனோர் குடும்பத்தினர் அடையும் கடும் இன்னல்களைக் கருத்தில் கொண்டு, அவற்றைக் களைவதற்காகக் குடும்ப ஓய்வூதியம் உட்பட்ட பலன்களை வாரியம் முன்னரே வழங்குகிறது.

**வாரியப் பலன்களும் வழி முறைகளும் :-**

அ. குடும்பத்தை நீங்கி ஒரு பணியாளர் காணாமற் போயின், உரிய குடும்ப உறுப்பினர்க்கு முதற்கண் கீழ்க் கண்டவை அளிக்கப்படுகின்றன.

1. ஊதிய நிலுவை.

2. காணாமற் போன நாள் வரையிலான ஈட்டு விடுப்புக்கான பண மாற்றுகை.

3. பணியாளரின் அமர்த்துமையைக் கருத்தில் கொண்டு பொது வைப்பு நிதி.

4. சிறப்பு வைப்பு நிதி மற்றும் பணிக் கொடைக்காகச் செலுத்தப்பட்ட சந்தாத் தொகை - வட்டியுடன்.

ஆ. பணியாளர் காணாமற் போன நாளி-ருந்து இரண்டு ஆண்டுகள் கழித்து, அமர்த்துமைக்கு ஏற்ப இறப்பு மற்றும் ஓய்வுப் பணிக்கொடை, குடும்ப ஓய்வூதியம் அளிக்கப் படும்.

இ. காணாமற் போன நாளி-ருந்து 7 ஆண்டுகள்



கழித்துப் பணியாளர் குடும்பப் பாதுகாப்பு நிதி மற்றும் பணியாளர் குடும்பப் பாதுகாப்புத் துணைத் திட்ட நிதிகள், அமர்த்துமைக்கு ஏற்ப வழங்கப்படும்.

ஈ. பணியாளர் காணாமற் போய்விட்டதைப் பொறுப்புள்ள காவல் நிலையத்தில் குடும்பத்தினர் அறிவித்து, அனைத்து முயற்சிகள் காவல் துறையால் மேற்கொண்டும் பணியாளரைக் கண்டு பிடிக்க முடியவில்லை என்ற காவல் துறை அதிகாரியின் அறிக்கையைப் பெற வேண்டும்.

உ. அளிக்கப்படு தொகைகள் அனைத்தும், பின்னொருகால் பணியாளர் திரும்பி வந்து உரிமை கோரினால் அவர்க்கு உரிய தொகையில் சரி செய்து கொள்ளலாம் என அமர்த்துமை பெற்றவர் / பணியாளரைச் சார்ந்துள்ளவர் ஈட்டுறுதிப் பிணை முறி (Indemnity Bond) தர வேண்டும்.

ஊ. பணியாளரால் பதிவு செய்யப்பட்ட அமர்த்துமை செல்லத்தக்கதாக இல்லை எனின், ஊதிய நிலுவை, ஈட்டு விடுப்புக்கான பண மாற்றுகை, மற்றும் பிற அளிப்புகட்கு வாரிசு சான்றிதழ் அளிக்க வேண்டும்.

வா.ஆ.எண் : 233 நாள் 2-9-1991. வா.இ.தொ : 10/1991. பக் 507.

**விளக்கங்கள் :-**

அ. காணாமற் போனதற்கான முதல் தகவல் அறிக்கை (FIR) காவல் துறையில் பதிவு செய்யப்பட்ட நாள், பணியாளர் / ஓய்வூதியர் காணாமற் போன நாளாகக் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்.

ஆ. இந்த நாளி-ருந்தே, குடும்ப ஓய்வூதியம், இறப்பு மற்றும் ஓய்வுப் பணிக் கொடைப் பலன்களை வழங்குவதற்கான வரையறையான இரண்டு ஆண்டுக் காலம் கணக்கிடப்படும்.

இ. காணாமற்போன கடைசி நாளில் பணியில் / ஒப்புதல் அளிக்கப்பட்ட விடுப்பில், சட்ட நெறிமுறைகட்கு ஏற்பப் பணியாளர்க்கு உரிய ஊதியத்தின் அடிப்படையில் குடும்பப் பலன்கள் அளிக்கப்படும்.

ஈ. குடும்ப ஓய்வூதியம் இயல்பான / உயர்த்தப்பட்ட வீதத்தில் அவர் அவர்க்கு ஏற்பக் காணாமற் போனோர் குடும்பத்திற்கு அளிக்கப்படும்.

உ. குடும்பத்தினர்க்கு இறப்புப் பணிக் கொடை வழங்கப்படும். ஆனால், அத்தொகை பணியாளர் ஓய்வு பெறுங்கால் பெறும் பணிக் கொடைக்கு மிகக் கூடாது. ஓய்வுப் பணிக் கொடைக்கும் இறப்புப் பணிக் கொடைக்கும் உள்ள வேறுபாட்டுத் தொகை, பணியாளரின் இறப்பு ஐயமின்றி உறுதி செய்யப்பட்ட பிறகு அல்லது காணாமற் போன 7 ஆண்டுகள் கழித்து அளிக்கப்படும்.

ஊ. காணாமற் போன பணியாளர்க்கும் ஓய்வூதியர்க்கும் வெவ்வேறு படிவங்களில் ஈட்டுறுதிப் பிணை முறிவுகள் அளிக்கப்பட வேண்டும்; மாதிரிப் படிவங்கள் 1993 ஆண்டு வாரிய இதழ்ப் பக்கங்கள் 80-84 இல் உள்ளன.

கு.ஆ.எண் 47202-**N**1/91-1 நாள் 5-3-1993:

வா.இ.தொ : 12/1993, பக்கம் 80.

எ. உயர்த்தப்பட்ட குடும்ப ஓய்வூதியம், காணாமற் போனவர் இறந்து விட்டார் என்று உறுதியாக ஐயமின்றி நிலைநாட்டிய பின்னர் அல்லது காணாமற் போன நாளி-ருந்து 7 ஆண்டுகட்குப் பின்னர் தான் அளிக்கப்படும்.

க.எண்:4928-**N**1/93-1 நாள் 9-12-1994, வா.இ.தொ: 13/1994, பக் 583.

**காணாமற் போன பணியாளரின் வாரிசுக்கு வாரியப் பணி உதவி**

அ. காணாமற் போன பணியாளரின் வாரிசுக்கு அல்லது அவரையே சார்ந்துள்ளவர்க்கு வாரியப் பணியளிப்பு உதவி வழங்கலாம். ஆனால், தக்க வழக்கு மன்றத்தால் இந்தியச் சான்று சட்டம், 1872 இன் பிரிவு 107, 108 இன்படி காணாமற் போனவர் இறந்து விட்டவர் என்று அறிவித்திருக்க வேண்டும்.

ஆ. வழக்கு மன்றம் இறந்து விட்டார் என்று அறிவித்த நாளி-ருந்து மூன்றாண்டிற்குள் வேலை கேட்டு விண்ணப்பிக்க வேண்டும்.

இ. கருணை அடிப்படையில் வேலை உதவித் திட்டத்திற்காக அளிக்கப்படும் ஆணைகள் இதற்கும் பொருந்தும்.

வா.ஆ.எண்: 227 நாள் 17-10-1998. வா.இ.தொ: 17/1998-10, பக் 9.



## இறந்த பணியாளர் இறுதிப் பயணச் சலுகை

பணியாளர் பணியில் இருந்த போது இறந்துபட நேரின், அவர் உடலைக் குடும்பத்தினர் விருப்பப்படி அவரின் சொந்த ஊர்க்கு அல்லது வாழும் ஊர்க்கு அல்லது இறுதிச் சடங்கு நடத்து ஊர்க்கு எடுத்துச் செல்ல வாரிய ஊர்தி பயன்படுத்தப்படும். இச்செலவை வாரியமே ஏற்கும். அப்படி, வாரிய ஊர்தி ஏற்பாடு செய்ய இயலா நிலையில், வாரியச் செலவில் தனியார் ஊர்தி ஏற்பாடு செய்து தரப்படும்.

அ) உடலை வாரியச் செலவில் எடுத்துச் செல்லும் இவ்வசதி, தமிழ் நாட்டிற்கு உள்ளேயே அன்றிப் புதுச்சேரி, ஆந்திரம், கர்நாடகம், கேரளம் ஆகிய மாநிலங்களில் சொந்த ஊர்களை உடைய பணியாளர்க்கும் பொருந்தும்.

ஆ) பணியில் இருந்த போது என்பது விடுப்புக் காலம், பணி இடை நீக்கக் காலம், பணிப் பயணக் காலம் (Tour) ஆகியவையை உட்கொண்டது.

இ) விடுப்புக் காலத்தில் பணியாளர் தமிழ்நாட்டிற்குள் எவ்விடத்தில் இறந்திருந்தாலும் இச்சலுகை உண்டு.

ஈ) பணியாளர் பணியில் இருக்கும் போது **எந்த இடத்தில்** இறந்திருந்தாலும், அவர் உடலைக் குடும்பத்தினர் விருப்பப்படி குடியிருக்கும் இடத்திற்கோ அல்லது இறுதிச் சடங்கு நடத்தும் இடத்திற்கோ அல்லது சொந்த ஊர்க்கோ எடுத்துச் செல்வதற்கான செலவை வாரியம் ஏற்கும்.

உ)இறந்த பணியாளரின் குடும்பத்தினர் அல்லது பணியாளரின் நெருங்கிய நண்பர்/உறவினரில் ஒருவர் உடலை எடுத்துச் செல்லும் ஊர்தியுடன் செல்லுதற்கு உரியர்.

வா.ஆ.எண்: 58 நாள் 18-2-1984. வா.இ.தொ: 3/1984. பக் 77.

வா.ஆ.எண்: 31 நாள் 26-5-1989. வா.இ.தொ: 8/1989. பக் 386.

ஊ) பணியாளர் தமிழ்நாட்டிற்கு வெளி இடங்களில் பணியில் இறந்து படின், இடையே ஏற்படும் கால இடைவெளியைக் கருத்தில் கொண்டு எவ்வித கால விரையமுமின்றி அவர் உடலை அங்கிருந்து வானூர்தி வழி வாரியச் செலவில் பணியாளரின் குடும்பத்தினர் விழையும் சொந்த ஊர்க்கோ அல்லது குடியிருக்கும் இடத்திற்கோ அல்லது இறுதிச் சடங்கு நடத்தும் இடத்திற்கோ அருகிலுள்ள வானூர்தி நிலையத்திற்கு எடுத்து வர வேண்டும்.

வா.ஆ.எண்: 14 நாள் 12-1-1987. வா.இ.தொ: 6/1987. பக் 11.

*"நோயில் தளராமல் நொந்துமனம் வாடாமல்*
*பாயில் கிடவாமல் பாவியேன் - காயத்தை*
*ஓர்நொடிக்குள் நீக்கியெனை ஒண்போரூர் ஐயாநின்*
*சீரடிக்கீழ் வைப்பாய் தெரிந்து."*

**-சிதம்பர சுவாமிகள்.**

*"கொப்பரையினுள் நீர் உலர்ந்து போன பிறகு, பருப்பு வேறு, ஓடு வேறு என்று பிரிந்து விடுகின்றன. அதே போல் ஒருவரிடம் இருந்து உலக ஆசைகள் எல்லாமே ஒழிந்து போன பிறகு, உடல் வேறு, உயிர் வேறு என்பதை அவர் தெளிவாக உணர்ந்து கொள்வார்."* **-இராமகிருட்டிணர்.**

*"பேசும் முன்னர்ப் பிறர் பேசுவதைக் கேளுங்கள். எதையும் எழுதும் முன்னர் நன்கு எண்ணுங்கள். செலவு செய்தற்கு முன்னர்ச் சேமியுங்கள்."*

*"அடுத்தவரிடம் நல்லதும் இருக்கும்; கெட்டதும் இருக்கும். நல்லதை மட்டும் நாம் கற்றுக் கொள்ள வேண்டும். கெட்டதைப் பார்த்து, எப்படி இருக்கக் கூடாதென்று தெரிந்து கொள்ள வேண்டும்."* **-யாரோ.**



## கருணை அடிப்படையில் வாரிசுகட்கு வேலை உதவி

**கருணை அடிப்படையில் வேலை வாய்ப்புப் பெறத் தகுதி பெற்றவர் :-**

1)பணியில் இருந்தபோது இறந்த பணியாளரின் வாரிசு.

வா.ஆ.எண் : 1474 நாள் 3-10-1978.

2) மருத்துவ அடிப்படையில் இயலாமை ஓய்வு பெற்ற பணியாளரின் வாரிசு. 53 வயதுக்குள் இயலாமை ஓய்வு பெற்றவரின் வாரிசுக்கே இச்சலுகை.

வா.ஆ.எண் : 51 நாள் 31-5-1984. வா.இ.தொ : 3/1984, பக் 335.

வா.ஆ.எண் : 25 நாள் 9-10-2001. வா.இ.தொ : 11/1992 பக் 630.

3) பணியில் இருந்தபோது காணமற்போன பணியாளரின் வாரிசு.

4) பணி இடை நீக்கக் காலத்தில் இறந்த பணியாளரின் வாரிசு. பணி இடை நீக்கக் காலம் பணி ஓய்வு நாளைக் கடந்து நீடித்து அந்நீட்டிப்புக் காலத்தில் இறந்தால் - பணி இடை நீக்கக் காலம் பணி நீட்டிப்பாகக் கருதி இறந்தவர் வாரிசுக்கு வேலை உதவி அளிக்கப்படும்.

வா.ஆ.எண் 343 நாள் 9-11-1992. வா.இ.தொ : 11/1992, பக் 630.

**வாரிசுகள் :-**

1) மனைவி / கணவன்.

2) மகன்.

3) மணமாகா மகள்.

4) விதவை மகள் / மணமுறிவு பெற்ற மகள் - இறந்த பணியாளர் குடும்பத்தோடு வாழ்பவர்.

5) கணவனால் கைவிடப்பட்டு இறந்த பணியாளர் குடும்பத்தோடு வாழ்மகள்.

6) *சட்டப்படி தத்து எடுத்துக்கொண்ட மகன்/மணமாகா மகள்.*

7. *மணமாகா உடன் பிறந்த ஆண் / பெண்.*

வா.ஆ.எண் 27 நாள் 18-8-2008. வா.இ.தொ: 27/2008-8, பக் 26..

**வேலை வாய்ப்புப் பெற வயது வரம்பு :-**

1) மனைவி / கணவன்

பணியாளர் இறந்த நாளன்று 50 வயது மிகாமல் இருக்க வேண்டும்.

வா.ஆ.எண் 46 நாள் 13-10-1995. வா.இ.தொ : 16/1995, பக் 507.

2) மகன் / மணமாகா மகள் / விதவை மகள் / மணமுறிவு பெற்ற மகள் / கணவனால் கைவிடப்பட்டு, இறந்த பணியாளர் குடும்பத்தோடு வாழ்மகள்.

பணியாளர் இறந்த நாளன்று வயது 35க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

வா.ஆ.எண் 131 நாள் 19-6-1998. வா.இ.தொ : 17/1998, பக் 13.

3) ***ஏதேனும் ஒரு பதவிக்கு வயது வரம்பு 30/40 என்றிருந்து***, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் ***வாரிசுக்குப் பயனளிக்குமென்றால்***, ***அவ்***வயது வரம்பு ***இப்போது*** தளர்த்தப்பட்டுள்ளது.

வா.ஆ.எண் 409 நாள் 29-6-1984. வா.இ.தொ : 3/1984, பக் 409.

**வேலை வாய்ப்புப் பெற வாரிசுக்கான தகுதிகள் :-**

1) பணிக்குத் தேவையான கல்வி.

2) இறந்த பணியாளர் குடும்பத்தின் ஏழ்மை நிலை.

3) வேலை வாய்ப்பு உதவிக்கான நிபந்தனைகள்.

4) கா-யாக உள்ள பணியிடங்கள்.

வா.ஆ.எண் 21 நாள் 7-6-1983. வா.இ.தொ : 2/1983, பக் 31.

**வேலை உதவிக்காக விண்ணப்பிக்கும் நடைமுறை :-**

வேலை வாய்ப்பு வேண்டும் வாரிசுதாரர் குறிப்பிட்ட படிவத்தில் வேண்டிய சான்றொப்பம் இடப்பட்ட சான்றிதழ்ப் படிகளுடன் இறந்த பணியாளர் இறுதியாகப் பணிபுரிந்த வட்ட மேற்பார்வைப் பொறியாளர்க்கு நேரடியாகப் பதிவு அஞ்ச-ல் அனுப்பி வைக்க வேண்டும். அதே போல விண்ணப்பத்தின் மற்றொரு படிவத்தை சான்றொப்பம் இடப்பட்ட ***அனைத்துச்***



சான்றிதழ்ப் படிகளுடன் தலைமைப் பொறியாளர் / பணியமைப்பு, சென்னை-2 அவர்க்கு அனுப்பி வைக்க வேண்டும்.

**இணைக்கப்பட வேண்டிய சான்றிதழ்கள் :-**

1) இறப்புச் சான்றிதழ்.

2) வாரிசுச் சான்றிதழ்.

3) கல்விச் சான்றிதழ்.

4) வயதுச் சான்றிதழ். (பள்ளி மாற்றுச் சான்றிதழ்)

5) மற்ற வாரிசுகள் ஒப்புதல் கடிதம்.

6) பாரத வங்கியில் செலுத்துச் சீட்டு.

(தொழில் நுட்பக் கல்வித் தகுதியுடைய வாரிசுகளின் கல்விச் சான்றிதழ் சரிபார்ப்புக் கட்டணமாகச் சான்றிதழ் வழங்கிய நாள் 10 ஆண்டிற்குள் இருப்பின் 200 உரூபாவும், 10 ஆண்டிற்கு மேல் இருப்பின் 300 உரூபாவும் தலைவர், தேர்வு வாரியம், சென்னை, 600 025 இன் பேரில் பாரத வங்கியில் செலுத்தப் படவேண்டும்.)

இந்நடைமுறை கருணை அடிப்படையில் வேலை உதவி பெறத் தகுதி பெற்ற மேலே குறிப்பிட்ட ***அனைத்து*** வகையினர்க்கும் பொருந்தும். எனினும், இயலாமை ஓய்வு பெறுபவர் வாரிசுக்கான வேலை கேட்பு விண்ணப்பத்தோடு வாரிசுச் சான்றிதழ்க்கு மாற்றாகக் குடும்ப உறுப்பினர் சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும். மேலும், இவ்வாரிசுதாரர்க்கான விண்ணப்பப் படிவம் பொதுவான விண்ணப்பத்தி-ருந்து மாறுபட்டது.

காணாமற் போன பணியாளரின் வாரிசுக்கான வேலை கேட்பு விண்ணப்பத்தோடு 1872 ஆண்டைய இந்தியச் சான்றுச் சட்டம், பிரிவுகள் 107, 108 இன்படி காணாமற் போன பணியாளர் இறந்துவிட்டதாகத் தகுந்த நடுவர் மன்றத் தீர்ப்புச் சான்றிதழும் இணைக்கப்பட வேண்டும்.

விண்ணப்பப் படிவங்கள் பிற்சேர்க்கையாக இணைக்கப் பட்டுள்ளன :-

வா. ஆ. எண் 1474 நாள் 3-10-1978.

வா. ஆ. எண் 21 நாள் 7-6-1983.

வா. ஆ. எண் 411 நாள் 22-7-1983
வா. ஆ. எண் 51 நாள் 31-5-1984.

**வாரிசு வேலை வாய்ப்புப் பெற தகுதி இல்லாதவர்கள் :-**

1) குடும்ப உறுப்பினரில் ஒருவர் முன்னரே பணியில் இருந்து, குடும்பத்திற்கு ஆதரவாக - தாங்குதலாக இருப்பின், பணியில் இறந்த பணியாளரின் மற்ற வாரிசுகள் கருணை அடிப்படையில் பணி பெறத் தகுதி உடையவர் இல்லை.

வா.ஆ.எண். 46 நாள் 13-10-1995, வா.இ.தொ : 14/1995, பக் 507.

ஆனால்,

i) இறந்த பணியாளரின் வாரிசுகளில் ஒருவர் படைத் துறைப் பணியில் முன்னரே இருப்பினும் மற்ற வாரிசுகளில் ஒருவர் பணி பெறத் தகுதி உடையவர் ஆவார்.

வா.ஆ.எண். 13 நாள் 26-5-1992, வா.இ.தொ : 11/1992, பக் 298.

ii) இறந்த பணியாளரின் குடும்ப வாரிசுகளில் ஒருவர், பணியாளர் இறப்பதற்கு முன்னரே வேலையில் இருந்தும், குடும்பத்திற்கு எந்த விதமான உதவியும் அளிக்காத நிலையில் பிரிந்து தனித்து வாழ்கின்ற பொழுது, மற்ற தகுதியான வாரிசு, பணி பெறத் தகுதியானவர்.

கு.ஆ.எண். 105302/**R**3 (2)/1564/94-1. நாள் 14-11-1994.
வா.இ.தொ : 13/1994, பக் 548.

2) மறு பணி அமர்வில் உள்ள பணியாளர் பணியில் இறந்துபடின், அவர் வாரிசு கருணை அடிப்படையில் வேலை பெறத் தகுதியில்லை.

வா.ஆ.எண். 243 நாள் 9-11-1992. வா.இ.தொ : 11/1992, பக் 636.

**வாரிசு வேலை கேட்டு விண்ணப்பிக்கக் கால வரையறை :-**

1) பணியாளர் இறந்த நாளி-ருந்து மூன்றாண்டிற்குள் விண்ணப்பிக்க வேண்டும்.

வா.ஆ.எண். 46 நாள் 13-10-1995. வா.இ.தொ : 14/1995, பக் 507.

2) பணியாளர் இயலாமை ஓய்வு பெற்ற நாளி-ருந்து, மூன்றாண்டிற்குள் விண்ணப்பிக்க வேண்டும்.

வா.ஆ.எண். 51 நாள் 31-5-1984. வா.இ.தொ : 3/1984, பக் 335.



3) காணாமற் போன பணியாளர் இறந்து விட்டதாக நடுவர் மன்றம் தீர்ப்பு வெளியிட்ட மூன்றாண்டிற்குள் விண்ணப்பிக்க வேண்டும்.

வா.ஆ.எண். 227 நாள் 17-10-1998. வா.இ.தொ : 17/1998, பக் 9.

**நிர்வாக நடைமுறை :-**

இயலாமை ஓய்வுற்ற பணியாளரின் வாரிசு வேலை கேட்பு விண்ணப்பத்தை விண்ணப்பதாரர் குடியிருக்கும் எல்லைக்கு உட்பட்ட செயற்பொறியாளரும், மற்ற ***அனைத்து*** வகையினரின் விண்ணப்பங்களை உதவி செயற்பொறியாளரும் கள ஆய்வு செய்வார்.

கள ஆய்வின்போது, கீழ்க்கண்ட சான்றிதழ்களை வாரிசுகளிடமிருந்து பெற்றுச் சரி பார்த்துப் படிகளைச் சான்றொப்பம் இட்டுப் பெற்றுக் கொள்வார்.

1) வட்டாட்சியர் வழங்கிய வறிய நிலைச் சான்றிதழ். (பிற்சேர்க்கை)

வா.ஆ.எண். 330 நாள் 2-11-1993. வா.இ.தொ : 12/1993, பக் 558.

2) இறப்புச் சான்றிதழ்.

3) வாரிசு சான்றிதழ். (இயலாமை ஓய்வு பெற்றோர் வாரிசு நீங்கலாக)

4) கல்விச் சான்றிதழ்.

5) வயதுச் சான்றிதழ்.

6) குடும்ப உறுப்பினர் சான்றிதழ். (இயலாமை ஓய்வு பெற்றோர் வாரிசுக்கு மட்டும்.)

இயலாமை ஓய்வு பெற்றவரின் வாரிசுக்குக் கருணை அடிப்படையில் வேலை அமர்த்து ஆணை மின்வாரியத் தலைவரால் அளிக்கப்படும்.

கு.ஆ.எண். 022131/**R**6(1)/93-6 நாள் 27-10-1995.
வா.இ.தொ : 14/1995, பக் 513.

மற்றவர்களுக்குத் தலைமைப் பொறியாளர், பணியமைப்பு அவர்கள் வேலை அமர்த்து ஆணை அளிப்பார்.

## வாரிசுக்கு வேலை கேட்பு விண்ணப்பம்

1. அ. இறந்த வாரியப் பணியாளர் பெயர் :

   ஆ. இறக்கும்போது அவர் வகித்த பதவி :

   இ. இறந்த பணியாளரின் பிறந்த தேதி :

   ஈ. பணியில் இருந்தால் அவர் ஓய்வு பெறும் நாள் :

   உ. பணியாளர் இறந்த நாள் :

   ஊ. இறப்பிற்கான காரணம் :

   எ. பணியிலிருக்கும்போது இறப்பு நேரிட்டதா? அல்லது பணி ஓய்வுக்குப் பின்பா? :

   ஏ. இறந்த வாரியப் பணியாளர் கடைசியாகப் பணிபுரிந்த அலுவலகம், இடம் :

   ஐ. வாரியத்தில் பணிபுரிந்த மொத்தப் பணிக்காலம் :

2.. விண்ணப்பதாரரின் விவரங்கள்

   அ. பெயர் :

   ஆ. இறந்த பணியாளர்க்கும் அவர்க்கும் உள்ள உறவு :

   இ. இறந்த பணியாளரின் குடும்பத்தில் வேறு யாராவது பணியிலிருந்தால் அது பற்றிய விளக்கங்கள்:- (அதாவது மனைவி, மகன், மணமாகா மகள், விதவை மகள்,கணவரால் கைவிடப்பட்ட மகள் ஆகியோர்) :

   ஈ. மற்ற குடும்ப உறுப்பினரின் வேலையில்லாத நிலை குறித்து (அவரின் பெயர், படிப்பு, வயது, கல்வித்தகுதி ஆகியன பற்றிய விவரங்கள்) :

   உ. விண்ணப்பதாரர் இறந்த பணியாளரின் மனைவியாயிருப்பின் அவர் மறுமணம் செய்து கொண்டவரா? இல்லையா?என்ற விவரங்கள் :

   ஊ. விண்ணப்பதாரர் இறந்த பணியாளரின் மகளாயிருப்பின் அவர் விதவையா? திருமணமாகாதவரா? கணவனால் கைவிடப்பட்டவரா என்ற விவரங்கள் (சான்றுடன்) :

   எ. விண்ணப்பதாரரின் பிறந்த தேதி :

   ஏ. வயது :

   ஐ. கல்வித் தகுதி :

   ஒ. அஞ்சல் முகவரி :

   ஓ. நிரந்தர முகவரி :

இடம் : விண்ணப்பதாரரின் கையொப்பம்

நாள் :

### உறுதி மொழி

எங்கள் குடும்பத்தில் வேறு யாரும் பணியிலில்லை என சான்றளிக்கிறேன்.

குடும்ப மூத்த உறுப்பினரின் கையொப்பம்

விண்ணப்பதாரராகிய நான், மேலே அளித்துள்ள தகவல்கள் அனைத்தும் என் அறிவுக்கு எட்டிய வரை சரியானவையே என உறுதியளிக்கிறேன். பின் வரும் காலங்களில் அவற்றில் ஏதேனும் தவறான தகவல்கள் தரப்பட்டுள்ளது எனக் கண்டுபிடிக்கப் பட்டால் எனக்கு வழங்கப்படும் பணியை நீக்கிவிடலாம் என இதன் மூலம் ஒப்புதல் அளிக்கிறேன்.

விண்ணப்பதாரரின் கையொப்பம்

*திரு/திருமதி/செல்வி...........................................அவர்களை நன்றாகத் தெரியும். எனவே அவர் அளித்துள்ள விவரங்கள் உண்மை எனவும் சான்றளிக்கிறேன்.*

*வாரியத்தில் பணியாற்றும் நிரந்தரப் பணியாளர்*
*பெயர் :*
*முகவரி :*

*விண்ணப்பதாரரால் தொடுக்கப்பட்ட அனைத்து விவரங்களையும் சரிபார்த்து அவை அனைத்தும் உண்மை என சான்றளிக்கிறேன்.*

*தலைமை அலுவலரின் கையொப்பம்*
*பெயர் :*
*முகவரி :*

பணியாளர் இறப்புக் காரணமாக வாரிசுக்குக் கருணை அடிப்படையில் வேலை வாய்ப்புப் பெறுவதற்கான மாதிரிச் சான்று

வட்டாட்சியர் அலுவலகம்,
. . . . . . . . . . .

க. எண் : . . . . . . . . . . . .

/ சான்று /

* * *



வட்டம் மற்றும் நகரம், ----------- என்ற முகவரியில் வாழ்ந்து வரும் ------------------------ என்பவர் தன் மகன்/மகள் ---------------------- என்பவர்க்குக் கருணை அடிப்படையில் வேலை வாய்ப்புப் பெறுவதற்காகச் சான்று கோரி அளித்த விண்ணப்பம் தொடர்பாக விசாரணை செய்து . . . . . . . .வருவாய் ஆய்வர் அறிக்கை அனுப்பி வைத்துள்ளார்.

அவரின் அறிக்கை அடிப்படையில் கீழ்க்கண்டவாறு சான்று வழங்கப்படுகிறது.

1) இறந்து விட்ட ----------- என்பவரின் குடும்பத்தில் யாரும் அரசு மற்றும் தனியார் துறையில் பணி புரியவில்லை என்றும்,

2) மேற்படியாரின் குடும்பத்திற்கு அவர்கள் குடியிருந்து வரும் வீட்டைத் தவிர வேறு அசையும் மற்றும் அசையாச் சொத்துக்கள் ஏதும் இல்லை என்றும், வீட்டின் மதிப்பு ரூ ................ /- (ரூபாய் ----------------- மட்டும்) என்றும்,

3) இறந்து விட்ட ------------ என்பவரின் மனைவி திருமதி -------------------- என்பவருக்குக் குடும்ப ஓய்வூதியம் மூலம் ஆண்டு வருமானமாக ரூ ............... /- (ரூபாய் ----------- மட்டும்) கிடைத்து வருகிறது என்றும்,

4) விண்ணப்பிக்கும் திருமதி -------------------------- என்பவர் மறுமணம் செய்து கொள்ளவில்லை என்றும்,

5)மேற்படியாரின் குடும்பம் வறுமை சூழ-ல் தான் உள்ளது எனவும் சான்று வழங்கப்படுகிறது.

இச்சான்று இறந்து விட்ட ------------ என்பவரின் மகன்/மகள் ---------- என்பவருக்குக் கருணை அடிப்படையில் வேலை வாய்ப்புப் பெறுவதற்காக மட்டுமே வழங்கப்படுகிறது.

(ஒப்பம்)

வட்டாட்சியர்,
. . . . . . . . .

### இயலாமை காரணமாக ஓய்வு பெற்ற பணியாளரின் வாரிசுக்குக் கருணை அடிப்படையில் வேலை வாய்ப்புப் பெறுவதற்கான மாதிரிச் சான்று

வட்டாட்சியர் அலுவலகம்,
. . . . . . . . .

க.எண் : . . . . . . . . .

சான்று
* * *

. . . . . . . . . வட்டம் மற்றும் நகரம், ----------- என்ற முகவரியில் வாழ்ந்து வரும் ------------------------ என்பவர் தன் மகன்/மகள் --------------------- என்பவருக்குக் கருணை அடிப்படையில் வேலை வாய்ப்புப் பெறச் சான்றுகள் கோரி விண்ணப்பித்துக் கொண்டதன் பேரில் விசாரணையில் கீழ்க்காணும் நபர்கள் குடும்ப உறுப்பினர்கள் எனவும், அவர்களின் குடும்பத் தகுதி குறித்தும் கீழ்க்கண்டவாறு சான்றளிக்கப்படுகிறது.

1) திரு/திருமதி ------------------- வயது --- மனு அளிப்பவர்

2) திருமதி/திரு -------------- வயது --- மனைவி/கணவன்

3) திரு ------------------- வயது --- மகன்

4) செல்வி -------------- வயது --- மகள்

5) செல்வன் ----------- வயது --- மகன்

1) மேற்கண்ட குடும்ப உறுப்பினர்கள் எவரும் அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் பணியேதும் புரியவில்லை.

2) மனு அளிப்பவர்க்குக் குடும்ப ஓய்வூதியத்தின் மூலம் மாதம் ரூ ----------- /- வீதம் ஆண்டுக்கு ரூ --------- /- வருமானம் கிடைக்கிறது.



3) மனு அளிப்பவர் குடியிருக்கும் வீட்டின் மதிப்பு சுமார் ரூ ----------- /- இருக்கும். இச்சொத்து . . . . . . . . சகோதர, சகோதரிகளுக்குச் சொந்தமானது. இவரின் பாகச் சொத்தின் மதிப்பு ரூ ------------ /- ஆகும். இதைத் தவிர வேறு அசையும் மற்றும் அசையாச் சொத்துக்கள் ஏதுமில்லை.

4) மனு அளிப்பவரின் குடும்பம் போதிய வருவாயின்றி வறுமைச் சூழ-ல் உள்ளது.

(ஒப்பம்)

வட்டாட்சியர்,
. . . . . .

. . .
பெறுநர்
. . . . . . . . . .
. . . . . . . . . .
. . . . . . . . . .

*பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்துவைத்துக்*
*கேடுகெட்ட மானிடரே கேளுங்கள் - கூடுவிட்டிங்(கு)*
*ஆவிதான் போனபின்பு யாரே அனுபவிப்பார்*
*பாவிகாள் அந்தப் பணம்.*

***- ஔவையார்.***

### கற்கும் முறைமை

*கண்ட நூல்களை எல்லாம் கற்பதால் பயனில்லை. கற்க வேண்டிய நல்ல நூல்கள் என்று தேர்ந்தெடுத்துக் கொண்டு அவற்றை ஆழ்ந்து கற்க வேண்டும்; பழுதறக் கற்க வேண்டும். பொழுது போக்காக, வேடிக்கைக்காக நூல்களைக் கற்பது வீண் முயற்சி. ஆகையால், கற்றபின் வாழ்க்கையில் கடைப் பிடிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு ஆராய்ந்து கற்க வேண்டும். அப்போதுதான் கற்ற கல்விக்குத் தக்கவாறு நல்ல நெறியில் நிற்க முடியும்.*

**-மு. வரதராசனார்.**

## வாழ்நாள் நிலுவைத் தொகை
### (Life Time Arrears)

ஓய்வூதியர் இறந்துபட நேரின், ஓய்வூதியர் இறந்துபட்ட நாள்வரை ஓய்வூதியர்க்குச் சேர வேண்டிய நிலுவைத் தொகை ஓய்வூதியர் வாழ்நாள் நிலுவைத் தொகை எனப்படும். இந்நிலுவைத் தொகையை ஓய்வூதியரின் சட்டப்படியான வாரிசுகள் பெறற்கு உரியர்.

**நிலுவைத் தொகை பெறற்கு உரியர் :-**

அ. ஓய்வூதியர் இறப்பிற்குப் பிறகு, குடும்ப ஓய்வூதியம் பெறற்குத் தகுதி உடைய குடும்ப ஓய்வூதியர் வாழ்நாள் நிலுவைத் தொகையைப் பெறற்கு உரியர்.

ஆ. குடும்ப ஓய்வூதியம் பெறற்குத் தகுதி உடையவர் இல்லா நிலையில், சட்டப்படியான வாரிசுகள் அனைவரும் நிலுவைத் தொகையில் சமமான பங்குகளைப் பெறுவர்.

இ. வாழ்நாள் நிலுவைத் தொகையைப் பெறுவதற்கு முன்னர் ஒரு குடும்ப ஓய்வூதியர் இறப்பின், அவரின் சட்டப் படியான வாரிசுகள் அனைவரும் நிலுவைத் தொகையில் சமமான பங்குகளைப் பெறுவர். இச் சம பங்குகளைப் பெறற்கு உரிய வாரிசுகளில் யாரேனும் ஒருவர் பின்னர்த் தன் பங்கினைப் பெறற்கு முன்னர் இறந்துபட நேரின், அப்படி இறந்து பட்டவரின் சட்டப்படியான வாரிசுகள் அவரின் பங்குத் தொகையில் சமமான பங்குகளைப் பெறுதற்கு உரியர்.

க.எண்: 31645-Q2/96-1 நாள் 1-7-1996:வா.இ.தொ: 15/1996-6, பக் 1.

க.எண்: 37550-N1/94-1 நாள் 22.6.1994: வா.இ.தொ: 13/1994, பக் 313-314.

ஈ) ஓய்வுதியர், ஓய்வு பெற்ற காலத்தில் மணம் செய்து கொண்டிருந்து, பின்னர் இறப்பின், அப்படி மணம் செய்து கொண்ட மனைவி/கணவன் ஆகியோர்க்குக் குடும்ப ஓய்வூதியம், ஓய்வூதியர் இறந்த நாளில் இருந்து உண்டு. குடும்ப



ஓய்வூதியம் பெறற்கு உரிமையுடைய நாளில் உயிரோடிருந்து, அம்மனைவி/கணவன் அந்நாட்குப் பின்னர் இறப்பின், உரிமையுடைய அந்நாளி-ருந்து அவர் இறந்த நாள்வரைக்கான குடும்ப ஓய்வூதியத்தின் வாழ்நாள் நிலுவைத் தொகையை அவரின் குடும்ப உறுப்பினர்கள்/வாரிசுகள் பெறற்கு உரியர்.

வா.ஆ.எண் : 203 நாள் 11-11-1992. வா.இ.தொ : 11/1992. பக் 666.

**வாழ்நாள் நிலுவை பெற அமர்த்துமை (Nomination) :-**

ஓய்வூதியர் தான் இறக்க நேரின் தனக்குச் சேர வேண்டிய எல்லா நிலுவைத் தொகையினையும் பெறற்கு உரியர் என்று யாரையேனும் ஒருவரை அமர்த்துமை செய்ய வேண்டும்.

**வாழ்நாள் நிலுவைத் தொகை வழங்கு வழிமுறை :-**

இறந்து பட்ட ஓய்வூதியரின் குடும்ப உறுப்பினர் / சட்டப்படியான வாரிசுகட்கு ஓய்வூதியப் பலன்களை அளிக்கும் வழிமுறைகள் படியே வாழ்நாள் நிலுவைத் தொகையும் அளிக்கப்படும்.

வா.ஆ.எண் : 22 நாள் 30-1-1988. வா.இ.தொ : 7/1988. பக் 42.

*பொறையிலா வறிவு போகப்*
*புணர்விலா விளமை மேவத்*
*துறையிலா வசன வாவி*
*துகிலிலாக் கோலத் தூய்மை*
*நறையிலா மாலை கல்வி*
*நலமிலாப் புலமை நன்னீர்ச்*
*சிறையிலா நகரம் போலும்*
*சேயிலாச் செல்வ மன்றே.*

# ஓய்வூதியர் குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டம்

ஓய்வூதியர் குடும்பத்தினரின் பயன் கருதி, இந்நிதி வாரியத்தால் 1-4-1997 முதல் நடைமுறைப் படுத்தப்படுகிறது. ஓய்வூதியர் இறந்துபடின் ஏற்படும் உடனடி இன்னல்களினின்று குடும்பத்தினரைப் பாதுகாக்க ஏற்பட்ட திட்டம் இது. இத்திட்டம் ஓய்வூதியர்க்கு மட்டுமே; குடும்ப ஓய்வூதியர்க்கோ, மற்றவர்க்கோ பொருந்தாது.

**திட்ட விளக்கமும் அளிப்பும் :**

அ) 31-3-1997 அன்று ஓய்வூதியம் பெற்று வரும் அனைத்து ஓய்வூதியரும் 1-4-1997க்குப் பிறகு ஓய்வு பெறுவோரும் இத்திட்டத்தில் அடங்குவர்.

ஆ) ஒவ்வொரு ஓய்வூதியரிடமிருந்தும் இந்நிதிக்கான மாதப் பங்குத் தொகையாக 40 உரூபா பிடித்தம் செய்யப் படும். (1-2-2002 முதல் **இது** 70 உரூபாவாக உள்ளது.)

இ) இப்பங்குத் தொகை, ஓய்வூதியர் இறப்பு வரை பிடித்தம் செய்யப்படும்.

ஈ) இந்நிதி, தொடங்கப் பெற்ற 12 மாதங்கட்குப் பின்னர் நடைமுறையில் வரும்.

உ) ஓராண்டுப் பங்குத் தொகை செலுத்திய பின்னர் ஓய்வூதியர் இறந்து படின், அவரின் துணையர்க்கு (மனைவி/கணவன்) 25,000 உரூபா வழங்கப்படும்.

ஊ) துணையர் உயிரோடு இல்லை எனில், பெயர் குறிப்பிட்டு அமர்த்தப்பட்டவர் (Nominee) இருப்பின் அவர்க்கு வழங்கப்படும்.

எ) அப்படி அவரும் இல்லா நிலையில், இத்தொகை சட்டப்படியான எல்லா வாரிசுகட்கும் சமமாகப் பகிர்ந்தளிக்கப்படும்.



ஏ) இந்நிதியில் சேரும் தொகையைக் கொண்டே ஓய்வூதியர் இறப்பின், குடும்பத்தினர்க்கு 25,000 உரூபா வழங்கப்படும். வாரியப் பங்களிப்பு ஏதும் இந்நிதிக்குக் கிடையாது. நிதியில் சேர் தொகை ஓராண்டில் தீர்ந்து விடின், இறந்து பட்ட ஓய்வூதியர் குடும்பத்தினர்க்கு அவ்வாண்டில் அளிக்க இயலா நிலையில், அக்குடும்பத்தினர் அடுத்த நிதியாண்டில் நிதியளிப்புக் கோரி விண்ணப்பிக்க வேண்டும். (படிவம் இணைக்கப்பட்டுள்ளது)

வா.ஆ.எண் : 21 நாள் 26-3-1997.

வா.இ.தொ : 16/1997-3. பக்கம் 27.

**குடும்பப் பாதுகாப்பு நிதி பெறற்குரியர் :**

அ) ஓய்வூதியரின் துணையரே (மனைவி/கணவன்) பெறற்குரியர்.

ஆ) துணையர் உயிரோடு இல்லை எனில் ஓய்வூதியரால் பெயர் குறிப்பிட்டு அமர்த்தப் பெற்றவர்.

இ) பெயர் குறிப்பிட்டு அமர்த்தப்படாத நிலையில், வாரிசு சான்றிதழ் அடிப்படையில் ஓய்வூதியரின் வாரிசுகட்குச் சமமாகப் பகிர்ந்து அளிக்கப்படும்.

**பெயர் குறிப்பிட்டு அமர்த்துமை (Nomination) :-**

அ) துணையர் உயிரோடு இருப்பின், அவரைப் பெயர் குறிப்பிட்டு அமர்த்துமை தேவை இல்லை. இத்தொகை துணையர்க்கு மட்டுமே அளிக்கப்படும்.

ஆ) துணையர் உயிரோடில்லை என்றால், ஓய்வூதியர் தான் தேர்ந்தெடுக்கும் யாரை வேண்டுமானாலும் பணம் பெறுதற்கு அமர்த்துமை செய்யலாம்.

இ) யாரையும் அமர்த்துமை செய்யாமல் ஓய்வூதியர் இறந்துபடின், துணையரும் உயிரோடில்லை என்றால் இத் தொகை சட்டப்படியான எல்லா வாரிசுகட்கும் பகிர்ந்து அளிக்கப்படும்.

ஈ) முதலாவதாக அமர்த்துமை பெற்றவர் இறந்துபடின்,

ஓய்வூதியர் புதிதாக ஒருவரை அமர்த்தம் செய்யலாம். ஆனால், இது துணையர் உயிரோடு இல்லா நிலையிலேயே பொருந்தும்.

உ) ஓய்வூதியர் இறப்பிற்குப் பின்னர், இந்நிதித் தொகை ரா 25,000 உருபா பெறுதற்கு முன்னர் அமர்த்துமை பெற்றவர் இறக்க நேரின், இத்தொகை இறந்த அமர்த்துமை பெற்றவரின் வாரிசுகட்கு அளிக்கப்படும். ஓய்வூதியரின் சட்டப்படியான வாரிசுகட்கு அளிக்கப்படாது.

ஊ) குடும்பம் என்பது சட்டப்படியான துணையர், சட்டப்படியான குழந்தைகள், தத்துக் குழந்தைகள் அடங்கியது ஆகும்.

எ) ஓய்வூதியரைச் சார்ந்திராத வயது முதிர்ந்த மகன்கள், மணமான மகள்கள் அமர்த்துமைக்கு உரியர் அல்ல.

ஏ) ஓய்வூதியரைச் சார்ந்த வயது முதிர்ந்த மகன்கள், வயது முதிர்ந்த மணமாகா மகள்கள் அமர்த்துமைக்குத் தகுதி உரியவர்.

ஐ) ஓய்வூதியர் எத்தனை உறுப்பினரையும் அமர்த்துமை செய்யலாம்.

ஒ) ஓய்வூதியர் பெயர் குறிப்பிட்டு அமர்த்துமை செய்யத் தவறினும், அமர்த்துமை செல்லத் தகாது அமையினும் இத்தொகை சட்டப்படியான வாரிசுகட்கு வழங்கப்படும். இவ்வாரிசுகள் குடும்பம் என்ற விளக்கத்திற்குள் வரவில்லை எனினும் பெறற்கு உரியர்.

கு.ஆ.எண் : 4046 - **Q**2/9/82 நாள் 14-3-1998:
வா.இ.தொ : 17/1998-3, பக்கம் 15.
கு.ஆ.எண் : 92153 - **Q**2/98-2 நாள் 26-3-1999:
வா.இ.தொ : 18/1999-3, பக்கம் 30.

**திட்டத்தினின்று விலகல் :**

இத்திட்டம் ஓய்வூதியர் விருப்பைப் பொருத்ததே. பணியாளர் ஓய்வுறுபொழுது இத்திட்டத்தில் சேரத் தன் விருப்பு/ விருப்பின்மையை எழுதித் தெரிவிக்க வேண்டும். இத்திட்டத்தில்



சேர்ந்துள்ள ஓய்வூதியர், இத்திட்டத்தினின்றும் தன்னை விடுவித்துக் கொண்டு, அதுவரை பிடித்தம் செய்த தொகையைப் பெற்றுக் கொள்ளலாம்.

கு.ஆ.எண் : 54935 - **Q**2/97-7 நாள் 2-6-1998:
வா.இ.தொ : 17/1998-6, பக்கம் 5.

**தவணைப் பிடித்தம்- உயர்வு :**

அ) ஓய்வூதியர் பங்குத் தொகை 1-4-1997 முதல் 40 உருபா பிடித்தம் செய்யப்பட்டது.

வா.ஆ.எண்: 21 நாள் 26-3-1997. வா. இ.தொ: 16/1997-3. பக் 27.

ஆ) 1-6-2000 முதல் ஓய்வூதியர் பங்குத் தொகையான 40 உருபாவி-ருந்து 60 உருபாவாக உயர்த்தப்பட்டது.

வா.ஆ.எண்: 74 நாள் 30-9-2000. வா. இ.தொ: 19/2000-9. பக் 8.

இ) 1-2-2002 முதல் 60 உருபாவி-ருந்து 70 உருபாவாக உயர்த்தப்பட்டது.

வா.ஆ.எண்: 42 நாள் 14-2-2002.

*மதியா தார்முற்ற மதித்தொரு காற்சென்று*
*மிதியாமை கோடி பெறும்*
*உண்ணீ ருண்ணீரென் றுபசரியார் தம்மனையி*
*லுண்ணாமை கோடி பெறும்*
*கோடி கொடுத்துங் குடிப்பிறந்தார் தம்மோடு*
*கூடுதல் கோடி பெறும்*
*கோடா னுகோடி கொடுப்பினுந் தன்னுடைநாக்*
*கோடாமை கோடி பெறும்.*

## ஓய்வூதியர் குடும்பப் பாதுகாப்பு நிதி
## விண்ணப்பம்

விடுநர்

திருமதி --------------------------------

க/பெ (மறைந்த) --------------------

------------------------------------------

| கடவுச் சீட்டளவு நிழற்படம் (சான்றொப்பம் இடப்பட்டது) |
|---|

பெறுநர்

**உண்**முகத் தணிக்கை அலுவலர் (ஓய்வூதியம்),
தமிழ்நாடு மின்***னுற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்***,
முதல் மாடி, N.P.K.R.R. மாளிகை,
மின்வாரிய வளாகம்,
800, அண்ணா சாலை, சென்னை - 600 002.

ஐயா,

பொருள் : ............... மின் பகிர்மான வட்டம் - ஓய்வூதியர் குடும்பப் பாதுகாப்பு நிதி - வழங்கக் கோருதல்-

என் கணவர் திரு. ...................................... தமிழ்நாடு மின்***னுற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்***,தில் ------------------- ஆகப் பணியாற்றி ஓய்வு பெற்றுக் கடந்த -------- அன்று இயற்கை எய்திவிட்டார். அவருடைய ஓய்வூதிய அளிப்பு ஆணை எண் ((PPO No) -------- சேமிப்புக் கணக்கு எண் ............... . ........................ கிளை.

என் கணவரின் மாதாந்திர ஓய்வூதியத்தில் ஒவ்வொரு மாதமும் குடும்பப் பாதுகாப்பு நிதிக்காக 70 *உரூபா* பிடித்தம் செய்யப்பட்டு வந்துள்ளது. ஆகவே எனக்குக் குடும்பப் பாதுகாப்பு நிதி 25,000 *உரூபா* வழங்கக் கோருகிறேன். என் இந்தியன் வெளியக வங்கி(I.O.B.)ச் சேமிப்புக் கணக்கு எண். ........................ ................................. கிளை.

இத்துடன் என் கணவரின் இறப்புச் சான்றிதழின் மூலம் இணைத்துள்ளேன்.

இப்படிக்கு,

இடம் :
நாள் :
இணைப்பு : இறப்புச் சான்றிதழ் - மூலம்.
வங்கிக் கணக்குப் புத்தகப்படி.



## ஓய்வூதியர் மருத்துவ நல நிதி
## (Pensioners' Health Fund)

"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்"

குறள்- 948.

அகவை முதிர்ந்த நிலையில் நோயால் அல்லல் உற நேரும். ஓய்வூதியர் சில வகையான நோய்கட்குச் சில சிறப்புச் சிகிச்சைகளையும், அறுவை மருத்துவங்களையும் மேற்கொள்ள வேண்டி வரும். அப்படிப்பட்ட சிறப்புச் சிகிச்சைகள் அளிக்கப் போதிய வசதிகள் அரசு மருத்துவமனைகளில் இல்லாத நிலையில், இவ்வசதிகள் நிறைந்த வேறு மருத்துவ மனைகளில் பெறச் சிகிச்சைக்குப் பெருஞ்செலவு செய்வது என்பது தவிர்க்க இயலாதது. அச்சூழ்நிலையில், ஓய்வூதியர்க்குப் பண உதவி அளிப்பதற்கு என்று ஒரு தனி நிதியாக வாரியத்தால் ஓய்வூதியர் மருத்துவ நல நிதி 1-3-1997 முதல் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது.

**நிதி விளக்கம் :**

*அ) 1-3-1997 முதல் நடைமுறைக்கு வந்துள்ள இவ் ஓய்வூதியர் மருத்துவ நல நிதி, முதன் முதல் ஓய்வூதியர்க்கு மட்டுமே உதவுதற்காகத் தொடங்கப் பட்டது. 18-12-2010 முதற்கொண்டு இந்நிதி உதவி ஓய்வூதியரின் துணையர்க்கும் நீட்டிக்கப் பெற்றது. இதே நாளிலிருந்து குடும்ப ஓய்வூதியர்க்கும் அவர்தம் விருப்பின் மேல் இந்நிதி விரிவுபடுத்தப் பட்டுள்ளது.*

*ஆ) இந்நல நிதி தொடங்கப்பட்ட நாளில் ஓய்வூதியர் பங்களிப்பாக ஆண்டு தோறும் 5 உரூபா பிடிக்கப்பட்டு வந்தது, ஒவ்வொரு காலகட்டத்திலும் மாற்றங்கள் உற்று, இப்போது 18-12-2010 முதல் ஓய்வூதியரிடமிருந்து மாதத்திற்கு 100 உரூபா ஓய்வூதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்படுகிறது. குடும்ப ஓய்வூதியரிடமிருந்து இந்நிதிப் பங்களிப்பாக மாதத்திற்கு 75 உரூபா பிடித்தம் செய்யப் படுகிறது.*

இ) இந்நல நிதி தொடங்கப் பெற்ற 1-3-1997 இல் 25,000 உரூபா ஆக இருந்த மருத்துவ உதவித் தொகை, 1-11-1999 இல் 50, 000 உரூபாவாக உயர்ந்து, 1-4-2008 முதல் 1,00,000 உரூபாவாக உயர்ந்து உள்ளது.

ஈ) இந்நிதியிலிருந்து மருத்துவச் செலவாக, இப்போது 1,00,000 உரூபா அல்லது சிகிச்சைக்கான உண்மைச் செலவில் 75%, இவற்றில் எது குறைவோ, அத்தொகை பண உதவியாக அளிக்கப்படும்.

1, உதவித் தொகை ஓர் இலக்கம் (1,00,000) உரூபா என்பது, ஓய்வூதியர், அவர்தம் துணையர் ஆகிய இருவர்க்கும் இணைந்ததே ஆகும்.

2. இவ் ஓர் இலக்கம் (1,00,000) உரூபா உதவித் தொகை, ஓய்வூதியர், அவர்தம் துணையர் வாழ்நாள் மு.முமைக்கும் ஆனது. இது குடும்ப ஓய்வூதியர்க்கும் பொருந்தும்.

3. இந்நல நிதிப் பயன் ஓய்வூதியர்க்கும் அவர்தம் துணையர்க்கும் குடும்ப ஓய்வூதியர்க்கும் மட்டுமே மற்ற சார்ந்த யார்க்கும் பொருந்தாது.

இதற்கான விவரங்கள் கீழ் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| வாரிய ஆணை எண் | பிடித்தம் / மாதம் / ஆண்டு உரூபா | நிதியுதவி அளவு உரூபா | ஆணை-தொடக்க நாள் | பயனுறுவர் |
|---|---|---|---|---|
| 23/2-4-1997 | 5/-ஆ | 25,000/- | 1-3-1997 | ஓய்வூதியர் |
| 28/24-4-1998 | 10/-ஆ | 25,000/- | மே-1998 | ‘‘ |
| 72/1-11-1999 | 5/-மா | 50.,000/- | 1-11-1999 | ‘‘ |
| 2/11-1-2002 | 10/-மா | 50,000/- | 1-10-2001 | ‘‘ |
| 39/24-9-2007 | 20/-மா | 50,000/- | 1-10-2007 | ‘‘ |
| 132/16-7-2008 | 50/-மா | 1,00,000/- | 1-4-2008 | ‘‘ |
| 13/18-12-2010 | 100/-மா | 1,00,000/- | 18-12-2010 | ஓய்வூதியர்-துணையர் |
| 14/18-12-2010 | 75/-மா | 1,00,000/- | 18-12-2010 | குடும்ப ஓய்வூதியர் |



உ) இந்நல நிதி தொடங்கப் பெற்ற காலத்தினின்று, இந்நிதி உதவியைப் பெறுதற்கான நிபந்தனைகள், வரையறைகள் பலவாக இருந்து வந்தன. சிறப்புச் சிகிச்சைகள் இவைகள் என்றும் சிகிச்சை பெற ஒப்புதல் அளிக்கப்பட்ட மருத்துவ மனைகளின் பட்டியல் இஃதென்றும் முன்னர் விதிக்கப்பட்ட பல்வேறு வரையறைகள் இப்போது அறவே நீக்கப்பட்டு விட்டன.

வாரிய ஆணை எண்: 15 நாள் 18-12-2010 இன் வழி, உடனடியாகப் பழைய வரையறைகள் அகற்றப்பட்டு, இந்தியாவின் எந்த ஒரு மாநிலத்திலும் எந்த ஒரு மருத்துவ மனையிலும் எந்த வகையான நோய்க்கும் ஓய்வூதியர் சிகிச்சை பெறலாம் என்று ஆணை இடப்பட்டுள்ளது.

ஆனால், மருத்துவச் செலவாக 1,00,000 உரூபா அல்லது உண்மையில் ஏற்படும் செலவில் 75%, இவற்றில் எது குறைவோ என்ற கட்டுப்பாடு தமிழ் மாநிலத்தில் பெறும் சிகிச்சைகட்குத் தொடரப், பிற வெளி மாநில மருத்துவ மனைகளில் பெறும் சிகிச்சைகட்குச் செலவில் 50% மட்டுமே ஒப்புதல் அளிக்கப் பட்டு வருகிறது.

உயர்குடி நனியுட் டோன்றல்
ஊனமில் யாக்கை யாதல்
மயர்வறு கல்வி கேள்வித்
தன்மையால் வல்ல ராதல்
பெரிதுண ரறிவே யாதல்
பேரறங் கோடல் என்றாங்
கரிதிவை பெறுதல் ஏடா
பெற்றவர் மக்கள் என்பார்.
- வளையாபதி.

## மருத்துவ நலநிதி வேண்டு விண்ணப்பம்
(ஓய்வூதியர் / குடும்ப ஓய்விதியர்க்கானது)

அனுப்புநர்

பெறுநர்

உள் தணிக்கை அலுவலர் (ஓய்வூதியம்),
தமிழ்நாடு மின்வாரியக் கழகம்,
மின்வாரிய வளாகம்,
144, அண்ணாசாலை,
சென்னை-600002.

அய்யா,

பொருள்: ஓய்வூதியர் **மருத்துவ நலநிதியி**ன் கீழ் மருத்துவ செலவை ஈடு செய்ய வேண்டல்.

நான் தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகத்தின் ------------------------------மின்பகிர்மான வட்டத்தில்----------------------------------அன்று ஓய்வு பெற்று ஓய்வூதியம் பெற்று வருகிறேன். என் ஓய்வூதிய ஆணை எண்:----------------------.

என்--------------------------------------நோய்க்கு ------------------- அன்று உள் சிகிச்சைக்காக ------------------------------------------------- மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு அறுவை சிகிச்சை செய்து கொண்டேன்

மேற்கண்ட சிகிச்சைக்கு என்னால் செலவு செய்யப்பட்ட



------------------உருபாய்க்கானப் பட்டியலையும் மருத்துவமனை விடுவிப்புச் சுருக்கத்தையும் (Discharge summary) இத்துடன் இணைத்துள்ளேன். இப்பட்டியலை அனுமதித்துச் செலவுத் தொகையை ஈடுசெய்யக் கேட்டுக்கொள்கிறேன்.

**சான்றளிப்பு**

1. இச் சிகிச்சைத் தொடர்பாக எந்தக் காப்பீட்டுக் கழகத்திடமிருந்தோ அரசு அல்லது தனியார் மருத்துவ நிதி நிறுவனத்திடமிருந்தோ எவ்வித நிதி உதவியும் பெறப்படவில்லை எனச் சான்றளிக்கிறேன்.

2. இச் சிகிச்சைக்கான மருத்துவப் பட்டியல் போலியானது அல்லது தவறானது எனப் பின்னர்த் தெரிய வந்தால், வழங்கப்பட்ட தொகையை வட்டியுடன் ஒரே தவணையில் திரும்பச் செலுத்திவிடுகிறேன் என உறுதி அளிக்கிறேன்.

3. இதற்கு முன்னர் எனக்கோ என் துணைக்கோ மருத்துவ நல நிதியின் கீழ் எந்த உதவியும் பெறவில்லை.

(அல்லது)

இதற்கு முன்னர் எனக்கு / என் துணைக்கு மருத்துவ நல நிதியின் கீழ்.......................... அன்று............................உருபாவுக்குப் பட்டியல் அளித்துப் பணம் பெற்றுள்ளேன் / பட்டியல் அளித்துள்ளேன்.

வணக்கம்.

தங்கள் உண்மையுள்ள,

இணைப்புக்கள்:

1. மருத்துவமனை விடுவிப்புச் சுருக்கம் (Discharge summary)
2. மருத்துவ செலவுப் பட்டியல்

## மருத்துவ நலநிதி வேண்டு விண்ணப்பம்
(துணையர்க்கானது)

அனுப்புநர்

பெறுநர்

உள் தணிக்கை அலுவலர் (ஓய்வூதியம்),
தமிழ்நாடு மின்வாரியக் கழகம்,
மின்வாரிய வளாகம்,
144, அண்ணாசாலை,
சென்னை-600002.

அய்யா,

பொருள்: ஓய்வூதியர் **மருத்துவ நலநிதியி**ன் கீழ் மருத்துவ செலவை ஈடு செய்ய வேண்டல்.

நான் தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகத்தின் ------------------------------மின்பகிர்மான வட்டத்தில்------------------------------------அன்று ஓய்வு பெற்று ஓய்வூதியம் பெற்று வருகிறேன். என் ஓய்வூதிய ஆணை எண்:----------------------.

என் மனைவி / கணவர் திருமதி / திரு ---------------------------------------------- அவர்களின் -------------------------நோய்க்கு -------------------------------- அன்று உள் சிகிச்சைக்காக------------------------------------------------------------ மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.



மேற்கண்ட சிகிச்சைக்கு என்னால் செலவு செய்யப்பட்ட ------------------உருபாய்க்கானப் பட்டியலையும் மருத்துவமனை விடுவிப்புச் சுருக்கத்தையும் (Discharge summary) இத்துடன் இணைத்துள்ளேன். இப்பட்டியலை அனுமதித்துச் செலவுத் தொகையை ஈடுசெய்யக் கேட்டுக்கொள்கிறேன்.

### சான்றளிப்பு

1. இச் சிகிச்சைத் தொடர்பாக எந்தக் காப்பீட்டுக் கழகத்திடமிருந்தோ அரசு அல்லது தனியார் மருத்துவ நிதி நிறுவனத்திடமிருந்தோ எவ்வித நிதி உதவியும் பெறப்படவில்லை எனச் சான்றளிக்கிறேன்.

2. இச் சிகிச்சைக்கான மருத்துவப் பட்டியல் போலியானது அல்லது தவறானது எனப் பின்னர்த் தெரிய வந்தால், வழங்கப்பட்ட தொகையை வட்டியுடன் ஒரே தவணையில் திரும்பச் செலுத்திவிடுகிறேன் என உறுதி அளிக்கிறேன்.

3. இதற்கு முன்னர் எனக்கோ என் துணைக்கோ மருத்துவ நல நிதியின் கீழ் எந்த உதவியும் பெறவில்லை.

(அல்லது)

இதற்கு முன்னர் எனக்கு / என் துணைக்கு மருத்துவ நல நிதியின் கீழ்.......................... அன்று.............................உருபாவுக்குப் பட்டியல் அளித்துப் பணம் பெற்றுள்ளேன் / பட்டியல் அளித்துள்ளேன்.

வணக்கம்.

தங்கள் உண்மையுள்ள,

இணைப்புக்கள்:

1. மருத்துவமனை விடுவிப்புச் சுருக்கம் (Discharge summary)
2. மருத்துவ செலவுப் பட்டியல்

# ஓய்வூதியர் மருத்துவச் செலவு ஈடுசெய் திட்டம்

## (Reimbursement of Medical Bills)

பணி ஓய்வு பெற்ற ஓய்வூதியர், அவரின் துணையர் மற்றும் குடும்ப ஓய்வூதியர் தமிழ்நாட்டு மருத்துவ மனைகளில் உள் நோயாளிகளாகத் தங்கிச் சிகிச்சைப் பெற்று, அதற்கான செலவுத் தொகையைத் திரும்பப் பெறுதற்கான திட்டம் இது. இம் மருத்துவச் செலவைத் திரும்பப் பெறுதற்குக் கீழ்க்கண்ட படிவங்களில் விண்ணப்பித்தல் வேண்டும்.

வா.ஆ.எண்: 4 நாள் 21-2-2004.

வா.ஆ.எண்: 12 நாள் 21-4-2007.

கு.ஆ.எண்: 33621 நாள் 19-6-2008.

### திருவருட்பா.

*ஈயென்று நான்ஒருவ ரிடம்நின்று கேளாத*
*இயல்பும்என் னிடம் ஒருவர் ஈது*
*இடுஎன்ற போதுஅவர்க்கு இலையென்று சொல்லாமல்*
*இடுகின்ற திறமும் இறையாம்*
*நீயென்றும் எனைவிடா நிலையும் நான்என்றும் உள்*
*நினைவிடா நெறியும் அயலார்*
*நிதியொன்றும் நயவாத மனமும்மெய்ந் நிலைஎன்றும்*
*நெகிழாத திடமும் உலகில்*
*சீயென்று பேய்என்று நாய்என்று பிறர்தமைத்*
*தீங்கு சொல்லாத தெளிவும்*
*திறமொன்று வாய்மையும் தூய்மையும் தந்துநின்*
*திருவடிக்கு ஆளாக்கு வாய்*
*தாயொன்று சென்னையிற் கந்தக்கோட்டத்துள் வளர்*
*தலமோங்கு கந்த வேளே*
*தண்முகத் துய்யமணி உன்முகச் சைவமணி*
*சண்முகத் தெய்வ மணியே.*

**-வள்ளலார்**



மருத்துவச் செலவை ஈடுசெய் திட்டம்
நிதி வேண்டு விண்ணப்பம்
(ஓய்வூதியர் / குடும்ப ஓய்விதியர்க்கானது)

அனுப்புநர்

பெறுநர்
உள் தணிக்கை அலுவலர் (ஓய்வூதியம்),
தமிழ்நாடு மின்வாரியக் கழகம்,
மின்வாரிய வளாகம்,
144, அண்ணாசாலை,
சென்னை-600002.

அய்யா,

பொருள்: ஓய்வூதியர் **மருத்துவச் செலவை ஈடுசெய் திட்டத்**தின்கீழ் மருத்துவச் செலவை ஈடுசெய்ய வேண்டல்.

நான் தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகத்தின் ----------------------------மின்பகிர்மான வட்டத்தில்---- ----------------------அன்று ஓய்வு பெற்று ஓய்வூதியம் பெற்று வருகிறேன். என் ஓய்வூதிய ஆணை எண்:--------------------.

என்-------------------------------நோய்க்கு-------------------------
அன்று உள் சிகிச்சைக்காக ----------------------------------

------------------------மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு அறுவை சிகிச்சை செய்து கொண்டேன்.

மேற்கண்ட சிகிச்சைக்கு என்னால் செலவு செய்யப்பட்ட ------------------உரூபாய்க்கான பட்டியலையும் மருத்துவமனை விடுவிப்புச் சுருக்கத்தையும் (Discharge summary) இத்துடன் இணைத்துள்ளேன். இப்பட்டியலை அனுமதித்துச் செலவுத் தொகையை ஈடுசெய்யக் கேட்டுக்கொள்கிறேன்.

**சான்றளிப்பு**

1. இச் சிகிச்சைத் தொடர்பாக எந்தக் காப்பீட்டுக் கழத்திடமிருந்தோ அரசு அல்லது தனியார் மருத்துவ நிதி நிறுவனத்திடமிருந்தோ எவ்வித நிதி உதவியும் பெறப்படவில்லை எனச் சான்றளிக்கிறேன்.

2. இச் சிகிச்சைக்கான மருத்துவப் பட்டியல் போலியானது அல்லது தவறானது எனப் பின்னர்த் தெரிய வந்தால், வழங்கப்பட்ட தொகையை வட்டியுடன் ஒரே தவணையில் திரும்பச் செலுத்திவிடுகிறேன் என உறுதி அளிக்கிறேன்.

3. இதற்கு முன்னர் எனக்கோ என் துணைக்கோ மருத்துவச் செலவை ஈடு செய்யும் திட்டத்தின் கீழ் எந்த உதவியும் பெறவில்லை.

(அல்லது)

இதற்கு முன்னர் எனக்கு / என் துணைக்கு மருத்துவச் செலவை ஈடு செய்யும் திட்டத்தின் கீழ் ........................ அன்று............................உரூபாவுக்குப் பட்டியல் அளித்துப் பணம் பெற்றுள்ளேன் / பட்டியல் அளித்துள்ளேன்.



வணக்கம்.

தங்கள் உண்மையுள்ள,

இணைப்புக்கள்:

1. மருத்துவமனை விடுவிப்புச் சுருக்கம் (Discharge summary)
2. மருத்துவ செலவுப் பட்டியல்
3. வேண்டல் படிவம்

## மருத்துவச் செலவை ஈடுசெய் திட்டம் நிதி வேண்டு விண்ணப்பம்

(துணையர்க்கானது)

அனுப்புநர்

பெறுநர்
உள் தணிக்கை அலுவலர் (ஓய்வூதியம்),
தமிழ்நாடு மின்வாரியக் கழகம்,
மின்வாரிய வளாகம்,
144, அண்ணாசாலை,
சென்னை-600002.

அய்யா,

பொருள்: ஓய்வூதியர் **மருத்துவச் செலவை ஈடுசெய் திட்ட**த்தின்கீழ் மருத்துவச்செலவை ஈடுசெய்ய வேண்டல்.

நான் தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகத்தின் ------------------------------மின்பகிர்மான வட்டத்தில்----------------------------அன்று ஓய்வு பெற்று ஓய்வூதியம் பெற்று வருகிறேன். என் ஓய்வூதிய ஆணை எண்:-------------------------.

என் மனைவி / கணவர் திருமதி / திரு------------------------------------------------ அவர்களின் ------------------------ நோய்க்கு-------------------------அன்று உள் சிகிச்சைக்காக---------------------------------------------------மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.

மேற்கண்ட சிகிச்சைக்கு என்னால் செலவு செய்யப்பட்ட ------------------உரூபாய்க்கான பட்டியலையும் மருத்துவமனை விடுவிப்புச் சுருக்கத்தையும் (Discharge summary) இத்துடன் இணைத்துள்ளேன். இப்பட்டியலை அனுமதித்துச் செலவுத் தொகையை ஈடுசெய்யக் கேட்டுக்கொள்கிறேன்.

**சான்றளிப்பு**

1. இச் சிகிச்சைத் தொடர்பாக எந்தக் காப்பீட்டுக் கழத்திடமிருந்தோ அரசு அல்லது தனியார் மருத்துவ நிதி நிறுவனத்திடமிருந்தோ எவ்வித நிதி உதவியும் பெறப்படவில்லை எனச் சான்றளிக்கிறேன்.

2. இச் சிகிச்சைக்கான மருத்துவப் பட்டியல் போலியானது அல்லது தவறானது எனப் பின்னர்த் தெரிய வந்தால், வழங்கப்பட்ட தொகையை வட்டியுடன் ஒரே தவணையில் திரும்பச் செலுத்திவிடுகிறேன் என உறுதி அளிக்கிறேன்.

3. இதற்கு முன்னர் எனக்கோ என் துணைக்கோ மருத்துவச் செலவை ஈடு செய்யும் திட்டத்தின் கீழ் எந்த உதவியும் பெறவில்லை.

(அல்லது)



இதற்கு முன்னர் எனக்கு / என் துணைக்கு மருத்துவச் செலவை ஈடு செய்யும் திட்டத்தின் கீழ் ........................ அன்று............................உரூபாவுக்குப் பட்டியல் அளித்துப் பணம் பெற்றுள்ளேன் / பட்டியல் அளித்துள்ளேன்.

வணக்கம்.

தங்கள் உண்மையுள்ள,

இணைப்புக்கள்:

1. மருத்துவமனை விடுவிப்புச் சுருக்கம் (Discharge summary)
2. மருத்துவ செலவுப் பட்டியல்
3. வேண்டல் படிவம்

## தாய்மொழி

கன்னற் சுவையே கனியே கழைத்தேனே
உன்னற் கினிய உணர்வே உறுமூச்சே
பண்ணிற் றமிழே பழகவரு தீங்காற்றே
மண்ணின் மணியே மறுவில் முழுமதியே
என்னையீங் கீன்றளித்த என்றாயின் மிக்கவுயர்
முன்னை முதற்பொருளே மூலமுத லானவளே
உன்னின் உயர்ந்த உலகில்லை உண்மையதால்
என்றும் உயிர்நீ எமக்கு.

**சேய்.**

## MEDICAL CERTIFICATE TO BE FILLED IN BY THE DOCTOR TREATING THE PATIENT.

(Board's letter No: 33621 / A 19 / A192 /2008 - 1 dt 19 -06- 2008)

1. Name of the patient and age :
2. Date of Admission :
3. Date of discharge :
4. Name of Surgeon / Physician :
5. Diagnosis :
6. Date of First Consultation : (Prior to Hospitalization)
7. ( A ) With what complaints was : patient admitted for

   ( B ) Since when was the patient : suffering from the said complaints
8. Past History of the patient (if any): with the duration of illness.
9. whether the present ailment is an : implication of pre-existing disease?

   If yes, please specify the disease : ( or ) implication of any previous surgery done? Is yes, please specify the details.
10. Whether the disease/disorder is : congenital in nature?
11. Nature of surgery/treatment : given for the present ailment.
12. Whether hospital/Nursing home : is registered, if yes, Regn. no.

Date

Signature of the Doctor
with seal



## ESSENTIALITY CERTIFICATE

I certify that thiru…………...........……the pensioner holding the PPO No………..of TNEB Chennai-2 has been under treatment at my consulting room and that the under mentioned medicines prescribed by me in this connection were essential for the recovery of the patient.

2. The medicines do not include proprietary preparation for which cheaper substitutes of equal therapeutic value are available for preparations which are primarily foods of disinfectants.

PERIOD OF TREATMENT: FROM ………..TO……………

NATURE OF ILLNESS :

| Sl.No. | Name of medicines | Bill No. and date | Amount |
|---|---|---|---|

Signature & designation of the
Authorized Medical Attendant.

Note:

1) The authorized medical attendant or the medical officer in charge of the case in the hospitals prohibited from prescribing expensive drugs, tonics, lucrative or other elegant and proprietary preparations when drugs of equal therapeutic value are available in the hospital/dispensary.

2) The reimbursement of the cost of preparations which are not medicines but are primarily foods ,tonics, toilet preparations of disinfectants is not admissible.

3) In the case of "Diabetics" the date of first detection of the disease should also be indicated.

TAMILNADU ELECTRICITY BOARD

CLAIM FORM

Pension Payment Order Number :
Name & Address of the Pensioner.
(in whose name PPO is issued )

Details of person.
( in respect of whom claim is made )

a) Name & relationship with the pensioner :

b) Present completed Age :

c) Phone No. Mobile No. :

d) E-mail address :

AILMENT/ DISEASE/ INJURY :

Date of injury sustained or disease/ illness first detected. Name of the Hospital (Block )

a) Have you or the person for whom the claim : is made, been insured under any medical scheme earlier.

If yes, Xerox copies or previous year's policies must be enclosed.

b) Date of commencement of very first : insurance for this insured person with continuous insurance coverage.

Have you preferred any claim for the same : insured person under the Mediclaim scheme earlier, if so give details viz.

a) Previous Claim File ref. No/ office :

b) Diagnosis :

c) Whether settled/ repudiated :

d) Amount ( if settled ) : Rs.



Date of Admission :

Date of Discharge :

Total amount claimed : Rs.

If the claim is of Hospitalization please indicate

a) Date of commencement of the treatment :

b) Date of completion of treatment :

c) Name & Address of attending Medical : Practioner with Telephone No. & Registration No.

Signature of the Claimant

I have incurred the expenses for the treatment of the disease / illness/ accident as per schedule mentioned below :

Schedule of Expenses incurred by the Claimant :

| DATE | BILL No | DESCRIPTION | AMOUNT CLAIMED | FOR OFFICE USE ONLY |
|---|---|---|---|---|
| | | CONSULTATION | | |
| | | ACCOMADATION | | |
| | | DIET | | |
| | | NURSING | | |
| | | OTHER CHARGES | | |

Station : Signature

Date :

CERTIFICATE

Certified that I have not availed the mediclaim policy taken from United India Insurance health or any other financial assistance for the treatment.

## UNDERTAKING

I - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -retired from T N E B (pensioner holding PPO No: - - - - - ) hereby undertake that I will repay the entire amount with intrest to the Board , if the medical claim bills were found to be FAKE at a later date.

Signature of the claimant.

<u>In support of the claim ,I enclose the following documents</u>

| | |
|---|---|
| Claim form duly signed | Yes / No |
| Discharge Summary | Yes / No |
| Hospitalization Bills | Yes / No |
| Doctors Surgery Certificate if any | Yes / No |
| Surgery/Consultation Bill (if any ) | Yes / No |
| Operation Theatre | |
| Pharmacy bills | |
| Medicine Bills<br>Dr's prescription | Yes / No |
| Hospitalization Bill &<br>No(s) of Bills<br>(Countersigned by the Doctor) | Yes / No |
| Hospital payment Receipt<br>(with due revenue stamp) | Yes / No<br>Yes / No |
| 1. MRI | Yes / No |
| 2. CT Scan | Yes / No |
| 3. ECG | Yes / No |
| 4. X-ray | Yes / No |
| 5. US Scan | Yes / No |
| Lab reports with Dr's request<br>No.(s) of rep | Yes / No |



| | |
|---|---|
| Death Certificate/LHC<br>(wherever necessary) | Yes / No |
| Others if any | Yes / No |

Previous claims if any::

I hereby declare that the above information is true & correct to the best of my knowledge and belief. If I have made any false, fraud or untrue statement, suppression or concealment, my right to claim reimbursement of the expenses shall be forfeited.

I also consent and authorize Tamil Nadu Electricity Board to seek medical information from any Hospital / medical practioner who has any time attended the above patient.

I hereby declare that I have included all bills/receipts for purpose of this claim and that I will not be making any supplementary claim in respect thereof except the post Hospitalization claim if any.

Signature of the claimant.

கள்ளாமை வேண்டும் கடிய வருதலால்
தள்ளாமை வேண்டும் தகுதி உடையன
நள்ளாமை வேண்டும் சிறியரொடு யார்மாட்டும்
கொள்ளாமை வேண்டும் பகை.

விளம்பி நாகனார்,
நான்மணிக்கடிகை.

## விழா முன்பணம்

பணியிலுள்ள பணியாளர்க்கு அளிக்கப்பட்டு வருவதைப் போன்றே, விழாக்களைக் குடும்பத்தினருடன் சிறப்பாகவும், மகிழ்ச்சியாகவும் கொண்டாட ஓய்வூதியர்க்கும் விழா முன் பணம் வழங்கப்பட்டு வருகிறது.

பல்வேறு கால கட்டங்களில் வழங்கப்பட்ட விழா முன் பணச் செய்திகள் கீழே விளக்கப்பட்டுள்ளன.

| எண் | வாரிய ஆணை | விழா முன் பண அளவு | பெறற்கு உரியர் |
|---|---|---|---|
| 1. | 76/24-2-1981 | 100 உரூபா அல்லது ஓய்வூதிய அளவு - எது குறைவோ அது. | ஓய்வூதியம் உரூபா 750/-க்கு மிகாது பெறுபவர். |
| 2. | 342/28-12-1989. இதழ் தொ : 3/89, பக். 1002. | 300 உரூபா அல்லது ஓய்வூதிய அளவு - எது குறைவோ அது. | ஓய்வூதியம் உரூபா 750/-க்கு மிகாது பெறுபவர். |
| 3. | 174/17-10-1992. இதழ் தொ : 11/92,பக். 584. | 500 உரூபா அல்லது ஓய்வூதிய அளவு - எது குறைவோ அது. | ஓய்வூதியம் பெறும் அனைவர்க்கும். |
| 4. | 242/8-10-2007 | 1000 உரூபா (ஓய்வூதிய வரையறை நீக்கப்பட்டது) | ஓய்வூதியம் பெறும் அனைவர்க்கும். |

**விழா முன் பண விண்ணப்பிப்பு :-**

1. ஒவ்வொரு ஆண்டும் வாடிக்கையாக விழா முன் பணம் வேண்டுமென விரும்பும் ஓய்வூதியர் *ஒரு முறை மட்டும்* **விண்ணப்பித்தல் போதுமானது**. மற்றவர் விழா முன் பணம் வேண்டித் தேவைப்படும் போது **விண்ணப்பம்** அளிக்க வேண்டும்.



2. வாடிக்கையாக ஒவ்வொரு ஆண்டும் குறிப்பிட்ட விழாவிற்கான விழா முன் பணம் ஓய்வூதியத்தோடு வேண்டுவோர், அதற்கான விருப்புக் கடிதம் தலைமை உண்முகத் தணிக்கை அலுவலர், தணிக்கைப் பிரிவு, சென்னை அவர்க்கு அளிக்க வேண்டும்.

3. வாடிக்கையாக விழா முன் பணம் வேண்டி ஒரு முறை அளித்த விண்ணப்பக்கடிதம் இறுதியானது.

வா.ஆ.எண்: 90 நாள் 31-3-1998. வா. இ.தொ: 17/1998-3. பக் 19.

***ஙசமூன் ச்னுலவி நூடீவு டூச்அூண***

- *ஒருவர் மீது ஒருவர் எப்போதும் கடுஞ் சொற்களை வீசக்கூடாது.*
- *வீட்டு வேலைகளைச் செய்வதில் சமத்துவம் நிலவ வேண்டும்.*
- *சிறிய தவறு செய்தாலும் உடனே மன்னிப்புக் கேட்டுக் கொள்ள வேண்டும்.*
- *இருவரில் யார் எந்தத் தவறு செய்தாலும், அதை மற்றவர் பெரிதாக்கக் கூடாது. உடனே மன்னிக்க வேண்டும்.*
- *வீட்டுக்கு அடிக்கடி விருந்தினரை அழைக்க வேண்டும். பிறர் வீடுகட்கும் அடிக்கடி செல்ல வேண்டும்.*
- *யார் மீதும் யாரும் ஆதிக்கம் செலுத்தக் கூடாது. சுதந்திரம் என்பது மிக முக்கியம்.*
- *ஒருவர்க்கு ஒருவர் விட்டுக் கொடுத்தல் வேண்டும்.*
- *வாய்விட்டுச் சிரித்தல் மிக இன்றியமையாதது. நகைச்சுவைக்கான உணர்வை வளர்த்துக் கொள்ளல் வேண்டும்.*
- *ஒஐடாநூஅ நூன்னுல வி பே பிரிம ச்ா டூணன் ஒன்கின்டீ டஅபினுஙனும சூருமூள ச்லதிர் ச்ஙூடீமூள ஆஞ்சாங வினுஞஙங டூமூ உ அே.*

# பொங்கற் பரிசு

பணியாளர்க்கு வாரியம் ஒவ்வொரு ஆண்டும் மிகை ஊதியம் (Bonus) வழங்கி வருகிறது. வரையறுக்கப்பட்ட ஊதியத்திற்கு மேலுள்ளவர்க்கு மிகை ஊதியம் பெறத் தகுதி இல்லா நிலையில், அவரும் பயனடையும் வகையில் ஓர் ஒட்டு மொத்த சிறு தொகையைக் கருணை அளிப்பாக (Exgratia) ஒவ்வொரு ஆண்டும் வாரியம் அளித்து வருகிறது. அதே போல், ஒய்வூதியர்க்கும் ஒரு சிறு தொகையைப் பொங்கல் பரிசாக ஒவ்வொரு ஆண்டும் 1990 முதல் அளித்து வருகிறது.

**பொங்கற் பரிசு - அளிப்பு :-**

1. முதன் முதலாக எல்லா ஒய்வூதியர் மற்றும் குடும்ப ஒய்வூதியர்க்கும் 100 உருபா பொங்கற் பரிசாக 1990 ஆண்டிற்கு அளிக்கப்பட்டது. 10-1-90 க்கு முன்னர் ஒய்வுற்றவரும் இறந்துபட்டோரின் குடும்ப ஒய்வூதியரும் இப்பரிசைப் பெறற்கு உரியர்.

வா.ஆ.எண்: 5 நாள் 10-1-1990. வா. இ.தொ: 9/1990-3. பக் 33

***கருணை ஒய்வூதியர்க்கும் பொங்கற் பரிசு 2008 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது.***

***வா.ஆ.எண்: 5 நாள் 14-1-2008.***

2. பொங்கற் பரிசு, இடைக்கால ஒய்வூதியம் / இடைக்காலக் குடும்ப ஒய்வூதியம் பெறுகின்றவர்க்கும் அளிக்கப் படும்.

க.எண்: 38091/22/97-1 நாள் 12-6-1997: வா.இ.தொ: 16/1997-6, பக் 17.

3. 1998 ஆம் ஆண்டு முதல் பொங்கல் பரிசு 150 உருபாவாக அளிக்கப்பட்டது.

வா.ஆ.எண்: 2 நாள் 5-1-1998. வா. இ.தொ: 17/1998-1. பக் 3.



**பொங்கல் பரிசுக்கான கட்டுப்பாடுகள் :-**

1. பொங்கல் பரிசு அளிக்கப்படு கணக்கீட்டு ஆண்டில் ஒய்வு பெற்றோர் அல்லது இறந்த பணியாளர் அவ்வாண்டில் மிகை ஊதியமோ, கருணை அளிப்போ பெற்றிருப்பின் பொங்கல் பரிசுக்கு உரியவர் இல்லை.

2. கருணை அடிப்படையில் பணியமர்த்தம் பெற்ற குடும்ப ஒய்வூதியர், பணியாளர்க்கு அந்த ஆண்டிற்கான மிகை ஊதியமோ, கருணை அளிப்போ பெற்றிருப்பின் பொங்கல் பரிசுக்கு உரியர் ஆகார்.

3. பொங்கல் பரிசு அளிக்கப்படு ஆணை வெளியீட்டு நாளுக்குப் பின்னர் ஒய்வுறுவோர் மற்றும் இறந்தவரின் குடும்ப ஒய்வூதியர் அவ்வாண்டிற்கான பொங்கற் பரிசுக்கு உரியர் ஆகார்.

வா.ஆ.எண்: 2 நாள் 5-1-1998. வா. இ.தொ: 17/1998-1. பக் 3.

**பொங்கல் பரிசு நிறுத்தம் :-**

1990 முதல் ஒய்வூதியர்க்கு அளிக்கப்பட்டு வந்த பொங்கற் பரிசு, 2002 **ஆம் ஆண்டு** முதல் அளிக்கப்படாமல் **இருந்தது.** ***பின்னர்க் கலைஞர் முதலமைச்சர் ஆகியதும் 2007 ஆம் ஆண்டு முதற்கொண்டு கீழ்க்கண்டவாறு அளிக்கப்பட்டு வருகிறது.***

*1. பொங்கற்பரிசு- 300 உருபா 2008 **ஆம் ஆண்டு** முதல்.*

*வா.ஆ.எண்: 5 நாள் 14-1-2008..*

*2. பொங்கற்பரிசு- 500 உருபா- 2010 **ஆம் ஆண்டு** முதல்*

*வா.ஆ.எண்: 8 நாள் 19-1-2010..*

"இயற்கையின் விதியை மீறற்கு, அது நமக்கு அளிக்கும் தண்டனையே, நோய்."

"கட்டுப்பாட்டோடு வாழ்தற்குக் காலமெலாம் முயன்று கொண்டே இருத்தல் கட்டாயம்; கட்டு மீறி நடக்க ஒரு கணம் போதும்."

# மூத்த குடிமக்கட்கான சலுகைகள்

ஓய்வூதியர்க்கு என்று தனிப்பட்ட முறையில் எந்த ஒரு சலுகையும் யாரும் வழங்குவது இல்லை. பொதுவாக வயது முதிர்ந்தவர்க்கு அரசால் வழங்கப்படும் சலுகைகளையே ஓய்வூதியர், குறித்த வயதை அடையும் போது பெறற்கு உரியர்.

மூத்த குடிமக்கட்கென்று சில சலுகைகள் தொடர்வண்டித் தொடர் துறையினராலும், வருமான வரித் துறையினராலும், வங்கித் துறையினராலும் வழங்கப்படுகின்றன.

அகவை 60 முடிந்தவர் மூத்த குடிமக்கள் ஆவார்.

**சலுகைகளாவன :-**

அ. வருமான வரிச் சலுகை :-

i) வருமான வரிக் கணக்கீட்டு ஆண்டுக் காலத்தின் போது, வரி செலுத்துவோர் 65 வயதை அல்லது அதற்கு மேலான வயதை அடைந்தவராய் இருப்பின், அவருடைய மொத்த வருமானத்தின் மீதான வருமான வரியில் உரூபா 15,000/- அளவிற்குக் கழிவு (Deduction) பெற உரியவர்.

*வருமான வரிச் சட்டம், பிரிவு 88* - B.

ii) வரி செலுத்துபவர் பெண்ணாய் இருந்தால், 65 வயதுக்குக் குறைவாய் இருப்பின் அவருடைய வருமான வரியில் உரூபா 5,000/- அளவிற்குக் கழிவு பெற உரியவர்.

*வருமான வரிச் சட்டம், பிரிவு* 88-**C**.

குறிப்பு :-

வருமான வரி செலுத்து மகளிர் 65 வயது அல்லது அதற்கு மேலும் அடைந்தவர் எனில் மூத்த குடி மக்கட்கான விதி 88-B இன் கீழான வரிச் சலுகை உருபா 15,000/- க்கு மட்டுமே உரியர் ஆவர். விதி 88-C இன் கீழ் வரிச் சலுகை பெறமாட்டார்.



ஆ. வங்கி வட்டிச் சலுகை :-

வங்கிகளில், அகவை 60 அடைந்த மூத்த குடிமக்கள் சேமிக்கும் வைப்புக் கணக்குக்கட்கு மற்றவர்க்கு வழங்கும் வட்டி வீதத்தினும் கூடுதலாக *அரை விழுக்காட்டிலிருந்து* ஒரு விழுக்காடு *வரை வங்கிகளைப் பொருத்துச்* சேர்த்து அளிக்கப் படுகிறது. அகவை 60 ஆனதற்கான சான்றினை வங்கிக்கு அளிக்க வேண்டும்.

இ. தொடர் வண்டிப் பயணச் சலுகை :-

அகவை 60 அடைந்த மூத்த குடிமக்கட்குத் தொடர் வண்டிகளில் பயணம் செல்லப் பணயச் சீட்டுத் தொகையில் 30% சலுகையாக *இருந்து வந்தது. 1-6-2011 முதல் 60 வயது முடிந்த ஆண் மூத்த குடிமக்கட்கு விரைவுத் தொடர் வண்டிகளில் பயணஞ் செய்யக் கட்டணத்தில் 40% ஆக உயர்த்தப் பட்டுள்ளது. மகளிர்க்கு வயது வரம்பு 58 ஆகக் குறைக்கப்பட்டு முன்னர் இருந்த 50% கட்டணச் சலுகையே தொடரும்.*

இச்சலுகை *விரைவுத் தொடர்வண்டிப் பயணத்திற்கே உண்டு; பிற பொதுநிலை*( Ordinary) *வண்டிகட்குக் கிடையாது.*

இச்சலுகை இந்தியாவின் எந்தப் பகுதியிலும் இடைப் பட்ட தொலைவு அளவு வரையறை இன்றி, அனைத்து வகுப்புக்கட்கும் அளிக்கப்படுகிறது. வயதை உறுதிப் படுத்தும் தன் நிழற்படம் ஒட்டப் பெற்ற கீழ்க்கண்ட சான்றுகளில் ஏதேனும் ஒன்றின் மூலப்படியைப் பயணத்தின் போது ஆய்வாளர் கேட்பின், உடன் காட்டக் கையில் வைத்திருக்க வேண்டும். பயணச் சீட்டுப் பெறும்போது இச்சான்று இருக்க வேண்டும் என்பது தேவை இல்லை.

1. ஓட்டுநர் உரிமம்.
2. வாக்காளர் அடையாள அட்டை.
3. கடவுச் சீட்டு (Passport).
4. உணவுப் பொருள் வழங்கு அட்டை.
5. பள்ளி இறுதிச் சான்று - முதற் பக்கம்.
6. ஊர் நிர்வாக அலுவலர்/வட்டாட்சியர் சான்று.
7. ஓய்வு பெற்ற பணி ஆணை.
8. பிறந்த நாள் சான்றிதழ்.

# ஆறாவது ஊதியக் குழுப் பரிந்துரை
# ஓய்வூதியத் திருத்தமைப்பு

நடுவண் அரசின் *ஆறா*வது ஊதியக் குழுவின் பரிந்துரையைக் கருத்தில் கொண்டு மின்வாரியத்தால், இருக்கின்ற ஓய்வூதியர் அனைவரின் ஓய்வூதியங்களும் 1-1-2006 முதற் கொண்டு உயர்த்தித் திருத்தி அமைக்கப் பட்டன. இவ்வோய்வூதியத் திருத்தமைப்பு, 1-1-2006 *முதற்கொணடு ஓய்வூதியம் திருத்தி அமைக்கப் பட்டிருப்பினும் அதற்கான பணப்பயன்கள் 1-1-2007 முதற்கொண்டே அளிக்கப் பட்டன.*

**ஓய்வூதியத் திருத்தமைப்பு - கணக்கீடு :-**

அ) 1-1-2006 முதலான **ஓய்வூ**தியத் திருத்தப் பலனைப் பெறுதற்கு வாய்ப்பில்லாத ஓய்வூதியர்/குடும்ப ஓய்வூதியரின் 1-1-2006, 2-1-2006, 3-1-2006 .................. 30-11-2007 க்குப் பொருந்திய அடிப்படை ஓய்வூதியத்திற்கு 40% உயர்வு அளிக்கப்படும்.

ஆ) திருத்தப்பட்ட ஓய்வூதியம்/குடும்ப ஓய்வூதியம் கீழ்க்கண்டவைகளைக் கூட்டிக் கணக்கிடப்படும்.

i) அடிப்படை ஓய்வூதியம். (தொகுப்பளிப்பிற்கு முன்னானது - தனி ஓய்வூதியம் உட்பட்டது)

ii) *அகவிலை ஓய்வூதியம்*

iii) 1-1-2006 இல், இவ்வடிப்படை ஓய்வூதியத்தோடு *அகவிலை ஓய்வூதியத்திற்கும் சேர்த்து, அவற்றிற்குப்* பொருந்திய அகவிலைப்படி.

iv) அடிப்படை ஓய்வூதியத்தில் 40% உயர்வு. (பின்னமாய் இருப்பின், அடுத்த உரூபாய்க்கு உயர்த்திக் கொள்ளப்படும்.)



குறிப்பு :-

1) கணக்கிடப்பட்டு வரு ஓய்வூதியம்/குடும்ப ஓய்வூதியம் குறைந்த அளவான மாதம் உரூபா 3050/- ஐ விட மிகுந்து இருத்தல் வேண்டும்.

2) ஓய்வூதியத் தொகுப்பளிப்பு ஏதேனும் இருப்பின், திருத்தப்பட்ட ஓய்வூதியத்தில் கழித்திட வேண்டும்.

இ) குடும்ப ஓய்வூதியம், பணியாளர் இறுதியாகப் பெற்ற சம்பளத்தில் 30% என்று கணக்கீடு தொடர்ந்து கடைபிடிக்கப்படும். ஆனால், மிகக் குறைந்த குடும்ப ஓய்வூதியம் உரூபா 3050/- ஆகவும், குடும்ப ஓய்வூதியத்தின் மிகை அளவு மிக உயர்ந்த சம்பளப் படிமுறையில் (Highest Pay Scale) 50% ஆகவும் இருக்கும்.

**கணக்கீடு - காட்டு :-**

1-12-2006-க்கு முன்னர்ப் பழைய சம்பளப் படிமுறையில் (Old Pay Scale) பணியாற்றி ஓய்வுற்ற ஓய்வூதியர்க்கு/குடும்ப ஓய்வூதியர்க்கு 1-1-2006 முதல் உயர்த்தித் திருத்தப்பட்ட ஓய்வூதியமாவது - பெறும் ஓய்வூதியம் உரூபா 1000/- எனில் :-

1) அடிப்படை ஓய்வூதியம் உரூபா 1000

2) *அகவிலை ஓய்வூதியம்*
*(அடிப்படை ஓய்வூதிய்தில் 50%) உரூபா 500*

3) 1-1-2006 இல் இருந்த அகவிலைப்படி.
(அடிப்படை + *அகவிலை)* ஓய்வூதியத்தில் 24% = உரூபா 360

4) ஓய்வூதிய உயர்வு
அடிப்படை ஓய்வூதியத்தில் 40%= 0.4 X 1000 = உரூபா 400

***ஆக,***

1-1-2006 முதல் திருத்தப்பட்ட ஓய்வூதியம் (1+2+3+4+5) = உரூபா 2260